முத்துலட்சுமி ராகவன்
என்னியிருந்தது ஈடேறு...
மூன்றாம் பாகம்

முத்துலட்சுமி ராகவன்

எழுதிய

எண்ணியிருந்தது ஈடேற...

மூன்றாம் பாகம்

லட்சுமி பாலாஜி பதிப்பகம்

68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு,

சி.ஐ.டி நகர், தி.நகர்,

சென்னை - 600 035

அழைக்க : 95669 42486

மின்னஞ்சல் :bchandar24@yahoo.com

Website : www.muthulakshmiraghavan.com

நூல் விவரப் பட்டியல்

நூலின் பெயர்	:	எண்ணியிருந்தது ஈடேற... 3
நூலாசிரியர்	:	முத்துலட்சுமி ராகவன்
நூல் உரிமை	:	எழுத்தாளருக்கு
மொழி	:	தமிழ்
பதிப்பு ஆண்டு	:	முதற் பதிப்பு, மார்ச் 2017
தாள்	:	11.6 Kg புக் பிரிண்ட்
நூல் அளவு	:	1 X 8 கிரவுன்
பக்கங்கள்	:	400
விலை	:	ரூபாய் 200.00
பதிப்பகம்	:	லட்சுமி பாலாஜி பதிப்பகம் 68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு, சி.ஐ.டி நகர், தி.நகர், சென்னை - 600 035 செல் : 95669 42486

முக்கிய அறிவிப்பு

இந்தக் கதை எனது சொந்தக் கற்பனையில் உருவானது. இதன் பதிப்பிற்கான உரிமையை லட்சுமி பாலாஜி பதிப்பகத்திற்கு மட்டுமே தந்திருக்கிறேன்.

இதைத் தழுவி தொலைக்காட்சி தொடர்களையோ. திரைப் படத்தையோ எடுத்தாலும் இணையதளத்தில் என் அனுமதியின்றி வெளியிட்டாலும் நான் சட்ட பூர்வமான நடவடிக்கையை மேற்கொள்வேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு

முத்துலட்சுமி ராகவன்

ஆசிரியர் கடிதம்

என் பிரியத்துக்குரிய வாசக... வாசகிகளே...!

எண்ட இந்திய தேசத்தின் கேரள மாநிலத்தின் மலையாள மக்கள் எனிக்கு மாப்புத் தரனும் மக்கா.. ஈ கதைப் பிரகாரம் ஞான் வயநாட்டுக்குப் போயாகனும்.. அங்ஙன வாழும் மக்கள் பேசும் மொழியைச் சற்றேனும் பேசியாகனும்.. எண்ட வீட்டுக்குப் பக்கத்து வீட்டில ஓர் மலையாளக் குடும்பம் உண்டு.. ஆ இல்லத்தில எனிக்கு வல்லிய நேசம் கொண்ட பெண் குட்டியின் ஸ்நேகிதமும் உண்டு.. ஆ மனுஷியிடம் கேட்டு அறிஞ்ஞ மலையாளத்த இங்கன ஞான் பறயறேன்.. எனிக்கு வேற வழி ஏதும் இல்லா.. உடைஞ்ச மலையாளத்த எண்ட இஷ்டப்படி ஞான் பிரயோகிக்கிறதுக்கு மலையாள மக்கள் என்ன ஷமிக்கனும் மக்கா.. மலையாளத்தைத் தவிர்த்து தமிழ் மொழியில அவர்கள் பேசுவதைப் போல எழுதலாம்தான்.. பட்ஷே.. சிறிதளவாவது மலையாளத்தில் எண்ட கதையின் கதாபாத்திரங்கள் சம்சாரிக்கனும்னு எனிக்கு ஆக்ரஹாம் (ஆசை) மக்கா..

‘உழவன் மகள்..’ கதையில் கொங்கு பாஷையைக் கொண்டு வந்தேன்.. அது எளிதாக இருந்தது.. மதுரை பாஷையைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.. எனது ஆடுகளம் அது.. விட்டு விளையாடி விடுவேன்.. மலையாள பாஷை அப்படியல்ல..

தமிழ்மொழியின் பல வார்த்தைகள் மலையாள மொழியில் சங்கமித்திருக்கின்றன என்றாலும் தெளிவான மலையாள பாஷையை நான் கையாள வேண்டுமென்றால் மாதக்கணக்கில் மலையாளம் படித்தாக வேண்டும்.. தங்கு தடையற்ற ஓட்டத்திற்காக தலைப்புக் கவிதைகளையே தவிர்த்திருக்கும் நான் எனக்கான காலத்தை செலவிட முடியாத நிலையில் இருக்கிறேன்..

அதே தருணத்தில் மலையாளக் கலப்பில்லாத வார்த்தையாடல்களை வைக்கவும் எனக்கு விருப்பமில்லை.. எனது கதையின் மலையாள வாழ் மக்கள் மலையாளத்தில் சிறிதளவாவது உரையாட வேண்டும் என்ற பிரேமம் எனக்குள் மிகுந்து விட்டதால் நான் உடைந்த மலையாளத்தை உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன்.. அதிக வார்த்தையாடல்கள் வராதுதான்.. ஆங்காங்கே வரும் வார்த்தையாடல்கள்தான்.. அவற்றைத் தெள்ள த் தெளிவான மலையாளத்தில் சமர்ப்பிக்க

முடியாமைக்கு கதையிலேயே காரணத்தைக் கொண்டு வந்து விட்டாலும்.. தங்களின் மொழியை நேசிக்கும் மலையாள மக்கள் என்மீது கோபமும், வருத்தமும் கொண்டு விடலாகாது என்ற கோரிக்கையுடன் இந்த ஆசிரியர் கடிதத்தில் அவர்களிடம் மாப்பு வேண்டுகிறேன்..

எனிக்கு மாப்புத் தரோனும் மலையாள மக்களே.. ஈ முத்துலட்சுமி ராகவன் ஷமிக்கனும்.. எனிக்கு மலையாள மொழி மேல வளர இஷ்டமானு.. நிங்கள் மலையாள மொழியில் ஞான் சம்சாரிக்க நிங்கட அனுமதி கிட்டுமல்லோ..?

அப்புறம்.. இந்த ஆசிரியர் கடிதத்தில் நான் டூ வீலரில் பயணித்த சில சம்பவங்களைப் பகிரப் போகிறேன்ம்பா..

முதன்முதலா என் சித்தப்பா டூ வீலர் வாங்கினதும் என்னைத்தான் பின்னால் உட்காரச் சொல்லி 'ஊர்' வலம் வந்தார்..

'ஊர்' வலம்ன்னுதான் சொல்லனும்.. 'நகர்' வலம்ன்னு சொல்ல முடியாது.. அது மதுரை மாவட்டத்தில் உள்ள டி.கல்லுப்பட்டி.. என் சித்தப்பா அங்கேயிருக்கும் காந்தி நிகேதன் மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியராக இருந்தார்.. என் சிறு வயதிலேயே நான் சித்தப்பா வீட்டிற்குப் படிப்பின்

பொருட்டு சென்று விட்டேன்.. ஏழாம் வகுப்பிலிருந்து பிளஸ் டூ வரை காந்தி நிகேதன் மேல்நிலைப் பள்ளியில்தான் படித்தேன்.. பள்ளியென்றால் அதுதான் பள்ளி..! எனது பள்ளிக்கூடத்தைப் பற்றி பெருமை இன்றளவும் எனக்கு உண்டு..

கல்லுப்பட்டியின் அருகிலிருக்கும் பேரையூருக்கு என்னை டூ வீலரின் பின்னே அமரவைத்து பயணித்தார் சித்தப்பா.. மோட்டார் சைக்கிளில் போகும் சந்தோஷம் எனக்கு.. தேவன்குறிச்சி மலைக்கு அருகில் போன போது குண்டும் குழியுமாக இருந்த தார் ரோடு மோட்டார் சைக்கிளை உலுக்கி விட்டதில் நான் நழுவி தார் ரோட்டில் விழுந்து விட்டேன்.. விழுந்தவள் கால் நீட்டி அப்படியே ரோட்டில் உட்கார்ந்து விட.. பேசிக் கொண்டே போன சித்தப்பா பின் பக்கமிருந்து பதில் வராததில் திரும்பிப் பார்த்து விட்டு படு கேஷுவலாக சிரித்தபடி..

“ஹா.. ஹா.. என்னப்பா.. விழுந்துட்டியா.. வா.. வா..” என்றாரே பார்க்கனும்..

விழுந்து விட்டோமே என்று உதடு பிதுங்க அழுகைக்குத் தயாராக இருந்த எனக்கு அனைத்தும் மறந்து விட்டது..

எதுவுமே நடக்காததைப் போன்ற சித்தப்பாவின் இயல்பில், எதுவுமே நடக்காததைப் போல எழுந்து பாவாடையைத் தட்டி விட்டு மோட்டார் சைக்கிளுக்குப் போய் விட்டேன்..

அதுதான் என் சித்தப்பா..! படு கேசுவல் பெர்சனாலிட்டி.. அவரைப் போல யாருண்டு..?

அடுத்ததாக அப்பா வாங்கிய மோட்டார் சைக்கிளில் அவருக்குப் பின்னால் அமர்ந்து பயணித்த கதை யிருக்கே.. அப்பப்பா..! பெண் பிள்ளைகளை பாதுகாப்பான வேகத்தில் அழைத்துச் செல்ல வேண்டும்தான்.. அதற்காக நடந்து போகிற மக்களெல்லாம் ஓவர் டேக் பண்ணி நம்மை ஒரு மார்க்கமாக பார்க்கிற அளவுக்கு மிதமான வேகத்தில் (?) செல்லக் கூடாது.. இந்த லட்சணத்தில் வண்டி செல்லுமானால் மோட்டார் பைக் சவாரியே எனக்கு வேண்டாம் என்று தீர்மானமாக நான் சொல்லிவிட்ட பின்பு வேகம் சற்றுக் கூடியது என்றாலும் அப்பாவின் மோட்டார் பைக் சவாரி கட்டை வண்டி சவாரிதான்.. எந்த வகையிலும் மேம்பட்டதல்ல..

அப்பேற்பட்ட கட்டை வண்டி சவாரியில் நான் அலுவலகத்துக்குப் போக நேர்ந்த ஓர் மழைநாளில், வழியில்

இருந்த பள்ளத்தில் தண்ணீர் நிரம்பியிருந்ததால் நான் மோட்டார் பைக்கை விட்டு இறங்க நேர்ந்தது..

தண்ணீர் நிரம்பியிருந்த பள்ளத்தில் அதைக் கடக்கக் கற் கள் வரிசை கட்டிப் போடப்பட்டிருந்தன.. அதில் கால் பதித்து பக்கவாட்டில் மோட்டார் சைக்கிளைப் பிடித்தபடி அப்பா முன்னேறிச் செல்ல.. அவரைப் போலவே கற்களில் கால் பதித்து சர்வ ஜாக்கிரதையாக நான் பின்னேறிச் சென்றேன்..

பேசிக் கொண்டே போன அப்பா தண்ணீரைக் கடந்ததும் மோட்டார் சைக்கிளில் ஆரோகணித்து நான் தொற்றிக் கொண்டேனா என்று கவனிக்காமல் போயே போய் விட்டார்..

நான் அப்படியே நின்று விட்டேன்.. தபால் துறையில் வேலை பார்த்தேன்.. அங்கே கால அவகாசத்தில் கண்டிப்பாக இருப்பார்கள்.. சற்றுத் தாமதமானாலும் கடுஞ்சொற்கள் வந்து விடும்.. இன்று தொலைந்தேன் என்று நினைக்கும் போதே அழுகையழுகையாய் வந்தது.. அப்பாவிற்கு எதிரே வந்த வண்டிகளைப் பார்த்துக் கையாட்டி அவரைக் கூப்பிடச் சொன்னேன்.. ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்று வண்டிகள் அவருக்கு எதிரே வந்தன.. எனக்காக அவர்கள் அப்பாவிடம் கைகாட்டி நான் கூப்பிட்டுக் கொண்டிருப்பதை அறிவுறுத்தி

விட்டுத்தான் வந்தார்கள்.. பலனில்லை.. அப்பாவின் மோட்டார் சைக்கிள் திருப்பத்தில் திரும்பி மறைந்து விட்டது..

மூன்றாவதாக வண்டியில் வந்தவன் லிஃப்ட் கொடுக்கவா என்று கேட்டான்.. போடா என்ற ரீதியில் முறைத்து விட்டு நடையைக் கட்டினேன்.. அப்பாவின் மீது வந்த கோபத்திற்கு அளவே இல்லை..

அன்றைக்கென்று ஒரு ஆட்டோகூடத் தென்படவில்லை.. திடிரென்று பார்த்தால் திருப்பத்தில் அப்பாவின் மோட்டார் சைக்கிள் தென்படுகிறது.. புன்னகை மன்னனாக அருகில் வந்து வண்டியை நிறுத்தியவர்..

“என்னடா.. நீ வண்டியிலே ஏறவேயில்லையா..?” என்கிறார்.. எனக்கு வந்த கோபத்தில் கட்டையைத் தூக்கி மண்டையிலே போடலாம் போல இருந்தது.. ஆயிரம்தான் இருந்தாலும் அவர் என் அப்பா.. என்பதால் அழுகையும் கண்ணீருமாக..

“எங்கே..? நான் ஏறுகிறதுக்குள்ள நீங்க வண்டியைக் கிளப்பிட்டுப் போயிட்டிங்களே.. உங்களுக்கு எதிரே வந்தவங்க கிட்ட கையை ஆட்டி வண்டியை நிறுத்தச் சொன்னேன்..

அவங்களும் உங்ககிட்டச் சொன்னாங்க.. நீங்கதான் நிறுத்தலை..” என்று சீறினேன்..

“அதான் அவங்க கையை ஆட்டினாங்களா..? எதுக்குக் கையை ஆட்டறாங்கன்னு தெரியலைடா.. உன்கிட்டக் கேட்டேனா.. நீயும் பதில் சொல்லலை..”

“எப்படிப் பதில் சொல்வேன்..? நான் உங்க பின்னாடியா உட்கார்ந்திருந்தேன்..? அம்போன்னு இங்கே நின்னுக்கிட்டிருக்கேன்..”

“அதைத்தாண்டா நானும் நினைச்சேன்.. என்னடா.. பின்னாடியிருந்து சத்தமே வரலைன்னு திரும்பிப் பார்த்தேனா.. நீயில்லை.. உடனே வண்டியைத் திருப்பிக்கிட்டு வந்துட்டேன்..”

‘எப்புடி..?’ என்ற பெருமை பார்வை பார்த்த அப்பா மறதி மன்னர்..! திருமண மண்டபங்களில் மற்றவர்கள் செருப்புக்களைத் தொலைத்தால் இவர் ஒற்றைச் செருப்பை மட்டும் மறந்து தொலைத்து விட்டு ஒரு கால் செருப்போடு வீடு வந்து சேருவார்.. என்னைப் போலவே அம்மாவையும் வண்டியில ஏறிட்டாங்களான்னு பார்க்காம விட்டு விட்டு வந்து திரும்பப் போய் கூப்பிட்டுக் கொண்டு வரும் திறமைசாலி..

நானாவது அழுகையும் கண்ணீரோடும் விட்டு வைப்பேன்..? அம்மா..?

இதெல்லாம் சரி.. நீங்கள் டூவிலர் ஓட்டப் பழகிக் கொள்ள வேண்டியதுதானே என்கிறீர்களா..? நீங்க வேற.. நான் ரோட்டை கிராஸ் பண்ணனும்னா ஒரு ஆட்டுக்குட்டி கூட குறுக்கே வந்து விடக் கூடாது.. அவ்வளவு பயம்.. கார் வாங்கின பின்னாலே டூ வீலர் பின்னாடி உட்கார்ந்து பயணிக்கவே பயப்படுவேன்.. இந்த லட்சணத்தில் நானாவது டூ வீலர் ஓட்டுகிறதாவது.. டூ வீலரே அப்படியெனும்போது காரெல்லாம் நோ சான்ஸ்..

முத்துலட்சுமி சுத்த வேஸ்டுங்க.. நான் பெரிய 'ஜுஜுபி'ன்னு யாராவது சொன்னால் நம்பவே நம்பாதீங்க.. சரியா..?

மற்றவை அடுத்த ஆசிரியர் கடிதத்தில்.. பை..

- நட்புடன்

முத்துலட்சுமி ராகவன்

அத்தியாயம் 67

ரவிச்சந்திரன்..!

கேரளத்தின் ராஜ பாரம்பரிய கோடிஸ்வரக் குடும்பத்தில் பிறந்த ஆணழகன்..! அரண்மனையில் வளர்ந்தவன்.. கணக்கில் அடங்காத அசையாச் சொத்துக்களுக்கு உடமையாளன்... உலகில் உள்ள அனைத்து நகரங்களிலும் அவனுடைய குடும்பத்திற்கென்று ஒரு மாளிகையைக் கொண்டவன்..

அந்த கங்கு கரையில்லாத சொத்துக்களைக் காணாமல் போக வைத்து விடும் ஆற்றல் கொண்ட யோகானந்தன் அருள்மொழிவர்மனுக்கும், ரவிவர்மனுக்கும் அவந்திகா மீது உள்ள பாசத்தை முன்னிறுத்தி மாமனார் குடும்பத்தின் சொத்துக்களை சூறையாட முனைந்தபோது அதைத் தடுத்து நிறுத்தும் கவசமாக ரவிச்சந்திரன் செயல்பட்டான்.. அதில் யோகானந்தன் ஆத்திரம் கொண்டார்..

அருள்மொழிவர்மனின் அருமைப் புதல்வியை அவள் திருமணம் செய்து கொண்டபோது அந்த அரண்மனையின் மருமகனாக தன்னை அவர் கருதவில்லை.. மாறாக அந்த

அரண்மனையின் அனைத்துச் சொத்திற்கும் வாரிசாக தன்னை நினைத்திருந்தார்.. அவருடைய செலவுக்கு அவருடைய பிறந்த வீட்டுச் சொத்தாலேயே தாக்குப் பிடித்து நிலைத்து நிற்க முடியவில்லையெனும்போது மனைவியின் பங்கிற்கு வந்த சொத்து எத்தனை நாள் நிலைத்திருக்கும்..?

யோகானந்தன் உலகம் சுற்றும் உல்லாசி... தீவுகளில் ஆட்டம் போடும் சுகவாசி.. தினமும் ஒரு கோடி தேவைப்படும்.. என்ற நிலையில் அவருடைய செலவுகளுக்குத் தீனி போடுவதை நிறுத்தாவிட்டால் அருள்மொழிவர்மனின் அத்தனை சொத்துக்களும் அழிந்து விடும் என்பதால் ரவிச்சந்திரன் இரும்பு மனிதனாக மாறிக் குடும்பத்தை எதிர்த்து நின்றான்..

“தாத்தா.. பரம்பரை புராப்பர்ட்டிஸில அத்தையோட பங்கை நீங்க ஆல்ரெடி பிரித்துக் கொடுத்துட்டிங்க.. மீதமிருக்கிற அப்பாவோட பங்கில வருகிற வருமானமும் அத்தைக்குத்தான் போய்ச் சேருது.. அப்பா அதை ஏன்னு கேட்க மாட்டார்.. ஏன்னா.. அவருக்கு தன் குடும்பத்தை விட தங்கையின் குடும்பம்தான் முக்கியம்.. அது போல தானே எனக்கும் இருக்கும்..?”

“எந்தா பறயுது கொச்சு மோனே..? நினக்கு ஈ ெ காட்டாரத்தில அநியாயம் நடப்பதைப் போல சம்சாரிக்கிறது..?”

“அநியாயம்தான் நடக்குது தாத்தா.. என் பங்கு சொத்தையும் ரம்யாவோட சொத்தையும் நீங்க உங்க மகளு க்கே தாரை வார்த்துக் கொடுத்துட்டா நானும், ரம்யாவும் என்ன செய்வோம்..?”

“ரவிச்சந்திரா..!”

“இரண்டில் ஒன்று சொல்லுங்க தாத்தா..”

“எந்தா கொச்சு மோனே..? பறயு..”

“நான் உங்க பேரனா இந்த அரண்மனையில இருக்கனுமா.. வேண்டாமா..?”

“எந்தாக் கேள்வியிது ரவி..? எது சம்சாரிச்சாலும் ஆலோசிச்சு சம்சாரிக்கனும்.. கொச்சு மோனே.. ஈ கேள்விக்கு ஞான் எந்தாப் பதிலப் சொல்லும்..? நின்னை விடப் வல்லிய சொந்தம்ன்னு ஈ கிழவன் எவரை நினைச்சான் ரவி..? பறயு..”

ஆடிப் போய்விட்ட அருள்மொழிவர்மன் ரவிச்சந்திரன் விதித்த அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டார்..

“அப்பா அவரோட புராப்பர்ட்டிஸை இம்மீடியட்டா என் பெயருக்கும், ரம்யா பேருக்கும் மாத்திடனும்..” என்ற ரவிச்சந்திரனின் கட்டளையை ஏற்பதைத் தவிர வேறு வழியேதும் இல்லாததால் ரவிவர்மன் தன் பெயரில் இருந்த அனைத்துச் சொத்துக்களையும் சரி பங்காக ரவிச்சந்திரனுக்கும் ரம்ய மாலினிக்கும் பிரித்து எழுதி வைத்து விட்டார்..

இந்த நிகழ்வு நடந்தபோது யோகானந்தனின் குடும்பம் வயநாட்டு அரண்மனையில் இல்லை.. மைத்துனனின் பணத்தில் குடும்பத்தோடு வெர்ல்டு டூர் கிளம்பிப் போயிருந்தார்.. உலகத்தைச் சுற்றிப் பார்த்து விட்டு அவர் திரும்பிய போது மைத்துனனின் சொத்துக்கள் பங்கிடப் பட்டிருந்தன.. கொதித்துப் போனவர் அவந்திகாவை முடுக்கிவிட..

“எந்தா நியாயம் இது அச்சா..?” என்று அவள் ருள்மொழிவர்மனிடம் முறையிட்டாள்..

“ஞான் ஏது செய்ய முடியும் மோளே..? நினக்கும் நிண்ட சேட்டனுக்கும் இடையே பாகுபாடு பார்க்கலையே அவந்திகா.. நினக்கும், நிண்ட சேட்டனுக்கும் சமமா சொத்துக்களப் பகிர்ந்து

கொடுத்தேன்.. நீ அதைக் கரைய வைச்சுட்ட.. பட்ஷே.. நிண்ட சேட்டன் அதைத் தக்க வைச்சுக்கிட்டான்.. அவனிண்ட சொத்த அவனோட பிள்ளைகளுக்கு பகிர்ந்து கொடுத்திருக்கான்.. ஈ விஷயத்தில ஞான் தலை கொடுக்க முடியாது மோளே.'' அருள்மொழிவர்மன் கை விரித்து விட்டார்.. தமையனின் சொத்துக்கள் அவரது பிள்ளைகளுக்குப் போய் விட்டன என்று

தெரிந்த பின்னாலும் அவந்திகா சோர்ந்து விடவில்லை.. அரச குடும்பங்களில் சில நடைமுறைகள் உண்டு.. குடும்பத்தில் இருக்கும் அனைவருக்கும் தனித்தனித் சொத்துக்களை பிரத்யேகமாக வைத்துக் கொள்வார்கள்.. அவற்றைப் பரம்பரைச் சொத்துக்களில் கணக்கிட மாட்டார்கள்..

அந்த வகையில் அருள்மொழிவர்மனுக்கும், யாழினிக்கும் சொத்துக்கள் இருந்தன.. அவற்றின் மூலம் கோடிக்கணக்கில் வருவாய் வந்தது.. அவை அப்படியே அவந்திகாவின் கரங்களுக்குச் சென்று யோகானந்தனின் கரங்களுக்கு இடம் மாறின.. அந்தக் கோடிக் கணக்கான ரூபாய்களும் போதாமல் ஆயிரம் கோடி கடன் வைத்து மாமனாரை அதிர வைத்தார் யோகானந்தன்.. அருள்மொழி

வர்மனாலும் ரவிவர்மனாலும் சமாளிக்க முடியாத கடன் ரவிச்சந்திரனின் முன்னிலைக்கு வந்து நின்றது..

யோகானந்தன் கடன்களைப் பெருக்கிக் கொண்டிருந்த போது ரவிச்சந்திரன் தொழிலை விரிவு படுத்திக் கொண்டிருந்தான் .. ராஜ குடும்பத்து வழக்கத்தின்படி ரம்ய மாலினிக்கு வைர நகைகளும் வீடுகளும் பிரித்துக் கொடுக்கப்பட்டு.. ரவிச்சந்திரனுக்கு தொழில்கள் கொடுக்கப் பட்டிருந்தன.. பரம்பரை எஸ்டேட்டின் வருமானத்தில் ரவிச்சந்திரன் 'யாழ்' நட்சத்திர ஹோட்டல்களை சங்கிலித் தொடர்களாக கட்ட ஆரம்பித்தான்... கேரளத்தின் நகரங்களில் ஆரம்பிக்கப்பட்ட 'யாழ்' ஹோட்டல் விரிந்து இந்தியாவின் அனைத்து நகரங்களிலும் வேர் விட்டு வியாபித்தது..

வயநாட்டில் மட்டும் இருந்த ரப்பர் ஃபேக்டரி பீர மேடிலும் கிளை விரித்தது.. கூடவே சணல் ஃபேக்டரியையும் ஆரம்பித்தான்.. கடல் சார்ந்த கேரளத்தின் துறைமுக நகரங்களில் மீன் மற்றும் எறால் பதப்படுத்தி அனுப்பும் எக்ஸ்போர்டு கம்பெனிகளை உருவாக்கினான்... வயநாட்டு எஸ்டேட்டையும் ரப்பர் ஃபேக்டரியையும் மட்டும் கவனித்துக் கொண்டு வயநாட்டிலேயே தேங்கி விட்ட அருள்மொழிவர்மன், ரவிவர்மனைப் போல இல்லாமல் வயநாட்டுக்கும் வெளியே

கால் பதித்து உலகம் முழுவதும் பறந்து தொழில் பண்ணும் கை தேர்ந்த தொழிலதிபனாக மாறியிருந்தான்..

யோகானந்தனைப் போல இவனும் உலகம் சுற்றுபவன்தான்.. ஆனால் யோகானந்தனைப் போல உல்லாசமாக பணத்தைக் கரைப்பவனாக சுற்றி வரவில்லை.. பணம் பண்ணுபவனாக சுற்றி வந்தான்..

அருள்மொழிவர்மனின் குடும்பத்துக்கு உலகில் உள்ள அனைத்து நகரங்களிலும் வீடு உண்டு என்றால் ரவிச்சந்திரனுக்கு 'யாழ்..' ஹோட்டல் உண்டு.. பணத்தை அசையாச் சொத்துக்களில் முடக்குவதை விட, அந்த அசையாச் சொத்துக்களின் மூலம் வருவாய் ஈட்ட என்ன வழியென்று யோசித்து செயல்பட்டான் ரவிச்சந்திரன்.. வீடுகளைக் கவனிக்க ஹவுஸ்கீப்பர்கள் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தார்கள்.. அவ்வீடுகளைப் பராமரிக்க செலவு செய்ய வேண்டியிருந்தது..

ரவிச்சந்திரனின் 'யாழ்' ஹோட்டல் அப்படிப் பட்டதல்ல.. அது வருவாயைத் கொட்டும் தொழில்.. அதி விரைவில் ரவிச்சந்திரன் பாட்டனார் பெயரையும் தகப்பனார் பெயரையும் தாண்டி பெயர் பெற்றான்.. ராஜ குடும்பத்து வட்டாரங்களில் ரவிச்சந்திரனின் பெயரே முதன்மையாக ஒலித்தது..

இந்நிலையில் மாமனாரின் சொத்தைக் கரைத்து, மைத்துனனின் வருமானத்தை அபகரித்தது போதாது என்று மைத்துனன் மகனின் தலையில் தனது கடனை சுமத்தி விட்டு ஹாயாக எவருக்கு வந்த கடனோ என்பதைப் போல ஒதுங்கிக் கொண்டார் யோகானந்தன்.. அவந்திகா விட்ட கண்ணீரில் குடும்பமே கப்பல் விட்டுக் கொண்டிருக்க எவருக்கு வந்த கடனை யார் சுமப்பது என்று கேள்வி கேட்டான் ரவிச்சந்திரன்.. "ரவி.. ஞான் பறயறது ஒண்ணுதான்.." அருள்மொழிவர்மன் ஆரம்பிக்க..

"நீங்க என்ன சொல்ல வர்றீங்கன்னு எனக்குத் தெரியும் தாத்தா.. ஆயிரம் கோடி கடன் வைத்தாலும் அவர் உங்க மருமகன்னு சொல்லப் போறிங்க.. அவருக்கு வந்திருக்கிற கஷ்டம் அத்தையைத்தான் பாதிக்கும்ன்னு சொல்லப் போறிங்க.." என்று தடுத்தாட் கொண்டான் ரவிச்சந்திரன்..

"அதே.. அதே.. எண்ட மனசில ஞான் எந்தா ஆலோச்சித்திறேன்னு எண்ட கொச்சுமேன் அறியும்.." என்று பரவசப் பட்டுப் போனார் அருள்மொழிவர்மன்..

"ரொம்பவும் மகிழ்ந்து போகாதீங்க.. நீங்க இதை விட்டா வேற என்னத்தைச் சொல்லப் போறிங்க.. அத்தை நம்ம

குடும்பத்து மேலே பாரத்தைத் தூக்கி வைக்கிற ஒவ்வொரு முறையும் நீங்க இந்த வசனத்தைத்தானே ஒப்பிப்பீங்க..? கேட்டுக் கேட்டு டயலாக்கே மனப்பாடம் ஆகியிருச்சு..'' நிர்தாட்சண்யமாக நினைவுறுத்தினான் ரவிச்சந்திரன்..

''பட்சே.. கொச்சு மோனே..'' பரிதவித்தாள் யாழினி..

மகளின் துயரத்தைக் காண முடியாமல் கண் கலங்கினாள்.. பாட்டியின் மீது அளவு கடந்த பிரியத்தைக் கொண்டவன் ரவிச்சந்திரன்.. அவள் கண்கலங்கி கை பிசைவதைப் பார்க்க அவனுக்குப் பாவமாகத்தான் இருந்தது.. அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் கடினமான முகத்துடன் பாட்டியை முறைத்தான்..

'இந்த மனுஷன் அட்டையைப் போல.. குடும்பத்தின் சொத்து முழுதையும் உறிஞ்சி விட்டுத்தான் நிறுத்துவார்.. இதை தடுத்து நிறுத்தலைன்னா விபரீதமாகிரும்..'

கத்தியை எடுக்காமல் அறுவைச் சிகிச்சை செய்ய இயலாது.. ரவிச்சந்திரன் கத்தியைக் கையில் எடுத்தான்.. வெற்றிகரமாக அறுவைச் சிகிச்சையை ஆரம்பித்து விட்டான்..

''நீங்க பெரியவங்க.. உங்களுக்குத் தெரியாதது இல்லை.. நம்ம ராஜ குடும்பங்களில வெறும் பாரம்பர்யம்

பெருமையை மட்டும் வைத்துப் பெண் கொடுத்து, பெண் எடுக்க மாட்டாங்க.. ஏன்.. நம்ம அத்தையைப் பெண் கேட்கும் வரை மாமா வீட்டில பாகப் பிரிவினை பண்ணாமல் மொத்தச் சொத்தையும் கணக்கில காட்டித்தான் பெண் கட்டினாங்க.. அத்தைக்கு எவ்வளவு சொத்து வரும்ன்னு கணக்குப் போட்டுத்தான் பெண்ணெடுத்தாங்க.. நாமும் சும்மா இல்லை.. மாமா வீட்டின் சொத்தின் மதிப்பைத் தெரிந்துக்கிட்டுத்தான் பெண் கொடுத்தோம்.. ஏன் தாத்தா..?”

“எந்தாக் கேள்வியாது ரவிச்சந்திரா.. வெறும் பேர் இருந்தா மட்டும் போதுமா..? வல்லிய சொத்து சுகம் இருந்தாத்தானே எண்ட மோள் ஆ கொட்டாரத்தில சுகமாக ஜீவிதம் பண்ண முடியும்..?”

“இது பேச்சு.. நீங்க என்ன சொல்கிறீங்க பாட்டி..?”

“நிண்ட அச்சன் பறஞ்சதைத்தான் ஞானும் பறயும்.. வல்லிய சொத்து சுகம் இல்லாத இடத்தில எவ்விதம் பெண் கொடுக்க இயலும்..? ராஜ குடும்பம்ன்னு பேர் இருந்தா மட்டும் போதாது கொச்சு மோனே.. திரவியம் இருக்கனும்.. அதுவல்லோ ராஜ பாரம்பர்யத்துக்கான பெருமை..? எண்ட

மகளை அவ்விடத்தில்தான் விவாகம் பண்ணிக் கொடுக்க ஏலும்..”

“பெரியவங்க, நீங்களே இப்படி நினைக்கிறப்ப.. இப்ப இருக்கிறவங்களும் இதைப் போலதானே நினைப்பாங்க..?”

“அதே ரவிச்சந்திரா..”

“ஆனாப் பாருங்க பாட்டி.. உங்க மருமகனுக்கு கடன் அடைச்சு எனக்கும், ரம்யாவுக்கும் இருக்கிற சொத்தை அழிச்சுட்டா நாளைக்கு ரம்யாவை யார் மேரேஜ் பண்ணிக்குவாங்க பாட்டி..? எனக்கும் யார் பெண் கொடுப்பாங்க..?”

“ரவி..”

வாழ்வின் நிதரிசனத்தைப் புரிந்து வைத்திருந்த யாழினியின் கண்கள் இருண்டன.. எப்பேற்பட்ட கோடிஸ்வரக் குடும்பம் அது.. அந்தக் குடும்பத்தில் பிறந்த அவளது பேரன் கேட்கும் கேள்வியில் அவளுக்கு நெஞ்சை அடைத்து மூச்சுத் திணறியது..

‘அம்மே..! மலையாள பகவதி..! எண்ட கொச்சுமோன் எழுப்பற கேள்வியிலயும் நியாயம் இருக்கல்லோ..’

யாழினியின் மன உணர்வை அருள்மொழிவர்மனின் முகமும் பிரதிபலிக்க.. யோகானந்தன் விழித்துக் கொண்டார்..

‘ஈ கிழடுகள் தங்களோட கொச்சு மோன் பேச்சுக்கு செவி சாய்க்குதுகளே.. ஞான் ஏதாவது செய்யலேன்னா ஈ ரவிச்சந்திரன் பேசிப் பேசியே கிழடுகளை அவனோட வழிக்கு கொண்டு வந்திருவானல்லோ.. ஈ கொட்டாரத்தில ஞானும் எண்ட பிள்ளைகளும் ஜீவித்திருக்கறப்ப இவனும், இவன் தங்கையும் வேற இடத்தில மணம் செய்துக்கிட்டி எண்ட பிள்ளைகளின் கதி எந்தா..?’

ஏற்கனெவே அதைப் பற்றி அவரை விட அதிகமாக ஆலோசித்து திட்டம் தீட்டிவைத்திருந்த அவந்திகாவை அருகில் இழுத்து அவள் காதுகளில் அவர் ஓத.. அதை அவள் குடும்ப சபையில் எடுத்துரைத்தாள்..

“எந்தா அம்மே இது..? எண்ட பிள்ளைகள் இருக்கறப்ப எண்ட அண்ணனோட மக்கள் வேற இடத்தில மணம் முடிப்பதோ..?”

அதுவரை அந்தப் பேச்சு வார்த்தையில் தலையிடாமல் வேறு ஏதோ வேலையைக் கவனித்துக் கொண்டிருந்த வீணாவின் முகத்தில் இருள் படர்ந்தது.. ரம்ய மாலினியை

அவள் பார்த்த பார்வை கன்றைக் காக்கத் துடித்தத் தாய்ப்பசுவின் பார்வையாக தவித்தது..

ரவிச்சந்திரனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. தாயின் அலைபாய்ந்த பார்வையில் வேதனை கொண்டான்.. வயநாட்டின் கோடிஸ்வரக் குடும்பத்தில் வாழ வந்தவள் நிம்மதியுடன் வாழ்ந்திருக்க வேண்டாமா..?

எங்கே..? வீணாவின் நிம்மதிதான் அவந்திகாவின் கையில் உள்ள நூலுக்கு ஆடும் பொம்மையாக ஆகி விட்டிருந்ததே.. அவந்திகா வீணாவின் நிம்மதியை அழிப்பதையே தன் வாழ்வின் லட்சியமாக வைத்திருந்தாளே..

அத்தியாயம் 68

அவந்திகா வீணாவைத் துச்சமாகத்தான் பார்ப்பாள்.. ரவிவர்மனின் முன்னிலையில் பச்சைப் பிள்ளை போல முகத்தை வைத்திருப்பவள் அவர் இல்லாத தருணங்களில் முள் போலக் குத்துவாள்..

வீணா அதைப் பொருட்படுத்த மாட்டாள்.. இயல்பிலேயே சாந்த குணம் கொண்டவள்.. அவந்திகாவின் பார்வைக் கணையை அலட்டலில்லாமல் எதிர்கொள்வாள்.. அருள்மொழி வர்மனின் செல்ல மகள்.. ரவிவர்மனின் பாசத்துக்குரிய தங்கை என்ற இறுமாப்பு அவந்திகாவின் முகத்தில் படிந்திருக்கும்.. நீயெல்லாம் எனக்கு நிகரா என்ற கேள்வி அவளது விழிகளில் எப்போதும் தொக்கி நிற்கும்.. அதை கண்டு கொள்ளாமல் மலர்ந்த முகத்துடன் வீணா வளைய வருவதில் அவந்திகாவின் அடி வயிறு பகபகவன எரியும்.. வீணாவை ஏதாவது ஒருவகையில் குன்ற வைத்துவிட வேண்டும் என்று அவள் பற்பலவாறு மெனக்கெடுவாள்.. வீணா குன்றவே மாட்டாள்... இனிமை தவளும் புன்னகையோடு அனைத்தையும் எதிர் கொள்வதால்..

தோல்வியைத் தாங்க முடியாத அவந்திகாதான் குன்றிப் போவாள்..

மற்றவர்களுக்குத் தீங்கு நினைக்காதவர்களுக்கு எந்தத் தீங்கும் நேர்ந்து விடாது.. வீணாவிற்குத் தீங்கு நேரவில்லை.. மாறாக, அவளுக்குத் தீங்கு நினைத்த அவந்திகாவிற்குத்தான் தீங்கு நேர்ந்தது..

யோகானந்தனின் மனைவியாக வாழப் போனவள் கணவனின் அளவு கடந்த ஊதாரித்தனத்தால் சுவரில் அடிக்கப்பட்டப் பந்தாக பிறந்த வீட்டிற்கே திரும்பி வந்தாள்.. தனியாகவும் வராமல் கணவன், குழந்தைகளுடன் அவள் வந்து நிற்க வீணா எப்போதும் போல சாந்தமாகத்தான் நாத்தனாரின் குடும்பத்தை வரவேற்றாள்.. அரவணைத்துக் கொண்டாள்.. அவந்திகாதான் அவள் தோற்றுப் போய் திரும்பியிருப்பதை வீணா எள்ளி நகையாடுகிறாள் என்று மனதுக்குள் புழுங்கினாள்.. குமுறினாள்.. தாய், தந்தையரிடம் அதைச் சொல்லவும் செய்தாள்..

ரவிவர்மனிடம் வீணாவைப் பற்றிக் குறை கூறிவிட முடியாது.. அந்தவகையில் அவர் அருமையான கணவர்.. வீணாவின்மீது மட்டற்ற காதலைக் கொண்டவர்..

தமையனின் குணமறிந்ததினால் மிகக் கவனமாக அவர் முன்னிலையில் வீணாவுடன் பாசமாக இருப்பதைப் போல நடித்து விடுவாள் அவந்திகா.. தாய், தந்தையிடம் அப்படி நடிக்க வேண்டிய தேவை அவளுக்கு இல்லையே..

அருள்மொழிவர்மனும், யாழினியும் பண்பட்டவர்கள்.. மகளின்மீது மட்டற்ற பாசமிருந்தாலும் மருமகளின் மனம் புண்படப் பேசியறியாதவர்கள்.. கொதித்துப் போயிருந்த அவந்திகாவுக்கு அவர்கள் புத்திமதி சொல்லிப் புரிய வைத்தனர்..

"நினக்கு நாங்க புத்திமதி சொல்லனுமா மோளே.. நிண்ட சேட்டனோட பாசமும் தயவும் உனக்குக் குறைவில்லாமல் கிட்டனும்னா அவனோட பார்யாள்கிட்ட நீ முறைக்கிறதைக் குறைக்கனும் மோளே.. அவன் பாசக்காரனல்லோ.." யாழினியின் அறிவுறுத்தலில் அவந்திகா தன் கோபத்தை அடக்கிக் கொண்டாள்.. தமையனின் தயவில் வாழ வேண்டிய நிலை வந்து விட்டதை நினைத்து மனம் குமுறிப் போவாள்.. அதை வீணா சொல்லிக் காட்டி விடக் கூடாது என்பதற்காக..

"ஈ கொட்டாரம் எண்ட அச்சனது கொட்டாரம்..! ஈ இன்கம் எண்ட சேட்டனோட இன்கம்.. மனசிலாயி.." என்று

வார்த்தைக்கு வார்த்தைச் சொல்லி என்னவோ மீதமிருக்கும் சொத்துக்கள் அவந்திகாவுக்குத்தான் சொந்தம்.. வீணாதான் அந்த அரண்மனையில் அகதி என்பதைப் போல நடந்து கொள்வாள்..

மலையாளத்தில் 'கொட்டாரம்' என்றால் அரண்மனை என்று பொருள்.. அப்படிக் கொட்டாரம் என்னுடையது என்று அவந்திகா அடிக்கும் கொட்டத்தைக் காதிலேயே போட்டுக் கொள்ளாமல் இருந்தாலும் வீணாவின் மனதை சஞ்சலம் சூளும்.. அரண்மனை வாழ்வை அவள் பெரிதாக நிக்காமல் இருக்கலாம்.. அவள் பெற்ற பிள்ளைகளும் அப்படியே இருந்துவிட முடியுமா..? அவர்கள் ரவிவர்மனின் வாரிசுகள் ஆயிற்றே.. பரம்பரையாய் வரும் ராஜ குடும்பத்தின் பாரம்பர்யமும், சொத்து சுகமும் அவர்களுக்கும் கிடைக்க வேண்டுமல்லவா..? அதை பிள்ளைகளுக்கு மீட்டுக் கொடுக்க வேண்டியது அவளது கடமையல்லவா..?

அவந்திகா உள்ளிருந்தே சொல்லும் நோய்.. யோகானந்தனின் மோசடிகளை மறைத்து.. ஏன்..? என் கணவனுக்குச் செய்தால் என்ன..? என்று அடாவடியாய் கேள்வி கேட்டுப் பிறந்த வீட்டை அழித்துக் கொண்டிருக்கும் அட்டூழியக்காரி..! அவளுக்கு ரம்ய மாலினி மருமகளாவதா..?

வீணா தனக்கு எது நேர்ந்தாலும் பொறுத்துக் கொள்வாள்.. தன் பிள்ளைகளுக்கு ஒன்று என்றால் பொறுக்க மாட்டாள்.. ரம்ய மாலினியை அவந்திகாவின் மகனுக்குத் திருமணம் பண்ணிக் கொடுப்பதை விட ஒரு துளி விஷத்தை மகளுக்குக் கொடுத்து விடுவது சாலச் சிறந்தது என்ற உண்மையை அவள் அறிவாள்..

வீணாவைப் போன்ற மென்மையான தன்மையும்.. பெருந்தன்மையான குணமும் கொண்டவள் ரம்ய மாலினி.. அவையிரண்டையும் என்ன விலையென்று கேட்கும் அவந்திகாவின் மகனுக்கு அவளைத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்ற பேச்சிற்கே இடமில்லை.. அதை முறியடிக்க வீணா எந்த எல்லைக்கும் போவாள்..

“நீங்க ஏன்ம்மா ஃபைட் பண்ணனும்..? ரம்யாவோட அண்ணனா நான் எதுக்கு இருக்கேன்..?” சினம் கொள்வான் ரவிச்சந்திரன்..

“உன் அத்தை சொந்தத்தை முன்னாலே வைத்து நிற்பா ரவி.. உன் தாத்தாவும், பாட்டியும் அதைச் சப்போர்ட் பண்ணுவாங்க.. அந்தத் தாய், தகப்பனுக்குத்தான் தங்களோட

பேரன், பேத்திகள் சிதறிப் போகாம ஒன்றுக்குள்ள ஒன்றாக் கல்யாணம் பண்ணிக்கனும்ங்கிற எண்ணமிருக்காது..?"

"அதை நான் பார்த்துக்கறேன்.."

"உன் அப்பா பாசமலர் அண்ணனுக்கும் பலபடி மேலே இருக்கிறவர் ரவி.. தங்கை, தங்கைன்னு உருகுவார்.. தங்கைக்காக அவர் எதையும் விட்டுக் கொடுக்கட்டும்.. பெற்ற பிள்ளைகளை விட்டுக் கொடுத்திரக் கூடாதுடா.."

வீணா கண்ணீர் மல்க துடிக்கும் துடிப்பைக் காணச் சசிக்காமல் தாயை நெஞ்சோடு அணைத்து ஆறுதல் கூறுவான் ரவிச்சந்திரன்.. மகனின் இரும்புக் குணம் அறிந்த அந்தத் தாய் நம்பிக்கையுடன் தேறி நிற்பாள்..

எதை நினைத்து வீணா பயந்தாளோ அதை நடத்தி விட அவந்திகா காட்டிய முனைப்பில் ரவிச்சந்திரனின் முகம் கடினமானது..

"நிண்ட அத்தை பறயறதும் நியாயம்தானே ரவி.." என்று ஆரம்பித்த யாழினியை கையமர்த்திய ரவிச்சந்திரன்.

"இதைப் பற்றிய பேச்சே வேணாம் பாட்டி.. அத்தை ஆசைப்படறதில தப்பேயில்லை.. எப்போ அவங்க

ஆசைப்பட்டிருக்கனும் தெரியுமா..? அவங்களோட ஹஸ்பெண்ட் வீட்டில.. அவரோட வருமானத்தில அவங்க வாழ்ந்துக்கிட்டிருந்தா ஆசைப் பட்டிருக்கனும்.. அதை விட்டுட்டு இப்படி அப்பாவோட அரண்மனையில குடும்பத்தோட அடைக்கலம் புகுந்துட்டு ஆசைப்படக் கூடாது பாட்டி.. அது சரியில்ல..'' என்று கறாராகச் சொல்லி விட்டான்..

''ரவி..'' யாழினியின் கண்களில் விசனம் வந்தது..

ரவிச்சந்திரன் எதையும் முகத்தில் அடித்ததைப் போலக் கூறி விடுபவன்தான்.. பேச்சென்று வந்து விட்டால் அவன் சொந்த, பந்தமென்ற தயவு தாட்சண்யம் பார்க்க மாட்டான்.. மனதிலிருப்பதை அப்படியே சொல்லி விடுவான்.. மற்றவர்களின் மனம் வருத்தப்படுமே என்று நினைத்தும் பார்க்க மாட்டான்..

அன்றும் அவன் அப்படியே பேசி விட்டதில் மனம் கலங்கிப் போனாள் யாழினி.. என்னதான் சொத்து சுகத்தை இழந்து பிறந்த வீட்டில் அடைக்கலம் புகுந்திருந்தாலும் அவந்திகா யாழினியின் வயிற்றில் உதித்த மகளல்லவா..? அருள்மொழிவர்மனின் செல்லப் புதல்வியல்லவா..? அவள்

பெற்ற பிள்ளைகளை யாழினியின் பேரன் குறைவாகப் பேசுவதா..?

மனைவியின் மனதிலிருந்த கொதிப்பை அருள்மொழிவர்மன் வாய் விட்டே கேட்டு விட்டார்.. ரவிச்சந்திரன் அயரவில்லை.. "தாத்தா.. பாட்டி உங்க குடும்பத்தை விடக் குறைவான குடும்பத்தில் பிறந்தவங்க இல்லை.. அவங்களும்.. கோடிஸ்வரக் குடும்பம்தான்.. அ ம்மாவும் அப்படித்தான்.. இருந்தாலும் இவங்களை சொசைட்டியில பெரிதா நினைக்கிறதுக்கு என்ன காரணம் தாத்தா..?"

"எந்தாக் கேள்வியிது கொச்சு மோனே..? எண்ட பார்யாளயும் நிண்ட அச்சனோட பார்யாளயும் இந்த வயநாடு உயர்வாகத்தானே பறயும்..? எண்டக் குடும்பத்தோட பாரம்பர்யமும், செல்வவளமும் அத்தகையதல்லவா.."

"தெரியுதில்ல..? கல்யாணமான பெண்ணுக்கு அவங்களோட ஹஸ்பெண்ட் ஸ்ட்ராங்கா இருந்தாத்தான் மதிப்பு.. இங்கே அப்படியா..? தன்னோட அப்பாவோட இன்கமில வாழ முடியாம தாய்மாமன் இன்கமில்

வாழ்கிறவனை என் தங்கை மேரேஜ் பண்ணிக்கிட்டா அவளுக்கு என்ன மரியாதை கிடைக்கும்..?”

சம்மட்டி அடியாய் விழுந்த கேள்வியில் மனம் அதிர வாயை மூடிக் கொண்டார் அருள்மொழிவர்மன்.. அதுபோன்ற கேள்விகளை எதிர் கொள்வது தேவைதானா என்ற எண்ணத்தில் ரவிவர்மனும் தகப்பனைப் பின்பற்ற அவந்திகாவிற்குத் துணையாக எவராலும் கேள்வி எழுப்ப முடியவில்லை..

“இதையெல்லாம் ஒருபுறமாய் ஒதுக்கி வைத்துக்கலாம் தாத்தா.. முக்கியமான இன்னொரு காரணமும் இருக்கு..”

“எந்தா கொச்சுமோனே..?”

“அவந்திகா அத்தையோட பிள்ளைகளும், நாங்களும் அவங்கவங்க வீட்டில வளர்ந்திருந்தா எங்களுக்குள்ள அத்தை பிள்ளைகள், மாமன் பிள்ளைகள்ங்கிற அட்ராக்ஷன் இருந்திருக்கும்.. அப்படியில்லாம ஒரே வீட்டில சேர்ந்து வளர்ந்து தொலைச்சிட்டோமே.. அட்ராக்ஷனே வரலையே.. ஒன்றாய் வளர்ந்த பாசம்தானே வந்து தொலைக்குது.. எங்களுக்குள்ள மேரேஜ் நடந்தா இரண்டு பேருக்குமே சந்தோஷம் இருக்காது தாத்தா.. ஆளுக்கொரு திசையில

முகத்தைத் திருப்பிக்கிட்டு கடனேன்னு வாழ்ந்து முடிக்கனும்.. அப்படியொரு வாழ்க்கையை வாழ்கிறதுக்குப் பதில் மேரேஜே பண்ணிக்காம வாழ்ந்துடறது பெட்டர் தாத்தா.. அத்தை பிள்ளைகளைத்தான் நானும், ரம்யாவும் மேரேஜ் பண்ணிக்கனும்னு நீங்களும், பாட்டியும் விரும்பினீங்கன்னா, எனக்கும், ரம்யாவுக்கும் மேரேஜே நடக்க வேணாம் தாத்தா.. இப்படியே உங்க பேரன், பேத்தியாகவே வாழ்ந்து முடிச்சிடறோம்..”

“ரவி..”

விதிர்த்துப் போய் வாய் மூடி விட்டார்கள் அந்தப் பெரியவர்கள்.. வெற்றிகரமாக அவந்திகாவைப் பார்த்தான் ரவிச்சந்திரன்.. உன் ஆட்டம் என்னிடம் செல்லாது என்று அறிவித்தன அவன் விழிகள்.. அவந்திகாவின் குரோதம் அதிகரித்தது.. அந்தக் குடும்பத்திலிருந்த அனைவரையும் அவளால் பாசவலையில் சிக்க வைத்துத் தன் கட்டுக்குள் வைத்துக் கொள்ள முடிந்தது.. ரவிச்சந்திரனிடம் மட்டும் அது எடுபடவில்லை.. அவன் மிக அநாயசமாக அவந்திகாவின் பாச வலையைக் கிழித்து எறிந்து விட்டுக் குடும்பத்தை அவன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டான்.. அருள்மொழிவர்மன், ரவிவர்மன் என்ற அடையாளங்கள்

மாறி ரவிச்சந்திரனின் தாத்தா, ரவிச்சந்திரனின் அப்பா என்று அடையாளம் காணப்பட்டதால் அக்குடும்பத்தின் தலைமைப் பொறுப்பு வெகு இயல்பாக ரவிச்சந்திரனிடம் சென்று விட்டது.

ரவிச்சந்திரன் கெட்டிக்காரனாக இருந்தான்.. மனித மனங்களின் அடியாழ மனதில் இருக்கும் பேராசைகளை இனம் கண்டு கொள்ளும் சூட்சுமம் நிறைந்தவனாக இருந்தான்..

எதை, எதை வைத்து முறியடிப்பது என்ற யுத்த அறிவு நிரம்பியவனாக இருந்தான்..

அவந்திகாவினால் அவனை எதிர்த்து நிற்க முடியவில்லை.. தாயையும், தங்கையையும் கவசம் போலக் காத்து நிற்கும் ரவிச்சந்திரனின் அரணை உடைத்து வீணாவையும் ரம்ய மாலினியையும் அசைக்க முடியவில்லை.. நிராயுதபாணியாக அவள் நின்றாள்..

குடும்பத்தில் முடிவெடுக்கும் அதிகாரம் அருள்மொழிவர்மனிடமோ, ரவிவர்மனிடமோ இல்லை.. ரவிச்சந்திரன்தான் அனைத்து முடிவுகளையும் எடுத்தான்.. அந்த முடிவுகளையும் குடும்பத்தினருடன் கலந்து ஆலோசித்து எடுக்காமல் தன்னிச்சையாக எடுத்தான்.. அதுதான்

அவந்திகாவை அதிக அளவில் பாதித்தது.. குடும்பத்தினருடன் அவன் கலந்து ஆலோசித்தால் தானே இவளது தேவைகளை அருள்மொழிவர்மனின் தேவைகளாகச் சொல்லி இவள் காரியத்தைச் சாதித்துக் கொள்ள முடியும்..?

ரவிவர்மனும் அதற்கு ஆட்சேபம் தெரிவிக்காமல் ஆமோதிப்பார்..?

அதற்கு வழியில்லாமல் ரவிச்சந்திரன் முக்கியமான முடிவுகளை எடுத்திச் செயல்படுத்தி விட்டு அவற்றை தகவலாக குடும்பத்திற்குச் சொல்லுவான்.. அவந்திகா மூட்டி விட முனைவாள்..

"ஈ இன்பர்மேஷன் தேவையல்லோ அச்சா... நிங்களையும் சேட்டனையும் கலந்து ஆலோசிக்காம ரவி தன் போக்கில முடிவெடுக்கிறது சுகமானோ..?"

"தாத்தாவையும், அப்பாவையும் ஆலோசித்து எடுத்த முடிவுகளால இந்தக் குடும்பம் என்ன கதிக்கு ஆளானதுன்னு என்னைவிட அவர்களுக்கு நல்லாத் தெரியும் அத்தை.. நீங்க எடுத்துக் கொடுக்க வேண்டாம்.. நான் எடுக்கிறதுதான் முடிவு.. நான் சொல்கிறதுதான் சட்டம்.. அதுக்கு ஒப்புக்கிறதா இருந்தா ஆறு மாதத்துக்கு ஒரு தரமாவது வயநாட்டுப் பக்கம் வந்துட்டுப்

போவேன்.. இல்லேன்னா தாத்தாவும், அப்பாவுமாச்சு... இந்தக் குடும்பமாச்சு.. எனக்கென்னன்னு ஃப்ரீ பேர்டா உலகத்தைச் சுற்றிக்கிட்டு இருப்பேன்.. இன்கம் கூடும்.. நான் உங்க ஹஸ்பெண்டைப் போல இல்லை அத்தை.. ஒவ்வொரு செகண்டிலும் பணம் பண்ணுகிறவன்... குடும்பச் சொத்தையும்.. மாமனார், மச்சினன் சொத்தையும் அழிக்கிறவனில்ல.. மனசிலாயி..?”

அவந்திகாவின் மனசில் ஆகாமல் இருக்குமா..? அவள் திருவாயை மூடிக் கொள்ள.. ரவிச்சந்திரனின் மிரட்டலுக்குப் பயந்து போனவர்களாக அருள்மொழிவர்மனும், ரவிவர்மனும் அவன் வயநாட்டு அரண்மனையை மறக்கக் கூடாது என்று சத்தியம் வாங்கினார்கள்.. அவன் எடுக்கும் எந்த முடிவையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.. மற்றவர்கள் பேசும் பேச்சைக் கேட்டுக் கொண்டு வாயைத் திறக்கவே கூடாது என்று அவன் பதிலுக்குச் சத்தியம் கேட்க அவர்களும் ‘ததாஸ்து’ என்று அவன் கேட்ட சத்தியத்தைச் செய்து கொடுத்து விட்டு அவன் செய்து கொடுத்த சத்தியத்தை வாங்கிப் பத்திரப் படுத்திக் கொண்டு நிம்மதியானார்கள்..

இப்படியாகத்தானே ரவிச்சந்திரன் வயநாட்டு அரண்மனைக்கு முடி சூடிய மன்னனாகி விட்டான்..

அருள்மொழிவர்மனும், ரவிவர்மனும் பிரஜைகளாகிப் போனார்கள்.. வீணாவின் முகத்தில் நிம்மதி சூழ்ந்தது.. அதைப் பொறுக்க மாட்டாமல் அவந்திகாவின் வயிற்றில் நெருப்புச் சூழ்ந்தது.. வீணாவிடம் தான் தோற்றுக் கொண்டிருப்பதை உணர்ந்தாள் அவள்..

அவந்திகா அடுத்த திட்டத்தை ஆலோசிக்க ஆரம்பித்தாள்.. அஜந்தாவின் அயர வைக்கும் பேரழகு அவளுக்குத் தைரியத்தை கொடுத்தது.. ரம்ய மாலினியின் பொறுமை அவளது ஆசைக்கு எருப் போட்டது.. எவருக்கும் தலை வணங்காத ரவிச்சந்திரனுக்கு அஜந்தாவைத் திருமணம் செய்து கொடுத்து விட்டு, அனைவரிடமும் பணிவாக நடந்து கொள்ளும் ரம்ய மாலினியை அபராஜிதனுக்குத் திருமணம் செய்து வைத்து விட்டால் அவந்திகாவை எவராலும் அசைக்க முடியாது.. அதன் பின்னால் வயநாட்டு அரண்மனைக்கு அவள்தான் ராணி.. அவள் இட்டதுதான் சட்டம்.. சட்ட வரைவை அவள் தயாரிப்பாள்.. தீர்மானத்தை அவளது பிள்ளைகள் நிறைவேற்றுவார்கள்.. அஜந்தாவின் அழகுக்கு அடி பணியாவிட்டாலும் ரம்ய மாலினியின் கண்ணீருக்கு ரவிச்சந்திரன் அடி பணிந்துதானே ஆக வேண்டும்..? ரம்ய மாலினியின் கூந்தல் அபராஜிதனின் கையில் சிக்கி விட்டால்

அதன்பின் அபராஜிதன் சுற்றி விடும் சாட்டைக்கு ரவிச்சந்திரன் பம்பரம் போல சுழலத்தானே வேண்டும்..?

இரவு, பகலாக திட்டம் தீட்டி சமயம் பார்த்து அருள்மொழிவர்மனிடமும், யாழினியிடமும் அதைப் பற்றிப் பேசி மனதில் பதிய வைத்துவிட வேண்டும் என்று அவந்திகா தருணம் பார்த்துக் கொண்டிருந்த தருணத்தில்தான் யோகானந்தன் ஆயிரம் சோழ கடன்களைக் கொண்டு வந்து மனைவியின் தலைமீது சுமத்தி அதற்காக அருள்மொழிவர்மனிடம் அவள் யாசகம் கேட்டும் தருணத்தை உருவாக்கி உயிரைக் குறைத்தார்..

“அம்மே..! அச்சா..!”

அவந்திகா பெற்றோரிடம் சரணடைய அவர்கள் குடும்பத் தலைவனான ரவிச்சந்திரனிடம் பிரச்னையைக் கொண்டு வந்தார்கள்.. தனக்கும் ரம்ய மாலினிக்குமான சொத்துக்களை பணயம் வைத்தால் எப்படித் தங்களுக்குத் திருமணம் ஆகும் என்ற கேள்வியை ரவிச்சந்திரன் எழுப்பியபோது அரண்டு போன அவந்திகாவை அருகில் இழுத்து மைத்துனன் பிள்ளைகளுக்குத் தங்களின் பிள்ளைகளை மணம் முடித்துக் கொடுத்தால்தான் வயநாடு அரண்மனையில் சுகவாசிகளாக

ஜீவிதம் பண்ண முடியும் என்பதை யோகானந்தன் எடுத்துக் சொல்ல.. 'எனக்குத் தெரியாதா..?' என்ற பார்வையை கணவன்மீது வீசி விட்டுத் தாய் தந்தையிடம் நியாயம் கேட்டாள் அவந்திகா.. அவர்களும் பெற்ற மகளின் ஆசையில் நியாயம் இருப்பதாக பரிந்துரைத்து விட்டு ரவிச்சந்திரனிடம் மிக நன்றாக வாங்கிக் கட்டிக் கொண்டார்கள்..

ரவிச்சந்திரனின் கடுமையான மறுப்பினால் அந்த கோரிக்கையை கைவிட்ட அவந்திகா உடனடிப் பிரச்னையான ஆயிரம் கோடிக் கடனையாவது அடைக்க வேண்டுமென்று முறையிட்டாள்..

அந்த அரண்மனையில்தானே வசிக்கப் போகிறாள்.. பிள்ளைகளின் திருமணம் எங்கே போய் விடப் போகிறது என்ற நினைவு அவருக்கு..

அபராஜிதன் யோகானந்தனை விடப் படு கேடி.. கண்டு விட்டு வா என்றால் குண்டுக் கட்டாய்க் கட்டித் தூக்கிக் கொண்டு வந்து விடுவான்.. ஒரே அரண்மனையில் இருக்கும் ரம்ய மாலினியை விட்டு விடுவானா என்ன..? அவந்திகா சொல்ல வேண்டுமென்பதே இல்லை.. அவனது குறி ரம்ய மாலினியாகத்தான் இருந்தது..

“விவாகம் பத்தின பேச்சுத்தான் ரவி வேண்டாமின்னு பறஞ்சது.. கடனை அடைக்கலாவது ரவி மனசு வைக்கனும் அச்சா.. ஈ பிரச்னை எண்ட குடும்பத்தோட முடியாது.. ஞான் நிண்ட மகளெண்டு நிங்களுக்கும் அபவாதம் வந்து சேருமல்லோ..? இவ்விடத்த நம்ப குடும்பம் ஜீவிக்கிற ஜீவிதத்திற்கு ஒரு மரியாதை உண்டல்லோ..?”

அவந்திகா சாகசக்காரி... சாதுர்யக்காரி... வெகு கவனமாக வார்த்தைகளைச் செப்பனிட்டு அந்த ஆயிரம் கோடி கடனுக்கும் அவளுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை.. அருள்மொழிவர்மனுக்குத்தான் சம்பந்தம்.. அதனால் அவருடைய பாரம்பர்ய கௌரவம் தான் பாதிக்கப்படும் என்று முகத்தை சோகமாக வைத்துக் கொண்டு எடுத் துரைத்து விட்டாள்..

ஓரளவு அதில் உண்மையும் இருந்தது.. அவந்திகா அருள்மொழிவர்மனின் மகள்.. யோகானந்தன் அவந்திகாவின் கணவன்.. அவந்திகா தன் குடும்பத்தோடு அருள் மொழிவர்மனின் அரண்மனையில்தான் வசிக்கிறாள் எனும் போது யோகானந்தனின் கடன் விவகாரம் அருள்மொழிவர்மனின் பாரம்பர்யப் பெருமையைப் பாதிக்கத்தான் செய்யும்..

அது அநியாயமாகவே இருக்கலாம்.. அவந்திகாவைத் திருமணம் செய்து கொடுத்து விட்டதினால் அவளுக்கு என்ன ஆனாலும் எனக்கு ஒன்றுமில்லையென்று அருள்மொழிவர்மனாலும், ரவிவர்மனாலும் இருக்க முடியாதே.. அவள் குடும்பம் வேறு, அவர்களின் குடும்பம் வேறு என்று ஒதுங்கி விட முடியாதே.. அவளுக்கு அடிபட்டால் அவர்களுக்கு வலிக்கத்தானே செய்யும்..?

அந்த உணர்வைத்தான் அவந்திகா பயன் படுத்திக் கொண்டாள்.. கணவன் வாங்கிய கடனை அருள்மொழிவர்மனின் தலையில் சுமத்தினாள்.. பாசத்தினால் தந்தைக்கும், தாய்க்கும், தமையனுக்கும் விலங்கிட்டாள்.. ஆனால் எவ்வளவுதான் சாதுர்யமாக காய் நகர்த்தினாலும் அவளால் கடைசிவரை ரவிச்சந்தினுக்கு விலங்கிட முடியவில்லை..

அவன் கட்டுக்கடங்காத கடல்..! அவனைப் பார்க்கும் போதெல்லாம் அவந்திகாவின் மனதில் பயம்தான் வரும்.. எதற்கும் அஞ்சாதவள், எவருக்கும் அஞ்சாதவள், தன் அண்ணனின் மகனுக்கு அஞ்சி அடி பணிந்தாள்..

அத்தியாயம் 69

“**கொ**ச்சு மோனே..!”

அருள்மொழிவர்மன் ஆரம்பித்தபோதே கையை உயர்த்தி அவர் சொல்வதைத் தடுத்து விட்டான் ரவிச்சந்திரன்..

“தாத்தா.. நீங்க என்ன சொல்லப் போறிங்கன்னு எனக்குத் தெரியும்.. உங்க மகளோட கடனை நான் அடைக்கனும்னா உங்க பேரிலயும், பாட்டி பேரிலயும், ஏன், அப்பா பேரிலயும் இருக்கிற அத்தனை சொத்துக்களையும் என் பேருக்கு மாத்தி எழுதித்தரனும்.. இந்த அரண்மனை உட்பட.. இதில் எந்தவிதமான காம்ரமைஸுக்கும் இடமில்லை.. நான் சொன்னாச் சொன்னதுதான்..”

ரவிச்சந்திரன் பேச்சுக்கு மறுபேச்சு அங்கில்லை.. அது எப்படி என்று அவந்திகாவினால் ஆட்சேபக்குரல் எழுப்ப முடியவில்லை.. யோகானந்தனின் கடனைக் கட்டும் அளவிற்கு ரொக்கப் பணம் எவரிடமும் இல்லை.. அவர்களிடம் இருந்த சில கோடிகளைக் கொண்டு எந்த ஆணியையும் பிடுங்க இயலாது.. எப்படியும் குடும்பச் சொத்துக்களை விற்றுத்தான் ஆக வேண்டும்.. அப்படி அவற்றை விற்க

காலதாமதம் ஆகும்.. உடனடியாக விற்க முடியாது.. கிடைக்கும் பணம் ஐநூறு கோடிகளைத் தாண்டலாம்.. ஆயிரம்கோடி ரூபாய் கடனுக்கு அவை போதாது.. ரவிச்சந்திரனின் தயவு இல்லாமல் யோகானந்தன் மீள முடியாது..

வேறு வழியில்லாத அருள்மொழிவர்மனும், யாழினியும் தங்களின் சொத்துக்களை பேரனுக்கு விற்கச் சம்பதித்து விட்டார்கள்... ரவிவர்மனும் அதையே சொன்னார்...

அது போதும் என்று ரவிச்சந்திரன் சொல்லவில்லை.. மாறாக முகம் இறுக தன் அறிவிப்பை வெளியிட்டான்..

“தாத்தா, நீங்களும், பாட்டியும், அப்பாவும் கொடுக்கக் கூடிய சொத்துக்களின் மதிப்பு ஐநூறு கோடிதான்.. மீதிப் பணத்திற்கு மாமா கடன் பத்திரம் எழுதித்தரனும்..”

யாருக்கு வந்த கடனோ என்று விச்ராந்தியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த யோகானந்தன் வெகுண்டார்.. மனைவியைத் தூண்டி விட்டார்.. அவள் அண்ணன் மகனிடம் பொங்கினாள்..

“எந்தா பறயுன்னு ரவி..? நிண்ட அம்மாவன்கிட்டயே கடன் பத்திரம் கேப்பியோ..? வளர நன்னாயிட்டுண்டு ரவி..”

“எனக்கு இதுதான் நல்லாயிருக்கு அத்தை... ஐநூறு கோடி ரூபாய்ன்னா.. சும்மாயில்லை.. சம்பாதிக் கிறவங்களுக்குத்தான் அந்த அருமை தெரியும்..”

“நிண்ட சம்பாத்தியத்துக்கு எந்தா குறச்சல் ரவி..?”

“அதுக்கு..? உங்க குடும்பத்துக்கு அதைத் தாரை வார்த்துக் கொடுத்துடனும்னு நினைக்கறீங்களா.. நெவர்..”

“ஈ நிலம நிண்ட அணியத்திக்கு வந்தா நீ எந்தா செய்யுனு ரவி..?”

“என் தங்கைக்கு இப்படிப்பட்ட நிலை வரவே வராது அத்தை.. உங்க மகன் போல ஊதாரித்தனம் செய்கிறவனுக்கு நான் என் தங்கையை மேரேஜ் பண்ணிக் கொடுக்க மாட்டேன்.. என்னைப் போல ஒரு செகண்டையும் வீணடிக்காம உழைக்கிறவனுக்குத்தான் என் தங்கையை மேரேஜ் பண்ணிக் கொடுப்பேன்..”

“வழக்கு வேணாம் ரவி.. நிண்ட அம்மாவன் வேணும்னா நிண்ட கிட்ட மாப்புக் கேட்டுக்குவார்.. ரவி ஆலோசிக்கனும்.. நிண்ட அம்மாவன ஷமிக்கனும்..”

“அவரை மன்னிக்க நான் யார் அத்தை..?”

"அவ்விதம் பறயானாம் ரவி.. ஈ தரவாடில தம்புராட்டியா ஜீவிதம் பண்ணின மனுஷி ஞான்..?"

"அதுசரி.. ஒரு குடும்பத்தோட பெரிய வீட்டில ராணி மாதிரி அங்கே வாழ வந்த மருமகள் வாழனும்.. மகள் வாழக் கூடாது.. உங்க அம்மா, அதுதான் என் பாட்டி இந்த அரண்மனையில பிறந்தவங்க இல்லை.. வாழ வந்த மருமகள்.. அதுக்கடுத்து என் அம்மாதானே இந்த வீட்டோட ராணியா இருக்கனும்..? நீங்க ஏன் அந்த இடத்தை உரிமை கொண்டாடறீங்க.. உங்களையும் அரண்மனையிலதானே மேரேஜ் பண்ணிக் கொடுத்தாங்க..? அங்கேதானே நீங்க ராணி..? ஒன்றை உங்களுக்கு நினைவு படுத்தறேன் அத்தை.. பாட்டிக்கும் நாத்தனார் இருக்காங்க.. ஒன்றுக்கு இரண்டு நாத்தனார்.. அவங்க மேரேஜாகிப் போன இடத்தில ராணி போல வாழறாங்க.. பிறந்த வீட்டுக்கு ஏதாவது ஃபங்ஷன்னா மட்டும் வந்து போவாங்க.. இங்கேயே டேரா போட்டு பாட்டியோட இடத்தைத் தட்டிப் பறிக்க நினைக்கலை.. மனசிலாயி..?"

அவந்திகாவின் மனதில் தீ எரிந்தது.. ரவிச்சந்திரன் கேட்கும் கேள்விகளுக்கு அவளால் பதில் சொல்ல முடியவில்லை.. அவமானத்தினால் அவனைப் பொசுக்க

என்ன வழியென்று தேடி வார்த்தைகளைக் கோர்த்துச் சாடினாள்..

“ஓர்மையுண்டு ரவி.. நிண்ட பறயனுமின்னு இல்ல ரவி.. எனிக்கு மறக்குமோ..? ஆ அப்பச்சிகளோட மோளை எண்ட சேட்டன் விவாகம் செய்ய மறுத்துட்டல்லோ.. ஞான் எங்ஙன மறக்கும்..?”

விஷமப் புன்னகையும், விஷம் வழியும் விழிகளுமாக அவந்திகா அதை நினைவுறுத்தினாள்... அருள் மொழிவர்மனின் தங்கைகள் இருவர்.. இருவரிடமும் பெண்ணிருந்தும்

ரவிவர்மன் வீணாவின் மீது ஆசை கொண்டு பிடிவாதமாக அவளை மணந்தார்.. அதை இப்போது சொல்லிக் காட்டினாள் அவந்திகா..

வீணாவின் முகம் மாறியதைப் பார்க்காததைப் போலப் பார்த்த ரவிச்சந்திரன் பல்லைக் கடித்தான்.. எப்போதும் போல கோபத்தை முகத்தில் காட்டாமல் நிதானமாக கேள்வி கேட்டான்..

“அப்பாவுக்கு சயின்ஸ் பத்தின அறிவு இருக்கு.. அத்தை மகளை மேரேஜ் பண்ணிக்கக் கூடாதுன்னு அவர்

காலத்திலேயே டிசைட் பண்ணி மறுத்திருக்கார்.. நீங்க தான் அதை மறந்திட்டு உங்க பிள்ளைகளை எங்க தலையில் கட்டப் பார்க்கறிங்க..”

பேரன் போட்ட போட்டில் யாழினி விழி மூடித் திறந்தாள்.. மகளை எண்ணி அவளுக்குள் கோபம் பிறந்தது.. தற்போது என்ன பேச்சு ஓடிக் கொண்டிருக்கிறது..? அவந்திகா எதைப் பேசிவைக்கிறாள்..? யோகானந்தனின் கடனை முடித்து வைக்கும் எண்ணமிருந்தால் ரவிச்சந்திரனின் கோபத்தைக் கிளறிக் கொண்டிருப்பாளா..?

“நிங்களோட மோள் சற்றுத் திருவாயை மூடிக்கனும்.. கேட்டியல்லோ..” அருள்மொழிவர்மனின் காதருகே முணுமுணுத்தாள்..

“அதே.. யாழினி.. ஞான் ஆலோசித்ததும் அதேயல்லோ.. ஈ மனுஷிக்கு அறிவில்லோ.. எந்தா திவசம் இது..? யோகானந்தனோட கடன் பத்தி மட்டும் பறயனும்.. மத்த சேதிகளத் தள்ளிப் போடனும்ங்கிற மதி இல்லா மனுஷி..” அருள்மொழிவர்மனும் பதிலுக்கு பார்யாளின் காதருகே முணுமுணுத்து வைத்தார்..

அவந்திகாவின் அழகிய சந்தன நிற முகம் விகாரமாய் கோணியது.. மனிதரின் மனதில் உள்ள விகாரங்களை முகம் பிரதிபலித்தால் இப்படித்தான் ஆகும் என்று நினைத்துக் கொண்டான் ரவிச்சந்திரன்.. புற அழகு அழகல்ல... அக அழகுதான் அழகு... இதை அவந்திகாவிடமும் அஜந்தாவிடமும் யார் சொல்வது..? அஜந்தா ஓவியம் போல வெகு அழகாக இருக்கும் அஜந்தா தாய் எட்டடி பாய்ந்தால் எண்ணூறு அடிக்குப் பாய்ந்துத் தொலைக்கிறாளே..

“இன்னொன்றையும் சொல்ல வேண்டும் அத்தை..”

ஊசிமுனைப் பேச்சுக்களை உதிர்க்கும் ரவிச்சந்திரனின் அடுத்த ஊசிமுனைத் தாக்குதல் எதுவாக இருக்கும் என்று முகம் வெருத்தாள் அவந்திகா.. யாழினிக்கு மகளின் நிலையைப் பார்க்க இரக்கமாக இருந்தது.. ரவிச்சந்திரனின் மீது அவந்திகாவுக்கு எந்த அளவுக்கு பயம் இருக்கிறது என்பதை யாழினி அறிவாள்.. அரண்மனையும் சொத்துக்களும் அருள்மொழிவர்மனின் வசம் இருந்த போதே அவள் எந்த நொடியில் ரவிச்சந்திரன் வீட்டை விட்டு வெளியேறு என்று சொல்லி விடுவானோ என்று அஞ்சி நடுங்கிக் கொண்டிருப்பாள்.. இப்போது அரண்மனையும், மற்ற சொத்துக்களும் ரவிச்சந்திரனின் பெயருக்கு மாறப் போகிறது..

உத்தரவாதமில்லாத அரண்மனை வாழ்வு அவந்திகாவுக்கு கிட்டப் போகிறது.. இனி ஒவ்வொரு நொடியும் அவந்திகா துன்பப்படப் போகிறாள்.. அச்சமே நரகம்..

“பறயனும் ரவி..” அவந்திகா தீனமான குரலில் சொன்னாள்..

“என் அம்மா கோடிஸ்வரரோட மகள்.. ராஜ பாரம்பர்யத்தில பிறந்தவங்க.. என் அப்பாவோட அத்தை மகள்களை விட அதிகச் செல்வச் செழிப்பானவங்க.. ஏன்.. உங்களை விடவும் செல்வாக்கானவங்க..”

வீணாவின் முகத்தில் தேஜஸ் வந்தது... அருள்மொழிவர்மனின் குடும்பம் மட்டுமே கோடிஸ்வர ராஜ குடும்பம் போலவும் வீணா என்னவோ ஒன்றுமில்லாத குடும்பத்தில் பிறந்தவள் போலவும் ரவிவர்மனின் மனைவியானது அவளுக்குக் கிடைத்த அதிர்ஷ்டம் போலவும் அவந்திகா பேசித் தள்ளும்போது பதில் பேசாமல் குடும்பத்தின் அமைதிக்காக வீணா அமைதியாக இருப்பாள்.. அதைப் பயன்படுத்திக் கொண்டு சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அவந்திகா தன் அண்ணன், அத்தை மகள்களைத் திருமணம் செய்து கொள்ள மறுத்து விட்டு, வீணாவைத் திருமணம்

செய்து கொண்டு வந்து குலப்பெருமைக்கு இழுக்கு விளைவித்து விட்டார் என்ற ரீதியில் பேசித் தள்ளி விடுவாள்.. வீணாவிற்குத் துன்பமாக இருக்கும்..

இன்று ரவிச்சந்திரன் அவந்திகாவின் பேச்சுக்குச் சரியான பதிலடியைக் கொடுத்துக் கட்டியதில் ஈன்ற பொழுதினும் பெரிதுவந்தாள்..

“கொச்சு மோனே..!”

பொறுத்தது போதும் என்று களம் புகுந்த யாழினியின் கெஞ்சுதல் நிரம்பிய குரலில் இன்றைக்கு இது போதும் என்று விட்டு வைத்தான் ரவிச்சந்திரன்.. அவந்திகாவும் தப்பிப் பிழைத்தாள்..

“நிண்ட அப்பச்சியை ஷமிக்கனும் கொச்சுமோனே..! நீ அறியாததா..? ஈ மனுஷிக்கு பிராந்தை ரவி.. எந்து திவசம் எந்து காரியத்தப் பறயனும்ங்கிற மதியில்லா மனுஷி.. நிண்ட ஆலோசனை எந்துவோ அதப் பறயனும்.. நம்பட தரவாடோட பகுமானத்த ரவிதான் காக்கனும்..”

“ஆகட்டும் பாட்டி.. நான் சொன்னதைப் போல அத்தனை சொத்தையும், அரண்மனையையும் என் பெயருக்கு மாற்றி ரிஜிஸ்ட்ரார் பண்ணிருங்க.. மீதமிருக்கிற ஐநூறு கோடிக்கு

மாமா கடன் பத்திரம் எழுதித் தரட்டும்.. அதுக்கப்புறமா மாமாவோட கடனை நான் செட்டில் பண்றேன்..”

“இது சரியில்ல அம்மே..”

அவந்திகா முறையீடு எடுபடவில்லை.. யோகானந்தன் கடன் பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது.. ரவிச்சந்திரனிடம் யோகானந்தன் கடன்பட்டு விட்டதில் அவந்திகா குன்றிப் போனாள்.. அரண்மனையும், அனைத்துச் சொத்துக்களும் ரவிச்சந்திரனின் உடமைகளாகி விட்டன.. இனித் தாய் வீட்டில் இருப்பதாக ரவிச்சந்திரனின் தாயான வீணாவை அவந்திகா அரட்ட முடியாது.. அவளும், அவளுடைய குடும்பமும் வீணாவின் மகன் வீட்டில் வாழப் போகின்றனர்.

ரவிச்சந்திரன் அதோடும் நிறுத்தவில்லை.. கேரளாவில் வெளியாகும் அனைத்துத் தினசரிகளிலும், மற்ற மாநிலங்களில் வெளியாகும் முக்கியத் தினசரிகளிலும் யோகானந்தன் வாங்கும் கடன்களுக்கும் அவனுக்கும் யாதொரு சம்பந்தமும் இருக்காது என்ற அறிவிப்பைக் கொடுத்து விட்டான்.. அதை உலகின் மற்ற நாடுகளின் வியாபார இதழ்கள் நகலெடுத்து வெளியிட்டதில் யோகானந்தன் முடங்கிப் போனார்..

அவருக்கான அடையாளமே அவர் ரவிச்சந்திரனின் உறவினர் என்பதுதான்.. அவனே இப்படியொரு அறிவிப்பைக் கொடுத்து விட்ட பின்பு அவரை நம்பி யார் கடன் தருவார்கள்..

“எந்தா இது கொச்சு மோனே..?”

அருள்மொழிவர்மனும், யாழினியும் அதிர்ச்சியடைந் தார்கள்.. ரவிச்சந்திரனின் இந்த நடவடிக்கையை அவர்கள் துளிக்கூட விரும்பவில்லை.. அவர்கள் வாழ்ந்த வாழ்வின் பெருமைக்கு ரவிச்சந்திரன் மதிப்புக் கொடுக்கவில்லையெனச் சாடினார்கள்..

“என்னை என்னதான் செய்யச் சொல்கிறீங்க தாத்தா.. இப்போதுதான் இவர் வாங்கிய ஆயிரம் கோடி ரூபாயை செட்டில் பண்ணி முடித்திருக்கேன்.. ஐநூறு கோடி ரூபாய் பணத்துக்குத்தான் நீங்க சொத்துக்களை எழுதிக் கொடுத்தீங்க.. மீதி ஐநூறு கோடி ரூபாய் கடன் பத்திரமா அப்படியேதான் நிற்குது.. இவரும், இவரோட குடும்பமும் என் அரண்மனையிலேதான் இருக்கிறாங்க..”

ரவிச்சந்திரன் ‘என் அரண்மனை..’ என்று அழுத்தம் கொடுத்ததில் கொதித்துக் கொண்டிருந்த வயோதிகர்களின் கோபம் சற்றுக் குறைந்தது..

“இவங்க பிள்ளைகளை நான்தான் படிக்க வைத்துக்கிட்டு இருக்கேன்..”

அடுத்த அறிவுறுத்தலில் இன்னும் கொஞ்சம் கோபம் குறைத்தார்கள்..

“இந்த நிலைமையிலே இருக்கிற மனிதர் எப்படியிருக்கனும்..? அமைதியா இருக்கனுமா வேண்டாமா..?”

“சாந்தமாத்தான் ஜீவிக்கனும் ரவி..”

“உங்க மருமகன் அதைச் செய்யவில்லை தாத்தா.. திருவனந்தபுரத்தில இருக்கிற பைனான்ஸ் கம்பெனியில நூறு கோடி ரூபாய் கடன் கேட்டிருக்கார்.. பத்தாததுக்கு லண்டன் பேங்கில இருநூறு கோடி ரூபாய் கடன் கேட்டு அப்ளை பண்ணியிருக்கார்.. இரண்டு இடத்திலயும் ஷீரிட்டியா என்னோட ‘யாழ்’ ஹோட்டல் பெயரை யூஸ் பண்ணியிருக்கார்..”

“எந்தா..?”

அருள்மொழிவர்மனால் தன் மருமகனை மன்னிக்கவே முடியவில்லை.. யாழினியோ யோகானந்தனைப் புழுவைப்

பார்ப்பதைப் போலப் பார்த்தாள்.. பெற்றவர்களின் கோபத்தில் அவந்திகா துடித்துப் போனாள்.. அவளுக்குத் தெரியும்.. அருள்மொழிவர்மனும் யாழினியும் குடும்ப கௌரவத்தைப் பெரிதாக நினைப்பவர்கள்.. அவந்திகாவை விட்டுக் கொடுக்காமல் அவர்கள் தாங்குவதற்கு பெற்ற பாசம் மட்டும் காரணமல்ல.. அவர்களது மகள் நிராதராவாக நிற்கிறாள் என்ற பெயர் வந்துவிடக் கூடாது என்ற குடும்ப கௌரவமும் காரணம்..

பாரம்பர்யம் நிறைந்த அருள்மொழிவர்மனின் குடும்பப் பெருமை சிதைந்து விடாமல் காப்பாற்றி அதை மேம்படுத்திக் கொண்டிருக்கும் ரவிச்சந்திரனை அவர்கள் குலவிளக்காக நினைத்துப் போற்றினார்கள்.. அவன் சொல்லுக்கு கட்டுப் பட்டார்கள்.. அங்கே தொட்டு.. இங்கே தொட்டு.. யோகானந்தன் ரவிச்சந்திரனின் சொத்துக்களையும் தொட முயன்றதில் வெகுண்டு விட்டார்கள்..

“நிண்ட கணவனண்டே பறயனும் அவந்திகா.. ஈ காரியத்துக்கு ஞான் ஒரப்பான மாப்புத் தர மாட்டேன்..”

“அம்மே..”

“அச்சன் பறஞ்சதத்தான் ஈ அம்மையும் பறஞ்சு மோளே.. ஈ கொட்டாரத்தோட பெகுமானம் ரவிச்சந்திரனோட கரத்தில இருக்கனு.. எங்கட கொச்சுமோனன்ட நிண்ட கணவன் அணுகக் கூடாது.. அம்மாவன் பந்தத்த பறயக் கூடாது..”

“எண்ட குருவாயூரப்பா..!”

அவந்திகா விக்கித்துப் போய் விட்டாள்.. அவளுக்குப் பேச நா வரவில்லை.. யோகானந்தன் இப்படியொரு காரியத்தைச் செய்து வைப்பார் என்று அவள் நினைத்தாள்தான்.. இத்தனை விரைவில் செய்து வைப்பார் என்று நினைத்தும் பார்க்கவில்லை.. அவளைத் தாங்கிப் பேசும் பெற்றோரே ரவிச்சந்திரனின் முன்னிலையில் கடிந்து பேசி விட்டதில் மனம் துடித்தாள்..

“எதுக்கும் ஒரு லிமிட் இருக்கனும் தாத்தா.. உங்க மருமகனுக்கு லிமிட்டுன்னா என்னன்னே தெரியாது.. இவரோட செலவுக்குத் தீனி போட என்னால் முடியாது.. இவர் யார்..? நான் யார்..? இவரோட அப்பா வீட்டுச் சொத்துக்களை அழிச்சார்ன்னா அந்தச் சொத்துக்கு இவர் பிறந்திருக்கார்.. அத்தையோட சொத்துக்களை அழிச்சார்ன்னா அத்தையை மேரேஜ் பண்ணியிருக்கார்.. உங்க சொத்துக்களை

அழிச்சார்ன்னா உங்களுக்கு மருமகனா ஆகியிருக்கார்.. என் அப்பா சொத்துக்களையும் கை வைச்சார்ன்னா அப்பாவுக்கு தங்கை ஹஸ்பெண்டா இருந்து தொலைக்கிறார்.. பட்.. என்னோட சொத்துக்களில் உரிமை கொண்டாட இவர் யார் தாத்தா..? உறவு முறைகளையெல்லாம் உங்களோ டு இவர் நிறுத்திக்கனும்.. அதைத் தாண்டி என் பக்கத்திலோ, என் சொத்துக்கள் பக்கத்திலோ வரக் கூடாது.. அதுக்குத்தான் இந்த நடிவடிக்கை.. இவரை நம்பி ஒரு ரூபாய் காயினைக்கூடக் கடன் கொடுக்க மாட்டாங்க.. இவரோட அப்பாவோட சொத்தையும், மாமனார் வீட்டுச் சொத்தையும் ஷீரிட்டியாக் காட்டித்தான் கடன் வாங்கிக்கிட்டு இருந்தார்.. அடுத்து என் பக்கமா வரப் பார்க்கிறார். . நான் அதை அலோவ் பண்ண மாட்டேன்..”

ரவிச்சந்திரனின் கண்டிப்பான வார்த்தைகளில் இருந்த நியாயத்தில் யாரும் எதிர்த்துப் பேசவில்லை.. அவனது நடவடிக்கையை ஆமோதித்தார்கள்... ஒருவகையில் அது அவந்திகாவிற்குப் பயனுள்ளதாகவும் பாதுகாப்பானதாகவும் ஆகிவிட்டது.. யோகானந்தனை நம்பி எவரும் ஒற்றை ரூபாயை ஈயவில்லை என்பதினால் அவர் கப்சிப்பென அடங்கி வீட்டிலே தேங்கினார்.. உலகச் சுற்றுலாக்களில் உல்லாசமாக

செலவளித்த காலங்களை மனதுக்குள் ஏக்கத்துடன் அசைபோட்டபடி வாலைச் சுருட்டிக் கொண்டு முடங்கினார்..

“அத்தானோட ஆக்ஷன் வல்லிய பிரமாதம் அம்மே..”

அஜந்தா மெச்சினாள்.. அது உண்மையென்பதில் அவந்திகா மௌனமானாலும் வேறு ஒன்று அவள் மனதை உறுத்தியது.. இனிக் காலம் முழுவதும் அவள் ரவிச்சந்திரனின் அடைக்கலத்தில் அகதியாகத்தான் வாழ்ந்தாக வேண்டும்..

“தாத்தா, பாட்டி உண்டல்லோ அம்மே..”

“எத்தன திவசத்துக்கு மகளே.. அவங்க மரிச்சுப் போனதும் நம்பளுக்கு எங்கன ஆதரவு கிட்டும்..?”

“அம்மாவன் உண்டல்லோ..”

“அம்மாவனுக்கு அப்புறம்..?”

ரவிவர்மனே போனதும் அவந்திகாவும், யோகானந்தனும் நிலைத்து நிற்பார்களா என்ற எண்ணம் தோன்றியது அஜந்தாவிற்கு.. அதை வாய்விட்டுச் சொல்ல முடியாமல்..

“எந்தினா கரையூந்தே அம்மே..? ஞானும் சேட்டனும் நிங்களயும் அச்சனையும் கண்டு கொள்ள மாட்டோமோ..?” என்று தாயைத் தேற்றினாள்..

“கரையாம எங்கன ஜீவிக்க ஏலும் மோளே.. நிண்ட சேட்டனப் பத்தி நீ அறிய மாட்டியோ..? எண்ட மோன் அவனின்ட அச்சனப் போலயில்ல ஜீவிக்கிறான்..”

“ஞான் உண்டே அம்மே..”

அவந்திகா தன் மகளை நம்பிக்கையோடு பார்த்தாள்.. அஜந்தாவின் அழகு அவளது நம்பிக்கைக்கு நீர் வார்த்தது.. அவளைப் போன்ற அழகி கேரள மாநிலத்திலேயே இல்லை.. உலக அழகிகளில் ஒருத்தியாக மிளிர்ந்தவளின் கன்னம் வழித்துத் திருஷ்டி கழித்தாள்..

“எண்ட மோள் வல்லிய சுந்தரியாக்கும்.. நிண்ட வனப்பில ரவிச்சந்தின மயக்கி விவாகம் செய்துட்டா வளர நன்னாயிட்டுண்டு மோளே.. ஆ திவசம் கிட்டுமோ..?”

“கிட்டும் அம்மே..”

அத்தகைய நாள் வரும் என்று தாய்க்கு வாக்குறுதியளித்தாள் அஜந்தா.. அகதியாக வாளும் அந்த அரண்மனைக்கு மகாராணியாக்கிக் காட்டுகிறேன் என்று சூளுரைத்தாள்.. அது மட்டும் போதாது.. வீணாவின் உயிரை எடுக்க வேண்டும் என்று பல்லைக் கடித்தாள் அவந்திகா.. அதற்கான முயற்சிகளில் அவள் ஈடுபட்டுத் தோற்று விட்ட

கதைகளை அவள் மகளிடம் சொல்லிக் கொண்டிருந்ததை ரவிச்சந்திரன் கேட்டு விட்டான்..

அதை மட்டுமா அவன் கேட்டான்..? அன்னையின் ஆணையை செவ்வனே முடிப்பதாக மலையாளப் பேரழகி அஜந்தா சபதம் செய்ததையும் கூடவே கேட்டு வைத்தான்.. அவன் முகம் பயங்கரமாக மாறியது.. அப்போதே தாயையும், மகளையும் துண்டாடி விடக் கோபம் கொண்டவன் குடும்பத்தின் பெரியவர்களுக்காக அதை அடக்கிக் கொண்டான்..

அத்தியாயம் 70

என்றுமே அஜந்தாவின் மீது ரவிச்சந்திரனுக்கு ஈர்ப்பு இருந்ததில்லை.. அவளைப் போன்ற அழகிகள் பலரை அவன் வாழ்வில் சந்தித்துக் கொண்டு இருந்ததினால் அஜந்தாவின் அழகு அவனைப் பிரமிக்க வைத்ததில்லை.. செடியையும், கொடியையும் பார்ப்பதைப் போல அவளைப் பார்த்து விட்டுப் போய் விடுவான்.. அவனது அந்தப் பார்வை அஜந்தாவின் மனதில் தீ மூட்டும்.. மற்றவர்கள் எல்லாம் அவளது அழகைக் கண்டு பிரமிக்கும்போது ரவிச்சந்திரன் மட்டும் அவளை உதாசீனம் செய்வதாக பொருமிப் போவாள்..

யோகானந்தன், அவந்திகா தம்பதியினர்க்கு மகளாகப் பிறந்தவளிடம் நேர்மையான குணாதிசியங்களை எதிர்பார்க்க முடியாதுதான் என்றாலும் இந்த அளவுக்கு கொடூரமானவளாக அஜந்தா இருப்பாள் என்று நிச்சயமாக ரவிச்சந்திரன் நினைத்திருக்கவில்லை..

‘பாவம்.. அத்தையின் பிள்ளைகள்..’ என்று அவன் மனதில் ஒட்டியிருந்த கடுகளவு பரிதாபமும் கழன்று விழுந்தது அச்சுபதினத்தில்தான்.. அதையறியாமல் எதிர்பட்ட அஜந்தா

ரவிச்சந்திரனைக் கண்டதும் விழிகளைச் சுழற்றி மன்மத பாணத்தை எய்து..

“ஹேய்.. மதனா..! இதுதான் சுபநாள்..” என்று பாடி வைத்தாள்..

அப்படியே கன்னம் கன்னமாக நான்கு அப்பு அப்ப வேண்டும் போலக் கிளர்ந்த வெறியில் அவளை முறைத்துப் பார்த்தான் ரவிச்சந்திரன்.. அஜந்தா நடுங்கிப் போய் விட்டாள்..

“அப்படியே அயிட்டம் டான்ஸ் ஆடறதைப் போல பாடிக்கிட்டு வர்ற.. அத்தை மகளைப் போலவா பாடி வைக்கிற..? அடச்சீ.. வழியை விடு.. சகிக்கலை..”

ரவிச்சந்திரன் போட்ட அதட்டலில் பதறிப் போய் ஒதுங்கிக் கொண்டவளுக்கு அவமானமாக இருந்தது.. அந்த நிலையிலும் அவன் சசிக்கவில்லையென்று சொன்னது அவளது பாட்டையா..? இல்லை அவளையா என்ற கேள்வி வண்டாக மூளையைக் குடைந்தது..

அன்றைய இரவு நேர உணவுப் பொழுதில் ரவிச்சந்திரன் ஓர் அறிவிப்பை வெளியிட்டான்..

“தாத்தா.. நான் உங்களைப் போலவோ, அப்பாவைப் போலவோ பெருந்தன்மையானவனில்லை..”

எதற்காக இந்த அறிவிப்பு என்று புரியாமல் மற்றவர்கள் திகைக்க.. மர்மப் பார்வையோடு ரவிச்சந்திரன் தொடர்ந்தான்..

“அம்மாமேலே நான் உயிரையே வைத்திருக்கேன்.. அவங்க மேலே துரும்பு பட்டாலும் அதுக்குக் காரணமானவங்களை கொல்லாம விடமாட்டேன்.. சொல்லிட்டேன்..”

அவன் பார்வை அவந்திகாவின் மீதும் அஜந்தாவின் மீதும் நிலைத்ததில் அவர்கள் இருவரும் நிலை குலைந்து உறைந்து போனார்கள்.. அவர்களது விழிகள் சந்தித்து மீண்டன.. அவர்கள் பேசிக் கொண்டிருந்ததை ரவிச்சந்திரன் கேட்டு விட்டான் என்பது தெள்ளத் தெளிவாக தெரிந்து போனதில் அவர்களின் முகங்கள் பயத்தினால் வெளிரின..

“சாப்பிடுவது ஓசிச் சாப்பாடு.. இதில உண்ட வீட்டுக்கு ரெண்டகம் நினைக்கிறது.. எப்படித்தான் இப்படிப்பட்ட ஜென்மங்களும் உலகத்தில் அவதரித்திருக்காங்களோ.. தெரியலை.. ச்சே..”

வெறுப்பை உமிழ்ந்தான் ரவிச்சந்திரன்.. என்ன நடந்திருக்கும் என்று யூகித்து விட்ட ரவிவர்மன் கொதித்து விட்டார்.. வீணாவின் மீது உயிராய் இருப்பவர்.. தனது சொத்தை தங்கைக்காக விட்டுக் கொடுப்பவர் மனைவியின் சொத்தில் கை வைத்ததேயில்லை..

"எண்ட பார்யாளின் சொத்தின் மேலே நினக்கு உரிமையில்லை அவந்திகா.." என்று கடுமையாக சொல்லியிருந்தார்.. மனைவியின் சொத்தையே தங்கையிடமிருந்து பாதுகாப்பவர் மனைவியை எந்த அளவுக்கு பாதுகாப்பார்..?

"நீ சொல்லனும்ங்கிற அவசியமில்லை ரவி.. எண்ட பார்யாமேலே தூசி பட்டாலும் அதுக்குக் காரணமானவங்களை ஞான் கொண்டு புதைப்பேன்.. இது சத்தியமானு.."

நெருப்புத் துண்டம் போல ஜொலித்த அவரது விழிகளில் பொசுங்கிப் போகாமல் தப்பிப் பிழைத்த அவந்திகாவை மறுநாள் தனிமையில் அழைத்த அருள்மொழிவர்மனும் யாழினியும் மகளை பேசாத பேச்சுக்களையெல்லாம் பேசி உண்டு இல்லையென்று ஆக்கி விட்டார்கள்.. ரவிச்சந்திரனும்,

ரவிவர்மனும் வாய் விட்டுச் சொன்ன 'ச்சே..'யை அவர்களது விழிகளில் கண்ட அவந்திகாவிற்கு செத்து விடலாம் போல ஆகிவிட்டது..

அவள் அருள்மொழிவர்மனுக்கும், யாழினிக்கும் மகளாக உதித்தவள்தானா என்று அவர்கள் சந்தேகம் தெரிவித்தார்கள்.. இப்பேற்பட்ட கொடூர குணம் கொண்ட நன்றி கெட்ட பெண்ணொருத்தி வயநாட்டு அரண்மனையில் வம்சத்தில் உதித்தவளாக இருக்க முடியாது என்று வெறுப்புடன் பார்த்தார்கள்.. அண்ணன் மனைவி அம்மாவைப் போல.. அவளிடம் பாசம் காட்ட வில்லையென்றாலும் பரவாயில்லை.. குரோதத்தையா காட்டுவது..? மேல்குடியில் பிறந்தவளாக இருந்தால் அவள் மனதில் பொடித்தனமான எண்ணங்கள் எப்படி உதித்தன என்று கோபம் கொண்டார்கள்.. அன்னமிட்ட கைக்கு கன்னம் வைக்க நினைத்த அவந்திகாவை ஒரு போதும் அவர்களது மகளாக நினைக்க முடியாது என்று அவர்கள் தீர்மானமாகச் சொல்லி விட்டதில் அவந்திகா அவர்களது கால்களில் விழுந்து..

"ஷமிக்கனும் அச்சா, ஷமிக்கனும் அம்மே.." என்று கதறினாள்..

“எத்தன முறதான் மாப்பளிக்க ஏலும் அவந்திகா.. நீ எதச் செய்தாலும் எங்கட மோள்ன்னு பாிஞ்சோமே.. அதுக்கு எங்களுக்கு இது வேணம்.. எண்ட மோனண்ட ஜீவிதத்த எண்ணியும் பார்க்காம நிண்ட ஜீவிதமே வல்லியண்டு எண்ணினோமே.. அதுக்கும் இது வேணம்.. நிங்கட தரவாடை விட்டு ஈ கொட்டாரத்துக்கு வந்த போது அதைப் பறயனும்னு எண்ணாம அடைக்கலம் கொடுத்தவளல்லவோ ஆ மனுஷி.. அஞ் வீணாவ நீ கொல்லத் திட்டம் போட்டியோ.. இஞ்ஞ விஜாரம் எங்கன வந்தது..? நீ எது செய்தியினாலும் சிஷா கிட்டாதுன்னு எண்ணினதோ..? வீணா எங்க மோள்.. அவளுக்கு ஏதண்டா நாங்க நின்னை விட்டு வைக்க மாட்டோமல்லோ.. மனசிலாயி.. இவிடத்தே ஜீவிக்கனும்னா பால் போண்ட வெளுப்பு மனரோட ஜீவிக்கனும்.. அதில்லாம கொலைகார விஜாரம் கொண்டா கொட்டாரத்த விட்டு புறத்தே போயிடனும்.. கேட்டியல்லோ..”

அவந்திகா நத்தையாக தன் கூட்டுக்குள் ஒடுங்கிப் போனாள்.. அவளையும், அவளது குடும்பத்தாரையும் அந்த அரண்மனை புறக்கணித்தது.. அறைகளைத் தேடிச் சாப்பாடு வந்தது.. சேர்ந்து சாப்பிட அழைப்பில்லை.. அஜந்தா அதை உடைத்தாள்.. தாயை அதட்டினாள். .

“எதுக்கோசரம் கரையனும் அம்மே.. ஈ நிலையை நீடிக்க விட்டா ஈ கொட்டாரத்தில இருக்கிற எவருக்கும் நம்ம மேலே பெகுமானம் ஏற்படாது.. பெகுமானம் தானாக் கிட்டாது அம்மே.. நாமா உண்டாக்கிக்கனும்..”

“எங்ஙன மோளே..? நாம சம்சாரிச்சத ரவி கேட்டாச்சு.. மத்தவங்ககிட்டயும் பறஞ்சாச்சு..”

“ஸோ வாட்..? அது எதுவுமே இல்லேன்னு நினைச்சுக்கனும் அம்மே.. எதுவும் நடக்காததைப் போல சம்சாரிக்கப் பழகிக்கனும்.. நாம தள்ளியிருந்தா நமக்குத்தான் வளர கஷ்டமாயினு..”

அஜந்தா தாயை இழுத்துக் கொண்டு சாப்பிடும் அறைக்குப் போனாள்.. யோகானந்தனை அழைக்க வேண்டிய அவசியமேயில்லை.. அவர் அனைத்தையும் உதிர்த்தவர்.. அபராஜிதன் தந்தையைப் பின் பற்றுபவன்..

எதுவுமே நடக்காததைப் போல அவர்கள் பேசிச் சிரித்து வளைய வந்ததில் மற்றவர்களின் புறக்கணிப்பு மெல்ல மெல்ல குறைந்து போனது.. பெற்றவர்கள் மகளென்பதால் தள்ளி வைக்க முடியாமல் சகஜமாகப் பேச ஆரம்பித்தார்கள்.. ரவிவர்மன் பட்டும் படாமலும் பேசினார்.. வீணா எப்போதும்

போல இயல்பாக இருந்தாள்.. மகளையும் அவளைப் போலவே இருக்க வைத்தாள்.. வீணாவின் குண இயல்பு அத்தகையது.. கொல்ல நினைப்பவர்களையும் அன்பால் எதிர்கொள்வது.. ஆராதனைக்குரியவள் வீணா.. அதை அவந்திகாவும் அவளது குடும்பமும் ஒருபோதும் செய்ததில்லை..

எத்தகைய கொடூர குணம் கொண்டவர்களையும் இளக்கி விடும் சுபாவம் கொண்ட வீணாவால் அவந்திகாவையும் அவளது குடும்பத்தையும் இளக வைக்க முடியவில்லை.. அவளுடைய ஆராதனைக்குரிய குண இயல்பை அவர்கள் தங்குள்குள் எள்ளி நகையாடி கேலி பேசி சிரித்தார்கள்.. வீணாவின் பெருந்தன்மையான குணத்தை அவளது பலவீனம் என்று விமரிசித்தார்கள்..

ஒருவகையில் அவர்கள் சொல்வது உண்மைதான்.. இந்த உலகில் பொய்யும், பித்தலாட்டமும், சாகசமும் நிறைந்தவர்களே வெல்கிறார்கள்.. அன்பை முன்னிருத்தி நேர்வழியில் செல்கிறவர்கள் தோற்றுத்தான் போகிறார்கள்.. வீணாவும் தோற்றுவிடுவாள் என்று அவந்திகாவும் அவளது குடும்பமும் நிச்சயமாக நம்பினார்கள்.. ரவிச்சந்திரனின் அன்னையாக இல்லாமலிருந்திருந்தால் வீணாவும்

தோற்றுத்தான் போயிருப்பாள்.. அவள்தான் ரவிச்சந்திரன் எனும் சிங்கத்தைப் பெற்றிருப்பவாயிற்றே..

ரவிச்சந்திரன் அஞ்சா நெஞ்சன்... இரும்பு மனிதன்.. சிங்கம்..! சமா, தான, பேத, தண்டம் என்ற அனைத்து வகையான யுத்த முறைகளையும் அறிந்தவன்.. அவனுடைய தாத்தா, அப்பாவைப் போல பாச வலையில் சிக்காதவன்.. இதுதான் சரி, இது தவறு என்று ஆணித்தரமாக அடித்துச் சொல்லி எதிராளியின் வாயை மூட வைத்து மண்டி போட வைப்பவன்.. முள்ளை முள்ளால் எதிர் கொள்ளும் வித்தையை அறிந்தவன்.. அடிக்கு அடி என்றில்லாமல் அடிக்க மனதில் நினைக்கும் போதே ஓங்கி அடித்து உட்கார வைப்பவன்.. அவனது ஊடுறுவும் பார்வையை எதிர்கொள்ள முடியாமல் அவந்திகா தடுமாறி விடுவாள்.. அண்ணன் மகனின் முகத்தை நேருக்கு நேர் பார்த்துப் பேசி அஞ்சி நடுங்குவாள்..

கண்ணை இமை காப்பதைப் போல தன் அன்னையை ரவிச்சந்திரன் காத்து நின்றான்.. வயநாட்டில் அவன் இல்லாத நேரங்களிலும் அவனுடைய கண்காணிப்பு அவந்திகாவின் மீதும் அவளுடைய குடும்பத்தின் மீதும் இருந்ததால் ஒட்டு மொத்தக் குடும்பமும் ‘கப்சிப்’பென கைகட்டி வாய்பொத்தி ஓடுங்கிப் போனார்கள்..

அவர்களின் கவலை வேறு திசையில் பாய்ந்தது.. வீணா தானாக தடுக்கி விழுந்து சிறு காயம் பட்டு விட்டாலும் அவந்திகாவும் அவளுடைய குடும்பமும் தான் சதி செய்து விட்டது என பழி வந்து சேர்ந்து விடும் என்பதால் கூடுமானவரை வீணாவின் பக்கத்தில் போகாமல் தள்ளியே இருந்தார்கள்..

இப்படியாகப்பட்ட நிலைமையில் இருந்தபோதும் சற்றும் மனம் தளராமல் தன் பிள்ளைகளுக்குத் தூபம் போட்டாள் அவந்திகா..

“அம்மை பறயறது செவியகத்து போட்டுக்கணும் அபராஜிதா.. நிண்ட அம்மாவன் மோள விவாகம் கழிக்கிறதப் பத்தி ஆலோசிக்கனும் மோனே.. எங்ஙனயாச்சு ரம்ய மாலினி மனசில நினக்குன்னு ஓர் ஸ்தலம் கிட்டினா வரை நன்னாயிட்டுண்டு மோனே.. அத்திவசம் வருந்தா ஈ அம்மை வளர சந்தோசிக்கும் மோனே..”

சும்மாவே ரம்ய மாலினியைக் கண்டால் நாக்கைத் தொங்கப் போடும் அபராஜிதனுக்கு இவ்வளவு சொல்லி விட்டால் போதாதா..? அவன் புதிதாகவா ஆலோசி க்க

வேண்டும்..? அல்லும் பகலும் அதைத்தானே அவன் ஆலோசித்துக் கொண்டிருக்கிறான்..?

“நிங்கள் மகன் இருக்கறப்ப எண்ட அம்மை எதுக்கோசரம் மனக் கிலேசம் கொள்ளனும் அம்மே..? ஞானிருக்க அச்சம் எதுக்கு..? எண்ட அம்மாவன் மோள் வல்லிய சுந்தரியல்லோ.. அவளிண்ட சேலு கண்டு ஞான் ஆக்ரஹம் கொண்டல்லோ..”

ரம்ய மாலினியின் அழகில் மயங்கி அவள்மீது ஆசை கொண்டு விட்டதாக அபராஜிதன் ஜொள்ளிய போது இவன் எவர் மீதுதான் ஆசை வைக்கவில்லை என்று எரிச்சல் கொண்டாள் அவந்திகா..

தூணுக்குச் சேலையைக் கட்டியிருந்தாலும் அதைச் சுற்றி வரும் சபலபுத்தி கொண்டவன் அபராஜிதன்.. கல்லூரி காலத்தில் அவன் இழுத்து விட்ட வம்பு வழக்குகள் ஏராளம்.. ஒவ்வொரு முறையும் ரவிச்சந்திரன் தயவு தாட்சண்யம் பார்க்காமல் அவனைப் பின்னிப் பெடலெடுத்து விடுவான்.. அபராஜிதனுக்கு ரவிச்சந்திரன் பெயரைக் கேட்டால்கூட அது சிம்ம சொப்பனந்தான்..

அப்படியாகப்பட்ட திருவிளையாடல்களைக் கொண்ட அபராஜிதன் ரம்ய மாலினியிடம் தன் திருவிளையாடல்களை ஆரம்பித்தான்.. தாயின் குணம் கொண்ட ரம்ய மாலினி காட்டிக் கொடுக்க மாட்டாள் என்று நம்ம்ம்..பி இறங்கியது தவறாகப் போய் விட்டது.. மற்றவைகளில்தான் நான் பெருந்தன்மையானவள்.. இந்த விஷயத்தில் கடுமையானவள் என்று அவள் காட்டி விட்டாள்.. அபராஜிதன் அவளைத் தொந்தரவு செய்வதை ரவிச்சந்திரனிடம் சொல்லி விட்டாள்.. அதன் விளைவாக அபராஜிதன் நாடு கடத்தப் பட்டான்..

அவனுக்கு நன்றாக உதை கொடுத்து அடித்துப் புரட்டி விட்டு.. தனது எக்ஸ்போர்டு கம்பெனியில் ஓர் வேலையைப் போட்டுக் கொடுத்து வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்து விட்டான் ரவிச்சந்திரன்..

“ரம்யாவின் மேரேஜ் முடிகிறவரை இவன் வயநாட்டு அரண்மனையில் காலை வைக்கக் கூடாது தாத்தா..”

ரவிச்சந்திரனின் ஆணை அழுலுக்கு வந்தது.. அவன் சொன்னதற்கு எப்போதும் போல அப்போதும் அனைவரும் கட்டுப்பட அபராஜிதன் வயநாட்டை விட்டுப் போய் விட்டான்.. ஓர்வழி அடைந்து போனால் என்ன.. மற்றொரு வழியைத்

திறந்து வைக்கிறேன் என்று அவந்திகாவுக்கு ஆறுதல் சொன்னாள் அஜந்தா..

“எங்ஙன மோளே..? ரவிச்சந்திரனோட அம்மை விஷயமா நாம சம்சாரிச்சத ரவிச்சந்திரன் அறிஞ்சுட்டானல்லோ..”

“அதுக்கோசரம் நாம தள்ளி நிக்கானாம் அம்மே.. எண்ட சௌந்தர்யத்து மேல எனிக்கு வளர நம்பிக்கையுண்டு.. என்னியவிட சேலு சுந்தரி ஈ கேரளத்தில உண்டோ..?”

இல்லையே.. அஜந்தாவை விட அழகு சுந்தரி கேரளத்தில் இல்லையென்பது உண்மைதான் என்பதில் அவந்திகா உற்சாகம் கொண்டாலும் ரவிவர்மனிடம் அது எடுபடுமா என்று சந்தேகம் கொண்டாள்..

“சம்சயம் வேணாம் அம்மே.. ஒரப்பான ஓர் திவசம் ரவியத்தான் எனிக்கு கிட்டும்..”

நிச்சயமாக ஓர் நாளில் ரவிச்சந்திரன் அஜந்தாவுக்குக் கிட்டி விடுவான் என்று நம்பிக்கையூட்டினாள் அஜந்தா.. தாயைச் சந்தேகம் கொள்ள வேண்டாம் என்றாள்.. ரவிச்சந்திரன் எனும் ஆண்சிங்கத்தின் மனதில் இடம் பிடித்து காட்டுகிறேன் என்று சவால் விட்டாள்..

அஜந்தாவின் மீது என்றுமே அவந்திகாவுக்கு நம்பிக்கை உண்டு.. அவள் அபராஜிதனைப் போல வடிகட்டின முட்டாள் அல்ல.. செருக்கு நிறைந்தவள்.. யோகானந்தனின் நடவடிக்கைகளைத் தவிர்த்து அவரது குலப்பெருமையை பேசுபவள்.. அருள்மொழிவர்மனின் பேத்தி ரம்ய மாலினியல்ல.. அஜந்தாதான் என்று நிலை நாட்டிப் பிரச்சாரம் செய்பவள்.. ரவிச்சந்திரனின் சொத்துக்களில் அவளுக்கும் உரிமை இருக்கிறது என்று உரிமைக்குரல் கொடுப்பவள்..

இவை அத்தனையையும் ரவிச்சந்திரனிடம் நேரடியாக செய்தாள்.. ஒவ்வொரு முறையும் ரவிச்சந்திரன் அவளது மூக்கை உடைத்தான்.. அவள் அந்த வீட்டில் உரிமையோடு இருக்கவில்லை, அகதியாக இருக்கிறாள் என்பதை வேலையாள்களின் முன்னிலையில் தயவு தாட்சண்யம் பார்க்காமல் சொல்லிவிடுவான்.. அவள் மட்டும் பெண்ணாக இல்லாமல் இருந்திருந்தால் அபராஜிதனைப் போல அவளையும் வயநாட்டு அரண்மனையை விட்டு விரட்டியடித்திருப்பான் என்று எச்சரிப்பான்..

அஜந்தா அத்தனையையும் துடைத்து எரிந்து விட்டு மறுபடியும் ஆரம்பப் புள்ளியிலிருந்து ஆரம்பிப்பாள்.. துடைத்து எறியும் கலையில் அவள் அன்னை, தந்தையையும்

மிஞ்சியவளாக இருந்ததில் அவள் நினைத்ததை சாதித்து விடுவாள் என்று அவந்திகாவும் யோகானந்தனும் பூரித்துப் போனார்கள்.. அவ்விதம் அவர்கள் பூரிக்கக்கூடும் என்பதை அறிந்து வைத்திருந்த ரவிச்சந்திரன்..

“தாத்தா, பாட்டி.. நீங்க ரெண்டு பேருமே நான் சொல்கிறதைக் கவனமாக் கேட்டுக்கங்க.. என் அம்மாவுக்கும் என் தங்கைக்கும் தீங்கு நினைக்கிற குடும்பத்தை உங்களுக்குகாகத்தான் இந்த அரண்மனையிலே இருக்க விட்டிருக்கிறேன்..” என்று ஆரம்பித்தான்..

சாப்பிடும் அறையில் ஒன்று கூடியிருந்த குடும்பம் அமைதியானது.. யோகானந்தனின் முகம் விகாரமாக அவந்திகாவின் முகத்தில் பயம் வந்தது.. அஜந்தாவின் நடவடிக்கைகளைப் பற்றித்தான் ரவிச்சந்திரன் சொல்கிறான் என்பதை புரிந்து கொண்டவள் நடுங்கிப் போனாள்.. சம்பந்தப்பட்ட அஜந்தாவோ நீ என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள் என்ற ரீதியில் முகத்தில் அலட்சியம் படற ருசித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்..

அதைக் கவனித்த யாழினிக்கு வெறுப்பாக இருந்தது.. என்ன பெண் இவள் என்று மனதுக்குள் நொந்து போனாள்..

ரவிச்சந்திரனின் கோபத்திற்கு ஆளானால் என்ன கதியாகும் என்பதை அபராஜிதனைப் பார்த்த பின்பாவது தெரிந்து கொண்டிருக்க வேண்டாமா..?

“தன் வீட்டுச் சாப்பாட்டைச் சாப்பிடாம அயல்வீட்டுச் சாப்பாட்டைச் சாப்பிட்டா ருசியாத்தான் இருக்கும் தாத்தா..” அஜந்தாவின் அலட்சியத்தைக் கணக்கிட்டபடி ஊசியாக வார்த்தைகளில் குத்தினான் ரவிச்சந்திரன்.. ஆவேசமாக தலை நிமிர்ந்தாள் அஜந்தா..

“எவரப் பறஞ்சு அத்தான்..?”

“ஏன்..? உனக்குத் தமிழ் தெரியாதா..? தமிழ் நாட்டிலதான படிச்சே..?”

“தமிழ்நாட்டுல படிச்சாலும் ஞான் கேரள மண்ணில பிறந்தவ அத்தான்.. ஈ வயநாடுதான் எண்ட தேசம்.. நிங்களப் போல பிறந்த மண்ணோட மொழிய புறக்கணிச்சு வேற மொழியில ஞான் சம்சாரிக்கல..”

அஜந்தா வீணாவை உறுத்துப் பார்த்தபடி சொன்னாள்.. முகம் மாறாமல் இருந்தாள் வீணா.. அஜந்தாவுக்கு மலையாளம் அவ்வளவாக வராது.. தெளிவாக தமிழ்

பேசுவாள்.. இருந்தும் அவள் எதற்காக முரசு கொட்டுகிறாள் என்று மற்றவர்களுக்குத் தெரியாதா என்ன..?

“என் தாய்மொழியை யார் புறக்கணித்தது..? என் தாயின் தமிழ் மொழியைத்தான் நான் பேசறேன் அஜந்தா.. நாம தமிழர்தானே..? ரவிவர்மாவின் தமிழ் மனைவியோட வம்சாவழிதானே..?”

“ரவிவர்மாவோட பார்யாள்தான் தமிழ் அத்தான்.. ரவிவர்மா அல்ல.. ஞான் ஈ ரவிவர்மா அம்மாவனப் பறயலை.. ஆ ரவிவர்மா அரசரைப் பத்திப் பறயறேன்..”

சந்தடி சாக்கில் தாய்மாமன் பெயரை அவள் சொல்ல.. இமை உயர்த்தி தங்கை மகளைப் பார்த்த ரவிவர்மனின் முகத்தில் கடினம் வந்தது.. மகளைப் புத்திசாலியெ ன்று நினைத்தது தவறோ என்று அவந்திகா பதைக்க..

‘எண்ட மோள், அவளிண்ட அம்மாவன் பேரைப் பறஞ்சுட்டால்லோ..’ என்று யோகநானந்தன் மனதுக்குள் மகிழ்ந்து போனார்..

“நீ யாரைப் பத்தியும் பேசுவ.. நீ என் அப்பாவின் பெயரைச் சொன்னதினால என் அப்பாவின் மரியாதை குறைஞ்சிராது அஜந்தா.. உன் அப்பாவின் பெயரைச் சொல்லி

நீ அவர் மகள்ன்னு சொல்லிப்பாரு.. உன் மரியாதை காற்றிலே பறக்கும்.. நீயெல்லாம் வாயைத் திறக்கவே கூடாது..”

இரக்கமில்லாமல் சொன்ன ரவிச்சந்திரனை ஏன் இப்படிப் பேசுகிறாய் என்று அருள்மொழிவர்மனும், யாழினியும் கேட்கவில்லை.. இப்படிப் பேசினால் இது போன்ற பேச்சுக்களைக் கேட்க நேரிடும் என்பதை அஜந்தா புரிந்து கொள்ள வேண்டும் என்று அவர்கள் ஒருமித்த மனதோடு நினைத்து அமைதி காத்தார்கள்..

‘யாகாவாரானும் நா காக்க..’ என்று வள்ளுவப் பெருந்தகை பொழுது போகாமலா சொல்லி வைத்தான்..?

அத்தியாயம் 71

கேரளத்தின் வயநாட்டில் தமிழர் குடும்பங்கள் அதிகமாக வாழ்கின்றனர்.. அங்கே மலையாளம் பேசப்படுவதைப் போல தமிழும் வெகு இயல்பாக பேசப் படுகின்றது.. தமிழில் மலையாளத்தின் சாயலும், மலையாளத்தில் தமிழ் வார்த்தைகள் கலந்தும் பேசப்படுவதுண்டு.. அருள்மொழிவர்மனின் குடும்பம் தமிழ் பேசும் மலையாள ராஜ பாரம்பர்ய குடும்பம்.. தமிழ்நாட்டின் ராஜ குடும்பங்களில் பெண் கொடுத்து பெண்ணெடுக்கும் உறவுமுறை கொண்டவர்கள் யாழினி திருவிதாஸ்கூர் ராஜ பாரம்பர்யம் கொண்ட பாரம்பர்யத்தில் பிறந்தவர் என்பதால்

மலையாளத்தையே அதிகமாக பேசுவாள்.. மனைவிக்காக அருள்மொழிவர்மனும் பெரும்பான்மையான நேரங்களில் மலையாளமே பேசுவார் என்றாலும் அருள்மொழிவர்மனுக்கும் யாழினிக்கும் தமிழ் தெரியும்.. வயநாட்டில் உள்ள தமிழர்களிடம் அவர்கள் தமிழில்தான் சம்சாரிப்பார்கள்..

வீணா அப்படியல்ல.. அவள் தமிழகத்தின் ராஜ பாரம்பர்ய குடும்பம் ஒன்றில் பிறந்து வளர்ந்தவள்.. தமிழை மட்டும் அறிந்தவள்.. அவளுக்கு மலையாளம் அவ்வளவாக பேச வராது.. எப்படி மனைவிக்காக அருள்மொழிவர்மன் தமிழைப் பேசாமல் மலையாளத்தில் அதிகமாக பேசினாரோ , அதைப்போல, ரவிவர்மனும் வீணாவுக்காக தமிழைப் பேச ஆரம்பித்தார்.. தமிழ் தெரியாத மலையாளிகளிடம் மட்டுமே மலையாள மொழியில் பேசுவார்..

ரவிச்சந்திரனும், ரம்ய மாலினியும் தாய்மொழியான மலையாளத்தை அறிந்து கொண்டாலும், தாயின் மொழியான தமிழையே பேசுவார்கள்.. மலையாளத்தில் பேச மாட்டார்கள்..

அவந்திகாவின் பிள்ளைகளை யோகானந்தனின் நடவடிக்கைகள் பாதித்துவிடக் கூடாது.. அவரது பழக்க வழக்கங்கள் பிள்ளைகளின் மீது படிந்துவிடக் கூடாது என்று அருள்மொழிவர்மனும், யாழினியும் கவலைப் பட்டதால் பிள்ளைகளை தமிழ்நாட்டின் ஊட்டி கான்வென்டிலும் சென்னை கல்லூரிகளிலும் படிக்க வைத்தார் ரவிவர்மன்.. அதனால் அபராஜிதனுக்கும், அஜந்தாவுக்கும் தெளிவாக தமிழ் தெரியும்.. மற்ற சமயங்களில் தமிழில் பேசுபவர்கள்

வீணாவிடம் வேண்டுமென்றே மலையாளத்தில் பேசுவார்கள்.. ரவிச்சந்திரனிடமும் அப்படித்தான்.. அதில் அவர்கள் இருவருக்கும் ஓர் ஆனந்தம்..

இத்தனைக்கும் அவர்கள் வீட்டில் பேசும் மலையாளம் சுத்தமான மலையாளமாக இருக்காது.. தமிழ் கலந்த மலையாளமாக இருக்கும்.. வயநாட்டில் தமிழர்கள் வசிப்பதால் இரண்டு மொழியும் கலந்து மலையாளத் தமிழாகவும், தமிழ் கலந்த மலையாளமாகவும் பேசி வைப்பார்கள்..

அருள்மொழிவர்மனின் அரண்மனையிலும் அது போலதான் பேசுவார்கள்.. சுத்த மலையாளம் பேசும் யாழினியின் பேச்சுக்கூட நாளடைவில் மாறி தமிழ் கலந்த மலையாள மொழியாகி விட்டது.. அவந்திகாவும் அப்படித்தான்..

இவர்களே இப்படியெனும்போது அபராஜிதனைப் பற்றியும் அஜந்தாவைப் பற்றியும் சொல்லவே வேண்டாம்.. இஷ்டத்திற்கு மலையாளத்தில் தமிழைத் கலந்தடிப்பார்கள்.. இந்த லட்சணத்தில் பேசி வீணாவையும் கலங்கடிப்பார்கள்..

‘இதுக்கு இதுக மலையாளத்தில சம்சாரிக்காமலே இருக்கலாம்..’ மானசீகமாக தலையில் அடித்துக் கொள்வாள் வீணா..

அப்படி மலையாள மொழியை உடை, உடையென்று உடைத்து அதைக் கதற வைக்கும் அஜந்தா அம்மொழியின் மேன்மையைப் பற்றி எடுத்துரைக்க முயன்றால் ரவிச்சந்திரனுக்கு எரிச்சல் மண்டாதா..?

“ஞான் எண்ட தாத்தாவோட செல்ல மோளோட செல்ல மோளாக்கும்..”

“லுக் அஜந்தா.. மலையாளம் பேசறதா இருந்தா ஒழுங்காப் பேசு.. அதுக்கு வாயிருந்தாலும் அழுதுரும்.. இப்படிப் பேசி வைக்காதே.. சகிக்கலை..”

ரவிச்சந்திரன் தீர்க்கமான பார்வையுடன் சொன்னது அஜந்தாவின் பேச்சையா இல்லை அஜந்தாவையா என்று அவந்திகா குன்றிப் போனாள்.. அந்தக் குன்றலெல்லாம் அஜந்தாவுக்கு இல்லை..

“நிங்க பறஞ்சாலும், பறயலேன்னாலும் ஞான் எண்ட தாய்மொழியிலதான் சம்சாரிக்கும்..” என்று அறிவித்தாள்.

“என்னவோ செய்து தொலை.. உன் பாடு.. மலையாளிகள் பாடு.. அவங்க தடியெடுத்து அடிக்க வராம இருந்தால் சரி.. எனக்கொன்னுமில்லை..”

“ஞான் ஊன் கழிக்கிறதப் பத்தி அத்தான் எந்தா சம்சாரிச்சு..?”

“நீ சாப்பிடுகிறது உன் வீட்டுச் சாப்பாடில்லை.. ஓசிச் சாப்பாடுன்னு சம்சாரிச்சேன்.. மனசிலாயி..? ”

அஜந்தாவை உறுத்துப் பார்த்தபடி நிறுத்தி நிதானமாகச் சொன்னான் ரவிச்சந்திரன்.. அஜந்தா வெகுண்டாள்..

“ஞான் நிங்களோட தரவாடில ஊன் கழிக்கல அத்தான்.. மனசிலாயி.. எண்ட அம்மச்சன் தரவாடிலல்லோ ஊன் கழிச்சு..?”

“வெல் செட்..” தாடையைத் தடவினான் ரவிச்சந்திரன்.. வழக்கமாக ரவிச்சந்திரன் அது போன்ற ஆழ்ந்த குரலில் எதையாவது சொல்லித் தாடையைத் தடவினால் அதற்கடுத்து மிகப் பெரிய பூகம்பம் புறப்படும் என்பதை தெரிந்து வைத்திருந்த அவந்திகாவுக்குள் குளிர் பரவியது.. அபராஜிதன் பக்கத்தில் இல்லாததில் மனதளவில் துயர் கொண்டிருந்தவள் அஜந்தாவும் வெளியேற்றப்பட்டு விடுவாளோ என்று

அஞ்சினாள்.. அவள் பயந்ததைப் போலதான் ஆனது.. ரவிச்சந்திரன் மிக நன்றாக கேட்டு வைத்தான்..

“இது உன் தாத்தாவின் அரண்மனையில்லை அஜந்தா.. ஒரு காலத்தில் அப்படித்தான் இருந்தது.. அவருக்கென்று இந்த அரண்மனையும் கோடிக்கணக்கான சொத்துக்களும் இருந்தன.. இப்போது அப்படியில்லையே.. உன் அம்மாவை பெற்றுத் தொலைத்து விட்டதினால் உன் அப்பா வாங்கின அத்தனை கடனுக்கும் இந்த அரண்மனையையும் சொத்துக்களையும் விற்க வேண்டியதாகிருச்சே..”

“நிங்க பேருக்கு திரிச்சு பட்டயம் போட்டுக் கொடுத்திண்டாருன்னு பறயனும் அத்தான். .”

“அதுக்குப் பெயர்தான் விற்பது.. சும்மா பத்திரம் போட்டுக் கொடுக்கலைம்மா.. உன் அப்பா வாங்கிய ஆயிரம் கோடி கடனை அடைக்கிறதுக்காக ஐநூறு கோடிக்கு தன்னோட அத்தனை சொத்துக்களையும் விற்று அடைத்தார் தாத்தா.. அப்படியும் உங்க அப்பாவோட கடனை அடைக்க முடியலையே.. அடைக்க முடியாத கடனை வாங்கறிதலே உன் அப்பா கை தேர்ந்த கெட்டிக்காரராச்சே.. மீதி ஐநூறு கோடிக்கு என்னிடம் கடன் பத்திரம் எழுதிக் கொடுத்திருக்கார்..

நான் நினைத்தா எந்த செகண்டிலயும் உன் அப்பா பேரில கம்ப்ளெயிண்ட் கொடுத்து உள்ளே தள்ள முடியும்.. கோர்ட்டுக்குப் போய் உன் அப்பாவுக்கு தண்டனை வாங்கித்தர முடியும்.. போனாப் போகுதுன்னு விட்டு வைத்திருக்கேன்.. நீயும் உன் அண்ணனும் அதை உணர்ந்திருக்கிறதா எனக்குத் தோணலை.. அடங்கவே மாட்டேங்கறிங்களே.. என்ன..? உன்னையும் இந்த அரண்மனையை விட்டுத் துரத்தி விடனுமா..?''

''எந்தா பறஞ்சு..?''

அஜந்தா முகம் சிவக்க அருள்மொழிவர்மனையும் யாழினியையும் பார்த்தாள்.. அவர்களோ உனக்கு இதுவும் வேண்டும்.. இன்னமும் வேண்டும் என்று கருவியவர்களாக பேசாமல் இருந்தார்கள்.. அரண்மனையும், சொத்துக்களும் அருள்மொழிவர்மனுக்குச் சொந்தமாக இல்லை என்பதை ரவிச்சந்திரன் சுட்டிக் காட்டிவிட்டதில் அவர்களின் தன்மானம் வெகுவாக அடிவாங்கியிருந்தது.. ஓசிச் சாப்பாடு என்பது அவந்திகாவிற்கும் அவளது குடும்பத்திற்கும் மட்டுமான வார்த்தையா இல்லை அவந்திகாவைப் பெற்றவர்களுக்கும் சேர்த்துத்தானா என்ற கேள்வி விசுவரூபம் எடுத்து அவர்களை ஆட்டி வைத்தது.. அதை சாதுர்யமாக உணர்ந்து கொண்ட

அஜந்தா அதைவிடச் சாதுர்யமாக அதைக் கேள்வியாக கேட்டு ரவிச்சந்திரனுடன் பெரியவர்களை கோர்த்து விட்டு அவளுக்கு அதில் சம்பந்தமில்லாதது போல ஒதுங்க முனைந்தாள்.. அதிலெல்லாம் அவள் செம விவரம்..

“நிங்கள் பறயறது எந்துவா..? ஈ கொட்டாரம் நிங்களுக்கு சொந்தமாயிண்டதால எண்ட அம்மையோட அச்சனும், அம்மையும் ஓசியில ஊன் கழிக்கிறதா அர்த்தமாயினு..?”

யோகானந்தனுக்கு வல்லிய சந்தோஷம் உண்டானது.. அவரது மகள் அவரைப் போலவே இருக்கிறாள்.. ரவிச்சந்திரன் எந்தப் பக்கம் பந்தை வீசினாலும் திரும்பி வீசுகிறாள்..

‘அப்படியா..?’ என்பதைப் போல ரவிச்சந்திரன் பார்த்த கூர்ந்த பார்வையில் அவரது வல்லிய சந்தோஷம் துல்லியமாக தொலைந்தது..

‘எந்தா இது..? இவ்விதம் நோக்கி வைக்கிறான்.. எண்ட குருவாயூரப்பா..! ஈ வயநாட்டை விட்டு ஈ யோகானந்தன துரத்தியடிக்க ஆலோசிக்கிறானோ..? ஞான் வயநாட்ட விட்டு எங்கன போவோம்..? எவ்விடத்திலும் இதுபோல வசதி கிட்டாதல்லோ அவர் வயிற்றில் புளி கரைந்தது..’

“என் தாத்தாவுக்கும் பாட்டிக்கும் ஓசிச் சாப்பாடு சாப்பிட வேண்டிய அவசியமில்லை அஜந்தா.. அவங்க மகன் வயிற்றுப் பேரனா.. அவங்க வாரிசா நானிருக்கேன்.. உனக்கும், உன் அம்மாவுக்கும், உன் குடும்பத்துக்கும் ஓசிச் சாப்பாடு போடறப்ப எனக்கு உரிமையான தாத்தா, பாட்டியை உட்கார வைத்துச் சாப்பாடு போட மாட்டேனா..? ம்ஹூம்.. இதையெல்லாம் நான் உன்னிடம் சொல்கிறேன் பார்.. உனக்கு உன் அப்பா வீடு எதுன்னே அடையாளம் தெரியாது.. இதே வயநாட்டில உன் பெரியப்பா பத்மானந்தன் அவரைப் பெத்தவங்களோட பெயர் சொல்கிறதைப் போல பிழைத்துக்கிட்டு இருக்காரே.. அவர் பெற்ற பிள்ளைகளிடம் இதைக் கேட்டால் விளக்கம் சொல்வார்கள்.. உன்னிடம் கேட்டால் இப்படித்தான் பேசி வைப்பாய்.. இது என் அரண்மனை.. என் தாத்தா, பாட்டி, அம்மா, அப்பா, தங்கை..

இவங்க மட்டும்தான் என் குடும்பம்.. நீயும், உன் அம்மாவும் உன் குடும்பமும் அடைக்கலமாய் வந்தவங்க.. தட் மீன்ஸ் ஒண்டிக் கொள்ள இடம் தேடி வந்தவங்க.. அதைப் புரிந்து நடந்துக்க.. அதை விட்டுட்டு உங்கண்ணன் என் தங்கை மேலே வலை வீசப் பார்த்தைப் போல என் மேலயும் வலை வீசப் பார்த்தேன்னா தொலைத்துக் கட்டி விடுவேன்..

அண்டர்ஸ்டாண்ட்..? இடத்தைக் கொடுத்தா மடத்தையா பிடுங்கப் பார்க்கிற..? வெட்கமாயில்ல..? பெண்ணா நீ..? ச்சே..”

அவந்திகாவுக்கு உயிரே போய் விட்டதைப் போல இருந்தது.. அவளது மகளை ரவிச்சந்திரன் இப்படிப் பேசி விட்டானே என்று துடித்துப் போனாள்.. அஜந்தா அலட்டிக் கொள்ளவே இல்லை.. அவளைத் தவிர வேறு எவராக இருந்தாலும் ரவிச்சந்திரன் பேசிய பேச்சைக் கேட்டுத் துவண்டு போயிருப்பார்கள்.. அஜந்தா துவள்கிற மனுஷியில்லையே..

“குட் ஜோக் அத்தான்..! ஈ தரவாடு மடமில்லன்னு ஞான் அறிஞ் .. எவரண்டயோ பறயறதப் போல என்னண்ட பறயானாம்.. எண்ட அம்மை ஈ தரவாடில ஜனிச்சவங்களாக்கும்.. ஞான் ஈ தரவாடின்னு கொச்சு மோளாக்கும்.. ஈ தரவாடு மடமா. .? வளர நன்னாயிட்டுண்டு அத்தான்.. நினிக்கு ஈ கொட்டாரம் மடமின்னு தோணுச்சுன்னா எண்ட பேருக்கு பட்டயம் பண்ணிக் கொடுத்திரனும்.. ஞான் இதோட பெகுமானம் அறிஞ் பேணிக்குவன்.. மனசிலாயி..”

அப்படியே கன்னம் கன்னமாக அறைவிட்டு விட வேண்டும் என்ற சினத்துடன் ரவிச்சந்திரன் எழுந்து கொள்வதற்குள் யாழினி முந்திக் கொண்டு அஜந்தாவின் கன்னத்தில் அறைந்த விட்டாள்..

அவந்திகாவின் குடும்பத்துக்காக ரவிச்சந்திரனின் காவலை அந்தக் குடும்பம் இழப்பதா..? அவர்களே உலகம் சுற்றிக் கொண்டிருக்கும் ரவிச்சந்திரனை வன்பாடுபட்டு வயநாட்டுக்கு இழுத்துக் கொண்டிருக்கிறார்கள்.. என்று அவந்திகாவின் குடும்பம் வயநாட்டு அரண்மனையில் கால் பதித்ததோ அன்றிலிருந்தே ரவிச்சந்திரன் வயநாட்டு அரண்மனையை விட்டு விலக ஆரம்பித்து விட்டான்.. எப்போதாவது ஓர்முறை வீணாவுக்காக வந்து போவான்.. அதையும் அஜந்தா கெடுத்துத் தொலைத்து விடுவாளோ என்று பயந்து போனாள் யாழினி.. கேரளாவின் பிரபல தொழிலதிபனின் வீடு என்ற அந்தஸ்துடன் இருக்கும் வயநாட்டு அரண்மனையை அந்த தொழிலதிபன் புறக்கணித்து விட்டான் என்ற செய்தி வெளியே பரவி விட்டால் அவ்வளவுதான்.. அந்தக் குடும்பத்தின் பாரம்பர்யப் பெருமை குலைந்து விடும்.. யோகானந்தனால் ஆட்டம் கண்டு விட்ட அந்தப் பாரம்பர்யப் பெருமையை அசைய விடாமல் இழுத்துப் பிடித்து ஊன்றி

நிலை நிறுத்தியிருப்பது ரவிச்சந்திரன்தான்.. அவனிடம் அஜந்தா வம்புக்குப் போவாளா..?

“நிண்ட மனசில உள்ளதெந்தா..? எண்ட கொச்சு மோன் பறஞ்சா.. செவி கொடுத்திட்டுப் போகோனும்.. பதிலுக்குப் பதில் பறயாண்டாம்.. ரவிக்கு நிண்ட மேல இஷ்டமில்லேன்னா.. விலகிப் போணம்.. வெப்பராளம் காட்டானாம்.. நினக்கு எவரும் சிஷா தர மாட்டாருங்கிற விஜாரமாயிட்டோ.. நிண்ட அம்மைதான் எங்கட மோள்.. நீயல்லா.. அவளுக்கோசரம் அவளிண்ட குடும்பத்த கொட்டாரத்தே இருக்க வைச்சிருக்கோம்.. மனசிலாயி..? பறயு.. ரவிச்சந்திரன்ட மாப்புத் தரனுமின்னு பறயு..”

யாழினி போட்ட சப்தத்தில் கன்னத்தைத் தடவியபடி குரோதமாக ரவிச்சந்திரனைப் பார்த்த அஜந்தா அடித்து விடுவதைப் போல..

“ஷெமிக்கனும்..” என்றாள்..

“இந்த லட்சணத்தில மன்னிப்புக் கேட்டகிற முதல் ஆள் நீயாகத்தான் இருப்ப.. பாட்டி விட்ட அறையெல்லாம் பத்தாது.. அடிச்சுத் திருந்தற ஆள் நியில்லன்னு எனக்கு நல்லாத் தெரியும்.. எங்கே நான் அடி பின்னிடுவேனோங்கிற பயத்தில

பாட்டி முந்திக்கிட்டாங்க.. அதுக்காக நான் உன்னை விட்டு வைச்சிருவேன்னு நினைக்காதே.. பிளந்து கட்டிருவேன்.. யாருகிட்ட சவால் விடற..? நானும் போனாப் போகுது.. அத்தை மகளாச்சேன்னு பொறுத்துப் போனா நீ ரொம்பவும் குதிக்கற..? என்ன..? நீ பார்க்க அழகாயிருந்தா எதுவும் பேசிரலாம், செய்திரலாம்ங்கிற எண்ணமா..? எனக்கு உன்னைப் பிடிக்கவே பிடிக்காது அஜந்தா.. என்மேல வலை வீசனும்னு நீ பார்க்கிற பார்வைகளை இப்படியே நிறுத்திக்க.. தூண்டில் போடுகிற ஆளைப் பார்.. எரிச்சல் வருது.. வார்ன் பண்றேன் அஜந்தா.. ஒழுங்கா, மரியாதையா இருக்கிற இடம் தெரியாம இந்த வீட்டில இருக்கிறதா இருந்தா இரு.. இல்லேன்னா உன் பெரியப்பா வீட்டுக்கு ஓடிப் போயிரு.. உன் அம்மா கூடப் பிறந்தவங்கதான் உங்க குடும்பத்தை ஆதரிக்கனும்னு அவசியமில்லை.. உன் அப்பா கூடப் பிறந்தவரும் ஆதரிக்கலாம்.. எங்க பங்குக்கு என்தாத்தா, பாட்டியோட அத்தனை சொத்தையும் விற்று உன் அப்பாவுக்காக அழுதாச்சு.. இத்தனை வருடமா உங்க குடும்பத்தோட அத்தனை செலவையும் பார்த்து உன்னையும், உன் அண்ணனையும் படிக்க வைத்தாச்சு.. போதாக் குறைக்கும் இன்னும் ஐநூறு கோடி ரூபாய் கடனை உன்

அப்பா தந்தாகனும்.. நாங்க செய்ததில கோடியில ஒரு பங்காவது உன் பெரியப்பா செய்தாகனுமில்ல.. போ.. உன் பெரியப்பா வீட்டுக்குப் போ.. இந்த அரண்மனையில் உனக்கு இடமில்ல..”

“அத்தான்..”

அஜந்தாவின் முகத்தில் முதன் முதலாக பதட்டம் வந்தது.. அபராஜிதனைப் போல ஏதேனும் வேலையைக் கொடுத்து வேறு மாநிலத்திற்கு விரட்டி விடுவான் என்றுதான் அவள் ரவிச்சந்திரன் எடுக்கப் போகும் நடவடிக்கையைப் பற்றி நினைத்திருந்தாள்.. இப்படி பத்மானந்தனின் வீட்டுக்குப் போ என்று துரத்தி விட முனைவான் என்று நினைத்துப் பார்க்கவில்லை..

பத்மானந்தனுக்கும் யோகானந்தனைப் போல ஆண் ஒன்று பெண் ஒன்று என்று இரண்டு பிள்ளைகள்தான்.. அந்த இரண்டு பிள்ளைகளும் குழந்தைப் பிராயத்திலிருந்தே யோகானந்தன் பெற்ற அருந்தவச் (?) செல்வங்களான அபராஜிதனையும் அஜந்தாவையும் துச்சமாகப் பார்ப்பார்கள்.. பக்கத்தில் சேர்க்க மாட்டார்கள்.. தள்ளி நிற்பார்கள்.. இதை உணர்ந்து வைத்திருந்த புத்திசாலி அவந்திகா.. மகனுக்குப்

பெயர் வைக்கும் போது அபராஜிதவர்மன் என்று பிறந்த வீட்டின் சாயல் வரும்படி பெயர் வைத்து பிறந்த வீட்டின் மீது உரிமை பாராட்ட ஆரம்பித்தாள்..

அவந்திகாவிற்குத் திருமணம் ஆனவுடன் அவசரமாக பத்மானந்தன் பாகப்பரிவினை செய்து அரண்மனையை தன்னிடம் தக்க வைத்துக் கொண்டு யோகானந்தனுக்கு வேறு ஒரு மாளிகையைக் கொடுத்து பிரித்து அனுப்பி விட்டார்.. ஆஹா என்று தனிக்காட்டு ராணியாக மகிழ்ந்து போன அவந்திகாவுக்குப் போகப் போகத்தான் விவரம் புரிந்தது..

யோகானந்தனுக்கு வந்தவை பங்குகளல்ல.. அவர் வாங்கியிருந்த கடன்கள்.. எந்தெந்தச் சொத்துக்களின் பெயரில் யோகானந்தன் கடன் வாங்கியிருந்தாரோ அந்தச் சொத்துக்களை யோகானந்தனின் பங்காக பிரித்துக் கொடுத்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டிருந்தார் பத்மானந்தன்.. ஒருவகையில் அது நியாயமும்கூட..

யோகானந்தனின் மூதாதையர் கட்டிக் காப்பாற்றிய வந்த குல கௌரவத்தை பத்மானந்தன் நிலை நிறுத்திக் காக்க வேண்டுமென்றால் அதை அழித்துக் கொண்டிருக்கும்

யோகானந்தனை தள்ளி நிறுத்தியாக வேண்டும்.. பத்மானந்தன் அதைத்தான் செய்தார்..

பத்மானந்தனின் மனைவி அவந்திகாவை மதித்ததேயில்லை.. அருள்மொழிவர்மனின் மகள், ரவிவர்மனின் தங்கை என்பதற்காக மட்டும் சற்று முகம் கொடுத்துப் பேசுவாள்.. அவள் பெற்ற பிள்ளைகள் அதையும் செய்ய மாட்டார்கள்.. இப்பேற்பட்ட பத்மானந்தன் தன் குடும்ப விழாக்களுக்கு ஊருக்கே அழைப்பு விடுப்பார்.. ஏன் அருள்மொழிவர்மனுக்கும், ரவிவர்மனுக்கும் அழைப்பு வரும்.. ரவிச்சந்திரனை மண்டி போட்டு விருந்துக்கு அழைப்பார்.. அவருக்கும் திருமண வயதில் மகள் இருக்கிறாளே.. ரவிச்சந்திரனைத் திருமணம் செய்து கொள்ளும் முறையில் இருக்கிறாளே.. ரவிச்சந்திரன் மட்டும் அவருக்கு மருமகனாகி விட்டால் வயநாடு மட்டுமல்லாமல் கேரளா முழுதும் அவரது பெருமை பரவி விடுமே..

அப்படி அவந்திகாவின் பிறந்த வீட்டை வணங்கி வணங்கி அழைப்பவர் மறந்தும் தன் தம்பி குடும்பத்தை அழைக்க மாட்டார்.. அதில் அவந்திகாவின் மனம் பொடிப் பொடியாய் நொறுங்கிவிடும்.. எதற்கும் அசையாத அஜந்தாவின் மனமே அடிவாங்கும்..

அந்த பத்மானந்தனின் வீட்டுக்கு அஜந்தா போவதா..? அங்கு அவளை எந்த விதத்தில் நடத்துவார்கள் என்று நினைத்துப் பார்க்கவே அவளது நெஞ்சம் நடுங்கியது..

“என்ன, பேச்சைக் காணோம்..? என்னவோ இந்த அரண்மனைதான் உன் சொந்த அரண்மனைங்கிறதைப் போல உரிமை கொண்டாடறியே.. இது உன் அரண்மனையில்லை.. பத்மானந்தனின் குடும்பம் இருக்கிற அரண்மனைதான் உன் பூர்விக அரண்மனை.. உனக்கு உரிமையான அரண்ம னை.. அங்கே அனுப்பி வைக்கிறேன்.. போகிறாயா..? நான் சொன்னால் பத்மானந்தன் உன்னை வீட்டில் சேர்த்துக் கொள்வார்.. சொல்லவா..?”

“.....”

“ஒழுங்காய் இருக்கிறதா இருந்தா இங்கே இரு.. இல்லேன்னா உன் பெரியப்பா வீட்டுக்குப் போயிரு.. அபராஜிதன் ஆண்பிள்ளை.. வெளியே துரத்தலாம்.. உன்னை அப்படித் துரத்த முடியாது.. உன் பெரியப்பா வீட்டுக்கு துரத்துவதுதான் சரியாக இருக்கும்.. நான் அதைத்தான் செய்வேன்.. உன்னை உன் பெரியப்பா வீட்டுக்கு அனுப்பி

விட்டு உன் அப்பாவை கோர்ட்டுக்கு இழுத்து ஐநூறு கோடி ரூபாய் கடனுக்காக தண்டனை வாங்கிக் கொடுத்திருவேன்.. ஜாக்கிரதை..” ரவிச்சந்திரன் சொன்னதைச் செய்கிறவன் என்பதில் அஜந்தாவின் உடல் நடுங்கியது..

அத்தியாயம் 72

குடும்பத்தினரின் முன்னிலையில் பகிரங்கமாக அஜந்தாவின் தூண்டில் போடும் பார்வைகளுக்கான தனது பலத்த கண்டனத்தை ரவிச்சந்திரன் வெளிப்படுத்தி அதற்காக தான் தரப் போகும் தண்டனைகளைப் பற்றி அறிவுறுத்திய பின்னால் அஜந்தா அடக்கி வாசிக்க ஆரம்பித்தாள்.. அதற்காக அவள் திருந்தி விட்டாள் என்று நம்பி விட ரவிச்சந்திரன் ஒன்றும் முட்டாளில்லையே.. யோகானந்தனின் பிள்ளைகள் எதற்கும் துணிந்தவர்கள் என்று அவனுக்கு நன்றாகவே தெரியும்.. அவன் அவர்களை விடத் துணிந்தவன் என்பதினால் அவர்களுக்கு கடிவாளம் போட்டுத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தான்.. சிறு மீறலுக்கும் பலத்த தண்டனை கொடுத்தான்..

“சிறு பிழைக்கு இத்தினி வல்லிய சிஷா அளிக்கனுமோ அம்மே..”

அவந்திகா மனம் தாளாமல் யாழினியிடம் முறையிடுவாள்.. அருள்மொழிவர்மன் ரவிச்சந்திரனுக்கு

எதிரான பேச்சுக்களுக்கு செவி சாய்க்க மாட்டார்.. அதனால் அவரிடம் அவந்திகா முறையிட முடியாது..

“ரவிச்சந்திண்ட ஞான் ஏதும் பறய ஏலாது மோளே.. நீ என்னிடம் முறையிடாம நிண்ட பிள்ளைகளுக்கு புத்திமதி பறயனும்.. ஈ கொட்டாரத்தில வழக்கிண்டி இருக்கோனும்னு அறிவுறுத்தனும்..”

யாழினி கழன்று கொள்வாள்.. அவந்திகா அஜந்தாவிற்குப் புத்தி சொல்லி கடிந்து கொள்வாள்..

“ஈ கொட்டாரம் தற்போது எண்ட அச்சனோட கொட்டாரமில்ல மோளே.. ரவிச்சந்திரனோட கொட்டாரம்.. ஆ விஷயத்த மனசில இருத்திக்கனும் அஜந்தா.. அவனின்ட வம்பு வழக்குக்கு போகானாம்..”

“ஆ ரவிச்சந்திரன் ஆரானு அம்மே..? எண்ட மணவாளன்தான..?”

“செவி மடுக்க நன்னாயுண்டு மோளே.. ஆ திவசம் கிட்டறவரைக்கும் பொறுமையா இருக்கானம்.. கேட்டே..?” அஜந்தாவும் கேட்டுக் கொண்டாள்.. அவளது அழகுக்கு மயங்காத ரவிச்சந்திரனை அடக்கி ஆள வேண்டுமென்ற வெறி நாளுக்கு நாள் அதிகமாகி அவள் மனதில் தீயாக கொழுந்து

விட்டு எரிந்தது.. நந்தினியுடன் ரவிச்சந்திரன் வந்து நின்றதில் அந்தத் தீயின் ஜ்வாலை அதிகமாகி நந்தினியைச் சுட்டு விடும் ஆவேசம் கொண்டது..

வீணாவின் பக்கத்தில் உட்கார்ந்திருந்த நந்தினி எதிரில் அமர்ந்திருந்த அவந்திகாவின் குடும்பத்தை ஏறெடுத்தும் பார்க்காமல் உணவில் கவனமாக இருந்தாள்.. சும்மாவே அவள் உணவு விரும்பி.. ருசியான உணவிற்கு அடிமை.. கேரளத்துக் குழாய் புட்டும், பலாக்காய் குருமாவும், நேந்திரம்பழ சிப்ஸிமாக உணவு வகைகள் களை கட்டியதில் அஜந்தா அதிகப்படியாக எதையும் சொல்ல வேண்டிய அவசியமின்றி நாக்கை சப்புக் கொட்டிக் கொண்டு வெளுத்துக் கட்டினாள்..

இகழ்ச்சிப் புன்னகையுடன் அஜந்தா நந்தினியை மட்டம் தட்ட முனைந்து ரவிச்சந்திரனிடம் வாங்கிக் கட்டிக் கொண்டாள்.. பார்த்த முதல் பார்வையிலேயே அஜந்தாவை வெறுக்க ஆரம்பித்து விட்ட நந்தினிக்கு ரவிச்சந்திரன் அஜந்தாவை ரவுண்டு கட்டி அடித்ததில் கொண்டாட்டமாக இருந்தது..

எதற்காக அவளுக்கு அஜந்தாவைப் பிடிக்காமல் போய் விட்டது என்று யோசித்தாள்.. அஜந்தாவின் பேச்சா..? பார்வையா..? நடவடிக்கையா..?

இது அத்தனையையும் தாண்டி அவளது அழகும், அவள் ரவிச்சந்திரனின் அத்தை மகள் என்ற உறவும்தான் அவளை நந்தினிக்குப் பிடிக்காமல் போனதன் காரணம் என்று தோன்றியதில் நந்தினிக்குள் அதிர்வு வந்தது..

'இப்படியாப்ட்ட நினைவு எனக்கு வரக் கூடாது..'

அந்த நினைப்பை ஒதுக்கித் தள்ளி விட்டு, பரிமாறப்பட்ட உணவு வகைகள் எதையும் ஒதுக்கித் தள்ளாமல் விட்டு விளாசினாள் நந்தினி..

கனிவான பார்வையுடன் வீணா நந்தினிக்கு வேண்டியதைக் கேட்டுப் பரிமாறச் சொன்னாள்..

"இன்னும் வேணுமோ..?" அஜந்தா மலைத்து விட்டவளைப் போலக் கேலிக் குரலில் கேட்டாள்..

அதிசயத்திலும் அதிசயமாக இறுகிப் போன முகத்துடன் நாத்தனார் மகளைத் தீர்க்கமாக ஓர் பார்வை பார்த்தாள் வீணா.. அந்தப் பார்வையின் தீட்சண்யத்தில் அஜந்தாவின்

முதுகுத் தண்டு ஜில்லிட்டது.. இதுபோல பார்ப்பவளல்ல வீணா.. பெறுமையின் சிகரம் போன்றவள்.. அமைதியின் வடிவானவள்.. அதிகம் பேசாதவள்..

அவளே இப்படிப் பார்க்கும் அளவுக்கு இந்த நந்தினியென்ன அப்பேற்பட்ட அதிமுக்கியமான விருந்தாளியா என்ற ஆத்திரம் பிறந்தது அஜந்தாவுக்கு..

“அத்தை வதனத்த நோக்கனும் அம்மே.. எதுக்கோசரமானு இத்தினி வெப்பராளமானு..?” அவந்திகாவிடம் முணுமுணுத்தாள்..

“ஈ நந்தினிக்குட்டியோட ஊரு தமிழ்நாடல்லோ.. எண்ட அச்சனோட பார்யாருக்கு ஜனித்த தேசத்தோட ஓர்மை வந்திட்டிருக்கும்.. நிண்ட அத்தையோட வழக்கு வேண்டாம் மோளே.. வெகு திவசம் கழிச்சு ரவிச்சந்திரன் வயநாட்டுக்கு வந்திருக்கான்.. ஈ சமயத்தில வழக்கு வந்திட்டின்னா எண்ட அம்மை வெப்பராளம் கொள்ளுமல்லோ..”

“ஓ..! மாமியாருக்கும் மருமகளுக்கும் வெப்பராளம் கொள்ளுறதை விட்டினு வேற ஜோலி இல்லியோ..?”

“அதான ரவிச்சந்திரண்டின்ட கேட்டிப் பறயவோ..?” எரிச்சலுடன் அவந்திகா வினவியதில்..

“அம்மே..” என்று வாய் மூடிக் கொண்டாள் அஜந்தா..

‘அது..’ அவந்திகா கோபத்துடன் சாப்பாட்டைக் கவனிக்கலானாள்..

சாது மிரண்டால் காடு கொள்ளாது.. இதை புத்திசாலியான அஜந்தா புரிந்து வைத்திருக்க வேண்டாமா..? அத்தனை வருடங்களாக அமைதி காத்த வீணா அவந்திகாவின் முன்னிலையிலேயே அஜந்தாவை முறைப்பது நல்லதிற்கான அறிகுறியல்ல.. யாழினிக்கு மகள் மீது பாசம் உண்டென்றாலும் மருமகளின்மீது அபரிதமான பாசம் உண்டு.. அவந்திகா வீணாவைக் கொலை செய்யும் அளவிற்குச் சென்றும் வீணா யாழினியிடம் அதைப் பற்றிய புகார் எதையும் சொன்னதில்லை.. அதை யாழினி சுட்டிக் காட்டியிருக்கிறாள்..

“நின்னப் பத்தின பிராதி எதையும் எண்ட மருமக ஓர் திவசமும் பறஞ்சதில்ல அவந்திகா... நின்ன அன்வர்ஷிக்கனும்னு கேட்டதில்ல.. மாப்புப் பறயனும்னு பறஞ்சதில்ல.. ஆ மனுசிக்கு நீயும், நிண்ட குடும்மும் கெடுதலத் தவிர வேற எதையும் விஜாரிச்சதில்ல.. ஈ குணம் சரியில்ல மோளே.. மாத்திக்கனும்.. பட்ஷே.. ஞானும், நிண்ட அச்சனும்

எங்கட பாசத்த மாத்திக்குவோம்.. அறிஞ் ஜீவிக்கனும் அவந்திகா..”

யாழினி மகளை எச்சரித்திருக்கிறாள்.. அவந்திகாவுக்கு எதிராக வீணா ஒற்றைச் சொல்லை உதிர்த்தாலும் அவளும் அருள்மொழிவர்மனும் மகளைத் தள்ளி வைத்து விடுவார்கள் என்பதை உணர்த்தியிருக்கிறாள்..

அந்தக் குடும்பத்தில் வீணாவுக்கு இருக்கும் செல்வாக்கு அத்தகையது.. அளவிட முடியாதது.. வாய் திறந்து எதையும் பேசாமல் குடும்பத்தைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கலாம் என்பதற்கான மிகச் சிறந்த உதாரணம் வீணா.. அவந்திகாவின் பொடித்தனமான செய்கைகளைப் பொருட்படுத்தாமல் பொறுத்துப் போகும் மருமகளுக்காக அருள்மொழிவர்மனும், யாழினியும் மகளையே தூக்கியெறிந்து விடுவார்கள்.. மனைவியின் மீது உயிரையே வைத்திருக்கும் ரவிவர்மன் வீணாவின் ஓர் வார்த்தையில் தங்கையைத் தள்ளி வைத்து விடுவார்.. ரவிச்சந்திரனைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.. அவன் தாய்க்குத் தலை வணங்குகிறவன்..

இப்பேற்பட்ட வீணா முதன்முறையாக கோபப் பார்வை பார்க்கிறாள் என்றால் அஜந்தா பதுங்க வேண்டாமா..? பாய முனைந்தால் என்ன ஆவாள் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டாமா..?

“எந்தா விஜாரம் அம்மே..”

தாயின் நினைவு எதைப்பற்றியது என்று அஜந்தா வினவிவைத்ததில் பல்லைக் கடித்தபடி மகளைப் பார்த்த அவந்திகா..

“நிண்ட அச்சனோட சேட்டனின்ட தரவாடுக்கு நீ எப்பப் போவியோங்ஙற விஜாரம் மோளே..” என்று பறைந்தாள்..

அஜந்தாவின் முகம் வெளிறிவிட்டது.. அதைப் பார்க்கப் பார்க்க அவந்திகாவிற்கு வெகு திருப்தியாக இருந்தது.. அடங்க மாட்டேன் என்று அடம் பிடிக்கும் அஜந்தாவினால் ஏற்படப் போகும் பின் விளைவுகளை நினைத்து அவள் அஞ்சினாள்.. அஜந்தா ரவிச்சந்திரனின் மனைவியாகி அந்த அரண்மனையின் ஆட்சியைக் கைப்பற்றுவது முக்கியம்தான்.. அதைவிட முக்கியம் அந்த அரண்மனையில் அவந்திகா தன் குடும்பத்துடன் தங்கியிருப்பது..

பிள்ளைகளை வெளியேற்றி.. யோகானந்தனை சிறைக்குள் தள்ளும் ரவிச்சந்திரனுக்கு அவந்திகாவையும் அந்த அரண்மனையை விட்டுத் துரத்த எவ்வளவு நேரமாகும்..? அதைப் புரிந்து அஜந்தா நடந்து கொண்டால் தேவலை என்றிருந்தது அவளுக்கு.. அருள்மொழிவர்மனின் அரண்மனையில் உரிமை கொண்டாடும் தகுதியை அவந்திகாவின் குடும்பம் இழந்து விட்டது.. ரவிவர்மனின் பிள்ளைகளை அவந்திகாவின் பிள்ளைகள் மணம் புரிந்தால் அவ்வுரிமை திரும்பக் கிட்டும்... அதை செயல்படுத்த முனைந்த அபராஜிதன் மாநிலம் கடத்தப்பட்டு விட்டான்... மிஞ்சியிருப்பது அஜந்தா மட்டுமே.. எவராலும் அசைக்க முடியாத ரவிச்சந்திரனை அவள் அணுக முடியுமா..?

அவந்திகாவுக்கு நம்பிக்கையில்லை.. அஜந்தா பேரழகிதான்.. ரவிச்சந்திரன் அவளைவிடப் பேரழகிகளைப் பார்த்திருப்பானே.. அத்தை மகளின் எழிலில் மயங்கி விடுவானா..?

‘ஈ சமயத்தில இத்துனை வல்லிய சுந்தரி வரனுமோ..?’ அவந்திகா நந்தினியை எரிச்சலுடன் பார்த்தாள்.. சந்தன நிறத்தில் ஆளை அயர வைக்கும் அழகு கொண்ட அவந்திகா தன் மனதுக்குள் நந்தினியை ‘வல்லிய சுந்தரி..’ என்று

நினைத்ததை மட்டும் நந்தினி அறிந்திருக்க வேண்டும்.. நிஜம்தானா என்று துள்ளிக் குதித்திருப்பாள்..

அஜந்தாவைப் போன்ற அதிரூப சுந்தரியின் அம்மாவான பேரழகி நந்தினியை 'வல்லிய சுந்தரி..' என்று வர்ணித்தால் கொண்டாட்டம் வராதா..?

ம்ஹூம்.. அதைக் கேட்டும் கொடுப்பினையை யெல்லாம் அவந்திகாவும், அஜந்தாவும் மற்றவர்களுக்கு கொடுக்க மாட்டார்களே..

அவர்கள் மனதில் ஒன்று.. வாக்கில் ஒன்றாக இருப்பவர்கள்.. மனதுக்குள் நந்தினியின் அழகை சிலாகித்து விட்டு வெளிப் பார்வையில் அவளைத் துச்சமாகப் பார்த்து அச்சுறுத்துபவர்கள்..

சர்வ ஜாக்கிரதையாக அந்தத் தாயையும், மகளையும் பார்க்காமல் சாப்பிட்டு முடித்தாள் நந்தினி..

"பால் சாப்பிடம்மா.."

கை கழுவி வந்தவளிடம் பால் தம்ளரை நீட்டினாள் வீணா.. அதைச் செய்ய வேலையாள்கள் இல்லையா என்று வெகுண்டாள் அஜந்தா.. அவளது மாமன் மனைவி

பணியாள்களைப் போல பணி புரிய வேண்டுமா என்ற அக்கறையில் வந்த கோபம் அல்ல அவள் கோபம்.. ஒரு நாள்.. ஒரு பொழுதாவது அவளுக்கும் அவந்திகாவிற்கும் அதுபோன்ற பணிவிடைகளை வீணா செய்ததே இல்லையே என்ற ஆற்றாமையில் வந்த கோபம் அவள் கோபம்.. வீணாவிற்கு பாரபட்சம் கிடையாது.. அதுபோன்ற பணிவிடைகளை அவள் செய்யக் கூடியவள்தான்..

ரவிவர்மனும், ரவிச்சந்திரனும் அதட்டி விடுவார்கள்.. வீணா இருந்த இடத்தை விட்டு நகராமல் ஏவல் செய்யப் பழகிக் கொள்ள வேண்டும் என்பார்கள்.. அதன்படியே அவளைப் பழக்கியும் வைத்திருந்தார்கள்..

அப்படி வீணாவைத் தாங்கு தாங்கெனத் தாங்கிக் கொண்டிருக்கும் ரவிவர்மனும், ரவிச்சந்திரனும் நந்தினிக்கு வீணாவே பால் தம்ளரைக் கையிலெடுத்து கொடுப்பதைப் பார்த்தும் ஆட்சேபிக்காமல் இருந்தார்கள்.. அது கூடப் பரவாயில்லை..

“கையில் கொடுக்கக் கூடாது அம்மா.. வாயில் புகட்டிவிட வேண்டும்..” என்று ரவிச்சந்திரன் கேலி செய்து

சிரித்ததைத்தான் அஜந்தாவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை..

“போடா போக்கிரி..” மகனிடம் செல்ல கோபம் காட்டிச் சிரித்து அஜந்தாவின் வயிற்றில் அமிலத்தை ஊற்றினாள் வீணா.. அஜந்தாவின் வயிறு பற்றியெரிந்தது..

“இவன் இப்படித்தாம்மா.. ரம்யாவுக்கு நான் ஊட்டி விடறதைக் கிண்டல் பண்ணுவான்...”

அடுத்து ரம்ய மாலினிக்கு நந்தினியை இணையாக்கினாள் வீணா..

“ஆமாங்க.. அண்ணா அப்படித்தான்..” ரம்ய மாலினி எடுத்து நந்தினியின் பக்கத்தில் நின்று அவள் தோளில் கை போட்டு அனைத்துத் தன் பங்குக்கு அஜந்தாவின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டாள்..

“நோக்கியோ அம்மே..” அஜந்தா அவந்திகாவின் காதில் கிசுகிசுத்தாள்..

“நோக்காண்டாம் மோளே.. ஈ சினிமாவ எதுக்கோசரம் நோக்ககோனும்..? நம்பளுக்கிதி வேணாம்..”

“எந்தா பாசம்..! எந்தா பி ரேமம்..! ரோமாஞ்சனம் உண்டானு அம்மே..! ஈ பெண்குட்டி ஆரானு அம்மே..? நிண்ட அச்சனோட கொச்சு மோளா..?”

“ஸ்ஸ்ஸ்.. வெப்பராளம் வேணாம் மோளே.. பிணக்கம் வேணாம்.. சில திவசம் கழிச்சு நம்பளுக்கு ஈ கொட்டாரத்தோட பரணம் கிட்டுமல்லோ.. அதி வரைக்கும் எதியும் பறயாண்டாம் மோளே..”

“சில திவசமல்ல அம்மே.. சில கொள்ளமானாலும் ஈ கொட்டாரத்தோட பரணம் நமிக்கு கிட்டாது.. கேட்டியோ.. மனசு நொம்பரமாயிட்டு அம்மே.. நம்பள எரப்பாளின்னு விஜாரிக்கறத விஜாரிக்கட்டே மனசோட நொம்பரம் அதிகமாயிட்டு அம்மே.. ஈ பெண் குட்டி என்னவிட வல்லிய சுந்தரியோ..?”

அஜந்தாவின் மனம் வலிக்கிறது என அவளே வாய் விட்டு புலம்பியதை அவந்திகாவின் தாய் மனதால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. அவள் பெற்ற அருமை மகளின் மனதி ல் நொம்பரம் (வலி) உண்டாவதோ..? அதை அவந்திகா செவி மடுப்பதோ.. அவர்கள் என்ன எரப்பாளிகளா..? (பிச்சைக்காரர்களா..)

அங்கேயே நின்றிருந்தால் அஜந்தாவின் புலம்பல் அதிகமாகும் என்பதால் மகளை இழுத்துக் கொண்டு போய் விட்டாள் அவந்திகா.. தனித்திருந்தால் யோகானந்தனுக்கு வீரம் இருக்காது.. அவந்திகா அருகிலிருந்தால் மட்டுமே அவ்வபோது உறுமுமார், செருமுவார், உறுத்துப் பார்ப்பார்.. பார்யாள் அருகில் இல்லாவிட்டால் காற்றுப்போன பலூன் போல சுருங்கி விடுவார்..

அவரும் பார்யாள் சென்ற வழியைப் பின் தொடர.. நந்தினி நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.. அவள் முகம் தெளிந்ததைப் பார்த்த ரவிச்சந்திரன்..

“அத்தை குடும்பத்தைப் பார்த்து இவள் பயப்படுகிறாள்..” என்று சொன்னான்..

“பயந்த சுபாவம் போல..” பிரியத்துடன் சொன்னாள் வீணா..

“அப்படியெல்லாம் நினைச்சா ஏமாந்து போவீங்கம்மா.. இவ படு சண்டைக்காரி.. முனுக்குன்னா கோபம் வந்து மூக்கு நுனியில உட்கார்ந்துக்கும்.. வரிஞ்சு கட்டிக்கிட்டு வந்திருவா..” என்றான் ரவிச்சந்திரன்..

அவனுடைய குடும்பத்தார் சுற்றியிருக்கிறார்கள் என்பதை மறந்து நாக்கைத் துருத்தி அவனுக்கு அழகு காட்டியபடியே..

“ரொம்பத்தான் கண்டுட்டிங்க.. போவீங்களா..” என்று சொல்லி விட்டாள் நந்தினி..

அதன் பின்னால்தான் மற்றவர்களும் அங்கிருக்கிறார்கள் என்ற நினைவே அவளுக்கு வந்தது.. என்ன செய்வது என்று தெரியாமல் அவள் திருதிருக்க..

“நிஜம்தான் அண்ணா..” என்று வியப்புடன் வாய் பொத்திச் சிரித்தாள் ரம்ய மாலினி..

நந்தினிக்கு வெட்கமாகி விட்டது.. பெரியவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்களோ என்ற சங்கடத்துடன் அடிப்பார்வை பார்த்தாள்.. ரவிவர்மனின் இதழ்களில் மெல்லிய புன்னகை படர்ந்திருந்தது.. அருள்மொழிவர்மன் மீசையை முறுக்கியபடி “ஹா.. ஹா..” என்று சிரிக்க, யாழினி மெல்லச் சிரித்தாள்.. வீணா கனிவுடன் நந்தினியைக் கட்டிக் கொண்டாள்..

“பின்னே.. எங்க தமிழ்நாட்டுப் பெண்ணை என்னன்னு நினைச்சேடா..? நீ பேசப்பேசக் கேட்டுக்கு வோமாக்கும்.. பதிலுக்கு போட்டுத் தாக்கிருவோமில்ல.. கபர்தார்..”

வீணாவும் கூட்டுச் சேர்ந்து கொள்வாள் என்று கொஞ்சம் கூட நினைத்துப் பார்த்திராத நந்தினி விழிகளை விரித்தாள்.. வீணாவின் தமிழ்நாட்டப் பற்று அவள் மனதிலிருந்த தனிமையுணர்வை விரட்டியடித்தது.. மலையாள தேசத்தில் இருக்கும் பயம் போய் நமது ஆள்களும் இங்கே இருக்கிறார்கள் என்ற தெம்பு வந்ததில் நந்தினி புத்துணர்வு கொண்டாள்..

“பார்த்தீங்களாப்பா.. ஊரும், ஊரும் ஒன்று சேர்ந்திருச்சு.. நம்மள ஒதுக்கி விட்டுட்டாங்க..” ரவிச்சந்திரன் சோகம் போல முகத்தை வைத்துக் கொண்டான்..

“ஆமாண்டா மோனே..” ரவிவர்மனும் கூட்டணி போட்டதில் அந்த இடம் கலகலப்பானது..

வீட்டுக்குள் கலகலப்பை உணர்ந்த அருள்மொழிவர்மனுக்கும் யாழினிக்கும் மனதுக்கு இதமாக இருந்தது.. அதுபோல குடும்பத்துடன் கலந்து பேசி வீணா சிரித்து வெகு காலமாகி விட்டது என்ற நினைவில் கண்கள் பனிக்க அவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.. அன்பான மருமகளின் முகத்தில் சிரிப்பை வரவழைத்திருக்கும் நந்தினியைப் பிரியத்துடன் பார்த்தார்கள்..

“ஈ பெண்குட்டியினால நம்ப வீணாவோட வதனத்தில நகைப்பு வந்திட்டல்லோ..” மனம் கசிந்தாள் யாழினி..

“அதே யாழினி..” ஆமோதித்தார் அருள்மொழிவர்மன். அவர்களுடைய மகள் அங்கே நிலவிய கலகலப்பில் கலந்து கொள்ளாமல் குடும்பத்துடன் அகன்று விட்டதை நினைத்து அவர்களுக்கு கோபம் வந்தது..

“அஜந்தாவுக்குத்தான் மதியில்லேண்டா அவந்திகா மோளுக்கு மேல் மதியிண்டு இருக்கிறா.. மோளோட வயசில பெண்குட்டி வந்தா சிநேகிதம் கொள்ளனும்ண்டு பறயனும்.. விரோதம் கொள்ளனும்ண்டு பறயாண்டாம்.. கேட்டோ..”

“ஞான் அறிஞ் யாழினி.. அவந்திகாவிட ஞான் சம்சாரிக்கறேன்..”

“எங்ஙன சம்சாரிக்கிறது..? நிங்க அரிசில் இருந்தவகிட்ட சம்சாரிக்காம தூங்கப் போனவ கிட்ட சம்சாரிப்பீங்கல்லோ..?”

“புலரியில விளிச்சு சம்சாரிப்பேனல்லோ..”

“அங்ஙனவானு..?”

“அங்ஙனவானல்லோ..”

“நோக்கலாம்..”

“நோக்கு.. நோக்கு..”

மனைவிக்கு பழிப்புக் காட்டிக் கொண்டிருந்த அருள்மொழிவர்மனை யதேச்சையாகப் பார்த்து விட்ட நந்தினியின் விழிகள் ஒளிர்ந்தன.. அவளருகிலிருந்த ரவிச்சந்திரன் மெதுவான குரலில்..

“என்ன..? தாத்தாவை சைட்டடிக்க கிளம்பிட்டியா..?” என்று முணுமுணுத்தான்..

நந்தினிக்கு கோபம் வந்து விட்டது..

“ச்சை..! என்ன பேச்சு இது..?” என்று முகம் சுளித்தாள்..

“அடிச்சிருவியோ..” ரவிச்சந்திரன் பயந்ததைப் போல நடித்தான்..

“என்னடா..?” வீணா புரியாதவளாக வினவினாள்..

“இவ அடிக்க வர்றாம்மா..” அவன் தாயிடம் புகார் செய்தான்..

“யாரு..? இவ..? உன்னை அடிக்க வர்றா..? நான் நம்பனும்..? போடாப் போ.. பாவம்.. இவளே பச்சை மண்ணு..”

“யாரு..? இவ பச்சை மண்ணு..? ம்ஹூம்.. என் குடும்பத்தில இருக்கிற லேடிஸெல்லாம் கூட்டணி போட்டு இவளை பச்சை மண்ணுன்னு சொர்டிஃபிகேட் கொடுத்துக்கிட்டு இருக்கீங்க.. இது எங்கே போய் முடியப் போகுதோ..”

“எங்கே போய் முடிஞ்சாலும் எங்களுக்குள்ல முடிச்சுக்குவோம்.. உன் கிட்டப் பிராதி கொண்டு வர மாட்டோம்.. மனசிலாயி..”

வீணா அன்புடன் நந்தினியை அணைத்துக் கொண்டாள்.. நந்தினிக்கு அந்தக் குடும்பத்தை பிடித்திருந்தது.. அஜந்தாவைப் பற்றிய பயம் நீங்கியவளாக அவள் மனம் விட்டுச் சிரித்தாள்..

அத்தியாயம் 73

கண்ணாடிக் கதவுக்கு அப்பால் ஒளிர்ந்த விளக்குகளின் ஒளி வெள்ளத்தில் அரண்மனையின் சுற்றுப்புறம் ஒரு சுற்றுலா ஸ்தலத்தைப் போல ஒளிர்ந்தது.. தோட்டத்தை ஒட்டிச் சென்ற அகன்ற சாலையின் இருபக்கமும் டூம் விளக்குகள் அணி வகுத்திருந்தன.. தோட்டத்துக்குள் வட்ட வடிவமாகவும்.. முக்கோணமாகவும் அந்தந்த இடங்களின் செடிகளின் வடிமைப்பிற்கு ஏற்ப ஒளிர்ந்த விளக்குகள் ஓவல் வடிவத்தில் இருந்த நீச்சல் குளத்தை அதே வடிவத்தில் சுற்றி வளைத்திருந்தன..

மாடி ஹாலில் ஹீட்டரின் கதகதப்போடு கம்பளியில் புதைந்தபடி சோஃபாவில் சுருண்டு உட்கார்ந்திருந்த நந்தினி..

“அழகாயிருக்கு..” என்று பிரமித்தாள்..

அவளது ரசிப்பை ரசித்த புன்முறுவலுடன் அவளைப் பார்த்த வீணாவின் பார்வை வாத்சல்யத்துடன் அவளை வருடிக் கொடுத்தது.. தாயின் பார்வையைக் கண்ட ரவிச்சந்திரன்..

“வேணும்ன்னா அவளைத் தூக்கி உங்க மடியிலே உட்கார வைத்துக்கங்கம்மா..” என்று யோசனை சொன்னான்.. ரம்ய மாலினி கலகலத்து சிரித்தாள்.. நந்தினிக்கு வெட்கமாகிவிட்டது..

‘இவன்தான் என்னைப் பப்பா மாதிரியே ட்ரீட் பண்றான்னா இவனோட அம்மாவையும் அதைப் போலவே ட்ரீட் பண்ணச் சொல்லி வைக்கிறான்.. என்ன ஒரு மாஸ்டர் பிளான்..! பல்லைக் கடித்தாள்..’

“சும்மாயிருடா.. எதுக்கெடுத்தாலும் அவளையே கிண்டல் பண்ணிக்கிட்டு.. எப்படிம்மா இவனை நம்பி வேலை பார்க்க வந்திருக்கே..?” ஆதுரத்துடன் விசாரித்தாள் வீணா..

“தெரியாம வந்து மாட்டிக்கிட்டேன் ஆண்ட்டி..” உண்மையான ஆதங்கத்துடன் சொன்னாள் நந்தினி..

“கேட்டுக்கிட்டியா அண்ணா..?” மறுபடியும் கலகலத்துச் சிரித்தாள் ரம்ய மாலினி..

“ஊஹூம்..?” ரவிச்சந்திரனின் புருவங்கள் உயர்ந்து இறங்கியதில் நந்தினிக்குள் மின்சாரம் பாய்ந்தது..

முன் எப்போதையும் விட அந்த நொடியில் அவன் வெகு கவர்ச்சியாக இருந்து தொலைத்தான்.. குளிர் மிகுந்த அந்த இரவில் அவன் தாயின் மடியை விட அவனது மடி வெகு சிறப்பானதாக இருக்கும் என்று அவளது மனம் ஜொள்ளி வைத்தது..

அவள் மனதில் ரோஜா திரைப்படத்தில் வரும் ஒரு காட்சி விரிந்தது.. காஷ்மீரின் குளிர் நதியில் சால்வைகளைப் போர்த்தியபடி அரவிந்தசாமியும் மதுபாலாவும் படகில் மிதக்கிறார்கள்.. குளிர் தாங்காமல் கைகள் இரண்டையும் தேய்த்துக் கன்னங்களில் வைத்து சூடேற்றிக் கொள்ளும் மதுபாலா இயல்பாக எழுந்து அரவிந்தசாமியின் மடியில் உட்கார்ந்து கொள்கிறாள்.. அரவிந்தசாமியின் சால்வை இருவரையும் போர்த்திக் கொள்கிறது.. படகோட்டி படகில் எவரும் இல்லாததைப் போல எங்கோ பார்த்தபடி அவர்களின் தனிமையைக் கலைக்காமல் படகைச் செலுத்துகிறான்..

‘அதுவும் ஓர் பனி இரவுதான்.. இந்த இரவைப் போல..’ நந்தினியின் கண்கள் ரவிச்சந்திரனை வட்டமிட்டன.. அவளது பார்வை அவனை மொய்த்தது.. அவனது கவர்ச்சியில் அவள் மனது சிதிலமாகி சின்னாப் பின்னமானது.

‘ராஸ்கல்..! இவனும் அரவிந்தசாமியைப் போலதான் இருந்து தொலைக்கிறான்.. ஆம்பளைக்கு எதற்கு இத்தனை அழகு..?’

இம்சையுடன் பெருமூச்சு விட்டாள் நந்தினி.. அவளையே பார்த்துக் கொண்டிருந்த ரவிச்சந்திரனின் பார்வை அவளது தடுமாற்றத்தை துல்லியமாக பதிவு செய்து கொண்டிருப்பதை கவனிக்கத் தவறினாள்..

அவள் மனக் கண்ணில் காட்சி விரிந்தது.. காஷ்மீரின் நதி வயநாட்டின் நதியாக மாறிப் போனது.. அங்குதான் படகுகள் இருக்குமா என்ன..? கேரளத்தில் படகுகளுக் கென்ன பஞ்சமா..? காஷ்மீரில் படகு வீடுகள் இருந்தால் கேரளத்தில் படகு பங்களாக்களே இருக்குமாக்கும்..

அதுபோன்ற படகு ஒன்றில் அவளும், ரவிச்சந்திரனும் உட்கார்ந்திருக்கிறார்கள்.. இது போன்ற பனியிரவு.. குளிர்கிறது.. சால்வையையும் தாண்டி ஸ்வெட்டர்களை ஊசி முனைகளால் துளைக்கிறது.. ரவிச்சந்திரனின் பரந்த மடி அவளை உட்காரச் சொல்லி அழைக்கிறது.. படகில் படகோட்டி இருக்க வேண்டுமா என்று யோசித்தாள்.. தேவையில்லையென்று தோன்றியது.. கற்பனையில் வரும்

படகுக்கு படகோட்டி எதற்கு..? வேண்டவே வேண்டாம்.. படகில் அவளும் ரவிச்சந்திரனும் மட்டும்தான் இருக்க வேண்டும்..

ரவிச்சந்திரனின் பார்வையின் அழைப்பில் நந்தினி எழுந்து கொள்கிறாள்.. அவன் மடியில் உட்கார்ந்து மார்போடு ஒன்றிக் கொள்கிறாள்.. கதகதப்பான ரவிச்சந்திரனின் மார்பு குளிருக்கு வெதுவெதுப்பான கணப்பாக மாறிப்போகிறது..

“என்ன..? எழுந்திரிச்சுட்டீங்க..?”

ரம்ய மாலினியின் கேள்வியில் தூக்கிவாரிப் போட்டது நந்தினிக்கு.. கொட்டக் கொட்ட விழித்தபடி சுற்று முற்றும் பார்த்தாள்.. அதே குளிர்.. அதே ஸ்வெட்டர்.. அதே சால்வை.. எதிரில் அழைக்கும் பார்வையுடன்

ரவிச்சந்திரன்.. இடம் மட்டும் நதியும், ஓடமுமல்ல.. வயநாட்டு அரண்மனையின் மாடி ஹால்..

‘கடவுளே..! எனக்கு என்ன ஆச்சு..?’

அந்தக் குளிரிலும் வியர்த்துப் போனாள் நந்தினி.. சுயகட்டுப் பாட்டையிழந்து எழுந்து நிற்கும் அளவிற்கா ரவிச்சந்திரன் அவள் மனதை பாதித்திருக்கிறான்..?

“இல்லை.. அரண்மனைக்கு வெளியே பார்க்க டூரிஸ்ட் ஸ்பாட் போல இத்தனை அழகாயிருக்கே.. சுற்றிப் பார்க்கலாமான்னு தோணுச்சு.. அதான்..” தடுமாறினாள்..

துளைக்கும் ரவிச்சந்திரனின் பார்வை ‘அப்படியா..?’ என்று கேலியாக வினவியது.. அவன் பக்கமே பார்க்கக் கூடாது என்று ரம்ய மாலினியின் பக்கமாகத் திரும்பி அமர்ந்து கொண்டாள்..

“உங்க பச்சை மண்ணோட ஆசையைக் கேட்டிங்களாம்மா..? இந்தக் குளிரில் தோட்டத்தில வாக் போகப் போகிறாங்களாம்.. அனுப்பி வைக்கலாமா..?” இடக்காக கேட்டான் ரவிச்சந்திரன்..

“விளையாடாதே ரவி..” கண்டிப்புடன் பேசினாள் வீணா..

“நந்தினி தமிழ்நாட்டில இருந்து வந்திருப்பவள்.. வயநாட்டுக் குளிரைப் பற்றி அவளுக்குத் தெரியாது.. நீ விளையாட்டுத்தனமாக எதையாவது சொல்லப் போக அவள் அதை நிஜமென்று நம்பி நைட் டயத்தில தோட்டத்துப் பக்கம் போய்விடப் போகிறா..”

“இவதானே..? கட்டாயம் போவா.. எதைச் செய்யனுமோ அதைச் செய்ய மாட்டா.. எதைச் செய்யக் கூடாதோ.. அதை ஓடோடிப் போய் செய்வா..”

‘ஓடோடி..’ என்ற வார்த்தையில் அழுத்தம் கொடுத்து அவன் பேசியதில் நந்தினிக்கு ‘சுருக்’ கென்று ஆகிவிட்டது.. அவளுக்கு ‘ஓடி வந்தவள்..’ என்ற பட்டத்தை அளிப்பதிலேயே அவன் குறியாக இருந்து தொலைக்கிறானே..

“ஏன் செய்யக் கூடாதுன்னு எடுத்துச் சொன்னா செய்ய மாட்டா.. அதைச் செய்யாம அவளைக் கிண்டல் பண்ணாதே..”

“நான் சொன்னா இவ கேட்க மாட்டாம்மா.. சொல் பேச்சுக் கேட்காத பெர்சனல் செக்கரட்டரியை வைத்துக்கிட்டு எப்படித்தான் குப்பை கொட்டப் போகிறேனோ.. எண்ட குருவாயூரப்பா..! நீதான் ரட்சிக்கணும்..”

“ரட்சிப்பார்.. ரட்சிப்பார்..” என்ற நந்தினி வீணாவும், ரம்ய மாலினியும் அங்கே இருப்பதை மறந்து விட்டு உதட்டைக் கோணி ரவிச்சந்திரனுக்கு அழகு காட்டினாள்.. பெர்சனல் மேனேஜர் என்று சொல்லாமல் பெர்சனல் செக்கரட்டரி என்று சொல்லியே ஒரு வழி பண்ணுகிறானே

என்ற கோபம் அவளுக்கு.. அவளை தெரிந்து வைத்திருநத ரவிச்சந்திரனின் கண்களில் மின்னல் வர, வீணாவும் ரம்ய மாலினியும் சிரித்தார்கள்..

இரவு உணவுக்குப் பின்னால் நந்தினியை அவளது அறைக்கு அனுப்பி வைக்காமல் மாடி ஹாலில் நிறுத்தி வைத்து பேச்சில் பிடித்துக் கொண்டார்கள்.. நந்தினிக்குத்தான் அரட்டையடிப்பதென்றால் அல்வா சாப்பிடுவதைப் போல இருக்குமே.. வக்கணையாக சோஃபாவில் கால்களை மடித்து சம்மணம் கட்டி உட்கார்ந்து விட்டாள்.. அவள் பேசும் அத்தனை பேச்சுக்களையும் வீணாவும் ரம்ய மாலினியும் ரசித்துச் சிரித்துக் கொண்டிருக்க ரவிச்சந்திரன் மட்டும் அவளையே குறுகுறுவெனப் பார்த்து இன்பமான இம்சையைக் கொடுத்துக் கொண்டிருந்தான்.. வெறும் பார்வையில் உடல் முழுவதும் வருடிக் கொடுக்கும் இன்பத்தைக் கொடுக்க முடியுமா..? அவன் கொடுத்துக் கொண்டிருந்தானே.. நந்தினி தவித்துப் போனாள்..

“அண்ணா, இவங்களை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு..” என்றாள் ரம்ய மாலினி..

“ஏன் பிடிக்காது..? பாஸாச்சேங்கிற பயமில்லாம இவ செய்கிற கோணங்கிச் சேட்டையைக் கண்டா இவளைப் பிடிக்கத்தானே செய்யும்..? ம்ஹூம்.. என்னத்தைச் சொல்ல..?” போலியாக அலுத்துக் கொண்டான் ரவிச்சந்திரன்..

“போதும்டா..” சிரித்தபடி மகனின் கையில் தட்டினாள் வீணா..

“அடிக்கறீங்களா ஆண்ட்டி..?” ஆர்வத்துடன் கேட்டாள் நந்தின..

“கேட்டுக்கங்கம்மா.. இவ பச்சை மண்ணாம்.. நான் அடி வாங்கறதைப் பார்க்க அத்தனை ஆசை..! இவளைப் போல செக்கரட்டரி கிடைக்க நான் கொடுத்து வைத்திருக்கனும்..” அமர்த்தலாக ரவிச்சந்திரன் சொன்னதில் நந்தினியின் முகத்தில் குடம் குடமாய் அசடு வழிந்தது.. அதை சுவராஸ்யமாக அவன் வேடிக்கை பார்த்ததில் ரம்ய மாலி னி பொங்கிச் சிரித்தாள்..

“அம்மா.. இவங்க ரெண்டு பேரும் பேசறதைக் கேட்டுக்கிட்டிருந்தா வயிறுதான் வலிக்கும்..”

மகள் சொன்னதை ஆமோதிப்பதைப் போல தலையாட்டிய வீணாவும் சிரித்துக் கொண்டுதான் இருந்தாள்..

நந்தினியின் முகத்திலிருந்து அறியாமை கலந்த துறுதுறுப்பு அவளை ஈர்த்தது..

“என்னை ஆண்ட்டின்னு கூப்பிடக் கூடாது நந்தினி..” அன்பாகத்தான் வீணா சொன்னாள்.. நந்தினிக்குத் தான் ‘திக்’கென்று ஆகிவிட்டது.. வேறு என்ன உறவுமுறையைச் சொல்லி கூப்பிடச் சொல்கிறாள் என்று பயந்து போனாள்..

‘அம்மான்னு கூப்பிடம்மா.. எனக்கு ரம்ய மாலினியும் நீயும் ஒன்றுதான்னு சொல்லிருவாங்களோ.. என்னங்கடா இது..

நந்தினிக்கு வந்த சோதனை..? இந்த குருவாயூரப்பன் வயநாட்டில இருக்கிற ரவிச்சந்திரனைத்தான் காப்பாத்து வாரா..? தமிழ்நாட்டில பிறந்த நந்தினியை அம்போன்னு விட்டுருவாரா..?’

ரம்ய மாலினியின் போஸ்ட் தனக்கு வேண்டாம் என்று எப்படிச் சொல்வது என்று பலத்த யோசனையில் ஆழ்ந்தாள் நந்தினி.. யாருக்கு வேண்டும் அந்த போஸ்ட்..? ஆணழகன் ரவிச்சந்திரனை ‘அண்ணா’ என்று கூப்பிட எவள்தான் முன் வருவாள்..? முதலில் அவள் முன் வருவாளா..? ரவிச்சந்திரனை அவள் காதலிக்க வில்லைதான்.. அவனைக்

கல்யாணம் பண்ணிக் கொள்ளும் கனவில் இல்லைதான்.. அதற்காக அவனை 'அண்ணா' என்றழைக்கும் அளவிற்கு பாசமலராகவும் இல்லை.. ரம்ய மாலினியே பாசமலரை வளர்க்கட்டும்.. நந்தினிக்கு அது தேவையில்லதா வேலை.. ஆள் மயக்கி ரவிச்சந்திரனை அண்ணா என்றழைக்கும் கொடுமைக்கு ஆளாவதை விட வயநாட்டு மலையுச்சியிலிருந்து பேகல் போர்ட் கோட்டை மீது குதித்து விடலாம்..

'அங்கேதானே அரவிந்தசாமி உயிரே.. உயிரே.. வந்து என்னோடு கலந்து விடுன்னு பாட்டுப் பாடினார்..'

"ஏய்ய்.. அரட்டை.."

அவளைக் கூப்பிட்ட ரவிச்சந்திரனின் கண்களில் சிரிப்பிருந்தது.. கண்டு கொண்டானோ என்று சம்சயம் கொண்டாள் நந்தினி.. அவனாவது.. கண்டு கொள்ளாமல் இருக்கிறதாவது.. அவளை ஊன்றிப் பார்க்கும் தூண்டில் பார்வை உன்னை நானறிவேன் என்று கெக்கலி கொட்டிச் சிரிக்கிறதே..

“எத்தனை தரம்தான் சொல்வது..? இப்படி டீப்பாத் திங்க் பண்றதைப் போல போஸ் கொடுக்காதே.. சிரிப்புச் சிரிப்பா வருது.. இல்லே ரம்யா..? ஹா.. ஹா..”

“ஆமாண்ணா.. கி..கி..கி..”

அண்ணனும் தங்கையும் சிரித்ததில் இந்த அளவுக்கு காமெடி பீஸாகி விட்டோமேயென்று நொந்து போனாள் நந்தினி..

“நீங்க ரெண்டு பேரும் இருக்கீங்களே.. இப்படியாடா ஒருத்தி அகப்பட்டா பலிகடா சிக்கிருச்சுன்னு மஞ்சத் தண்ணீயை ஊத்துவீங்க..?” சிரித்துக் கொண்டே பிள்ளைகளை கடிந்தாள் வீணா..

அவள் கடிந்து பேசியதில் நந்தினிக்கும் சந்தோஷம்தான் என்றாலும் அவளும் பிள்ளைகளுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு சிரித்ததில் செமத்தியான வருத்தம்.. அந்த வருத்தத்தை..

“ஆண்ட்டின்னு கூப்பிட்டா யாரோ மாதிரி தள்ளித் தெரியும்மா.. அத்தைன்னு சுத்தத் தமிழில் கூப்பிட்டா எனக்கு நம்ம ஊரில இருக்கிறதைப் போல சந்தோஷமா யிருக்கும்..” என்று சொல்லி துரத்திவிட்டாள் வீணா..

அவள் சொல்லி முடித்ததுதான் தாமதம்..

“ஆகட்டும் அத்தை..” என்று தன் முப்பத்தியிரண்டு பற்களையும் காட்டி மகிழ்ந்து போனாள் நந்தினி..

“இவ பச்சை மண்ணேதாண்டா..” பரிவுடன் வீணா சொல்ல..

‘அப்படியா..?’ என்பதைப் போல புருவங்களை உயர்த்தி இறக்கி நந்தினியை ஆழ்ந்த பார்வை பார்த்து கிறங்கடித்தான் ரவிச்சந்திரன்..

அவளது மகிழ்ச்சியை அவன் அவதானித்துக் கொண்டிருக்கிறான் என்ற எச்சரிக்கையுணர்வில் உஷாரானாள் நந்தினி..

‘இவனுக்கு உடம்பெல்லாம் கண்.. இவன் அத்தை மகனானதில் நான் மகிழ்ந்து போறேன்னு தப்புக் கணக்குப் போட்டிருவான்..’

அது தப்புக் கணக்கா என்று அவளது மனச்சாட்சி கேள்வி கேட்டதில் அதன் மென்னியைப் பிடித்துத் திருகி விடும் ஆத்திரம் வந்தது அவருக்கு.. அதென்ன அவள் சைட் அடிப்பதை மட்டும் ரவிச்சந்திரனும் அவளது மனச்சாட்சியும்

உடனுக்குடனே கண்டு பிடிப்பது..? அவள் மட்டுமா சைட் அடிக்கிறாள்...? ஊரில் எத்தனையோ பேர் சைட் அடிக்கிறார்கள்.. அவர்களை விட்டுவிட்டு நந்தினியை மட்டும் அரட்டுவதா..?

"கேரளாவில குளிர் அதிகமாயிருக்கும் நந்தினி.. வயநாட்டைப் பற்றிச் சொல்லவே வேணாம்... இது மலைபிரதேசம்... குளிரில் விறைந்து விடுவோம்.. எங்களுக்கு இது பழக்கம்.. உனக்குப் பழக்கமில்லைல்ல.. அதனால நைட் டயத்தில தோட்டத்தைப் பார்க்கனும்னு ஆசையிருந்தா இப்படி கணகணன்னு ஹீட்டரைப் போட்டுட்டு பாதுகாப்பா மாடி ஹாலில உட்கார்ந்து வேடிக்கை பாரு.. பகல் நேரத்தில தோட்டத்தைச் சுற்றலாம்.. என்ன..?"

சிறு குழந்தைக்குச் சொல்வதைப் போலச் சொன்னாள் வீணா.. அவள் என்ன சொன்னாலும் கேட்டுக் கொள்ள வேண்டும் போல நந்தினிக்கு பாசம், பாசமாக இருந்ததால் பூம்பூம் மாடு போலத் தலையை ஆட்டி சம்மதம் தெரிவித்தாள்..

“பரவாயில்லையே.. உங்க சொல் பேச்சைக் கேட்கிறாளே... மல்லுக் கட்டறதெல்லாம் என்னிடம்தான் போல..” வியந்து போனான் ரவிச்சந்திரன்..

“எப்பப் பார்த்தாலும் பாஸ், பாஸ்ன்னு பயம் காட்டிக்கிட்டு இருந்தா அப்படித்தான்.. நீ பயப்படாதேம்மா.. இவன் உன்னை பயம் காட்டினா என்னிடம் சொல்லு.. காதைத் திருகி தலைமேலே ஒரு கொட்டு வைக்கிறேன்..”

வீணா அளித்த உத்திரவாதம் நந்தினிக்குப் பிடித்தமானதாக இருந்ததில்..

“ஓகே அத்தை..” என்று உற்சாகமாக தலையை ஆட்டினாள்..

ரவிச்சந்திரன் பார்த்த பார்வை குளிரையும் தாண்டி அவளுக்குள் ஊடுறிவி திணற வைத்தது..

“எங்க அம்மாவை கைக்குள்ள போட்டுக்கிட்டு என்மேல தாக்குதல் நடத்தத் திட்டம் போடற போல..” என்றான் அவன்..

“பின்னே..? இத்தனை நாளா உங்களிடம் தனியா மாட்டிக்கிட்டு இருந்ததினாலதான அரட்டிக்கிட்டே இருந்தீங்க..? இப்ப அப்படியில்லைல்ல.. அத்தையே எனக்கு சப்போர்ட்

பண்ணியாச்சு.. இனி மிரட்டினா அவ்வளவுதான்..” நந்தினி மிரட்டினாள்..

“என்ன செய்வ..?” அவளையே பார்த்தபடி கேட்டான் ரவிச்சந்திரன்..

நந்தினியின் உடல் கூடானது.. அவனை நேருக்கு நேர் பார்ப்பதை அவள் தவிர்த்தாள்.. அவன் பார்வையைச் சந்திக்கும் திராணியில்லாமல் தவித்தாள்.. ஒரு மனிதன் அழகனாக இருந்து வைக்கும் ஆணவத்தில் இப்படியா பார்த்து வைப்பான்..? பக்கத்தில் அம்மாவும், தங்கையும் இருக்கிறார்கள் என்ற அறிவு வேண்டாமா..?

“அத்தையிடம் பற்ற வைத்து விடுவேன்..” அவன் முகம் பார்க்காமல் சொன்னாள் நந்தினி..

“உங்க முன்னாலேயே என்னை எப்படி பிளாக் மெயில் பண்ணுகிறான்னு பாருங்கம்மா.. இவளுக்கு செல்லம் கொடுக்காதீங்க..”

“அப்படித்தான் செல்லம் கொடுப்பேன்.. போடா டேய்ய்.. நீ வாடா செல்லம்..”

வீணா கை நீட்ட சற்றும் யோசிக்காமல் அவள் கைகளுக்குள் புகுந்து கட்டிக் கொண்டாள் நந்தினி.. வீணாவின் தோள் வளைவில் முகம் புதைத்திருந்தவளின் விழிகளோடு விழி கலந்தான் ரவிச்சந்திரன்.. அவன் பார்வையில் தெரிந்த சொந்தத்தில் திகைத்துப் போனாள் நந்தின.. மருண்ட அவள் விழிகளை பிரியத்துடன் பார்த்தவனின் பார்வையில் பிரேமம் வழிவதைப் போன்ற பிரமை அவளுக்கு உண்டானது..

'சீச்சீ.. அப்படியிருக்காது..' தனக்குள் சொல்லிக் கொண்டாள் நந்தினி..

'இவன் பார்க்காத பெண்ணா..? உலக அழகிகளைப் பார்த்திருப்பான்.. பழகியிருப்பான்.. மற்றவர்களை விட்டு விடலாம்.. இந்த அஜந்தாவின் அழகுக்கு ஈடாவேனா நான்..? சும்மா ஏதோ தோணுது..'

தலையைக் குலுக்கி மறுத்தவளை வினோதமாக பார்த்தாள் வீணா..

"என்னம்மா ஆச்சு..? நீயா தலையைக் குலுக்கிக்கற..?"

'அடடா.. மைண்ட் வாய்ஸுன்னு நினைச்சு சுவுண்டு வாய்ஸில பேசறததைப் போல மனசுக்குள்ள தலையாட்டறதா

நினைச்சு நிஜமாவே தலையாட்டித் தொலைச்சிட்டேனே.. இப்ப இவங்க என்னை மறை கழண்ட கேஸுன்னு நினைச்சிட்டா என்ன பண்ணுவேன்..?' திருதிருத்த நந்தினி என்ன செய்வதென்று தெரியாமல் ரம்ய மாலினியைப் பார்த்து..

"ஹி.. ஹி.." என்று ஒரு மார்க்கமாக சிரித்து வைத்தாள்..

"என்ன அண்ணா இது..?" ரம்ய மாலினி பயந்து போனவளைப் போல தமையனிடம் கேட்டு வைக்க.. அவன் கொஞ்சம்கூட ஈவு இரக்கமில்லாமல்..

"நான் சொல்லலை..? இவளை புத்திசாலின்னு நினைச்சு ஏமாந்திராதீங்கன்னு சொன்னாக் கேட்கனும்.. இவ மறை கழண்ட கேஸ் ரம்யா.." என்று நந்தினி பயந்ததை ஊர்ஜிதம் செய்தான்..

'கன்பர்மே பண்ணிட்டானே..' பல்லை நறநறத்த நந்தினி.. வீணா அவளைப் பார்ப்பதை உணர்ந்ததும் அவளிடமும் ஒரு.. "ஹி.. ஹி.." யை உதிர்த்து வைத்தாள்..

"பார்த்துங்க அம்மா.." என்றான் ரவிச்சந்திரன்..

“பார்த்துக்கிட்டுத்தாண்டா இருக்கேன்..” மகனை முறைத்தாள் வீணா..

“ஏம்மா உளருகிறது அவ.. உதை வாங்கறது நானா..? இந்த முறைப்பை அங்கே முறைக்கனும்.. லூஸு மாதிரி கெக்கே பிக்கேன்னு சிரிச்சு வைக்கிறா.. மழையில நனைஞ்ச ஆட்டுக்குட்டி மாதிரி தானாத் தலையைக் குலுக்கிக்கிறா.. இதையெல்லாம் நீங்க ஏன்னு கேட்க மாட்டிங்க.. என்கிட்டப் பார்த்துக்கிட்டுத்தாண்டா இருக்கேன்னு முறைப்பீங்க.. அப்படி என்னத்தைப் பார்த்துட்டிங்க..?”

“நீ அவளைப் பாடாய் படுத்தறதைப் பார்த்துக் கிட்டுத்தான் இருக்கேன்.. நீ வாம்மா.. உனக்கு நான் வேலை போட்டுத் தரேன்.. இவன் கொடுக்கிற வேலை உனக்கு வேணாம்..” வீணா நந்தினியை இழுத்துக் கொண்டாள்... அவளது தோளில் தலை சாய்த்துக் கொண்ட நந்தினிக்கு வெண்ணிலாவின் தோளில் தலை சாய்த்துக் கொண்டதைப் போல இருந்தது.. வீணாவிடம் சீராடியபடி ரவிச்சந்திரனைப் பார்த்தவளின் கண்கள்..

‘படவா..!’ என்று கனல் கக்கின..

‘மறை கழண்ட கேஸ்ன்னா சொன்ன..? இருக்குடா உனக்கு..’

“ஊஹூம்..?” வாய் விட்டு அவன் கேட்டதும்..

‘போச்சுடா..’ என்று மனதுக்குள் அலறினாள் நந்தினி. சுதாரித்து அவள் திரும்புவதற்குள் குறுகுறுவென அவள் மீது ஊறும் பார்வையுடன் புருவங்களை உயர்த்தி இறக்கி அவளை மயங்க வைத்தான் அந்த மாயவன்..

அத்தியாயம் 74

‘சொக்குப்பொடி போட்டாண்டா..

மச்சான், மச்சான்..! - அவன்

சொன்னதையெல்லாம் கேட்கும்படி..

வைச்சான், வைச்சான்..’

என்றோ ஒருநாள் தஞ்சையை ஒட்டியிருக்கும் பூர்விக கிராமத்தின் திருவிழாவில் ஒலி பெருக்கியில் ஒலித்த பாடல்களில் நந்தினி ரசித்துக் கேட்ட பாடல் அவள் மனதில் ஒலித்தது..

துளைக்கும் ரவிச்சந்திரனின் பார்வையைச் சந்திக்க முடியாமல் லஜ்ஜையுடன் பார்வையை விலக்கிக் கொண்டாள் நந்தினி.. அவனைச் சந்தித்த பின்னால் இது போலத்தான் அடிக்கடி ஆகி வைக்கிறது என்ற நினைவு அவளை யோசிக்க வைத்தது.. அவன் யார், அவனது பின்புலமும் உயரமும் எத்தகையது என்பதை அறிந்த பின்பும் அவனிடம் மயங்குகிறாளே.. அவளைப் போல முட்டாள் இவ்வுலகில் உண்டோ..?

‘போதும் நிறுத்து.. அவனும் முட்டாள்ங்கிறான்.. நீயும் அதே ராமாயணத்தைத்தான் ஒப்பிக்கிற..? ம த்ததுதான் காலை வாரும்ன்னா மனச்சாட்சியும் சேர்ந்துக்கிட்டு காலை வாருது.. இதை எங்கே போய் சொல்ல..?’

“ம்ஹூம்..”

மற்றதையெல்லாம் மனதில் நினைத்துவிட்டு ‘ம்ஹூம்’ மை மட்டும் நந்தினி சத்தமாகச் சொன்னதில்..

“நீங்க வேலை கொடுக்கறேன்னு சொன்னதை இவளே நம்பலை.. ஹா.. ஹா..” என்று சிரிக்க ஆரம்பித்தான் ரவிச்சந்திரன்..

“ஹைய்யோ அத்தை.. இது அந்த ‘ம்ஹூம்’ இல்லை.. வேற ‘ம்ஹூம்..’” என்று கைவிரல்களை விரித்து உதறிப் பதறினாள் நந்தினி..

“ஊஹூம்.. செல்லாது, செல்லாது.. அம்மா வேலை கொடுக்கறேன்னு சொன்னதுக்குத்தான் நீ ம்ஹூம் சொன்ன..”

“இல்லவே இல்லை.. உங்களிடம் வேலை பார்க்காமல் கிரேட் எஸ்கேப் ஆக கிடைக்கிற சான்ஸை நான் மிஸ்

பண்ணுவேனா..? கபால்ன்னு பாய்ந்து பிடித்துக்க மாட்டேன்..?”

“அப்படியா..? என்னிடமிருந்து எஸ்கேப் ஆக இப்படியொரு சான்ஸ் இருக்கிறதா..? புத்திசாலிதான்..”

“தெரிஞ்சால் சரி..”

“தெரிந்துக்கறேன்.. தெரிந்துக்கறேன்.. எப்படியெல்லாம் பிளான் போடற..? யாரு நீ..? அடேங்கப்பா.. உன் திங்கிங் லெவலே வேற போ..”

ரவிச்சந்திரனின் சிலாகித்ததில் நந்தினி விழித்தாள்.. இது புகழ்ச்சி போல இல்லையே என்றிருந்தது அவளுக்கு.. ரம்ய மாலினியோ பீறிட்டு வந்த சிரிப்பை அடக்க முடியாமல் வீணாவின் மறுதோளில் தலை சாய்த்துக் குலுங்கிச் சிரித்தாள்..

“முடியலைம்மா.. அண்ணனும் இவங்களும் பேசறப்ப சிரிப்பு முட்டிக்கிட்டு வருது.. ஹா.. ஹா..”

‘தாயைப் போல பிள்ளைன்னுதான் சொல்வாங்க.. இங்கே அண்ணனைப் போல தங்கச்சி இருக்கா.. அதே வில்லன் சிரிப்பு.. ஹா, ஹா.. தாங்கலை..’

நந்தினி வீணாவின் தோளை விட்டு விலகி அவளது சேலை முந்தானையைப் பிடித்து விரலில் சுற்றிப் பிரிக்க ஆரம்பித்தாள்.. வெண்ணிலாவின் சேலை முந்தானையில் இந்த வேலையைத்தான் செய்வாள்.. அந்த நினைவில் அவள் வீணாவின் சேலை முந்தானையை கைப்பற்ற..

"ஏய்ய்.. அம்மா சேலையை விடு.." என்று அதட்டினான் ரவிச்சந்திரன்..

"ஹைய்யோ..! அத்தையோட சேலையையா பிடிச்சுக்கிட்டு இருக்கேன்..?" நந்தினி அவசரமாக வீணாவின் சேலை முந்தானையை விட்டு விட்டாள்..

"வேற யாரோட சேலை முந்தானைன்னு நினைத்த..? உன் சேலை முந்தானைன்னு நினைத்தியா..? நீதான் சேலை கட்டறதுன்னா இமயமலையில ஏறனுமான்னு மலைப்பியே.." ரவிச்சந்திரன் விடவில்லை..

"அம்மாவோட சேலை முந்தானையில இப்படித்தான் செய்வேன்.. அந்த நினைப்பில.." நந்தினியின் கண்கள் கலங்கி விட்டன..

"விடுடா.." வீணா நந்தினியை அணைத்து தலை கோதி விட்டாள்.. ரம்ய மாலினியும் நெகிழ்ந்து விட்டாள்..

“பாவம்ண்ணா..” ரவிச்சந்திரனிடம் முணுமுணுத்தாள்.. பாசத்தைத் தேடும் அந்த வாயாடியையே பார்த்த ரவிச்சந்திரனின் தலை ‘ஆமாம்’ எனும் விதத்தில் அசைந்தது.. “அம்மாமேலே இத்தனை பாசமிருக்கிறவங்க எப்படி வீட்டை விட்டு வெளியேறி வந்தாங்க..”

“வெளியேறி வரலை.. ஓடி வந்துட்டா..”

“ம்ப்ச்சு.. ஓடி வந்தாங்கன்னு சொல்லாதே.. இவங்க முகத்தைப் பார்த்தா அப்படியா தெரியுது..?”

“அஜந்தா முகத்தில் அப்படித் தெரியும்ங்கறியா..?”

“இந்த நேரத்தில அவளைப் பத்திப் பேசறியே.. அவ ஓட மாட்டா.. மத்தவங்களை ஓட வைப்பா..”

வெறுப்புடன் முணுமுணுத்தாள் ரம்ய மாலினி.. ரவிச்சந்திரனின் முகத்திலும் வெறுப்பு வந்தது..

“அதைச் சொல்லு..” என்றான் அவன்..

நந்தினியோ அந்த அண்ணன், தங்கையின் முணுமுணுப்பான உரையாடலைக் கவனிக்காமல் வீணாவிடம் செல்லம் கொஞ்சிக் கொண்டிருந்தாள்.. அதற்கு ஏதுவாக வீணா நந்தினியின் குடும்பத்தைப் பற்றி விசாரிக்க

ஆரம்பிக்க.. வீணாவின் முகம் பார்த்துப் பதில் சொல்ல தோதாக சோஃபாவில் அவள் பக்கமாக திரும்பி கால்களை மடித்து உட்கார்ந்து தஞ்சாவூரில் இருக்கும் அவளது வீட்டைப் பற்றியும் அந்த வீட்டிலிருக்கும் நாய்க்குட்டி, பூனை உட்பட அனை த்து ஜீவன்களைப் பற்றியும் கைகளை ஆட்டி ஆட்டிக் கதை சொல்ல ஆரம்பித்து விட்டாள் நந்தினி..

“இவங்களைப் பாரு..”

ரம்ய மாலினிக்குச் சுட்டிக் காட்டிய ரவிச்சந்திரனின் இதழ்களில் குறுநகை தவழ்ந்தது.. நந்தினியின் அங்க அசைவுகளை வேடிக்கை பார்த்தவனுக்கு அவளது குழந்தைத்தனத்தின் மீது லயிப்பு வந்தது..

“எப்படிப் பேசறாங்கன்னு பாரு.. குழந்தை போலப் பேசறாங்கள்ல..” ரம்ய மாலினியும் அதையே சொல்லி வியந்தாள்..

“இப்படித்தான் பேசுவா..”

“வாட் எ வுமன் ஷி இஸ்..”

“நீ ‘வாவ்..’ன்னு சொல்றாப்புல இவ ஒண்ணும் ஜான்ஸி ராணியில்ல..”

“ஜான்ஸி ராணியைத்தான் ‘வாவ்’ன்னு சொல்லனுமா..? இவங்களைப் போல சைல்டிஷ் பிஹேவியர் இருக்கிறவங்களையும் ‘வாவ்’ன்னு சொல்லலாம்..”

“சுத்தப் பயந்தாங்குளி..”

“அதுவும் இருக்கா..? சரிதான்..”

“ஆனா இவ பயந்தாங்குளிங்கிறதை ஒப்புக்க மாட்டா.. ஜான்ஸிராணி வேஷம் காட்டுவா.. சும்மா இருந்தாலாவது சிரிப்பு வராம இருக்கும்.. வேஷம் கட்டினா சிரிப்புத்தான் வரும்..”

“ஐ நோ.. ஐ நோ..”

கண்ணுக்கு முன்னால் கைகளை ஆட்டியாட்டி கதை பேசிக் கொண்டிருக்கும் நந்தினியைப் பார்த்தபடி தலையை ஆட்டினாள் ரம்ய மாலினி.. தற்செயலாக அவளைப் பார்த்த நந்தினி கதை பேசிக் கொண்டிருப்பதை மறந்தவளாக..

“இதோ.. ரம்யாவும் தலையைக் குலுக்கறாங்களே..” என்று கை தட்டி குதூகலித்தாள்..

“ஸோ.. வாட்..?” ரவிச்சந்திரன் விசாரித்தான்..

“நான் தலையைக் குலுக்கினா மட்டும் கேலி பண்ணினீங்க..? உங்க தங்கை தலையைக் குலுக்கினா மட்டும் அதுக்கென்னன்னு கேட்பீங்களா..?” நியாயம் கேட்டாள் நந்தினி..

“ஆமாமாம்.. நீ தலையைக் குலுக்கிறதும் என் தங்கை தலையைக் குலுக்கிறதும் ஒண்ணுதான்..”

“ஏன், ஏன், ஏன்..?”

“எதுக்கு இத்தனை ‘ஏன்..?’”

கேட்கும்போதே ரயிலில் நந்தினி கேட்ட ‘என்ன, என்ன..?’ என்ற கேள்வி ரவிச்சந்திரனின் நினைவுக்கு வந்தது..

‘நீயென்ன கே.பிசுந்தராம்பாளான்னு கேட்டா கிழவின்னு சொல்கிறீங்களான்னு சண்டைக்கு வந்து பதிலுக்கு எனக்கு நோஸ்கட் கொடுக்கிறதா நினைத்துக்கிட்டு நீங்க என்ன இந்தியன் தாத்தாவான்னு கேட்டாளே.. அதிலே இவ புத்திசாலித்தனமா என்னை ஹர்ட் பண்ணிட்டதப் போல படு கெத்தா மூஞ்சியை வேற வைத்துக்கிட்டா..’

ரவிச்சந்திரனுக்கு சிரிப்பு வந்தது.. ரம்ய மாலினி கண்கள் மின்ன தமையனின் பக்கமாக குனிந்து..

“என்னண்ணா..?” என்று ஆவலுடன் கேட்டாள்..

ரவிச்சந்திரன் தாழ்ந்த குரலில் ரயிலில் நந்தினி கேட்ட கேள்வியைப் பற்றி விவரித்ததில் பொங்கிச் சிரித்தாள்..

‘அண்ணனும் தங்கையும் என்னைப் பத்தித்தான் எதையோ பேசிச் சிரிக்கிறாங்க..’ நந்தினி கண்டு பிடித்து விட்டாள்..

‘என்னவா இருக்கும்..?’ அது என்னவென்றுதான் அவளுக்குத் தெரியவில்லை..

“பாருங்க அத்தை.. அவங்க ரெண்டு பேரும் என்னைக் கேலி பண்ணிச் சிரிக்கிறாங்க..”

சிறுபிள்ளை போல் அவள் கைகாட்டி புகார் சொன்ன விதத்தில் கரைந்து போய் விட்டாள் வீணா..

“டேய்ய்.. நீயும் உன் தங்கையும் அறியாப் பெண்ணைக் கேலி பண்றீங்களா..?” வீணா அதட்டினாள்.

“யாரு அறியாப் பொண்ணு..? இவளா..?” இமை கொட்டினான் ரவிச்சந்திரன்..

“ம்மா.. இது அநியாயம்.. நானும் அண்ணனும் மீன் முட்டி அருவியைப் பத்திப் பேசிக்கிட்டில்ல இருந்தோம்..” முழுச் சோற்றில் பூசணிக்காயைப் புதைத்து மறைத்தாள் ரம்ய மாலினி..

“நம்பிட்டேன்..” நாக்கைத் துருத்தி அழகு காட்டிய நந்தினி உடனடியாக அதை மறந்தவளாக..

“மீன்முட்டி அருவியா..?” என்று விழியகல விசாரித்தாள்.. “மீன் முட்டி அருவிதான்.. இரு ஒருநாள் அங்கே கூப்பிட்டுக்கிட்டுப் போய் மலையுச்சியில இருந்து உருட்டி விடறேன்..” மிரட்டினான் ரவிச்சந்திரன்..

“உருட்டுவ.. உருட்டுவ.. கேட்கிறதுக்கு ஆளில்லைன்னு நினைச்சியா..? நானிருக்கேண்டா..” வீணா சண்டைக்கு வந்தாள்..

“நானும் இருக்கேன்..” என்று அறிவித்த ரம்ய மாலினி..

“பாவம்.. உன்னை நம்பி வேலை பார்க்க வந்திருக்கிறாங்க.. இவங்களைப் போய் உருட்டி விடுவியா..? ஏன், உன் அத்தை மகள் அஜந்தா இருக்கிறாள்ல.. அவளை உருட்டி விடு..” என்று பரிந்துரைத்தாள்..

“இது நல்ல ஐடியாவா இருக்கே..”

கை தட்டிய நந்தினி, வீணா என்ன சொல்வாளோ என்று பயந்து போனவளாக நாக்கைக் கடித்துக் கொண்டு வீணாவைப் பார்த்து..

“ஸாரி ஆண்ட்டி..” என்று கன்னத்தில் போட்டுக் கொண்டாள்..

“இதெல்லாம் தேவையே இல்லைங்க.. அஜந்தாவைப் பார்சல் பண்ணி அனுப்பறதைப் பத்தி எங்கம்மா அப்ஜெக்ஷனே பண்ண மாட்டாங்க..” ரம்ய மாலினி சிரித்தாள்..

“ஆல்ரெடி அவளை மலையுச்சியில இருந்து உருட்டிவிட டிரை பண்ணிட்டேன்.. எஸ்கேப் ஆகிட்டா..” சிரிக்காமல் சொன்னான் ரவிச்சந்திரன்..

“பார்த்துண்ணா.. அவ உன்னை உருட்டி விட்டிறப் போ றா..” அவனை விடச் சிரிக்காமல் படு சீரியஸாக முகத்தை வைத்துக் கொண்டு சொன்னள் ரம்ய மாலினி..

அவர்களின் பேச்சில் கலந்து கொள்வதா வேண்டாமா என்ற குழப்பத்திலிருந்த நந்தினியைப் பார்த்துப் பிரியத்துடன் சிரித்த வீணா..

“நீ குழந்தையேதாம்மா..” என்றாள்..

அரட்டையடித்தது போதும் என்ற வீணாவின் அறிவுறுத்தலின் படி அவர்கள் எழுந்து அவரவரின் அறைக்கு தூங்கப் போனார்கள்.. அஜந்தா வழியில் எதிர்பட்டு விடுவாளோ என்ற பயத்துடன் பூனை போல தனக்குக் கொடுக்கப் பட்டிருந்த அறைக்குப் போய் கதவைத் திறந்த நந்தினியின் பின்னாலிருந்து..

“பே..” என்று குரல் கெடுத்தான் ரவிச்சந்திரன்..

“வீல்..” நந்தினியின் அலறலை வாய்பொத்தித் தடுத்து அவளை அறைக்குள் இழுத்துக் கொண்டு கதவைப் பூட்டியவன் வாயில் விரலை வைத்து கண்களை உருட்டி.. “உஷ்..” என்று மிரட்டினான்..

கைகளால் வாய் பொத்தி மிரட்சியுடன் பின்னால் நகர்ந்த நந்தினி..

“எதுக்கு என் ரூமுக்கு வந்திருக்கீங்க...?” என்று நடுங்கினாள்..

“ஊம்.. நீ பார்க்க ரதியைப் போல இருக்கியா..? ரேப் பண்ணலாம்ன்னு ஆசையாகிருச்சு.. அதுக்குத்தான் வந்திருக்கேன்.. ஆரம்பிக்கவா..?” ரவிச்சந்திரன் புருவங்களை உயர்த்தினான்..

‘போடா.. டேய்..’ முறைத்தாள் நந்தினி..

‘இதையே சொல்லிச் சொல்லி மிரட்டறான்... மனசுக்குள்ள இப்படியொரு பிளானை வைச்சிருக்கானோ..’ சந்தேகத்துடன் அவள் பார்த்ததில்..

“கற்பனைக் குதிரைக்கு லகான் போடறியா..?” என்று அதட்டினான் ரவிச்சந்திரன்..

“நீங்க தூங்கப் போகலையா..?” நந்தினியின் பார்வை பூட்டப்பட்ட கதவின் மீதே இருந்தது..

“போறேன்.. போறேன்..” கதவின் மீது சாய்ந்து நின்றிருந்த ரவிச்சந்திரன் இரவு உடையில் படு கவர்ச்சியாக இருந்தான்.. அவனது குறும்பு நிரம்பிய கண்களைப் பார்க்க முடியாமல் நடுங்கிப் போனாள் நந்தினி.. அவளை அவன்

பலாத்காரம் செய்ய வேண்டிய அவசியமில்லாமல் அவனைக் கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்து விடுவாளோ என்று அவளுக்குப் பயமாக இருந்தது..

‘இவன் இங்கிருந்துப் போனாத் தேவலை..’

அவன் நகர்கிற எண்ணமே இல்லாமல் அவளைப் பார்த்து..

“எங்கம்மாவுக்கு என்ன சொக்குப்பொடி போட்ட..? உன்னை மடியில தூக்கி வைத்துக்கிட்டு கொஞ்சறாங்க.. ஊம்..?” என்று புருவங்களை உயர்த்தினான்..

‘நீதாண்டா எனக்குச் சொக்குப்பொடி போட்டுக்கிட்டு இருக்க..’ நந்தினி பிடிவாதமாக அவன் முகத்தைப் பார்ப்பதைத் தவிர்த்தாள்..

“என்கிட்ட வேலை பார்க்காம எஸ்கேப் ஆகிறதுக்கு சான்ஸ் கிடைச்சுருச்சுன்னு சொல்கிறயே.. நானென்ன பூச்சாண்டியா..?”

கிசுகிசுப்பான குரலில் வினவியபடி அவன் பக்கத்தில் வந்தான்.. நந்தினி பதறிப் பின்வாங்கினாள்.. ரவிச்சந்திரனின் விழிகளில் சிரிப்பு வந்தது..

“பெரிய பிஸ்தா மாதிரிப் பேசற.. இவ்வளவு பயந்தாங்குளியாய் இருக்கியே..” என்று கண்களைச் சிமிட்டினான்..

நந்தினிக்குள் ஓர்விதமான மாற்றம் நிகழ்ந்து கொண்டிருந்தது.. அவனிடம் பேச வேண்டும் போல இருந்ததில்..

“பூச்சாண்டியைப் பார்த்தா பயம் வரத்தானே செய்யும்..?” என்று சொல்லி விட்டாள்..

“அப்ப நான் பூச்சாண்டின்னு கன்பர்மே பண்ணிட்ட..?”

அமர்த்தலாக வினவியபடி அவளைத் தலைமுதல் கால்வரை அவன் பார்த்த பார்வையில் அரண்டு போன நந்தினி நழுவிக் கொண்டிருந்த சால்வையை இழுத்துப் பிடித்துப் போர்த்திக் கொண்டாள்.. அதில் அவன் விழிகளில் விஷமம் வந்தது..

“போர்த்திக்கிட்டா..? விட்டு விடுவேன்னு நினைத்தியா..?”

அவன் இன்னும் கிட்டே வர நகர்ந்து நகர்ந்து சுவரின் மீது முட்டிக் கொண்ட நந்தினி மேலும் நகர முடியாமல் அட்டை

போல சுவரில் ஒட்டிக் கொண்டாள்.. கிட்டத்தில் வந்தவன் அவளது முகத்தருகே குனிந்தான்.. அவ்வளவு நெருக்கத்தில் அவன் முகம் பார்த்திராதவளின் இமைகள் பட்டாம்பூச்சிகளைப் போலப் படபடத்தன.. கூரிய அவனது பார்வையில் ததும்பிய வேட்கையில் அவள் மருண்டாள்.. அவனைத் தள்ளி விடும் தெம்பு அவளுக்கு இல்லை.. அவனது முகம் நெருங்கி அவளது கூந்தலில் பதிந்து விலகியது..

“என்ன ஷாம்பூ யூஸ் பண்ற..? ஜம்முன்னு மயக்குது..” கண்சிமிட்டியவன்..

“கதவை மூடிக்க..” என்று சொல்லிவிட்டு சட்டென்று வெளியேறி விட்டான்..

அத்தியாயம் 75

நந்தினியின் நடுக்கம் குறைய வெகு நேரமானது.. அவன் சென்று விட்டதில் நிம்மதி ஏற்படாமல் ஏமாற்றம் ஏற்பட்டதில் நடுக்கம் அதிகமானது.. ஒருவழியாக தன்னைத் திடப் படுத்திக் கொண்டு கதவை மூடித் தாழிட்டாள்.. பதுமை போல நடந்து படுக்கையில் வீழ்ந்தாள்.. கண்களை மூடினால் வெகு அருகே ரவிச்சந்திரனின் முகம் தெரிந்தது.. அதில் தெரிந்த வேட்கை நந்தினிக்குள் இடம் பெயர்ந்தது.. தூக்கம் வராமல் புரண்டு படுத்தாள்.. பெருமூச்சு வந்தது.. எழுந்து ஜன்னலுக்குப் பக்கத்தில் சென்றாள்.. திரை விலக்கிப் பார்த்தாள்.. கண்ணாடிக் கதவுகளுக்கு அப்பால் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை விளக்குகள் ஒளிர்ந்தன.. தோட்டம்.. அதைத் தள்ளி வரிசையாக அரண்மனையில் வேலை பார்ப்பவர்கள் குடியிருப்பதற்காகக் கட்டிக் கொடுக்கப் பட்டிருக்கும் வீடுகள் என்று ஏதோ ஒரு ஊருக்குள் இருப்பதைப் போன்ற உணர்வு வந்தது.. எங்கோ தொலைவில் புள்ளியாகத் தெரிந்த காம்பவுண்டு சுவர், கோட்டைச் சுவர் போல உயர்ந்து மற்றவர்களின் பார்வையிலிருந்து அரண்மனையை மறைத்துக் கொண்டிருந்தது.. அந்த அரண்மனையின்

ஏகபோக உரிமையளான் ரவிச்சந்திரன் என்பதில் நந்தினிக்குள் ஏக்கம் சூழ்ந்தது..

‘அவன் எவ்வளவு பெரிய அப்பாடக்கராக வேண்டுமானாலும் இருக்கட்டும்.. ஐ டோன்ட் கேர்.. எனக்கென்ன வந்தது..? நான் பெல்ட் மன்னனிடமிருந்து தப்பித்து பிழைத்திருக்க இடம் தேடி வந்திருக்கிறேன்.. வயநாடு நான் ஒளிந்து கொள்ள வந்த இடம்.. உல்லாசமாக வாழ வந்த இடமில்லை..’

நெட்டுரு போல மனதுக்குள் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டாள்.. எத்தனை முறை சொன்னாலும் மனது அலை பாயும் கடலாக அடங்க மறுத்துத் திமிறியது.. மனதுக்கு கடிவாளமிட்டுக் கட்டுப் படுத்த முடியாமல் சோர்வுடன் திரையை இழுத்து ஜன்னலை மறைத்து விட்டுக் கட்டிலுக்கு வந்தாள்.. அறையின் ஹீட்டர் குளிரை விரட் டிக் கதகதப்பைக் கொடுத்துக் கொண்டிருந்தது.. சால்வையை விலக்காமல் கம்பளிக்குள் புகுந்தவள் ரவிச்சந்திரனை நினைத்தபடி தூங்கி விட்டாள்..

“கிர்ர்ர்.. ர்ர்ர்..”

காதுக்குள் ஒலித்த காலிங் பெல்லின் சத்தத்தில் கண் விழித்தவள்..

“ம்மா.. யாரோ காலிங்பெல்லை அழுத்தறாங்க.. கதவைத் திறந்து யாருன்னு பாருங்க.. எனக்குத் தூக்கம் வருது..” என்று கண்களைத் திறக்காமல் சொல்லி விட்டு விட்ட தூக்கத்தைத் தொடர்ந்தாள்..

“கிர்ர்.. ர்ர்ர்ர்..” காலிங்பெல் விடுவேனா என்று அலறியது.. அப்போதும் கம்பளியை விலக்காமல் அதற்குள் ஒடுங்கியபடி..

“ம்ம்ம்.. மா..” என்று குரல் கொடுத்தாள் நந்தினி..

இப்போது செல்ஃபோன் பாட்டுப் பாடி அவளை எழுப்பி விட்டது..

“இதுவேற..”

கண்களைத் திறக்காமல் இமைகளை இறுக்கிப் பிடித்து அழுத்தமாக மூடியபடி செல்ஃபோனைத் துழாவினாள் நந்தினி.. இமைகளைத் திறந்தால் தூக்கம் ஓடிப் போய் விடுமாம்.. தூக்கத்தை நிறுத்திக் கொள்ள இப்படிப் பட்ட யுக்தியைத்தான் எப்போதும் கையாளுவாள்..

துழாவிய கைகளில் செல்ஃபோன் அகப்பட்டு விட்டது.. குத்து மதிப்பாக அதை அழுத்திக் காதுகளுக்குக் கொடுத்தவள் தூங்கியபடியே..

“ஹலோவ்..” என்று கொட்டாவி விட்டாள்..

“ஏய்ய்.. தூங்கு மூஞ்சி..!”

செல்ஃபோனில் ஒலித்த அதட்டலில் அவள் உடலில் மின்சாரம் பாய தூக்கம் ஓடியே போனது.. பரபரப்பாக இமைகளைத் திறந்து படு சுறுசுறுப்பாக எழுந்து உட்கார்ந்து..

“யெஸ்.. பாஸ்..” என்றாள்..

“நீ தூங்குமூஞ்சின்னு தெரியும்தான்.. அதுக்காக இப்படியா தூக்கம் போடுவ..? பெட்காஃபியோட ஓமனா வந்து காலிங் பெல்லை அடிச்சாச் கதவைத் திறக்காம கும்பகர்ணி போல தூக்கம் போடறியா..? பாவம்.. காலிங்பெல்லைை அழுத்தியழுத்தி ஓமனாக் குட்டியோட கை ரேகையே அழிஞ்சுருச்சாம்..”

‘இவனுக்கென்ன ஓமனாக குட்டிமேல இம்புட்டு அக்கறை..?’ கோபத்துடன் பல்லைக் கடித்த நந்தினி..

“ஓமனாக் குட்டிக்கு ஒரு கஷ்டம்ன்னா என் பாஸோட மனசு என்னமா வலிக்குது... வர்ஹ்ரே வாஹ்...! இப்படியாப்பட்ட முதலாளி கிடைக்க அவ கொடுத்து வைச்சிருக்கனும்..” என்று வார்த்தைகளைக் கடித்துத் துப்பினாள்..

“உன் பாஸ்..?” ரவிச்சந்திரனின் சிரிப்பில் மகிழ்விருந்தது..

‘இதுக்கு என்ன அர்த்தம்..?’ நந்தினி குழம்பிப் போனாள்..

“என்னை மாதிரி முதலாளி கிடைக்க ஓமனா கொடுத்து வைத்திருக்கிறாளோ இல்லையோ.. உன்னைப் போல தூங்குமூஞ்சி, சோம்பேறி, வாயாடி செக்கரட்டரி கிடைக்க நான் கொடுத்து வைத்திருக்கேன்..”

ரவிச்சந்திரனின் வார்த்தைகளில் அப்பட்டமான நகைப்பு இருந்தது..

“செக்கரட்டரியா..?” நந்தினியின் சீறலில் அவன் கடகடவென நகைத்தாள்..

“ஐ ஆம் யுவர் பெர்சனல் மேனேஜர் சார்.. இன்ஜினியரிங் படிச்சிருக்கேனாக்கும்..”

“அதில இன்னும் ரிசல்ட் வரலையாக்கும்..”

“ஸோ வாட்..? ஸோ வாட்..?”

“அடக்கி வாசிங்கறேன்.. எதுக்கெடுத்தாலும் நான் மேனேஜர்ன்னு எகிறிக் குதிச்சியின்னா எங்கப்பா இந்தப் பொண்ணு என்ன படிச்சிருக்குன்னு கேட்டு வைப்பார்.. இன்னும், ரிசல்ட் வரலைங்கிற உண்மையை நான் விளம்ப வேண்டியிருக்கும்.. அதுக்குள்ளே வேலை பார்க்கனும்ன்னு ஏன் வந்திருக்கு..? என்ன அவசியம்ன்னு அவர் தூண்டித் துருவி புலன் விசாரணை பண்ண ஆரம்பிச்சா உனக்குத்தான் டேன்ஜர்.. சொல்லிட்டேன்..”

‘இதில இவ்வளவு இருக்கா..’ இமைகளைக் கொட்டி விழித்த நந்தினி..

“ஓகே பாஸ்... நான் உங்க பெர்சனல் செக்கரட்டரின்னே வெளியே சொல்லிக்கங்க... உள்ளுக்குள்ள நான் பெர்சனல் மேனேஜர்தான்.. டீல் ஓகேயா..?” என்று சமாதானத்துக்கு வந்தாள்..

“உன்னிடம் டீல் போட்டுட்டாலும்..? ம்ஹூம்.. எப்படியும் நீ ஒரு வேலையையும் உருப்படியாப் பார்க்கப் போறதில்ல.. இதில என்ன போஸ்ட்டுங்கிறதில மட்டும் கவனமா இருக்க..

போ.. போய் கதவைத் திறந்து காஃபியை வாங்கிக் குடி.. பேசிப் பேசி தொண்டைத் தண்ணீர் வற்றிப் போயிருக்கும்..''

''ஆஹா.. என்ன ஒரு அக்கறை..! நம்பிட்டேன்..''

''இதை நம்பறதில உன்கென்ன பிரச்னை..?''

''எண்ட பாஸ் எண்டத் தொண்டத் தண்ணி வத்திருச்சுன்னு கவலைப் படறாராம்.. ஞான் நம்பனுமாம்.. அல்ல பாஸ்.. ஓமானக்குட்டியோட கால் வலிக்குமல்லோ.. அது குறிச்சு பாஸ் விசனப்படறார்..''

''ஊஹூம்..?'' மறுமுனையில் ஒலித்த குரலில் அவள் மயங்கிப் போனாள்.. புருவங்களை உயர்த்தி இறக்கும் அவனது மேனரிசம் அவளது மனக் கண்ணில் தோன்றியது.

''இதையெல்லாம் வாய் வலிக்கப் பேசு.. காலிங்பெல் சத்தம் கேட்டா மட்டும் கதவைத் திறந்திராதே.. அப்படியென்ன உறக்கம்..?''

''அது.. வந்து.. வந்து..''

''அதான் வயநாட்டுக்கு வந்துட்டேல்ல.. மென்னு விழுங்காம சொல்ல வந்ததைச் சொல்லு..''

''இது வயநாடுங்கிறதே மறந்து போச்சு பாஸ். .''

“பின்னே..? கோழிக்கோடுன்னு நினைச்சியா..?”

“ஊஹூம்.. தஞ்சாவூர்ன்னு நினைத்துக்கிட்டு, அம்மா, வாசில யாரோ காலிங் பெல்லை அழுத்தறாங்க.. என்னன்னு கேளுங்கன்னு சொல்லிக்கிட்டு இருந்தேன்..”

மறுமுனையில் ஓர்நொடி மௌனம் நிலவியது..

“உன் அம்மா உன் ரூமில்தான் இருப்பாங்களா..?” மென்மையாக வினவினான்..

“ஊஹூம்.. அவங்க ரூமில்தான் இருப்பாங்க.. பட்.. காலிங்பெல் வாசலில் மட்டும்தான் இருக்கும்.. ரூம்களுக்கு இருக்காது..”

“ஓ.. ஐ.. ஸீ.. நீ அம்மா செல்லமா..?”

“அப்பா செல்லமும்தான்.. என்ன ஒண்ணு.. ரெண்டு பேருமே செல்லத்தை வெளியே காண்பிக்க மாட்டாங்க.. கண்டிப்பா இருப்பாங்க..”

“அதுக்காக ஓடி வந்திடறதா..?”

‘இவன் இதை விடவே மாட்டான்..’ நந்தினிக்குச் சோர்வாக இருந்தது..

“சொல்லிக் காட்ட வேணாம்..” தீனமான குரலில் முணுமுணுத்தாள்..

“இட்ஸ் ஓகே..” உடனடியாக அவன் ஒப்புக் கொண்டதில் அவளுக்குள் ஆச்சரியம் வந்தது.. இரும்பு கூட இளகுமா..?

“காஃபியைக் குடிச்சுட்டுத் தோட்டத்துக்கு வா..” அவன் கட்டளையிட்டான்..

‘ஹை...’

அவன் தோட்டத்துக்குக் கூப்பிட்டதில் அவள் மனது உற்சாகச் சிறகுகளை விரித்துக் குதியாட்டம் போட்டது.. வெளியே கெத்தாக இருப்பதைப் போலக் காட்டிக் கொள்ள முடியன்றவளாய்..

“எதுக்கு..?” என்ற கறார் குரலில் பாசாங்கு காட்டினாள்..

“ஊம்..? தோட்டத்தை சுத்தம் செய்யனும்.. வருகிறாயா..?” அவன் அவளது மூக்கை உடைத்தான்..

“தோட்டத்தை சுத்தம் செய்யனுமா..?” அவள் பயந்து போனாள்..

‘இவன் என்ன செக்கரட்டரி வேலையில இருந்தும் கீழே இறங்கித் தோட்டத்தைக் கூட்டிப் பெருக்கச் சொல்கிறான்..’

அவள் அவளுடைய அறையையே சுத்தம் செய்ய மாட்டாள்.. கந்தலகோலமாக இருக்கும் அறையை திட்டு, திட்டு எனத் திட்டியபடி வெண்ணிலாதான் சரிசெய்வாள்.. ஹாஸ்டலில் உத்ரா..

இப்படி உடம்பு வணங்கி ஒரு துரும்பைக்கூட இந்தப் பக்கமிருந்து அந்தப் பக்கமாக எடுத்துப் போடாத நந்தினி தோட்டத்தைச் சுத்தம் செய்ய வேண்டுமா..?

'சொல்லிக்காம சென்னைக்கு ஓடிறலாமா..?'

வயநாட்டு மலையை விட்டு எப்படிக் கீழே இறங்குவது என்ற யோசனையில் அவள் ஆழ்ந்த போது..

"ஏய்ய் மக்கு..! என்ன..? சென்னைக்கு ரிட்டர்ன் ஆகிறலாம்ன்னு பிளான் போடறியா..?" என்று சிரித்தான் ரவிச்சந்திரன்..

'ஹப்பாடி..! சிரிச்சுட்டான்.. தோட்டத்தைப் பெருக்கச் சொல்ல மாட்டான்..' நந்தினியின் பயம் அகன்றது..

"நைட் டயத்தில தோட்டத்தைச் சுத்தக் கூடாதுதான் காலையிலே சுத்தலாம்.. அதுக்கத்தான் கூப்பிட்டேன்..

தோட்டத்தைச் சுத்திப் பார்க்கனும்னு நேத்து நைட் நீ ஆசைப்பட்டியே..”

“ஓ.. தேங்க்ஸ் பாஸ்..” நந்தினி குதித்தாள்..

“மெல்லக் குதி.. கட்டிலில் இருந்து கீழே விழுந்து கையைக் காலை உடைச்சுக்காதே..” அவன் அதட்டியதும்.

“நான் இங்கே குதிக்கிறது உங்களுக்கு எப்படித் தெரிஞ்சது..?” என்று ‘ஙே..’ என அவள் விழித்தாள்..

“முழிக்காதே.. எந்த நேரத்தில நீ என்ன கோணங்கி சேஷ்டையைச் செய்வேன்னு எனக்குத் தெரியும்..” அமர்த்தலாக அவன் சொன்னதும் அசடு வழிந்தாள்..

“சரி.. சரி.. கதவைத் திறந்து காஃபியை வாங்கிக்க..”

“ஆமாமாம்.. இல்லேன்னா ஓமனாக் குட்டியிண்ட கால் வலிக்கும்..”

“உனக்கெல்லாம் காஃபியைக் கொடுத்து விட்டதே தப்பு..”

‘அடப்பாவி..! பெட்காஃபியை கேன்சல் பண்ணிருவானோ..’ ஜகா வாங்கிய நந்தினி..

“ஒரே நிமிஷம் பாஸ்.. பாய்ஞ்சு போய் காஃபியைக் கைப்பத்திக்கிறேனா இல்லையான்னு பாருங்க..” என்று சூளுரைத்தாள்..

“அது..” என்ற ரவிச்சந்திரன்..

“நீ.. இருக்கியே.. ஹா.. ஹா..” என்று சிரித்தபடி ஃபோன் இணைப்பைத் துண்டித்தான்..

‘அப்படியே ஜோக்கர் மாதிரியே ட்ரீட் பண்றான்..’ மனத்தாங்கலுடன் ஃபோனைக் கடாசிய நந்தினிக்கு முதல்நாள் இரவின் நினைவு வந்தது..

‘காமெடி பீஸிடம் அத்தனை ரொமான்ஸ் காட்ட முடியுமா..?’ கன்னச் சிரிப்புடன் கதவைத் திறக்கப் போனாள்..

“சேச்சி..”

என்னவோ தெய்வ தரிசனம் கிடைத்து விட்டதைப் போல மகிழ்ந்து போனாள் ஓமனா.. கை வலிக்கக் கதவைத் தட்டியவளுக்கு அல்லவா அந்த அவதியைப் பற்றித் தெரியும்..

“என்னது..? சீச்சீயா..?” முகம் சுளித்தாள் நந்தினி..

இந்த வயநாடு அரண்மனையே கொந்தளிப்பானது போல.. கதவைத் திறக்கச் சற்று (?) தாமதமாகி விட்டால் வேலைக்காரிகூட 'சீச்சீ' என்கிறாளோ..

"அதல்ல சேச்சி.. ஞான் அம்மேன்னு விளிக்கறதுக்கு நீங்க வேண்டாண்ணு பறஞ்சது.."

"அதுக்கு..?"

"சேச்சின்னு பறஞ்சேனல்ல.. சேச்சின்னா நிங்க தமிழில அக்கான்னு அர்த்தமாயி.. கேட்டோ.."

'அப்பாடி.. சீச்சின்னு சொல்லலை.. சேச்சின்னுதான் சொல்லியிருக்கா..'

ஆனாலும் மதர்ப்பாக அரேபிய குதிரையைப் போல இருக்கும் ஓமனாக் குட்டிக்கு தான் அக்கா ஆவதை நந்தினி விரும்பவில்லை..

"சேச்சின்னு விளிக்க வேணாம் ஓமனா.." காஃபிக் கப்பைக் கைப்பற்றி உறிஞ்ச ஆரம்பித்தாள்..

'நல்லவேளை.. காஃபி சூடாத்தான் இருக்கு.. ஆறலை..'

"வேற எங்ஙன அம்மையை விளிப்பது..?"

ஓமனாவுக்கு அவள் கவலை.. தமிழகத்திலிருந்து வருகை தந்திருக்கும் நந்தினியை அவளுக்குப் பிடித்திருந்தது.. அவளுடன் கலந்துரையாட விரும்பினாள்.. உரையாடலுக்கு அழைப்பு அதிமுக்கியமானதல்லவா..? நந்தினியை பெயர் சொல்லியும் அழைக்க முடியாது.. 'அம்மே' என்ற அழைப்பை ஆட்டுக்குட்டி தாய் ஆட்டை அழைக்கும் 'மே..' என்ற அகவலோசையுடன் உள்ளது என்று நந்தினி நிராகரித்து விட்டாள்..

'சேச்சி..' என்ற விளிப்பை 'சீச்சி..' என்று புறக்கணித்து விட்டாள்.. இவையிரண்டையும் தவிர்த்த 'அணியத்தி..' என்ற விளிப்பை விளிக்கலாமா..?

அதுதான் சரியென்ற முடிவுக்கு வந்தவளாக.. முகம் ஒளிர.. "அணியத்தி..!" என்றாள் ஓமனா.

"அடியாத்தியா..?" நந்தினி விளக்கொண்ணையை விழுங்கி விட்டதைப் போல முகத்தைக் கோணினாள்..

"எந்தா இது அம்மே..? ஞான் எங்ஙன விளிச்சாலும் நிங்கட வதனம் கோணிப்போயி.." ஓமனா அங்கலாய்த்தாள்.

“நீ ஒழுங்கா விளித்தா என் வதனம் எதுக்காக கோணிப் பையா மாறிப் போயி ஓமனா..?” பதிலுக்கு நந்தினியும் அங்கலாய்த்தாள்..

“அணியத்திங்கிற விளிப்புக்கு எந்தாக் குறையி அம்மே..? அணியத்திங்கிற விளிப்புக்கு தங்கைன்னு அர்த்தமாயி.. ஓ...”

“தங்கையா..?” தலையிலடித்துக் கொள்ளலாம் போல இருந்தது நந்தினிக்கு..

தங்கை என்ற அழைப்பில் ஒரு குறைவும் இல்லைதான்.. ஆனாலும் மலையாளத் தங்கையான ‘அணியத் தி’ அவளுக்கு ‘அடியாத்தி..’ போலவே இருந்து வைத்ததில்..

“அணியத்தின்னு என்ன விளிக்க வேணாம் ஓமனா..” என்ற வேண்டுகோளை வைத்தாள் நந்தினி..

“நிங்கள ஞான் எங்ஙன விளிக்கும்..?”

அதற்கொரு முடிவைச் சொல்லாமல் நந்தினியால் தோட்டத்தைப் பார்க்கப் போக முடியாது என்று ஆகி விட்டதில்.. அவள்.. அந்தப் பஞ்சாயத்திற்கு ஒரு தீர்ப்பைச் சொல்ல வேண்டிய நாட்டாமையாக ஆகிப்போனாள்.

‘எப்டிக் கூப்பிடச் சொல்றது..?’

பலத்த யோசனையுடன் ஒற்றை விரலால் நெற்றியைத் தட்டிக் கொண்டிருந்த நந்தினியை பயபக்தியுடன் பார்த்தபடி பரவசப்பட்டுப் போன ஓமனாக் குட்டியை யதேச்சையாக நிமிர்ந்து பார்த்த நந்தினி ஓமனாவைவிட பரவசப்பட்டுப் போனாள்..

அத்தியாயம் 76

முதல் நாள் இரவுதான் அவளது பலத்த ஆலோசனையை "இப்படி டீப்பா திங் பண்றதைப் போலப் போஸ் கொடுக்காதே.. சிரிப்புச் சிரிப்பா வருது.." என்று வாரியிருந்தான் ரவிச்சந்திரன்..

அப்போது மட்டுமா அப்படிச் சொன்னான்..? அவள் யோசிக்க ஆரம்பித்து விட்டாலே அப்படித்தான் செல்லி வைக்கிறான்.. அப்படியிருக்கையில் நந்தினியின் யோசிப்பையும் பார்த்து ஒருத்தி பரவசப்பட்டு நின்றால் நந்தினிக்கு ரோமாஞ்சனம் (புல்லரிப்பு) ஏற்படாதா..?

"ஓமனா.." பரவசத்துடன் அழைத்தாள்..

"அம்மே.." ஓமனாவின் குரல் தழதழப்பாக வெளிவந்தது..

'ஏன் இப்படி எமோஷனலைப் பிழியறா..?' நந்தினிக்குப் புரியவில்லை..

இப்படியாகப்பட்ட எமோஷனல்களுக்கும் நந்தினிக்கும் ரொம்பத்தூரம்.. சுட்டுப் போட்டாலும் எமோஷனல் வந்து தொலைக்காது.. எவருக்கு வந்த விருந்தோ என்றிருப்பாள்..

அப்பேற்பட்ட உணர்ச்சிச்க் குவியலில் ஓமனா 'அம்மே..' என்று பக்திப் பரவசமாக கண்ணீர் மல்குகிறாளே..

'இவ என்னை மலையாள பகவதின்னு நினைச்சிட்டாளா..?' நந்தினிக்கு அம்மன் ஆவதில் விருப்பமில்லை.. அவளே பெல்ட் அடிக்குப் பயந்து வயநாட்டுக்கு ஓடி வந்திருக்கிறாள்.. இதில் அம்மன் ஆகி ஓமனாவிற்கு அருள் பாலிப்பதா..?

'இவ இங்கேயிருந்தும் என்னை ஓட்டி விடுவா போல இருக்கே..'

இதுவேலைக்கு ஆகாது என்ற முடிவுக்கு வந்தவளாக.

"ஓவர் எமோஷனல் உடம்புக்கு ஆகாது ஓமனா.. கண்ட்ரோல் யுவர் ஷெல்ப்.. நீ நெருக்குருகிப் போகிற அளவுக்கு நான் பெண் சாமியாரிணியெல்லாம் கிடையாது.. தூங்குமூஞ்சி நந்தினி..! ஓகே..? ரிலாக்ஸ்.. ரிலாக்ஸ்.." என்று ஓமனாவை மலையிறக்கினாள்..

"எனிக்கு நந்தினி மேடத்தண்ட வளர இஷ்டமானு.." ஓமனா உருகிப் போனாள்..

“இஷ்டப்பட்டுக்க.. யாரு வேண்டாம்ன்னு சொன்னது.. எனக்கும் உன்னைப் பிடிக்கும் ஓமனா ..” நந்தினி சமாதானம் செய்வித்தாள்..

“அம்மே..! பறயறது நிசமானோ..?” ஓமனா உணர்ச்சிவசப்பட.. “வெயிட்.. வெயிட்.. பிடிக்கும்ன்னுதானே சொன்னேன்.. அதுக்கு எதுக்கு அழுகற..?” என்று பயந்து பின்வாங்கினாள் நந்தினி..

“அம்மயிணிட் ஸ்நேகிதம் எவருக்கு கிட்டும்..?”

“எவருக்கும் கிட்டும்.. உனக்கு என்னைப் பத்தித் தெரியலைன்னு நினைக்கிறேன்.. நான் என்ன பெரிய அப்பாடக்கரா..?”

“அப்பாடக்கானா எந்தா அம்மே..?”

“இது வேறயா..? இதுக்கு என்னத்தை டிரான்ஸ்லேட் பண்றது..? ம்ம்ம்.. வல்லிய ஆளில்லன்னு அர்த்தம்.. போதுமா..?”

என்னவோ அவள் அள்ளிக் கொடுத்து விட்டதைப் போல..

“போதும் அம்மே போதும்..” என்று தலையாட்டினாள் ஓமனா.. அவளது அளவு கடந்த பிரேமத்தில் பிரமித்துப் போன நந்தினி..

‘ஆஹா..! ஈ வயநாட்டிலும் ஈ நந்தினிக் குட்டிக்கு, ஓமனாக் குட்டியெண்ட அடிமை சிக்கியிருக்கிறாளே..’ என்று ஆனந்த மயமானாள்..

“எந்தா நந்தினியம்மே இத்தரயும் ஆலோச்சிக்கனுக..?”

“எனக்கு வாய்த்த அடிமை சிறந்தவள்ன்னு யோசிக்கிறேன் ஓமனா..”

“எந்தா..?”

நந்தினி என்ன சொல்கிறாள் என்று புரியாமல் திருதிருத்தாள் ஓமனா..

‘வசதியாப் போச்சு..’ என்று குதூகலித்த நந்தினி.

“புரியலைன்னா விட்டிரு ஓமனா..” என்றாள்..

“அம்மே..?”

“இந்த ‘அம்மே’யை மட்டும் கட் பண்ணு.. மேடம்ன்னு கூப்பிடேன்..”

“நந்தினி மேடத்துக்கு ஆ பெயரில ஞான் விளிக்கிறதுதான் இஷ்டம்ன்னா ஞான் நந்தினி மேடம்ண்மே விளிக்கும்..”

“சமத்துக் குட்டி..”

நந்தினி மடியில் தூக்கி வைத்துக் கொஞ்சி விட்டதைப் போல மகிழ்ந்து போனாள் ஓமனாக் குட்டி.. தோட்டத்தில் ரவிச்சந்திரன் காத்திருப்பான் என்ற உணர்வில் பரபரவென்றிருந்தது நந்தினிக்கு.. காஃபியை காலி செய்து காலி கப்பை ஓமனாவின் கைகளில் திணித்து விட்டு தோட்டத்திற்குக் கிளம்ப ஆயத்தமானாள்.. ஓமனா நகரவில்லை.. பருகு, பருகு என நந்தினியின் முகம் பார்த்தபடி அங்கேயே நின்றாள்..

‘என்னடா இது.. இப்படிப் பார்க்கிறா..?’ நந்தினிக்கு அதிசயமாகி விட்டது..

ஓமனாவின் முன்னால் வலது உள்ளங்கையை விரித்து ‘என்ன..?’ என்பதைப் போல அபிநயித்தாள்..

“எனிக்கு நந்தினி மேடத்திண்ட சம்சாரிக்கனும்..”

“சம்சாரியா..?”

நந்தினி விழித்தாள்.. தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகளை 'சம்சாரி' என்று அழைப்பதுண்டு.. அதை ஏன் ஓமனா சொல்கிறாள்..? நந்தினியென்ன வயநாட்டை வயல் காட்டில் உழவு வேலை செய்யவா வந்திருக்கிறாள்..?

"ஞான் கம்யூட்டர் என்ஜினியராக்கும்.."

விரல்களால் கீ போர்டைத் தட்டுவதைப் போல அபிநயித்தாள் நந்தினி.. ஓமனாவுக்கு ஒரு மண்ணும் விளங்கவில்லை..

"எந்தா அம்மே..?" என்று திருதிருத்தாள் அவள்..

"இதை ஒண்ணைச் செய்திரு.." தலையில் கை வைத்தாள் நந்தினி..

"இங்கேயென்ன நடக்குது..?"

ரவிச்சந்திரனின் குரலில் உடலெங்கும் 'ஜிவ்' வென்ற உணர்வு பரவ வேகமாக திரும்பினாள் நந்தினி, காலம், காலமாய் பிரிந்திருந்தவனைக் கண்டு விட்டத் தவிப்பை அவளது கண்கள் பிரதிபலித்ததில் ஆழ்ந்த பார்வை பார்த்தபடி உள்ளே வந்தான் அவன்.. ஊடுறுவும் அவன் பார்வையை

சந்தித்த பின்னால்தான் தன் தவறை உணர்ந்து நாக்கைக் கடித்தாள் நந்தினி..

‘பறக்காவெட்டி..! இவன் என்ன பெரிய மன்மதனா..? அட.. மன்மதனாவே இருக்கட்டும்.. அதுக்காக இப்படியா பறப்ப..? நேத்து நைட் வரைக்கும் இவன் பக்கத்திலதான இருந்த..? தூங்கறப்பதான் பிரிஞ்சிருந்த.. விடியற் காலையில அவன் வந்து நின்னா.. வந்துட்டியா, வந்துட்டியான்னு பறப்பாப்

பறந்து பார்த்தா அவனுக்கு மண்டைக் கனம் வந்திராதா..? சும்மாவே ஒரு மார்க்கமா பார்த்து வைப்பான்.. இப்படி அலை பாய்ஞ்சா அவ்வளவுதான்.. கம்மங் கொல்லையைக் கண்ட காளை மாட்டைப் போல பாய்ஞ்சு மேய்ஞ்சிருவான்.. உஷார்டி நந்தினி..’

நந்தினி உஷாராக இருக்கத்தான் முயன்றாள்.. அவன் வந்ததில் அவளுக்கு ஒன்றுமே ஏற்படாததைப் போல அசட்டையாக முகத்தை வைத்துக் கொண்டு.

“இங்கே நானும், ஓமனாவும்தான் நடக்கிறோம்.. வேற எதுவும் நடக்கலையே..” என்று நாடக பாணியில் தோள்களைக் குலுக்கி இரண்டு கைகளையும் விரித்தாள்..

‘ஆக்டிங் நல்லாயிருக்கு..’ அவன் பார்வை ரசித்ததில்..

‘இதிலயும் சொதப்பிட்டேனா..?’ என்று உதட்டைக் கடித்தாள்..

“ஒந்நுமில்லா சாரே..! ஞான் நந்தினி மேடத்திண்ட சம்சாரிக்கனுமின்னு பறஞ் ..” என்றாள் ஓமனா..

“ஓ.. இவ சம்சாரிக்கனும்னு சொன்னதும் நீ சம்சாரின்னு அக்ரிக்கல்ச்சர் கூட கனெக்ஷனைக் கொடுத்திட்டியாக்கும்..? ஆனா பாரு நந்தினி.. உன் புத்திசாலித்தனத்தோட லெவலை நினைக்கிறப்ப எனக்கு என்னென்னவோ ஆகித் தொலைக்குது..”

அவனுக்கு என்னென்ன ஆகித் தொலைக்கும் என்பதை உணர்வு பூர்வமாக உணர்ந்திருந்ததினால் பல்லைக் கடித்தபடி எதுவும் பேசாமல் பொறுமை காத்தாள் நந்தினி..

“கேரளாவுக்கு வந்து இத்தனை நாளாகுது.. இன்னும் சம்சாரிக்கிறதுன்னா பேசறதுன்னு புரிஞ்சுக்கலை.. எப்படித்தான் ஈ வயநாட்டில காலம் தள்ளப் போறியோ..?” ரவிச்சந்திரன் அதிகமாகவே கவலையை வெளிப் படுத்தினான்..

“எந்துக்கு சாரு இத்தினி கவலையாயி..?” ஓமனா கவலைப்பட்டாள்..

“ஞான் அறியேன்.. நிண்ட சாரிண்ட அன்வர்ஷிக்கனும்..” என்றாள் நந்தினி..

ரவிச்சந்திரனின் கண்கள் ஒளிர்ந்தன.. விசாரிக்கனும் என்பதன் மலையாள வார்த்தையை நந்தினி சொல்லி விட்டதில் அவளைக் கூர்ந்து பார்த்து வைத்தான்.. நந்தினியின் கன்னங்கள் சிவந்து விட்டன.. ஒரு சிறு மலையாள வார்த்தைக்கு இத்தனை சந்தோஷமா என்ற நினைவில் உதட்டைச் சுழித்தாள்..

“இதெல்லாம் தெரியுது.. சம்சாரிக்கனும்னா தெரிய மாட்டேங்குது.. அன்வர்ஷிக்கனும்ங்கிற வார்த்தை தெரியலேன்னாலும் பரவாயில்லை.. அது அடிக்கடி யூஸ் பண்ற வார்த்தையில்லை.. சம்சாரிக்கிறது அப்படிங்கற வார்த்தையை சரளமா மலையாளிகள் பேசுவாங்க.. அதைக் கட்டாயமா நீ தெரிந்து வைத்திருக்கனும்..” ரவிச்சந்திரன் பாடம் எடுத்தான்..

“நீங்க எனக்கு பாஸா இல்லை டீச்சரா..?” நந்தினி சந்தேகம் கேட்டாள்..

பதில் சொல்லாமல் அவளை இமைக்காமல் அவன் பார்த்து வைக்க..

“போதும் சாரே.. மார்னிங்கிலேயே டியூஷனை ஆரம்பிச்சிராதீங்க.. இன்னைக்குப் பூராவும் டயம் இருக்கு.. இனி வருகிற நாள்களிலும் டயம் கிடைக்கும்.. சொச்சத்தை அப்புறமா கண்டினியூ பண்ணிக்கலாம்..” என்று கை குவித்தாள் நந்தினி..

“ஓ.. நந்தினி மேடம் சாரண்டே கரம் குவிச்சல்லோ..” ஓமனா வியப்பொலி எடுப்பினாள்..

“ஆமாமாம்.. நிண்ட சாரண்டே ஞான் கரம் குவிச்சு.. அவர் வரம் தந்து.. போவியா..” அலுத்துக் கொண்டாள் நந்தினி..

“போவியான்னு அவளைச் சொல்கிறியா..? இல்ல என்னைச் சொல்கிறியா..?” குறுகுறுவெனப் பார்த்தபடி கேட்டான் ரவிச்சந்திரன்..

“உங்களைச் சொல்ல முடியுமா சாரே..? ஈ கொட்டாரம் நிங்கள் கொட்டாரம்.. ஞான் தமிழகத்தில இருந்து வயநாட்டில ஜோலி பார்க்க வந்த பெண்குட்டி..!”

நந்தினி அடுக்கிக் கொண்டே போக ஓமனாவுக்கு முதுகு காட்டி நந்தினியின் முகத்தருகே குனிந்த ரவிச்சந்திரன்..

“ஈ பெண்குட்டி வல்லிய சுந்தரியாக்கும்..” என்று தாழ்ந்த குரலில் சொல்லிக் கண்சிமிட்டினான்..

‘அடப்பாவி..!’

குப்பென்று பூத்த உணர்வுகளின் குவியலில் புதையுண்டு மூச்சுத் திணறிப் போனாள் நந்தினி..

“தோட்டத்தில வெயிட் பண்றேன்.. வந்து சேரு..”

சட்டென்று திரும்பி அவன் விரைந்து விட தாள மாட்டாதவளாய் கட்டிலில் தொப்பென்று உட்கார்ந்தாள் நந்தினி..

“எந்தா மேடம்..? சிரசு நொம்பரமோ..?” ஓமனா கவலையுடன் நந்தினியின் நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள்.. “ஒண்ணுமில்லை ஓமனா..” வலிய வரவழைத்துக் கொண்ட சிரிப்புடன் நந்தினி எழுந்து நின்றாள்..

“அம்மை எந்து போயி..?”

“தோட்டத்துக்குப் போயி..”

“அம்மையிண்ட ஞான சம்சாரிக்கனுமல்லோ..”

“அதுக்கு என்னை நீ என்னை மேடமிண்டு விளிக்கனுமல்லோ..”

“நந்தினி மேடத்துக்கு எல்லாமே நகைப்பல்லோ..”

ஓமனா நகர விருப்பமில்லாமல் பேச்சை வளர்த்தாள்.. எப்படி அவளிடமிருந்து கழண்டு தோட்டத்திற்குப் பறப்பது என்று மலைத்தாள் நந்தினி.. இப்படியுமா ஒருத்தி பாசவலையில் சிக்க வைத்து ஒரு வழி பண்ணுவாள்.. ஓமனாவை விட்டால் அன்று முழுவதும் பேசித் தீர்த்து விடுவாள் போல இருந்ததில்..

“ஏதோ சம்சாரிக்கனும்னு சொன்னியே..” என்று பேச்சை மாற்றினாள் நந்தினி..

“நிங்ஙட நாடு எதா நந்தினி மேடம்..?”

‘என்னடா இது..?’ ஓமனாவை விசித்திரமாக பார்த்த நந்தினி..

“இந்திய நாடுதான்..” என்றாள்..

“அதில்லா மேம்.. நிங்ஙட தேசம் எதுன்னு பறஞ் ..”

“தேசம்ன்னா.. இந்திய தேசம்தான்..”

“அதில்ல அம்மே..”

“இங்கே பாரு ஓமனா.. நல்லாத்தானே போயிக்கிட்டு இருக்கு..? நீ ஏன் டிராக்கை மாத்தி அம்மேன்னு விளிக்கிற..?”

“மேடம்..”

“அது.. இப்ப எப்படி காதுக்கு குளிர்ச்சியா நல்லா இருக்கு..? இதை விட்டுட்டு அம்மேன்னு நீ பறைஞ்சா என் கன்னத்தில அறைஞ்ச மாதிரியிருக்கு.. கேட்டியல்லோ..”

“கேட்டே.. கேட்டே..”

“வாட்’ஸ் யுவர் பிராப்ளம்..?”

“எந்தா..?”

“உனக்கு என்னதா பிரச்னைன்னேன்..?”

“எவுடுந்து நிங்கள் வருந்நூ..?”

‘இவ என்னதான் சொல்றா..?’ நந்தினிக்கு தலைமுடியைப் பிய்த்துக் கொள்ள வேண்டும் போல இருந்தது..

ரவிச்சந்திரன் தோட்டத்திற்குப் போயிருக்கிறான் என்ற நினைவு அவளை படுத்தி வைத்தது.. அவனருகில் பறந்தோடிப் போய் நிற்க மனது துடித்தது.. அதற்கு இடம் கொடுக்காமல் படுத்தி வைத்த ஓமனாக் குட்டியை துவம்சம் செய்யும்

ஆவேசம் கிளர்ந்து, ஓமனாவின் வெள்ளைப் புன்னகையைக் கண்டவுடன் கலைந்து மறைந்தது..

‘ஒருவேளை.. நான் எந்த ஊரில இருந்து வருகிறேன்னு கேட்கிறாளோ..’ நந்தினி கண்டு பிடித்து விட்டாள்.. அதுவாகத்தான் இருக்கும் என்ற அனுமானத்தில்.. “தஞ்சாவூரில இருந்து வர்றேன் ஓமனா..” என்று சொல்லி விட்டாள்..

“ஓ...!” ஓமனா முகம் மலர்ந்து போனதில் நந்தினி யூகித்ததைத்தான் அவள் கேட்டிருக்கிறாள் என்று தெளிவானது..

‘இதுக்கா இப்படித் தலையாலே தண்ணியைக் குடிக்க வைச்சா..?’

நந்தினி கன்னங்களை உப்ப வைத்து “உஃப்..” என்று வாய்விட்டுக் காற்றை வெளியேற்றி ஆயாசம் குறைந்தாள்..

“நிங்க வல்லிய சுந்தரி..”

‘எத்தனை தரம்தான் இதைச் சொல்லுவா..’ என்று தோன்றினாலும்.. ‘இதை எத்தனை முறையானாலும்

கேட்டுக்கிட்டே இருக்கலாமே..' என்று ஆனந்தப்பட்டுப் போனாள் நந்தினி..

"அடிக்கடி இதைச் சொல்லிக்கிட்டிரு ஓமனா.. அப்பத்தான் எனக்கு சில்லுன்னு இருக்கும்.."

"வல்லிய சுந்தரி வல்லிய சுந்திரிண்டுதான பறயனும் மேடம்..? நந்தினி மேடத்தோட சௌந்தர்யத்தில சார் மயங்கிப் போயி.. ஞான் வரட்டே..."

ஓமனா சென்று வெகு நேரமாகியும் அவள் சொன்ன வார்த்தைகள் நந்தினியின் செவிகளில் எதிரொலித்துக் கொண்டிருந்தன..

ஆனானப்பட்ட ரவிச்சந்திரன் எனும் ஆணழகன் நந்தினியிடம் மயங்கி விட்டானா..?

அத்தியாயம் 77

‘இருக்காது..’

நந்தினி தோள்களைக் குலுக்கிக் கொண்டு கண்ணாடி பார்த்தாள்.. கசங்கிய நைட்டியும், கலைந்து பிய்ந்து தொங்கிய கோலமுமாக கந்தலகோலமாக இருந்தாள்..

இப்படியொரு தோற்றத்தில் அவளைப் பார்த்து விட்டுப் போனவனின் முகத்தில் ஓமனா மயக்கத்தைக் கண்டாளா..?

‘சான்ஸே இல்லை..’

சோர்ந்து போன மனதுடன் முகத்தைக் கழுவி, மெலிதான பவுடர் பூச்சுடன் சுடிதாருக்குள் புகுந்தாள்.. கசங்கியிருந்த நைட்டியைச் சுருட்டிக் கட்டிலின் மீது வீசினாள்.. அது அவள் முகம் துடைத்துப் போட்டிருந்த ஈரத் துவாலையின் மீது படர்ந்து அணைத்தது..

‘இதுக கூட காதல் பண்ணுது பாரேன்..’

உதட்டைக் கோணி அழகு காட்டியபடி தலையைச் சீவினாள்.. முடியுடனிருந்த சீப்பை டிரஸ்ஸிங் டேபிளின் மீது கடாசி விட்டுத் திரும்பியவள் அப்படியே நின்று விட்டாள்..

அங்கே கதவின் மீது ஸ்டைலாக சாய்ந்து போஸ் கொடுத்தபடி ரவிச்சந்திரன் நின்றிந்தான்..

‘இவன் எப்போ வந்தான்..? நான் டிரஸ் மாத்தறப்ப வந்திருப்பானா..?’ திகில் பிடித்துக் கொண்டது.. கூடவே..

‘இவனோட அரண்மனைங்கிறதுகாக சொல்லாமல் கொள்ளாமல் திடுதிப்புன்னு ரூமுக்குள்ள வந்து நிற்பானா..?’ என்ற சினமும் மூண்டது..

“எப்போ வந்தீங்க..?” அவன் முகம் பார்க்காமல் கேட்டாள்..

“நீ டிரஸ் மாத்தறப்ப வரலை..” என்றான் அவன் பட்டவர்த்தனமாக..

‘இவன் இருக்கிறானே..’ லஜ்ஜையில் அவளது முகம் சிவந்து விட்டது..

“அவுட்டிங் ஏதும் போறயா..?”

அவன் ஆராய்ச்சியாக அவளை மேலும் கீழும் பார்த்தான்..

‘ஒரு சுரிதாரை மாட்டித் தலைசீவி பவுடர் பூசிட்டேன்.. அதுக்கு இப்படியெல்லாம் கேள்வி கேட்டு பார்வையிடறான்..’ நந்தினிக்கு பற்றிக் கொண்டு வந்தது..

அவன் ஜீன்ஸ் பேண்ட், சர்ட் என்று இருந்தான்..

‘இவன் மட்டும் நைட் டிரஸ்ஸிலா இருக்கிறான்..?’

இவனைச் சும்மா விடக்கூடாது என்று தோன்றி விட்டது நந்தினிக்கு..

“பாஸ் எங்கே போகிறாராம்..?” இடக்காக கேட்டாள்..

அவன் கண்களில் மின்னல் வந்தது.. அவளது இடக்கை புரிந்து கொண்டவனாக..

“பதிலுக்குப் பதில்..?” என்றான்..

“அதே சாரே..” பணிவுடன் அவள் சொன்னாள்..

“இல்லை.. நைட்டியிலேயே நல்லாத்தானே இருந்தே..? அதனா கேட்டேன்.. ஹேர்ஸ்டைல்கூட அப்போப் போல இப்போ இல்லை..” அதே ஆராய்ச்சிப் பார்வையோடு சொன்னான்..

“என்னது..????!!” அவளுக்கு ஆச்சரியமாகி விட்டது..

‘கேலி செய்கிறானோ..’ அவன் பார்க்கவில்லை யென்று நினைத்துக் கொண்டு அவன் முகத்தை உன்னிப்பாகப் பார்த்தாள்.. அதில் கேலியேதும் தெரியவில்லை..

“ஹேண்ட்சம்மா இருக்கேனா..?” நிதானமான அவன் கேள்வியில் அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.. அவசரமாக சுதாரித்துக் கொண்டு..

“இல்லைன்னு சொன்னா என்ன செய்வீங்க..?” என்று கேட்டாள்..

“பொய் சொல்கிறன்னு சொல்லுவேன்.. ஆமாம்.. ஏன் தோட்டத்துக்கு வரலை..” என்றான் அவன்..

‘இவன் தோட்டத்துக்குப் போயிட்டு வந்துட்டான் போல..’ அவளுக்குள் ஏமாற்றம் கவிந்தது..

“எங்கே..? உங்க ஓமனாக்குட்டிதான் சம்சாரிக்கனும்னு பேச்சில பிடிச்சுக்கிட்டாளே..” அலுத்துக் கொண்டாள்..

“அவள் பேச்சில பிடிச்சுக்கிட்டதினாலதான் வர முடியலையா..?”

“ம்ம்ம்.. வேற எதுவா இருக்கும்ன்னு நினைத்தீங்க..?”

“நீ ரெடியாகி வர நேரமாகிருச்சோன்னு நினைச்சேன்..”

‘ஒருமணி நேரமா மேக் அப் பண்ணிக்கிட்டு இருந்தேன்னு நினைச்சிருக்கான்..’ நந்தினிக்கு ஆத்திர ஆத்திரமாக வந்தது.. அலங்காரத்துக்கும் அவளுக்கும் ரொம்ப தூரம்.. இஷ்டத்துக்கு எதையாவது மாட்டிக் கொண்டு தலைவிரி கோலமாக இருப்பாள்..

“ஒழுங்கா டிரஸ் பண்ணிக்கிட்டேன்னா சூப்பரா இருப்பபேடி.. உன்னை அடிச்சுக்க ஆளே இருக்காது..” என்று ஆற்றாற்றுப் போவாள் உத்ரா..

“என்னை ஒருத்தி அடிச்சுக்கனுமா..? அந்தக் கொடுமைக்குத்தான் நான் அலட்டிக்கறதே இல்லை..” படு கேஷூவலாகப் பதில் சொல்வாள் நந்தினி..

“சோம்பேறி..!”

வெண்ணிலா சூட்டும் பெயரைத்தான் உத்ராவும் சூட்டுவாள்.. அதே பெயரை ரவிச்சந்திரனும் சூட்டியதில் நந்தினிக்கு அழுகையே வந்து விட்டது..

வயநாட்டுக்கு தப்பி வந்தாலும் அவளைச் சோம்பேறிப் பட்டம் விட்டு வைக்காதா..? துரத்திக் கொண்டே வருமா..?

“சோம்பேறி..” ரசித்துச் சொன்ன ரவிச்சந்திரனிடம்..

“எதை வைத்து எனக்குச் சோம்பேறிப் பட்டம் கொடுக்கறீங்க..? இன்னும் ஒரு நாள்கூட உங்களிடம் வேலை பார்க்கலை..” என்று கிளம்பி விட்டாள்..

“நீ வேலை செய்து கிழிக்கிறது இருக்கட்டும்.. இப்படியா ரூமை வைத்துக்கவ..?”

ரவிச்சந்திரன் கட்டிலைச் சுட்டிக் காட்டினான்.. அங்கே குவிந்து கிடந்த கம்பளியும், கலைந்து கிடந்த மெத்தை விரிப்பும், கோக்கு மாக்காக திசைக்கொரு பக்கமாக கிடந்த தலையணைகளும், சுருண்டு கிடந்த ஈரத்துவாலையும், அதைக் கட்டிக் கொண்டிருந்த கசங்கிய நைட்டியும் நந்தினியைப் பார்த்து ‘ஈ’ யென பல்லைக் காட்டின..

“இதைப் பாரு.. தலை வாரினா முடியை டஸ்ட்பின்னில் எடுத்துப் போடற பழக்கமில்லையா..?” டிரஸ்ஸிங் டேபிளில் முடியுடனிருந்த சீப்பைக் காட்டினான்..

வெண்ணிலா தலையில் அடித்துக் கொள்வாள்.. உத்ராவோ மொத்து மொத்தென மொத்தி..

“பிசாசே..!. உன் முடியை நான் எடுத்துப் போட்டா உனக்கும் எனக்கும் சண்டை வருடி..” என்பாள்..

அதற்கெல்லாம் கவலை கொள்ளாத மனது ரவிச்சந்திரன் சொன்னதில் கவலை கொண்டது..

“டெபனிட்டா நீ ஓடி வந்தது நியாயம்தான்..” என்றான் ரவிச்சந்திரன்..

‘இப்போதாவது என் பக்கமிருக்கிற நியாயத்தைப் புரிந்து கொண்டானே..’ கவலை மறந்து ஆறுதல் கொண்டாள் நந்தினி..

“இப்படியொரு சோம்பேறியைக் கல்யாணம் பண்ணிக்கிற எவனும் பெல்ட்டால விளாசுவான்தான்..”

ரவிச்சந்திரன் நந்தினியின் ஆறுதலில் கல்லைத் தூக்கிப் போட்டான்..

‘எப்படித் தாக்கறான் பார்..’ நந்தினி கோபத்தால் முகம் சிவக்கக் கைகளைக் குவித்து..

“நான் இப்படித்தான் இருப்பேன் பாஸ்.. இதை ஏத்துக்கிட்டு என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறவன் பண்ணிக்கட்டும்..” என்று கொதித்தாள்..

“அப்படியொரு தியாகி கிடைக்கலேன்னா..?”

“கல்யாணமே வேண்டாம் பாஸ்..”

“இது பேச்சு.. இந்த முடிவில இருந்து மாறவே மாறாதே.. பாவம்.. ஆண்குலம் பிழைத்துப் போகட்டும்..”

“நானும் பிழைத்துக்குவேனாக்கும்..”

“காலம் பூரா கன்னிதெய்வமா இருந்து பிழைத்துக்குவ..”

“ஸோ வாட்..? நீங்க வேணும்ன்னா எனக்குப் பூப்போட்டு வரம் கேளுங்க.. குறி சொல்லி வரம் தர்றேன்..”

“என்ன வரம் தருவ..?” குறுகுறுத்த பார்வையுடன் கேட்டான்..

அதுவரை வாயடித்துக் கொண்டிருந்தவள் ஸ்விட்ச் போட்டதைப் போல அமைதியாகி விட்டாள்..

‘கலாய்ச்சுக்கிட்டு இருந்தவன் இப்படிப் பார்த்து வைக்கிறானே..’ இமைகள் படபடக்க அடிப்பார்வையில் அவனைப் பார்த்தாள்..

“இதுதான் நீ.. பயந்தாங்குளி..” அவன் கலகலத்து சிரித்ததில் அவளுக்குள் நிம்மதியுடன் கூடிய ஏமாற்றம் வந்தது..

“வா.. தோட்டத்துக்குப் போகலாம்..” என்றான் அவன்..

“நீங்க போகலையா..?” ஆச்சரியத்துடன் அவள் கேட்டாள்..

“போகலை..” அவளையே பார்த்தான்..

“ஏன்..?” மனம் படபடக்க கேட்டாள் நந்தினி..

“மாடி ஹாலில் அஜந்தா இருக்கிறா.. நீ தனியா அவளை ஃபேஸ் பண்ணப் பயந்துருவியோன்னு நினைத்தேன்.. ஸோ ரூமுக்குப் போய் லேப் டாப்பை ஆன் பண்ணி மெயிலை செக் பண்ணிட்டு வந்தேன்..”

அவள் மீதான அவனது அக்கறையில் இதமாக உணர்ந்தாள் நந்தினி.. தாய்ப்பறவை குஞ்சை சிறகுக்கடியில் பாதுகாப்பதைப் போல அவன் அவளைப் பாதுகாக்கிறான் என்பதில் ஓர் நிறைவு வந்தது..

“தேங்க்ஸ்..” என்றாள்..

“எதுக்கு..?” என்றான்..

அனைத்துக்கும் என்று சொல்லத் தோன்றியது.. அதைச் சொல்லாமல்..

“அஜந்தாவிடமிருந்து காப்பாத்துகிறதுக்கு..” என்று சொன்னாள்..

“உன்னை மட்டுமில்லை.. என் குடும்பத்தையே அவளிடமிருந்து காப்பாற்ற வேண்டியதா இருக்கு..” எரிச்சலுடன் சொன்னான் அவன்..

‘நானும் உன் குடும்பத்தில் ஒருத்தியா..?’ இமைக்காமல் அவன் முகத்தையே பார்த்தாள்..

“என்ன..?”

“ஒண்ணுமில்லை.. போகலாமா..?”

அறைக்கதவை வெறுமனே சாத்தி விட்டு அ வள் கிளம்ப யத்தனிக்க ரவிச்சந்திரன் எச்சரிக்கை செய்யும் முகபாவத்துடன்..

“ரூமை பூட்டிக் கீயை கையில் எடுத்துக்க..” என்றான்..

“ஏன்..?” நந்தினிக்குப் புரியவில்லை..

“எந்துக்கு அத்தான் பறயறதிண்டு நினக்கு மனசிலாகலையோ..? ஈ வாதிலப் பூட்டித் தாக்கோல பத்திரப் படுத்திக்கலையிண்டா ஞானும் எண்ட அம்மையும் நிண்ட அறையை சோதிச்சுருவமல்லோ..? அதுக்கோசரம் தான் அத்தான் இவ்விதம் பறயறது.. கேட்டோ..?” எரிக்கும் பார்வையுடன் அங்கு வந்தாள் அஜந்தா..

‘வந்துட்டாளா..?’

நந்தினி அஜந்தாவின் முகத்தைப் பார்க்காமல் அவசரமாகக் கதவைப் பூட்டிச் சாவியைக் கையிலெடுத்துக் கொண்டு ரவிச்சந்திரனின் முதுகுக்குப் பின்னால் பதுங்கினாள் நந்தினி..

‘இத்தனை உரிமையா..?’ அஜந்தாவின் கண்கள் நெருப்புத் துண்டங்களைப் போல ஜொலித்தன..

இடுங்கிய கண்களுடன் அத்தை மகளை முறைத்தபடி முதுகுக்குப் பின்னால் கை நீட்டி நந்தினியை இழுத்துக் கை கோர்த்துக் கொண்ட ரவிச்சந்திரன் அஜந்தாவை லட்சியம் செய்யாமல் நந்தினியை இழுத்துக் கொண்டு நடந்து விட்டான்..

தோட்டத்தை அடையும் வரை ரவிச்சந்திரனின் விரல்களை இறுக்கிப் பிடித்த பிடியை விடாமல் அவன் தோளோடு ஒட்டி ஒன்றிக் கொண்டிருந்தாள் நந்தினி.. நடுக்கத்தில் வெடவெடத்தவளைக் கனிவுடன் பார்த்த ரவிச்சந்திரன்..

“குளிருதா..?” என்று மென்மையாக வினவினான்..

“இல்லையே..” தலையாட்டி மறுத்த நந்தினிக்கு அப்போதுதான் அவனுடைய விரல்களை இறுக்கிப் பற்றி அவனுடன் ஒன்றிக் கொண்டிருக்கும் நினைவு வந்தது.. அவசரமாக அவனது விரல்களை விட்டு விட்டு தள்ளி நின்றாள்.. அவன் முகம் மாறியது..

“ஏன்..?” அதட்டினான்..

“ஏனா..?” நந்தினிக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை..

‘என்னவோ தாலி கட்டின பெண்டாட்டித் தள்ளி நிற்கிறதைப் போல அதட்டறானே.. முடியலை..’

“திடிர் திடிர்ன்னு குணம் மாறுது..”

“யாருக்கு..?”

“உனக்குத்தான்..”

‘இவன் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறான்..?’ நந்தினிக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது..

அவனுடன் ஒட்டிக் கொண்டிருந்தால் மாறாத குணம்.. தள்ளி நின்றால் குணம் மாறுகிறது என்று பட்டம் கட்டுவானா..?

‘இவனுக்கு சுருக்குன்னு குத்தறதைப் போல எதையாச்சும் சொல்லனுமே..’ கண்களைச் சுருக்கி அவனைப் பார்த்தபடி யோசித்தாள்..

“என்ன பிளான் போடற..?” அவன் கண்டு பிடித்து விட்டான்..

‘இவன் முன்னாலேயே யோசித்தால் இப்படித்தான்.. ஒளிஞ்சுக்கிட்டு யோசிச்சாளே கண்டு பிடிச்சுருவான்.. இவன், கண்ணுக்கு முன்னாடி நின்னுக்கிட்டு யோசிச்சா கண்டு பிடிக்க மாட்டானா..?’ அவனை ஒரு விதமாக பார்த்தபடி..

“நானென்ன உங்க பெண்டாட்டியா..? தள்ளி நின்னா அதட்டறீங்க..?” என்று கேட்டு விட்டாள்..

அவளும்தான் என்ன செய்வாள்..? அவன் முன்னால் நின்று கொண்டு வேறு எதையும் யோசிக்க அவளால் முடியவில்லையே..

எனவே வாய்க்கு வந்ததைச் சொல்லி விட்டாள்.. அதைக் கேட்டவனின் முகம் முழுவதும் சிரிப்புப் படர்ந்ததில் அவளுடைய ‘சுருக்’ கேள்வி அவனைச் சரிய ான முறையில் அட்டாக் பண்ணவில்லையோ என்ற நொந்து போனாள்.. ரவிச்சந்திரனின் முகத்திலிருந்த கடினம் விலகி ஓடிவிட்டது..

கடகடவென அவன் சிரித்த சிரிப்பில் பயந்து போன நந்தினி சுற்று முற்றும் பார்த்து விட்டு..

“இப்படிச் சிரிக்காதீங்க..?” என்று பதறினாள்..

“இது என் வீட்டுத் தோட்டம்.. நான் சிரிக்க ‘தடா’ போடுவியா..?”

“எதுக்குங்க வம்பு..? சும்மாவே உங்க அத்தைமகள் நான் உங்களைத் தள்ளிக்கிட்டு வந்துட்டேன்னு கோபத்தில இருக்கிறா.. இதில உங்கச் சிரிப்புச் சத்தம் அவ காதில விழுந்தா அவ்வளவுதான்.. நான் தொலைஞ்சேன்..”

“என்னைத் தள்ளிக்கிட்டு வந்திருக்கியா..?”

ரவிச்சந்திரனுக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை.. தான் சொன்ன வார்த்தைகளின் அர்த்தம் புரியாமல் அவனை..

‘நான் என்ன சொல்லிட்டேன்னு இப்படிச் சிரிச்சு வைக்கிறான்..?’ என்ற மனத்தாங்கலோடு பார்த்துக் கொண்டிருந்த நந்தினி அவன் கண்களுக்குப் பேரழகியாக தெரிந்தாள்.

“தள்ளிக்கிட்டு வந்தவ எதுக்காக தள்ளி நிற்கிறாளாம்..?” கண்களைச் சிமிட்டினான்..

“என்னது..?” அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது..

அவள் அப்படியா சொல்லித் தொலைத்திருக்கிறாள்..? அப்படித்தான் என்று புரிபட்டதில் அவள் முகம் வெட்கத்தில் சிவந்து தொலைத்தது.. அதை அவன் ரசனையாகப் பார்த்ததில் முகச்சிகப்பு அதிகரித்தது..

‘இவள் இருக்கிறாளே..’

அஜந்தாவைப் போன்ற சாகசங்களும், சூழ்ச்சிகளும், சாதுர்யங்களும் நிறைந்த பெண்களையே பார்த்துப் பழக்கப்பட்டிருந்தவனுக்கு அவற்றைப் பற்றிய அரிச்சுவடி கூடத் தெரியாத கல்மிஷமில்லா நந்தினி இதத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.. பாசாங்கில்லாத அவளது இயல்பும்.. நினைத்ததைப் பேசி விடும் துடுக்கும் அவனைக் கவர்ந்தன..

தடுமாற்றத்துடன் நின்றிருந்த நந்தினியை அதற்கு மேலும் சோதிக்காமல் தோட்டத்தைச் சுற்றிக் காட்ட ஆரம்பித்தான் ரவிச்சந்திரன்..

‘அப்பாடி..’ என்ற விடுதலை உணர்வுடன் சட்டென தன் இயல்புக்குத் தாவிய நந்தினி விழிகள் விரிய ஆவலுடன் தோட்டத்தையும், நீச்சல்குளத்தையும் ரசிக்க ஆரம்பித்தாள்.. அதில் ரவிச்சந்திரனின் பிரியம் அதிகரித்தது..

அத்தியாயம் 78

LDலைச்சரிவில் எவரோ கட்டம் கட்டி வடிவமைத்து வைத்திருப்பதைப் போல வெகு நேர்த்தியாக வரிசை கட்டியிருந்த தேயிலைச் செடிகளின் பாத்திகளை பார்வையிட்ட நந்தினி குழந்தைத்தனமான உற்சாகத்துடன்.

“ஹை..! எவ்ளோ நல்லாயிருக்கு..” என்று குதியாட்டம் போட்டாள்..

“மலைச்சரிவில ஜீப்பை உருட்டி விட்டுடலாம்ன்னு பிளான் பண்றியா..” ஜீப்பை ஓட்டியபடி கேட்டான் ரவிச்சந்திரன்..

“பாஸ்.. ஜீப்புக்குள்ள நானும் உட்கார்ந்திருக்கேன்.. மனசில இருக்கட்டும்..” சட்டம் பேசினாள் நந்தினி..

“அதை உன் மனசில வைத்துக்க.. ஜீப் உருண்டா என்னோடு சேர்த்து நீயும் உருளுவ..” ரசித்துக் சொன்னான் அவன்..

‘இவனோடு சேர்ந்து உருளுவேனா..?’

நந்தினி மலைச்சரிவைப் பார்த்தாள்.. தேயிலைப் பாத்திக்களைத் தாண்டி புல் நிறைந்த காடு தெரிந்தது.. பச்சைப் பசேலென செடியும், கொடிகளுமாக கண்களைச் சிமிட்டி அழைத்தது.. அந்தப் புல் மெத்தையில் ரவிச்சந்திரனுடன் அவள் கட்டியுருள்வதைப் போன்ற கற்பனைக் காட்சி விரிந்ததில் உடல் உலுக்கிப் போட அவள் சுரண்டு போனாள்..

‘டேய்.. சும்மாயிருடா.. எதையாச்சும் சொல்லித் தொலைத்து இம்சையைக் கிளப்பாதே..’

ஓரக் கண்ணால் அவனைப் பார்த்தாள்.. அவன் புருவங்களை ‘என்ன..?’ என்று கேட்டும் விதமாக உயர்த்தி வசீகரித்து வைத்தான்..

‘என்னடா இது.. எனக்கு வந்த சோதனை..’

அவனைப் பார்க்காமல் சரிவைப் பார்த்தாள்.. தலை சுற்றியது..

“அந்தப் பக்கம் பார்க்காதே..” எச்சரித்தான் ரவிச்சந்திரன்...

‘வயநாட்டு மலைபிரதேசத்தில சுத்தியிருக்கிற இயற்கையைப் பார்த்து ரசிக்காம வேற என்னத்தைச் செய்யச் சொல்றான்..? இவனைப் பார்க்கச் சொல்றான..?’ தலையைச் சாய்த்து அவனைப் பார்த்தாள்..

‘அழகன்..’ மனம் ஜொள்ளியது..

‘இருந்தாலும் இவன் இத்தனை கவர்ச்சியா இம்ப்ரெஸ் பண்ணித் தொலைக்கக் கூடாது.. ஆண்களோட மனசுதான் அலைபாயுமா..? பெண்களோட மனசும் அலைபாயும்..’ அலைபாயுதே கண்ணா என்று பாடி விடலாமா என்று யோசித்தாள் நந்தினி.. ஏற்கனெவே தலை நிறைய கனம் நிறைந்தவனிடம் அந்தப் பாடலைப் பாடி இன்னும் கொஞ்சம் கனத்தை ஏற்றி விட வேண்டாமென்ற மனதின் எச்சரிக்கையால் பேசாமல் இருந்தாள்..

ரவிச்சந்திரன் உலகம் முழுக்க இருக்கும் ஒட்டு மொத்த தலைக் கனத்தை ஏற்றி வைத்தாலும் தாங்குவான்தான்.. நந்தினி தாங்குவாளா..? இப்போதிருக்கும் அவனுடைய தலைக் கனத்தைத் தாங்க முடியாமல் அந்தலை சிந்தலையாகிக் கொண்டிருகிறாள்.. இன்னும் சற்றுக் கூடினால் அவள் கதி அதோ கதிதான்..

“இது அநியாயம் பாஸ்..”

“எது அநியாயம்..?”

“கேரளத்து வயநாட்டில சீனரிஸ் கொட்டிக் கிடக்குது..”

“ஸோ வாட்..? அதையெல்லாம் அள்ளி வைத்துக்கப் போறியா..? இப்படிக் குதிக்கிற..?”

“ஏறக்குறைய அப்படித்தான் பாஸ்.. என் மனசில அள்ளி வைத்துக்குவேன் தெரியுமா..? அதைப் பார்க்காம வேற எதைப் பார்க்கிறது..?”

“ஏன்..? என்னைப் பாரேன்..”

அவன் புருவங்களை உயர்த்தி இமை சிமிட்டி அவளைக் கலங்கடித்தான்..

‘கொல்லாதேடா..’ அவளுக்கு மூச்சுத் திணறியது..

கிறங்க வைக்கும் பேரழகனுடன் கேரளத்து வயநாட்டின் மலைப் பாதையில் தனித்துப் பயணம் செய்வது கொடுமையானது.. இதை அவனுக்கு யார் சொல்வது..?

“போங்க பாஸ்.. எதையாச்சும் சொல்லிக்கிட்டு.. மலைச் சரிவைப் பார்த்தா என்னவாம்..?” சிணுங்கினாள்..

“என்னவா..? கிடுகிடுப் பள்ளத்தாக்கு.. தலை சுற்றிக் கீழே விழுந்திருவ.. டேன்ஜர்..” அறிவுறுத்தினான்..

“உங்களைப் பார்க்கிறது அதை விட டேன்ஜர்..” வாயிருக்க மாட்டாமல் சொல்லி விட்டாள்..

“வாட்..?” அவன் புருவங்களை நெறித்ததும்..

“பயமாயிருக்கு பாஸ்.. அதைத்தான் சொன்னேன்..” என்று அவசரமாக மாற்றி யோசித்துச் சொல்லி விட்டாள்..

அப்படியா என்பதைப் போல துளைக்கும் பார்வை பார்த்தான் ரவிச்சந்திரன்.. உதட்டை க் கடித்த நந்தினி..

‘லேசர் பார்வை பார்க்கிறானே..’ என்று மனதுக்குள் அரற்றினாள்..

“நம்பிட்டேன்..” இதழ் வளைத்து குறுநகை புரிந்து அவளை மயக்கினான்..

‘ஆள் மயக்கி..’ மனதுக்குள் அவனைத் தாளித்தபடி வெளிப்புற இயற்கையில் மனம் லயித்தாள் நந்தினி..

“சீனரியைப் பாரு.. வேணாங்கலை.. அதுக்காக ஜீப்புக்குள்ள குதியாட்டம் போட்டு ஜீப்பைக் குலுங்க வைக்காதே.. அண்டர்ஸ்டாண்ட்..?”

‘எதுக்கெடுத்தாலும் இதையொன்னைச் சொல்லிருவான்.. ஒண்ணு அண்டர்ஸ்டாண்ட் இல்லேன்னா மனசிலாயி..’ ஆதங்கப்பட்ட நந்தினி..

“மத்தவங்க மனசை நீங்க புரிஞ்சுக்கிட்டு இருக்கீங்களா பாஸ்..?” என்று வெடுவெடுத்தாள்..

தீர்க்கமாக அவளைப் பார்த்து வைத்தான் ரவிச்சந்திரன்.. அவனது பார்வையின் தீட்சண்யத்தில்..

‘பொசுக்கறதைப் போல் பார்க்கிறான்..’ என்று மனம் குமைந்தாள் நந்தினி.. என்னதான் சொல்லப் போகிறான் என்று அவள்மனம் குறுகுறுத்தது..

“நான் உன்னோட பாஸ்.. ஸோ.. என் மனதைத்தான் நீ புரிஞ்சுக்கனும்.. உன் மனதை நான் புரிந்துக்கனும்ங்கிற அவசியமில்லை.. வயநாட்டுக்கு நீ வேலை பார்க்கத்தான் வந்திருக்க.. டூரிஸ்டா வரலை.. அண்டர்ஸ்டாண்ட்..?” கடினமான குரலில் அவன் சொன்னதும் நந்தினியின் முகம் விழுந்து விட்டது..

‘இவன் எனக்கு வேலை கொடுத்திருக்கிற முதலாளி.. நான் இவனிடம் வேலை பார்க்க வந்திருக்கிற தொழிலாளி.. முதலாளியைத் தொழிலாளி சைட்டடித்தல் ஆகாது..’

என்னவோ அவள் தலைக்குத் துணி முக்காடிட்டு முதுகில் தேயிலை பறித்துப் போடக் கட்டிக் கொண்டிருக்கும் கூடையோடு.. தேயிலைகளைப் பறித்துக் கொண்டிருப்பதைப் போலவும்.. அவன் அவளுக்கு எட்டாத தொலைவில் யானை மீது ஏறிப் போய்க் கொண்டிருப்பதைப் போலவும் துயர் கொண்டாள் நந்தினி..

வழியில் இடிபாடுகளுடன் கூடிய ஓர் கோட்டை தெரிந்தது.. அதையொட்டி ஓடிக் கொண்டிருந்த ஆற்று நீர் அலையடித்துக் கோட்டையின் மீது படிந்து கொண்டிருந்ததில் சுவர்

ஈரப்பசையுடன் பசுமை நிறப் பூஞ்சைகளுடன் பச்சைப் பசேலெனக் காட்சி தந்தது.. நந்தினி துயரத்தை மறந்து கோட்டையை ஆர்வமாக வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்.. அவளையே கவனித்துக் கொண்டிருந்த ரவிச்சந்திரன் மென்மையானான்..

‘குழந்தையும் இவளும் ஒண்ணுதான்.. நொடிப் பொழுதில் கோபத்தையும், துக்கத்தையும் மறந்து போயிடறா..’

அவளது கன்னத்தில் தட்டித் தோளில் சாய்த்துக் கொள்ள வேண்டும் போல இருந்தது அவனுக்கு.. அவளிருக்கும்

நிலையை அவன் நினைவு படுத்தியதில் முகம் வாடியவள் இயற்கையைக் கண்டதும் அதில் மனம் ஒன்றி தானிருக்கும் நிலையை மறந்து அதை ரசிக்க ஆரம்பித்து விட்டாளே..

“ப்ளீஸ்.. அந்தக் கோட்டையைப் பார்க்கலாமா..?” கெஞ்சுதலாக வெளிப்பட்ட அவளது கோரிக்கையில் ஓர் மௌனப் பார்வையை பார்த்து வைத்தான் ரவிச்சந்திரன்..

‘எதுக்கு இப்படிப் பார்க்கிறான்..? நானென்ன உனக்கு டூரிஸ்ட் கைடான்னு கடிச்சுருவானோ..’ நந்தினிக்குள் பயம் வந்தது.. அவன் அப்படித்தான் சொன்னான்.. ஆனால் கடித்து விடுவதைப் போலச் சொல்லவில்லை.. விளையாட்டாய் சொல்வதைப்போல..

“உன்னை டூரிஸ்டுன்னு சொல்லிட்டேன்ங்கிற குற்றத்துக்காக என்னை டூரிஸ்ட் கைடாவே ஆக்கிட்டே..” என்று போலியாக அதுத்துக் கொண்டபடி கோட்டை வாசலில் காரை நிறுத்தினான் ரவிச்சந்திரன்..

இணக்கமாக அவன் பேசி விட்டதில் நந்தினியின் முகம் மலர்ந்து விட்டது..

“தேங்க் யு..” துள்ளிக் குதித்தபடி ஜீப்பை விட்டுக் குதித்தாள்..

“ஜீப்பை உருட்டி விடறதிலேயே குறியாய் இரு..” அவள் தலையில் செல்லமாக ஒரு கொட்டு வைத்தான் ரவிச்சந்திரன்..

‘கொட்டறதுக்கு சான்ஸ் தேடிக்கிட்டு இருந்திருப்பான் போல..’ தலையைத் தடவியபடி அவனை முறைத்தாள் நந்தினி..

“புதுசாக் கொட்டு வாங்கறதைப் போல சீன் போடாதே..” இலகுவாக சொல்லி விட்டு நடந்தான் அவன்.

தலையைத் தடவியபடி வாய்க்குள் அவனைக் கண்டபடி திட்டியபடி கூட நடந்த நந்தினிக்கு கொட்டு வாங்கிய வலியும் கோபமும் மறைந்து விட்டது.. ஒரு பக்கம் சுவர்கள் மட்டும் இருக்கும் கோட்டையாக.. மறுபக்கம் செடி கொடிகளால் சூழப்பட்ட கொடி வீடாக காட்சி தந்த கோட்டையின் அழகு அவளை அயர வைத்தது..

“வாவ்.. கொடி வீட்டைப் போலவே இருக்கில்ல..?” குதூகலத்துடன் சொன்னபடி ரவிச்சந்திரனைப் பார்த்தவள் திணறிப் போனாள்... ரவிச்சந்திரன் அவளைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான்.. ஊறுறுவும் அவனது பார்வை அவளைத் திணற வைத்தது.. அவன் முகத்தில் தெரிந்த ஏதோ ஓர் உணர்வு அவளை அலைக்கழித்தது.. சொல்லத் தெரியாத

ஒளிந்திருக்கும் அந்த உணர்வுக் கலவை அவளை ஆட்டிப் படைத்தது..

‘ஏன்..? என்னவா இருக்கும்..?’

குழம்பித் தவித்தவளுக்கு விடை கிடைக்கவேயில்லை.. அவன் இயல்பாக இருக்கும் போதே அவனைப் பார்த்தால் அவள் தடுமாறி வைப்பாள்.. இப்படிப் புரிபடாத ஊடுறுவும் பார்வையை பார்த்து வைத்தால் என்ன செய்வாள்..? இவனுக்கு அந்த அஜந்தாதான் லாயக்கு.. அவள்தான் இது போன்ற பார்வைகளைப் பயமில்லாமல் எதிர் கொள்வாள் என்று நினைக்கும் போதே அவன் அஜந்தாவை உறுத்துத்தான் பார்த்து வைப்பான்.. இது போல பார்ப்பதில்லை என்பது உறைத்தது..

‘அவளை விட்டு வைப்பான்.. என்னைத் தொட்டு வைப்பதைப் போலப் பார்த்து வைப்பானா..?’ கோபப்படத்தான் முயன்றாள்.. முடியவில்லை.. மனம் தேனாக இனித்துத் தொலைத்தது.. அது அஜந்தாவைப் போன்ற உலகப் பேரழகியை விட்டு விட்டு நந்தினியை ரவிச்சந்திரன் உற்று உற்றுப் பார்க்கிறான் என்ற பெருமிதத்தால் உண்டானதா..? இல்லை.. அவளை மட்டும் பிரத்யேகமாக ரவிச்சந்திரன்

பார்த்து வைக்கிறான் என்ற கிறக்கத்தில் உண்டானதா என்று அவளுக்கே விளங்கவில்லை..

எதுவாக இருந்தபோதிலும் ரவிச்சந்திரனின் பார்வையை அவளால் எதிர்கொள்ள முடியவில்லை.. இமைகள் படபடக்க தலை கவிழ்ந்தாள்..

அவளது விழியோடு விழி கலக்க உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த ரவிச்சந்திரனின் இதழ்களில் புன்னகை விரிந்தது.. போனால் போகிறது அவள் பிழைத்துப் போகட்டும் என்ற தினுசில்..

“உங்க ஊர்ப்பக்கம் இது போல கோட்டைகளைப் பார்த்திருக்கமாட்டாய்..” இயல்பான அவனது பேச்சில் சுவாசம் சீரானவளாக..

“நான் தஞ்சாவூர்க்காரி பாஸ்.. கோட்டைகளையும் அரண்மனைகளையும் பார்த்திருக்கேன்.. பட்.. கேரளத்துக் கோட்டை கொட்டாரங்கள் டிஃபரன்ஸல்லோ..?” என்றாள் நந்தினி..

“ஊஹூம்..” என்றவன் கொடி வீட்டைக் காட்டி..

“இதை உனக்குப் பிடிச்சிருக்கா..?” என்று கேட்டான்.

“ஏனாம்..? வாங்கித் தரப் போறீங்களா..?” அவள் துடுக்காக உதட்டை வளைத்து அழகு காட்டினாள்..

“புதுசா வாங்கித் தரனும்ங்கிற அவசியமில்லை..” மறுபடியும் புரிபடாத அதே பார்வை..

‘போடா..’ மனம் படபடக்க இடுப்பளவு சுவருடன் இருந்த கோட்டையின் பக்கம் திரும்பிக் கொண்டாள்..

“இது பேகல் போர்ட் கோட்டையைப் போல இருக்கில்ல..?”

“உனக்கும் அப்படித் தோணுதா..?” ஆச்சரியத்துடன் அவன் கேட்டான்..

“ம்ம்ம்..” தலையாட்டினாள் நந்தினி..

“இந்தக் கோட்டையைப் பார்க்கிறப்பல்லாம் அப்படியே பேகல்பூர் கோட்டையைப் போலவே இருக்குன்னு நினைத்துக்குவேன்.. அதே ஃபீலிங் உனக்கும் வந்திருக்கு.. அங்கே கடல்.. இங்கே ஆறு.. தட்’ஸ் தி டிஃபரன்ஸ்..”

“ம்ம்ம்.. இங்கே எங்கே பார்த்தாலும் ஆறுதான்..”

“மீன்முட்டி அருவிகளா இருந்தா எங்கே பார்த்தாலும் ஆறாகத்தான் இருக்கும்..”

“மீன் முட்டி அருவிகளா..? சொல்லியிருக்கீங்கள்ல..”

அவன் எப்போது அவற்றைப் பார்க்கக் கூப்பிட்டுக் கொண்டு போவான் என்று கேட்க வேண்டும் போல அவளுக்கு ஆவல் உண்டானது.. அவளாக கேட்டால் முகத்திலடிப்பதைப் போலப் பேசி விடுவான் என்ற பயத்தினால் பேசாமல் இருந்தாள்.. அவனாகவே..

“ஒருநாள் அங்கே கூப்பிட்டுக்கிட்டுப் போறேன்..” என்று சொன்னான்..

ஒருநாள் எனப்படும் அந்தத்திருநாள் என்று வரும் என்பதை எப்படி உறுதி செய்து கொள்வது என்று தெரியாமல்..

“அது எங்கேயிருக்கு..?” என்று கேட்டாள் நந்தினி..

“நீலி மலையில்..”

கிசுகிசுப்பாக ஒலித்த அவன் குரலில் நிமிர்ந்து பார்த்தாள் நந்தினி.. விசித்திரமான ஓர் ரகசியப் புன்னகையோடு அவளை விழுங்கி விடுவதைப் போல பார்த்துக் கொண்டிருந்தான் ரவிச்சந்திரன்..

‘ஆத்தாடி..’ உடல் சிலிர்க்க அரண்டு போனவளாக கோட்டையைச் சுற்றிப் பார்க்கிறேன் என்று கிளம்பி விட்டாள் நந்தினி..

பேகல் போர்ட் கோட்டையில் படமாக்கப்பட்ட ‘உயிரே.. உயிரே..’ பாடல் நினைவுக்கு வந்து தொலைத்தது.. கூடவே.. ‘இவனும் அரவிந்த சுவாமியைப் போலதான் இருந்து தொலைக்கிறான்..’ என்ற கோபமும் வந்தது..

அவன் அவளுக்கு எட்டாக்கனி, கிட்டாக்கனி என்பதினால் வந்த கோபம் அது.. இயலாமையால் வரும் கோபம்..

“என்ன யோசனை..?”

“பேகல் போர்ட் கோட்டையோட சரித்திரப் பிரசித்தத்தைப் பற்றி யோசிச்சுக்கிட்டு இருந்தேன்..”

“உயிரே, உயிரே பாட்டைப் பத்திச் சொல்கிறியா..?”

“எப்படிக் கண்டு பிடிச்சீங்க..?”

“இதுக்கு வயநாட்டு ஜோசியக்காரங்ககிட்ட சோழியை உருட்டிப் பார்த்து ஜோசியம் கேட்கனுமா..? வேற சரித்திரப் பிரசித்தத்தைப் பத்தியா நீ நினைச்சிருக்கப் போகிற..?

அதைப் பத்தி நான் என்ன சொன்னாலும் கடனேன்னு ஊம் கொட்டிட்டு உன் இன்ஜினியரிங் படிப்புக்கும் அதுக்கும் என்ன சம்பந்தம்ன்னு கேட்டிருப்ப.. உனக்கு போர் அடிக்காத இண்டரெஸ்ட்டான சரித்திர பிரசித்தம் இதுதான்னு நான் ஏற்கனெவே சொல்லியிருக்கேனே..''

'என்னை இவன் எப்படி எடை போட்டிருக்கான் பாரு..' உர்ரென்னு முகத்தை வைத்துக் கொண்டாள் நந்தினி..

''அப்படியே இஞ்சி தின்னக் குரங்கு மாதிரியே இருக்கு..'' கேலி செய்தான் ரவிச்சந்திரன்..

''உங்க பக்கத்திலே நிற்கிறேனில்ல.. அப்படித்தான் இருக்கும்..'' பதிலடி கொடுத்தாள் நந்தினி..

''அப்படியா..?'' ஊன்றிப் பார்த்து அவளைக் கலங்கடித்தவன்..

''நம்பிட்டேன்..'' என்றான் அமர்த்தலாக..

'இவனோட திமிர் இருக்கே.. அடங்கவே அடங்காது..' அடங்காத் திமிருடன் நின்றிருப்பவனை முறைத்து விட்டு உன் பேச்சு காய் என்பதைப் போல விரோதமாக முகத்தை வைத்துக் கொண்டாள் நந்தினி..

“ஒரு விஷயம் சொல்லவா..?” அவன் பழம் விட முனைந்தான்..

“கேட்க மாட்டேன்னு சொன்னா சொல்லாம விட்டிருவீங்களா..?”

“ஊஹூம்..?” அவன் புருவங்களை உயர்த்த..

‘போடா..’ என்று பல்லைக் கடித்த நந்தினி..

“என்ன பாஸ்.. ஒரு விஷயம் சொல்லட்டுமான்னு கேட்டுட்டு ‘ஊஹூம்..’ன்னு ஜகா வாங்கறிங்க..? கப்சா விட்டிங்களா, இல்லை சொல்ல வந்த உல்டா மறந்து போச்சா..?” என்று அவனைப் போலவே புருவங்களை உயர்த்தி இறக்கினாள்..

“பதிலுக்குப் பதில்..?”

அவளை ஆழ்ந்து அவன் பார்த்த பார்வைக்கு பதில் பார்வையைப் பார்க்க முடியாமல் நடுங்கிப் போனாள் நந்தினி..

‘என்ன பார்வை இது..! ஆளை இழுக்கும் பார்வை..!’

அத்தியாயம் 79

‘என்ன பார்வை..? உந்தன் பார்வை..

இடை மெலிந்தாள் இந்தப் பார்வை..!’

உணர்ந்து எழுதப்பட்ட பாடல் வரிகள்.. பெண்மையின் தவிப்பை ஆண் கவிஞன் எவ்விதம் உணர்ந்தான் என்று மனதுக்குள் கேட்டுக் கொண்டாள் நந்தினி.. கூடு விட்டுக் கூடு பாய்ந்து பெண்ணுடலில் புகுந்து அவளது உணர்வுகளை உணர்ந்து எழுதி வைத்ததைப் போலவே இருக்கிறதே.. விந்தைதான்..

“நான் பேசறதெல்லாம் கப்சா, உல்டாங்கிற..?”

அதே கண்கள் என்பதைப் போல அதே புரிபடாத பார்வையுடன் கேட்டான் ரவிச்சந்திரன்.. பதில் பேச முடியாமல் பசும் பூஞ்சை படிந்த சுவரில் விரலால் கோலமிட்டாள்.. வெகு சுவாதீனமாக அவளருகில் சென்றான்.. பயந்து பின் வாங்கினாள்.. அவன் நின்று விட்டான்..

“அப்படியொன்னும் நான் சொல்லலை..” நந்தினி முணுமுணுத்தாள்..

“அப்போ நான் உண்மை விளம்பிங்கிறதை ஒப்புக்கற..?” கேலி போல் அவன் வினவியதில் நிம்மதியாகி விட்ட நந்தினி பயத்துடன் விழிகளை உயர்த்தி அவனைப் பார்த்தாள்..

“என்ன..?” அவன் இயல்பாக புன்னகைத்ததில் உற்சாகமானாள்..

“நீங்க..? உண்மை விளம்பி..?”

“யெஸ்.. நான் உன் பாஸ்..”

“அதை மறந்துட்டேனில்ல.. நீங்க என் பாஸ்.. ஸோ.. நிச்சயமாக நீங்க உண்மை விளம்பியேதான்.. ஐ அக்ரி பாஸ்..”

“பிழைத்துக்குவ..?”

நந்தினி சிரித்தபடி கோட்டையின் சுவர்களைச் சுற்றி வந்தாள்..

“உயிரே..! உயிரே..!

வந்து என்னோடு கலந்து விடு..”

பாடல் ஒலித்தது.. என்னடா இது என்று திரும்பிப் பார்த்தாள்.. ரவிச்சந்திரன் அவளைப் பார்த்துப் பாடிக் கொண்டிருந்ததில் உதட்டைக் கடித்தாள்..

‘ஓர் பார்வை பார்த்தால்

உயிர் கொள்ளும் பெண்மை

வாராமல் போய் விடுமா..?’

மனதுக்குள் கேட்டுக் கொண்டாள்.. ரவிச்சந்திரனின் துளைக்கும் பார்வையில் சலனம் கொண்டு தவிர்த்தாள்.. ரவிச்சந்திரனின் பார்வை அவளையே சுற்றி வந்தது.. அவளோ கோட்டையைச் சுற்றி வந்தாள்.. அருகில் வந்த ரவிச்சந்திரன்..

“பேச மாட்டியா..?” என்றான் கொஞ்சலாக..

நந்தினியால் அந்த உணர்வுப் போராட்டத்தைத் தாங்க முடியவில்லை..

“என்னத்தைப் பேசச் சொல்கிறீங்க..?” என்று சிடுசிடுத்தாள்.

“கொஞ்சிப் பேசு..” என்றான் அவன்..

‘நிஜமாத்தான் சொல்கிறானா..?’

அவன் முகத்தைப் பார்த்து அவளால் எதையும் கண்டு பிடிக்க முடியவில்லை.. இவனிடம் வேலை பார்க்க வந்தது தப்பு என்று பயந்தாள்.. அவனைப் பிரிந்து சென்னைக்குத் திரும்ப வேண்டும் என்று நினைத்தாலும் மனம் வலித்தது.. அது என்ன கழுதைக்கு என்றும் பிடிபட்டுத் தொலைக்கவில்லை..

காந்தமென இழுக்கும் கவர்ச்சிகரமான அழகு கொண்டவனிடமா அவள் அடைக்கலம் கேட்டுத் தொலைக்க வேண்டும்..?

அவன் அவளுக்கு அடைக்கலம் கொடுத்திருப் பவனாக மட்டுமில்லாமல் ஆளை மயக்கித் தொலைப் பவனாகவும் இருந்து தொலைக்கிறானே.. நீயே எனக்கு எல்லாமும் என்று அவனிடம் சரணடைந்து விடுவோமோ என்று பயந்து நடுங்கினாள் நந்தினி.. என்னவோ அவனை விட்டுத் தொலைதூரத்திற்கு ஓடப் போகிறவளைப் போல ஜீப்பைப் பார்த்து ஓடினாள்.. விசித்திரப் புன்னகையுடன் அவளைத் தொடர்ந்தான் ரவிச்சந்திரன்.. ஜீப்பில் ஏறி அதைக் கிளப்பியபடி அவளைப் பார்த்தான்.. பிடிவாதமாக அவன் பக்கம் திரும்பாமல் சாலையைப் பார்த்துக் கொண்டிருந்தாள் நந்தினி..

படபடத்த இமைகள் குடை போல அடர்ந்திருக்க அகன்ற பெரிய விழிகளில் அச்சத்தை த் தேக்கியிருந்தவளைப் பார்த்தபடி..

“கொஞ்சிப் பேசிட வேணாம்..

உன் கண்ணே பேசுதடி..”

என்று பாட ஆரம்பித்தான் ரவிச்சந்திரன்.. சடுதியில் திரும்பிப் பார்த்தவளின் பார்வையை கொக்கு போலக் காத்திருந்த அவனது பார்வை பாய்ந்து கவ்விக் கொண்டது.. விடுபட முடியாத மாய வலைக்குள் சிக்கிக் கொண்டதைப் போன்ற மயக்கத்தில் ஆழ்ந்தாள் நந்தினி..

“கொஞ்சிப் பேசிட வேணாம்..

உன் கண்ணே பேசுதடி..

கொஞ்சமாக பார்த்தால்..

மழைசாரல் வீசுதடி..”

ஜீப்பை ஓட்ட ஆரம்பித்தான் ரவிச்சந்திரன்.. மழை பொழியும் வயநாட்டின் மழைச்சாரல் நந்தினியின் முகத்தில் தெறித்தது..

குளிர் நிரம்பிய ஈரக்காற்று உடலில் மோத வியர்வை என்பதே இல்லாத கேரளாவின் சூழலுக்குள் புதைந்தாள் நந்தினி..

“நா நின்னா நடந்தாக் கண்ணு..

உன் முகமே கேட்குதடி..

அடி தொலைவில் இருந்தாத்தானே

பெருங்காதல் கூடுதடி..

கொஞ்சிப் பேசிட வேணாம்..

உன் கண்ணே பேசுதடி..”

உல்லாசமாக பாடியவனின் பாடலில் குழைந்து தன் வயமிழந்தாள் நந்தினி.. அவன் அவளுக்கு வேலை கொடுத்திருக்கும் முதலாளி என்பதே அவளுக்கு மறந்து விட்டது.. கேரளத்து வயநாட்டின் மலைபாதையில் அவளும் அவனும் மட்டும் ஜீப்பில் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது மட்டுமே நினைவில் நின்றது..

அது முடிவில்லாத பயணமாக இருக்க வேண்டும் என்று அவள் விரும்பினாள்.. அவளையும் அவனையும் பயணங்கள்தான் அருகிலிருத்துகிறது என்பதில் அவள் பயணங்களை

விரும்பினாள்.. முதலில் சென்னைக்கும்

கோழிக்கோடிற்குமான ரயில் பயணம்... அடுத்து

கோழிக்கோடிலிருந்து வயநாட்டுக்கு காரில் பயணம்..

இப்போது சேரளத்து எஸ்டேட்டை நோக்கி ஜீப்பில் பயணம்..

“தூரமே தூரமாய் போகும் நேரம்..

ஆசை வலையிடுதா..?

நெஞ்சம் அதில் விழுதா..?

எழுந்திடும் போதும் அன்பே..

மீண்டும் விழுந்திடுதா..?”

அவளது மனதைப் படித்தவனைப் போல பாடி வைத்தான் ரவிச்சந்திரன்.. நந்தினியின் உணர்வுகள் அலை கடலாய் கொந்தளித்தன.. அவனுக்கும் அவளுக்கும் இடையில் பெரும்

அகழியிருப்பதைப் போல அதைக் கடந்து விடும் உன்மத்தம் கொண்டவளாய் பரிதவிப்புடன் அவனைப் பார்த்தாள்.. தனித்திருக்கும் துக்கம் அவள் பார்வையில் ததும்பியது..

“தனிமை உனைச் சுடுதா..?

நினைவில் அனல் தருதா..?

தலையணைப் பூக்களில் எல்லாம்..

கூந்தல் மணம் வருதா..?”

அவனது புருவங்கள் உயர்ந்து இறங்கியதில் கிளர்ச்சியடைந்தாள் நந்தினி.. உதட்டைக் கடித்தபடி தலையைச் சாய்த்து அவனை குறுகுறுவென பார்த்து வைத்தாள்..

“குறுகுறு பார்வையில்

கொஞ்சம் கடத்தறியே..

குளிருக்கும் நெருப்புக்கும்

நடுவில் நிறுத்தறியே..”

நந்தினி சீட்டில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள்.. அவன் முகம் பார்க்க பயமாக இருந்தது.. அவளையுமறியாமல் அவன் கழுத்தைக் கட்டி முகமெங்கும் முத்தங்களைப் பதித்து விடுவாளோ என்ற பயம் தகித்தது.. அதற்கேற்றாற் போல அவன்..

“வேறு என்ன வேணும்..?

மேக மழை வேணும்..?

சத்தமில்லா முத்தம் தரவேணும்..”

என்று பாடி வைத்ததில் காதுகளில் விரல்களை நுழைத்து அசைத்துக் கொண்டாள்.. வாய் விட்டுச் சிரித்த ரவிச்சந்திரன்..

“என் பாட்டு அந்த அளவுக்கு மட்டக் கேவலமா இருக்கு..?” என்றான்..

நந்தினி பதில் பேசவில்லை.. அவன் பாடுவதை நிறுத்தி விட்டுச் சீழ்க்கையடிக்க ஆரம்பித்தான்.. உலகத்தில் உள்ள அத்தனை நகரங்களிலும் கால் பதித்து தொழில் நிறுவனங்களை அமைத்திருக்கும் உலகப் பிரபலமான அந்தக் கோடிஸ்வர அழகனை வியப்புடன் பார்த்தாள் நந்தினி.. அவன் முகமூடியைக் கழற்றி வைத்திருக்கிறான் என்று அவளுக்குத் தோன்றியது..

சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷனின் முதன் முதலாக அவனைப் பார்த்தபோது ராஜ கம்பீரத்துடன் அவன் நடந்து வந்த தோரணை நினைவுக்கு வந்தது.. கோழிக் கோடின் ‘யாழ்..’ ஹோட்டலிலும் அப்படித்தான் இருந்தான்... ரோஸியிடம் பேசும் போதும் கடினமான முகத்துடன் தோரனை காட்டினான்..

நந்தினியின் முன்னிலையில் மட்டும் அவன் இயல்பாக இருந்ததில் அவளுக்குள் பெருமை வந்தது.. அவனது பின்புலத்தைப் பற்றிய அடையாளங்களைத் தவிர்த்து அவன் அவனாக இருந்ததினால்தான் அவளால் அவனுடன் இயல்பாக பேசிப்பழக முடிந்தது... அவன் அவ்வபோது தோரணை காட்டி அதட்டினாலும் பெரும்பான்மையான நேரங்களில் அவளுடன் இணக்கமாகத்தான் பேசிப் பழகினான்.. என்பதை நினைவு கூர்ந்தாள்..

தூரத்தில் ஆர்ச் போன்று தெரிந்த வளைவில் சேரளம் எஸ்டேட் என்ற எழுத்துக்கள் தங்க நிறத்தில் பெரிதாக ஒளிர்ந்தன.. சீனப் பெருஞ்சுவரைப் போல மலையில் வளைந்து நெளிந்து ஓடிய சுவரைக் கண்ட நந்தினி பிரமித்தாள்.. கங்கு கரையில்லாத செல்வம் கொண்டவர் களால்தான் இதுபோன்ற சுவரை எழுப்ப முடியும்..

ரவிச்சந்திரனின் முன்னிலையில் அவள் புள்ளியாகக் கூட இல்லாமல் காணாமல் போய்விட்டதைப் போன்ற தாழ்வுணர்வு நந்தினிக்குள் உண்டானது.. அவளுடைய அப்பாவும் பணக்காரர்தான்.. அவரால் ரவிச்சந்திரனின் நிழலைக்கூடத் தொடமுடியாது என்பதுதான் உண்மை..

எதிர்காற்றில் முடி பறக்க உற்சாகமாக சீழ்க்கையடித்துக் கொண்டிருந்த ரவிச்சந்திரன் அவளைத் திரும்பிப் பார்த்துச் சிரித்தான்... அவள் மனதைக் கொள்ளையடித்த அந்தச் சிரிப்பில் தொலைந்து போனாள் நந்தினி.. எட்டாத உயரத்தில், தொலைதூர தொடுவானில் நட்சத்திரம் போலக் கண்சிமிட்டி மயக்குபவன் அவன் என்பதை மறந்து கரைந்து போனாள்.. அவன் முகத்தை விட்டுப் பார்வையை அகற்ற முடியாமல் திணறினாள்..

“எஸ்டேட் வந்தாச்சு..” என்றான் ரவிச்சந்திரன்..

‘இதுதான் நான் வேலை பார்க்கப் போகிற எஸ்டேட்டா..?’ புதிதாக வேலைக்குச் சேர்ந்திருப்பவளின் பரபரப்போடு சுற்றிலும் பார்த்தாள் நந்தினி.. சுற்றி வளைத்த சுவருடன் கூடிய ஆர்ச் வளைவு சேரளம் எஸ்டேட் உங்களை வரவேற்கிறது என்றது.. எஸ்டேட்டுக்குள் ஜீப் நுழைந்தது..

தேயிலை பாத்திகள், பழ மரங்கள், காய்கறித் தோட்டங்கள் என்று அங்கு தனி சாம்ராஜ்யமே உயிர்ப்புடன் இயங்கிக் கொண்டிருந்தது.. மலைச்சரிவில் வரிசை கட்டிய குடியிருப்புகள்.. அவை எஸ்டேட்டில் வேலை

பார்ப்பவர்களுக்காக கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள வீடுகளாம்.. ரவிச்சந்திரன் கூறினான்..

“இவங்களுக்காக, ஸ்கூல், ஹாஸ்பிடல், கோவில்ன்னு எல்லாமும் இங்கே இருக்கு..” தொடர்ந்து சொன்னான்..

“காலேஜ்..”

“ஸ்கூல் படிப்பு முடிஞ்சதும் காலேஜுக்கு வெளியே போய் படிப்பாங்க.. அதுக்கு ஸ்காலர்ஷிப் கொடுத்துக்கிட்டு இருக்கேன்..”

“பரவாயில்லையே..”

“உன்னிடம் சர்டிஃபிகேட் கேட்கலை..”

உடனடியாக மூக்குடைபட்டதில் வாயை மூடிக் கொண்டாள்.. அவன்தான் எந்த நேரம் எதைப் பேசித் தொலைப்பான் என்று தெரியவில்லையே.. ரவிச்சந்திரனின் முகம் கடினமாகி இருந்தது.. முகமூடியை மாட்டிக் கொண்டு விட்டான் என்று நினைத்துக் கொண்டாள்.. இது எதற்கு என்று சலிப்பாக இருந்தது.. எப்போதும் முதலாளி போல இருந்து தொலைக்க வேண்டியதுதானே..? அவளுடன் சரசமாடச் சொல்லி அவளா கேட்டாள்..? சற்று நேரத்திற்கு

முன்னால்தான் கொஞ்சிப் பேசிட வேணாம், உன் கண்கள் பேசுதடி என்று கொஞ்சிக் கொஞ்சிப் பாடினான்.. இப்போது என்னவென்றால் அந்தப் பாலைப் பாடியது அவனில்லை என்பதைப் போல கடுகடுவென முகத்தை வைத்துக் கொள்கிறான்..

‘சார் முதலாளியாமாம்..’

சிரித்த முகத்தைப் பார்த்த கண்களால் கடுகடுத்த முகத்தைப் பார்க்க மாட்டேன் என்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.. நேர்த்தியாக கட்டப்பட்டிருந்த கட்டிடக் குவியல்களின் மத்தியில் ஜீப் நின்றது.. படு ஸ்டைலாக முடியை ஒதுக்கி விட்டபடி இறங்கிய ரவிச்சந்திரனை தேயிலை பறிக்கும் இளம்பெண்களின் கூட்டம் ஒளிந்து மறைந்து பார்த்தது..

‘பாவம்.. அவர்களுக்கு இவன் எட்டாக்கனி..!’

கூலிங்க கிளாஸை மாட்டிக் கொண்ட வனைப் பார்வையிட்டாள் நந்தினி.. ஜீன்ஸும் சர்ட்டும் அதற்கு மேல் ஸ்வெட்டருமாக அசத்தலாக இருந்தான்..

‘உனக்கு மட்டும் இவன் எட்டும் கனியா..?’

அவளது உள் நெஞ்சம் கேட்டதில் சோர்ந்து போனாள்.. ஜீப்பில் கூட வந்து இறங்கியதால் மட்டும் அவன்மீது அவள் உரிமை கொண்டாடி விட முடியுமா..?

அவளுடன் சேர்ந்து நடப்பதைத் தவிர்த்து அவன் விரைந்து நடப்பதைக் கவனித்தவளின் மனம் அதிர்ந்தது.. தனிமையில் ஓர் முகமும்... மற்றவர்களின் முன்னால் வேறொரு முகமுமாக அவன் பேசிப் பழகுவதை உணர்ந்தாள்..

‘ஸ்டேட்டஸ் பார்க்கிறான்..’

நந்தினி மிகவும் பின்தங்கி நடந்தாள்.. அவளது தன்மானம் அடி வாங்கியது.. திருமண விவகாரம் சரியான மறுநொடியே வயநாட்டை விட்டு ஓடிவிட வேண்டும் என்று தீர்மானித்தாள்.. இது போன்ற உதாசீனங்களுக்கு அவள் பழகியவளல்ல.. புறக்கணிப்பு என்பது மிகப்பெரும் கொடுமை.. ரவிச்சந்திரன் சற்றும் இரக்கமின்றி அவளுக்கு அக்கொடுமையை இழைத்துக் கொண்டிருக்கிறான்.

“மலரே...! நின்னைக் காணாதிருந்தால்..

மிழிவேகிய நிறாமெல்லாம் மாயுண்ண போலே..”

கரகரத்த ஆண்குரலின் பாடலில்..

'இது பிரேமம் படப் பாட்டாச்சே..' என்று நந்தினி சுற்றுமுற்றும் பார்த்தாள்..

"இத்தினி வல்லிய சுந்தரியின ஈ எஸ்டேட்டில கண்டதில்லோ.." கல்லூரி மாணவனைப் போன்ற தோற்றத்துடன் இருந்தான் அந்த இளைஞன்.. நந்தினியை ஆர்வமாக பார்த்தான்.. அவனது பார்வையில் புருவங்கள் சுருக்கி நந்தினி சிரித்தாள்.. அவளது சிரிப்பில் அந்த இளைஞன் பிரகாசமானான்..

"நிங்கள் ஆரானு..?"

"ஃபர்ஸ்ட், நீ யாருன்னு சொல்லு.."

"ஞான் மோகனாக்கும்.."

"மோகனாக்கும்ன்னு ஒரு பெயரா..? நான் கேட்டதேயில்லையே.."

"அல்ல.. எண்ட பேரு மோகன்.."

"அப்படிச் சொன்னாத்தானே தெரியும்..?"

நந்தினி தலையைச் சாய்த்துச் சிரித்த சிரிப்பு.. அன்றுதான் மலர்ந்த மலரொன்று சிரிப்பதைப் போல அவனுக்குத் தோன்றி

வைத்தது.. கண்கள் ஜ்வலிக்க அவன் நந்தினியைப் பார்க்க.. அவர்கள் இருவரையும் ரவிச்சந்திரன் பார்த்து வைத்தான்..

அத்தியாயம் 80

தன் வயதுடைய தோழனிடம் பேசிப் பழகும் இயல்புடன்தான் நந்தினி மோகனிடம் பேசினாள்.. அப்போதுதான் கல்லூரியை விட்டு வெளியே வந்திருந்தவள்.. ரவிச்சந்திரனின் ஆளுமை நிரம்பிய பேச்சிலும்.. இன்னதென்று புரிபடாத முரணான அவனது இயல்பிலும் மன இறுக்கத்துடன் இருந்தவளுக்கு அவளைப் போன்ற துறுதுறுப்புடன் ஓர் இளைஞனைப் பார்த்ததும் பேச்சில் நின்று விட்டாள்..

"எண்ட பேர ஞான் பறஞ்சிட்டே.. மேடமோட பேரு எந்தா..? சுந்தரியோ..?"

"அதுசரி.. மலையாள தேசத்தில கொஞ்சம் பார்க்கிறதைப் போலப் பெண்ணைக் கண்டிட்டா சுந்தரின்னு சொல்லிருவீங்களோ..? அப்புறம் மேடம்ன்னு என் வயசைக் கூட்டாதே.. நானும் உன் போலதான்.. ஜஸ்ட் ஒன் மன்த்துக்கு முன்னாலேதான் ஃபைனல் இயர் எக்ஸாம்ஸை எழுதி முடிச்சேன்.. நந்தினின்னே என்னைக் கூப்பிடலாம்.."

"ஓ.. ஞான் ஃபோர்த் இயர் ஸ்டூடண்டல்லோ.."

“அப்படின்னா அக்கான்னு கூப்பிடு..”

நந்தகுமாரின் நினைவு வந்து விட்டதில் நந்தினிக்கு தொண்டை கமறியது.. அவள் ஒளிந்து கொண்டதை அறிந்ததும் என்ன நினைத்திருப்பான்..? அவள் செய்ததை தவறு என்று நினைத்திருப்பானோ..?

“அக்கா..? யு மீன் சேச்சி..?”

“யெஸ்..”

“வளர நன்னாயிண்டு..? வல்லிய சுந்தரிய சேச்சிண்டு ஞான் பறயனுமோ..? எந்துக்கு..? அத்தினி வல்லிய மனசு எனக்கில்லா.. அறியனும்.. நிங்கள ஞான் நந்தினி மேடமெண்டே விளிக்கட்டே..?”

“விளிச்சுக்க.. எனக்கென் நஷ்டம்..? சொல்லு..”

“எவுருந்து நிங்கள் வருந்நூ..?”

“ஊம்..?”

“நந்தினி மேடத்தோட ஊரு எதா..? ஞான் அறிஞ் ..?”

“தஞ்சாவூர்..”

“வல்லிய ஊரல்லோ..”

“உனக்கெப்படித் தெரியும்..?”

“எண்ட காலேஜில லாஸ்ட் இயர் தமிழ்நாட்டுக்கு டூர் போயி..”

“ஓ..”

கேரளத்து மக்களின் மலையாளம் வந்ததோ இல்லையோ.. அவர்கள் எழுப்பும் ‘ஓ’ என்ற ஓசை மட்டும் சங்கீதமாக நந்தினியிடம் ஒட்டிக் கொண்டிருந்தது.. எதற்கெடுத்தாலும்

‘ஓ..’ போடக் கற்றுக் கொண்டிருந்தாள்.. உதட்டைக் குவித்து, அவள் ‘ஓ’ போட்ட அழகு மோகனை வசீகரித்திருக்க வேண்டும்.. அவனது கண்களில் ஓர் ஆவல் பளிச்சிட்டது..

‘என்னடா இது..! இவன் இப்படிப் பார்த்து வைக்கிறான்..’ நந்தினி உஷாராக முயன்ற போது..

“நிங்கள் ‘ஓ’ போடறது வல்லிய சேலல்லோ..” என்றான் அவன்..

“சேலா..?”

நந்தினிக்குத் தன் செவிகளின்மீது சந்தேகம் வந்தது.. ‘சேவல் என்பதை அவள் ‘சேல்’ என்று கேட்டு வைத்தாளோ..?’

‘பட் சேவல்ன்னு ஏன் என்கிட்ட வந்து சொல்லனும்..? கோழின்னு சொன்னால் கூடக் கேட்டுக்கலாம்..’

“சேல்ன்னா பியூட்டின்னு மீனிங்.. நீ ஓ போடறது ரொம்ப அழகாயிருக்குன்னு இவன் ஜொள்ளரான்..” என்ற ரவிச்சந்திரனின் கோபக் குரலில் அரண்டு திரும்பினாள்.. ரவிச்சந்திரனின் தீட்சண்யம் மிகுந்த கண்களில் கோபம் கொந்தளித்துக் கொண்டிருந்தது.. ரௌத்ரம் மிகுந்த அவனது தோற்றத்தில் நந்தினி நடுங்கி விட்டாள்..

‘இப்ப நான் என்ன செய்துட்டேன்னு இப்படிக் கோபப்படறான்..?’ அவள் மனம் முரண்டியது..

“குட்மார்னிங் சார்..” அவசரமாக காலை வணக்கம் சொன்னான் மோகன்..

“இவ்விடத்தே எந்து ஜோலி..? காலேஜ் போகலை..?”

“ஈ திவசம் காலேஜ் லீவ் சார்..”

“அதானு நீ ஜோலியேதும் இல்லாம வெட்டி அரட்டை பறயாண்டாம்.. கேட்டோ.. அகத்துல, புறத்துல உள்ள ஜோலியப் பாக்கனும்.. அறிஞ் ..?”

“அறிஞ்ஞான் சார்..” தலையாட்டிய மோகன் நந்தினியிடம்..

“ஞான் வரட்டே...” என்று வெகுநாள்கள் பழகியவனைப் போல சிநேகிதத்துடன் சொன்னான்..

“பை..” ரவிச்சந்திரனின் முறைப்பை மறந்து கையாட்டி விடை கொடுத்தாள் நந்தினி..

சைக்கிளின் மீது தாவியேறிய மோகன் அதை ராயல் என்ஃபீல்டைப் போலப் பாவித்து ஓட்டியபடி..

“மலரே நின்னைக் காணாதிருந்தால்..” என்று பாடியபடி சைக்கிளோட்டிப் போனான்..

“ஸ்மார்ட் பாய்..” அவன் சென்று மறைந்த திசையைப் பார்த்தபடி முணுமுணுத்தாள் நந்தினி. .

“ஸ்மார்ட் பாய்ன்னா கூடவே போயிருக்க வேண்டியது தானே..?” நிஷ்டூரமாக கேட்டு வைத்தான் ரவிச்சந்திரன்..

“வாட்..?” நெருப்புப் பட்டத் துடிப்புடன் அவனை ஏறிட்டுப் பார்த்தாள் நந்தினி..

“இது சென்னையில்லை.. வயநாடு..”

“அதுக்கு..? இப்படித்தான் பேசுவீங்களா..?”

“வேற எப்படிப் பேசச் சொல்ற..? வேலை பார்க்கத்தானே வந்திருக்க..? காதலிக்க வரலையே..”

“ரப்பிஷ்..! நீங்க முதலாளியா இருந்தா எதை வேணும்னாலும் பேசிடுவீங்களா..? மைண்ட் யுவர் வொர்டுஸ்..”

“மைண்ட் யுவர் பிகேவியர்.. ஃபர்ஸ்ட் டே ஆபிஸ் வந்தா என்ன வேலைன்னு தெரிஞ்சுக்க நினைப்பாங்கன்னு கண்டிருக்கேன்.. இப்படி விடலைப் பையனோடு கடலை போட நிக்கிறவங்களைக் கண்டதில்லை.. ச்சே..! ஆர் யு அஷேம்டு எபௌட் இட்..?”

“ஸ்டாப் திஸ் நான்சென்ஸ் ஐ ஸே..”

நந்தினியின் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.. ரவிச்சந்திரன் கோபாவேகத்துடன் இருந்தான்.. அவன்

பேசுவது நியாயம் என்ற விதத்தில் விட்டுக் கொடுக்காமல் பேசி அவள் மனதை புண்ணாக்கினான்..

“உங்க புத்தி இப்படித்தான் நினைத்து வைக்கும் சார்.. உங்களைப் போலவே மத்தவங்களையும் நினைக்கக் கூடாது.. யதார்த்தமா பேசிப் பழகுகிறவங்களும் இருப்பாங்க.. மைண்ட் இட்..” படபடத்த நந்தினியின் கண்களில் உணர்ச்சி வசப்பட்டதினால் கண்ணீர் நிரம்பிவிட்டது..

“என் புத்தி என்ன புத்தி..?” அழுத்தமான குரலில் வினவினான் ரவிச்சந்திரன்.. வேட்டையாடும் சிங்கத்தின் கோபம் அவன் விழிகளில் தென்பட்டது..

நந்தினியால் பதில் சொல்ல முடியவில்லை.. நீ பலரிடம் பலவிதமாகப் பழகுகிறாய்.. உன்னைப் போல நானில்லை என்று எப்படி அவளால் பட்டவர்த்தனமாகச் சொல்ல முடியும்..?

“வேண்டாம் சார்.. உங்களுக்கு என்னைப் பிடிக்கலை.. அதுதான் நிஜம்.. வேண்டாத ஸ்டாப் கை பட்டாலும் குற்றம்.. கால் ப்டடாலும் குற்றம்.. தொட்ட தெற்கெல்லாம் நீங்க குற்றம் கண்டு பிடிக்கறிங்க... என்னால் இப்படிப்பட்ட பேச்சுக்களையெல்லாம் கேட்டுக் கொண்டிருக்க முடியாது..

நான் போறேன்..” நந்தினி கண்ணைக் கசக்கிக் கொண்டு கிளம்பி விட்டாள்..

ரவிச்சந்திரன் பயங்கரமாய் முறைத்த விதத்தில் அவளது முதுகுத் தண்டு ஜில்லிட்டது.. அவளுக்குள் குளிர் பரவியது.. அவன் கோபத்தை வெளிப்படுத்தும் விதம் அவளை அச்சுறுத்தியது.. இதுபோன்ற கோபங்களுக்கு அவள் பழகியவளில்லை.. மேகநாதன் கண்டிப்பானவர் தான்.. கோபப்பட மாட்டார்.. கோபப் படுவதைப் போல நடிப்பார்..

“சும்மா உதார் காட்டறார்..” என்பான் நந்தகுமார்.. ரவிச்சந்திரனைக் கண்ட நொடி முதல் இந்த நொடி வரை அவன் வெளிப்படுத்தும் கோபத்தில் அவள் புயலில் சிக்கிய பூங்கொடியாய் நடுங்கிப் போனாள்.. விரும்பாத திருமணத்திலிருந்து தப்பிக்க இப்படியொரு கோபக்காரனிடம் வந்து மாட்டிக் கொண்டோமே என்று மறுகினாள்..

“போறியா..? எங்கே போற..?”

“எங்கேயோ..”

“இதை.. இதை.. இதைத்தான் நான் நினைத்தேன்.. உனக்கு நான் பொறுப்புன்னு வினித்திடம் வாக்குக் கொடுத்திருக்கேன்.. நீ எங்கேயாவது போய்த்

தொலைத்தீன்னா உன்னைச் சேர்ந்தவங்களுக்கு யார் பதில் சொல்கிறது..?”

‘இதுதான் விஷயமா..? இதுக்காகத்தான் கோழிக் கோடில இருந்து கிளம்பினவளை ஆறுதல் சொல்லித் தோளில் சாய்த்து அணைத்துத் தட்டிக் கொடுத்து நிறுத்தி வைச்சானோ.. நான் என்னவோ எனக்காக இவன் மனசில சாப்ட் கார்னர் இருக்குதோன்னு தடுமாறிக் கிட்டு இருக்கேன்..’ நந்தினியின் மனதில் வெறுமை சூழ்ந்தது..

அந்த நொடியில் யாருமில்லாத அநாதையைப் போலத் தன்னை உணர்ந்தாள்.. அவள் மனதில் தனிமை கவிந்தது..

“போகனும்ன்னு நினைத்தேன்னா சொல்லு.. வினித்திடம் கேட்டு உன் வீட்டு அட்ரஸ்ஸை வாங்கி உன்னைக் கைபிடியாய் பிடித்து இழுத்துக்கிட்டுப் போய் உன் வீட்டாரிடம் ஒப்படைத்துட்டு வந்துடறேன்.. எனக்கும் நிம்மதியாய் இருக்கும்.. எப்போப்பாரு, நைநைன்னு கண்ணைக் கசச்கிக்கிட்டு.. இம்சை.. ஒரு வேலையை ஒழுங்காய்ப் பார்க்க முடியலை.. உன்னைக் காவல் காக்கிறதே வேலையாய் போச்சு.. என்னை யாருன்னு நினைத்த..?” அதட்டினான் ரவிச்சந்திரன்..

“ஆள் மயக்கின்னு நினைத்தேன்..” வாய்க்குள் முணுமுணுத்தாள் நந்தினி..

“என்ன..? என்ன சொன்ன..?”

புருவங்களைச் சுருக்கி அவன் கேட்ட விதம் அவளது முணுமுணுப்பை அவன் கேட்டு விட்டான் என்பதைப் புலப்படுத்தியது..

“சொன்னேன்.. சுரைக்காய்க்கு உப்பில்லைன்னு..”

“சுரைக்காயா..?”

“சுரைக்காய்தான் பாஸ்.. அதெல்லாம் உங்க ஸ்டார் ஹோட்டலில் அகப்படாத காய் பாஸ்.. எங்களை மாதிரி அப்பிராணிச் சாப்பிடுகிற காய்..”

“யார்..? நீ..? அப்பிராணி..? ரொம்பப் பேர் நம்புவாங்க..”

“யார் நம்பறாங்களோ இல்லையோ.. நிச்சயமா நீங்க நம்ப மாட்டிங்க பாஸ்.. அப்பிராணியா இருக்கப் போய்த்தான் சிங்கத்தோட கூண்டுக்குள்ள வேலை பார்க்க வர்றேன் பேர்வழின்னு மாட்டிக்கிட்டு முழிக்கறேன்..”

“இதை என்னன்னு எடுத்துக்கிறது..? என்னை சிங்கம்ன்னு நீ அட்மைர் பண்றேன்னு எடுத்துக்கிறதா.. இல்லை என் எஸ்டேட்டை சிங்கத்தோட கூண்டுன்னு நீ டேமேஜ் பண்றேன்னு எடுத்துக்கிறதா..?”

“எப்படியோ எடுத்துக்கங்க.. ஆளை விடுங்க சாமி.. உங்ககிட்ட மாட்டிக்கிட்டுத் தவியாய் தவிக்கிறேன்..”

“ஆளை விடவா..?”

அவனது பார்வை அளவெடுப்பதைப் போல அவளை உச்சி முதல் உள்ளங்கால்வரைப் பார்த்து வைத்தது.. ஆளை ஊடுறுவும் அந்த லேசர் பார்வையில் கதி கலங்கிப் போனாள் நந்தினி..

‘என்னத்துக்கு இப்படிப் பார்த்துத் தொலைக்கிறான்..? ஒண்ணும் சரியில்லையே..’

“விட முடியாதுன்னா என்ன செய்வ..? ம்ம்ம்..?”

அவன் வசீகரமாகப் புருவங்களை உயர்த்தி அவளை இம்சித்தான்..

‘இதில இவனை நான் இம்சிக்கிறேனாம்.. போடா டேய்..’

“துப்பாக்கியைத் தூக்கிடுவியோ..?”

“அதையெதுக்கு தேவையில்லாம தூக்கச் சொல்கிறீங்க.. தஞ்சாவூர்க்காரிக்கு வீணையைத் தூக்கித்தான் பழக்கம்.. துப்பாக்கின்னா என்னன்னே எங்களுக்குத் தெரியாது.. நானே துப்பாக்கி வைச்சிருக்கான்னு பயந்துக்கிட்டு மாப்பிள்ளையையே வேணாம்ன்னு சொல்லிட்டு ஓடி வந்து உங்களிடம் மாட்டியிருக்கேன்.. இதில இவர்கிட்டத் துப்பாக்கியைத் தூக்கிக்கிட்டு சண்டைக்குப் போவேனாம்.. அந்த அளவுக்கு வொர்த்தான ஆள் நானில்ல சார்..”

“தெரியுதில்ல.. அதனால வந்த இடத்தில வாயை மூடிக்கிட்டு ‘வேலையை மட்டும்’ பார்த்துட்டுப் போய்கிட்டே இருக்கனம்.. அண்டர்ஸ்டாண்ட்..?”

‘வேலையை மட்டும்..’ என்று அந்த வார்த்தைகளுக்கு மட்டும் அவன் அழுத்தம் கொடுத்த விதத்தில் கொதித்துப் போன நந்தினி..

“எதுக்கெடுத்தாலும் அண்டர்ஸ்டாண்ட்ன்னு அடுத்தவங்களையே அரட்டிக்கிட்டு இருக்கக் கூடாது சாரே.. மத்தவங்க மனசையும் நீங்க புரிந்துக்கனும்..” என்று படபடத்தாள்..

“உன் மனதை.. நான் புரிந்துக்கனும்..?”

“ஏன்..? அதிலென்ன தப்புங்கிறேன்..? முதலாளிகள் மனதைத்தான் புரிந்து வைத்துக்கனுமா..? முதலாளிகளும் மத்தவங்க மனசைப் புரிஞ்சுக்க முயற்சி பண்ணனும்..”

“என்ன தேவைக்கு..?”

மதர்ப்பாக அவன் கேள்வி கேட்ட தொனி அவளை உசுப்பி விட்டது.. என்ன திமிர் என்று பல்லைக் கடித்தாள்..

“அதுதானே.. உங்களுக்கு என்ன தேவையிருக்கு..? மத்தவங்களுக்குத்தான் உங்களிடம் சம்பளம் வாங்கிப் பிழைக்கனும்ங்கிற தேவையிருக்கு..”

“தெரிந்தால் சரி..” திமிரான அவனது பதில் அவளது ஆத்திரத்தை அதிகரித்து வைத்தது..

“பட் ஒன்திங் சார்.. உங்களிடம் வேலை பார்க்கிகற மத்தவளுக்கு வேண்டும்ன்னா உங்களைப் புரிந்துக்கிட்டு உங்களிடம் வேலை பார்க்கனும்ங்கிற தேவையிருக்கலாம்.. எனக்கு அப்படியில்லை.. சூழ்நிலையாலே உங்களிடம் வேலை பார்க்க வந்திருக்கேன்.. இது மட்டும் சரியாகிருச்சுன்னா உங்களைத் திரும்பிக் கூடப் பார்க்காம என் வழியில் போய்கிட்டே இருப்பேன்.. அண்டர்ஸ்டாண்ட்..?” உதடுகள் துடிதுடிக்க அவள் பொருமினாள்.. இமைக்காமல்

அவன் பார்த்த பார்வையில் குற்றச்சாட்டு இருந்தது.. கல் போல அவனது முகம் இறுகியிருந்தது.. கண்கள் சிவந்து பளபளக்க பயங்கரமாய் அவளை உறுத்துப் பார்த்து பயமுறுத்தினான்..

போடா என்று நகர்ந்து போக முடியாமல் அடித்து வைத்த சிலைபோல அப்படியே நின்று விட்டாள் நந்தினி..

‘எதுக்காக இப்படி முறைக்கிறான்..? கடவுளே..!’

அவள் முகம் கலங்கிச் சிவந்தது.. அவன் முகமோ கோபத்தில் ஜொலித்தது.. விட்டால் அடித்து நொறுக்கித் துவம்சம் செய்து அவளைத் தோரணமாய் தொங்க விட்டு விடுபவனைப் போல ரௌத்ரமாக அவன் இருந்தான்.. அவனது கோபத்தை தாங்க மாட்டாமல் தவிதவித்தாள் நந்தினி..

‘இவன்கிட்ட வேலை பார்க்கிறதுக்கு வயநாட்டு மலையுச்சியில இருந்து குதிச்சிரலாம்..’

அவன் அவளை அந்த முடிவிற்குத்தான் தள்ளப் போகிறான் என்ற நிச்சயத்திற்கு அவள் வந்து விட்ட தருணத்தில் அவன்.. “வா..” என்றபடி வேகமாக நடந்தான்..

‘எங்கே கூப்பிடறான்..? என் மைண்ட் வாய்ஸை படிச்சுட்டு மலையுச்சியில இருந்து தள்ளி விடக் கூப்பிடறானோ..?’ பயத்துடன் ஏறக்குறைய அவன் பின்னால் ஓடினாள் நந்தினி... அழகாகக் கட்டப்பட்டிருந்த கட்டிடத்தின் உள்ளே அவன் போனான்.. அங்கேயிருந்த அறையொன்றிலிருந்து வெளிப்பட்ட மனிதர் அவனுக்கு அவசரமாக வணக்கம் சொன்னார்.

அத்தியாயம் 81

“இவர் ஆனந்தன்.. எஸ்டேட்டின் மேனேஜர்..”

ரவிச்சந்திரனின் வால் போல ஓடி வந்து நின்றிருந்த நந்தினியின் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்காமல் அதிகார தோரணையுடன் அறிமுகம் செய்து வைத்தான் ரவிச்சந்திரன்.. என்ன செய்வது என்று தெரியாமல் அவரைப் பார்த்துக் கரம் குவித்து வைத்தாள் நந்தினி..

“இங்கேயென்ன ஃபேமிலி ஃபங்ஷனா நடக்குது..? இவரைப் பார்த்து கும்பிட்டு வைக்கிற..?” அவளை முறைத்தான் ரவிச்சந்திரன்..

“நீங்க இண்ட்ரொடியூஸ் பண்ணி வைச்சீங்களே..”

என்ன தவறு செய்தேன்..? அதுதான் எனக்கும் தெரியவில்லை என்ற ரீதியில் தடுமாறினாள் நந்தினி..

“இது ஆபீஸ்..! அண்டர்ஸ்டாண்ட்ன்னு சொன்னா அதுக்கும் ஒரு வியாக்கினத்தைப் பேசி வைப்ப.. மனசிலாயி..”

‘இதுக்கு மட்டும் வியாக்கினம் பேச மாட்டேனா..?’ நந்தினி மனதுக்குள் நொடிக்க..

“இதுக்கும் பேசுவதான்.. மலையாளத்தில நான் விளக்கம் சொல்ல ஆரம்பிச்சேட்டேன்னா என்ன செய்கிறதுங்கிற பயத்தில அதிகமா வாய் வளர்க்க மாட்ட..” என்று கூர்மையான பார்வையோடு சொன்னான் ரவிச்சந்திரன்..

‘மனசுக்குள்ள நான் இதைத்தான் நினைப்பேன்னு கன்பர்மா கண்டு பிடிச்சு வைச்சிருக்கான்.. டெர்ரர். .!’

“திட்டி முடிச்சிட்டேன்னா வேலையைப் பார்க்கலாம்..” சலனமில்லாத முகத்துடன் அவன் கூற..

‘இவனிடம் ஆச்சரியப்பட்டுக்கிட்டு இருந்தா எனக்குத்தான் சக்தி குறையும்..’ என்ற நினைவுடன் தலையாட்டி பொம்மைபோல அவள் தலையாட்டி வைத்தாள்.. அதையும் அவன் உற்றுப் பார்த்து வைத்தான்.

‘இது எதுக்காம்..?’ நந்தினி யோசித்துக் கொண்டிருக்க அவன் ஆனந்தனின் பக்கம் திரும்பி..

“ஆனந்தன்.. இவள் நந்தினி.. மை பெர்சனல் செக்கரட்டரி..” என்று அறிமுகம் செய்வித்தான்..

“வரனும் மோளே..” என்ற ஆனந்தனுக்கு மேகநாதனின் வயதிருக்கும் என்று யூகித்தாள் நந்தினி.. முன் பக்க வழுக்கையுடன் இருந்த தலைமுடியில் சரிவிகிதத்தில் நரைமுடி கலந்திருந்தது.. மதிக்கக் கூடிய கண்ணியமான தோற்றத்துடன் இருந்தார்.. ஆராய்ச்சியற்ற பார்வை பார்த்தார்..

“நான் பி.டெக் படித்திருக்கேன்..” என்றாள் நந்தினி.. ரவிச்சந்திரனின் பார்வை இப்போது இதைச் சொல்லச் சொல்லி உன்னிடம் இவர் கேட்டாரா என்று கேட்டது..

‘கேட்டால்தான் சொல்லனுமா..?’

நந்தினி முறைப்புடன் அவன் பார்வையை எதிர் கொண்டாள்.. அது என்ன.. எல்லோரிடமும் அவள் அவனது பெர்சனல் செக்கரட்டரி என்றே அவன் சொல்லி வைப்பது..? அவள் என்ன செக்கரட்டரி கோர்ஸா படித்திருக்கிறாள்..? கம்யூட்டர் என்ஜினியரிங்கை படித்திருக்கிறாள்.. பெர்சனல் செக்கரட்டரி வேலை பார்க்கத்தான் கம்யூட்டர் என்ஜினியரிங்கை அவள் படித்தாளா..?

“எண்ட மோனும் என்ஜினியரிங் ஸ்டூடண்ட்டு தான் மோளே.. ஃபோர்த் இயரல்லோ..” என்றார் ஆனந்தன்..

ரவிச்சந்திரன் அந்த சம்பாஷணையை ரசிக்கவில்லை.. எதற்காம் என்று எரிச்சல் கொண்டாள் நந்தினி..

‘யங்மேன்கிட்டப் பேசினா விடலைப் பையன்கிட்டக் கடலை போடறியான்னு விரசமாக் கேட்டு வைக்கிறான்.. ஓல்டு மேன்கிட்டப் பேசினா முகத்தைச் சுளிக்கிறான்.. என்னை என்னதான் செய்யச் சொல்கிறான்..? பேசா மடந்தையாய் இருக்கனும்னு நினைக்கிறானா..?’

அவளால் அது முடியுமா என்று பெருத்த கவலையாகி விட்டது. நந்தினிக்கு.. பேசாமல் எப்படி இருப்பது..?

“நந்தினி இப்பத்தான் ஃபைனல் இயர் எக்ஸாமை எழுதியிருக்கிறாள்.. இன்னும் ரிசல்ட்கூட வரலை..” அவள் முகத்தைப் பார்த்தபடியே ஆனந்தனிடம் சொன்னான் ரவிச்சந்திரன்..

இப்போது இவர் இதைக் கேட்டாரா என்று முறைப்பது நந்தினியின் முறையாகிப் போனது.. அவளது முறைப்பை எதிர்பார்த்துக் காத்திருந்ததைப் போல ரவிச்சந்திரனின் கண்கள் பளபளத்தன... ‘பெர்சனல் செக்கரட்டரின்னு சொன்னால் உடனே இன்ஜினியரிங் படிச்சிருக்கேன்னு பீலா விட ஆரம்பிக்கிறயே.. ரிசல்ட் வராத உனக்கு வேறு என்ன

வேலையைக் கொடுக்க முடியும்..?' என்று அவன் சொல்லாமல் சொல்லி அறிவுறுத்தியதைப் புரிந்து கொண்டவளுக்கு பொசுபொசுவென கோபம் பொங்கியது.. அவனிடம் பொங்கல் வைப்பதில் யாதொரு பிரயோசனமும் இல்லை.. அவளது பொங்கலை அவன் கடுகளவு கூட பொருட்படுத்த மாட்டான் என்பதில் பொங்கிய அவளது கோபம் தண்ணீர் தெளிக்கப் படாமலே தணிந்து விட்டது.. ரவிச்சந்திரனின் அறை பெரிதாகவும் அதிகப் படியான அழகுடனும் இருந்தது.. ஆங்காங்கே குஷன் வைத்த சோஃபாக்கள் இருக்க.. சுழல் நாற்காடியுடன் கூடிய பளபளத்த பெரிய டேபிளில் நவீனமான கம்யூட்டர் வீற்றிருந்தது.. அறைக்குள் அறையாக சிறு படுக்கையறை நுரை மெத்தையையும் தலையணைகளையும் கொண்ட கட்டிலும் அட்டாச்சுடு பாத்ரூமுமாக இருந்தது..

'இவனுக்கு எங்கே போனாலும் ராஜ வாழ்க்கைதான்..' பொறாமைப் பட்ட நந்தினி..

'இவன் ராஜ வம்சம்தானே..' என்று எண்ணிக் கொண்டாள்.. "ம்ஹூம்.." என்ற பெருமூச்சு விட்டவளை விசித்திரமாக பார்த்து வைத்தான் ரவிச்சந்திரன்..

எட்டாக்கனியாய் நின்றவனை ஏக்கத்துடன் அவள் பார்த்ததில் அவன் விழிகளில் மின்னல் வந்தது.. அவள் பார்வையோடு பின்னிப் பிணைந்தது அவன் பார்வை.. அதிசயத் தக்க விதத்தில் அவன் முகத்தின் கடினம் தளர்ந்து சன்னமான மென்மை விரவியது..

'இது எவ்ளோ நேரத்துக்காம்..?' குழந்தைத்தனமான ஏக்கம் கொண்டாள் நந்தினி.. இதற்கு அவன் கோபமாகவே இருந்து தொலைக்கலாம் என்று தோன்றியது அவளுக்கு.. ஒரு மனிதன் எந்த நேரம் சிரிப்பான்.. எந்த நேரம் சினம் கொள்வான் என்று தெரியாமல் 'வதக்.. வதக்..' கென்ற மனநிலையுடன் பழகுவதா..?

'நானென்ன இவனுடன் பழகிப் பார்க்கவா வந்திருக்கேன்..? வேலை பார்க்க வந்திருக்கேன்..' மனதை சமாதானம் செய்து கொள்ள முயன்றாள்.. அதற்குப் பலனும் இருந்தது.. அவள் என்ன வேலையைச் செய்ய வேண்டும் என்று தெரிந்து கொள்வதற்காக அறையை விட்டு வெளியேற முயன்றாள்..

"எங்கே போகிற..?" முகம் சுளித்தான் ரவிச்சந்திரன்.

‘இதை முகத்தைச் சுளிக்காமலே கேட்டு வைக்கக் கூடாதா..?’

நந்தினிக்கு இம்சையாக இருந்தது.. அந்த நிலையிலும்.. ‘முகத்தைச் சுளித்தாலும் இவன் அழகாகத்தான் இருந்து தொலைக்கிறான்..’ என்று அவள் மனம் ஜொள்ளித் தொலைத்ததுதான்.. இம்சையிலும் பெருத்த இம்சையாக இருந்து தொலைத்தது..

“ஆனந்தன் சாரைப் பார்க்கப் போகிறேன்..”

பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு பதில் சொன்னாள்..

“அவரையேன் நீ பார்க்கனும்..?” ரவிச்சந்திரன் அவளது பொறுமையை விரட்டியடிப்பதிலேயே குறியாக இருந்தான்..

“அவருக்கு என் அப்பா வயது..” பல்லைக் கடித்தாள் நந்தினி..

“இருந்துட்டுப் போகட்டும்.. உன் அப்பாவை தவிக்க வைச்சுட்டு ஓடோடி வந்தவதான நீ.. இப்ப என்ன பாசம் பொத்துக்கிட்டு வருது..?”

“என் அப்பாமேலே பாசம் பொத்துக்கிட்டு வருதுன்னு நான் சொன்னேனா..?”

“அவர் நினைவிலதான நீ ஆனந்தன்கிட்டப் பேசப் போகிற..?”

‘உன் தலை..’ அவள் தலையில் அடித்துக் கொண்டாள்..

“இன்னும் இந்தக் கேணத்தனமான ஆக்டிவிட்டிஸை மறக்கலையா..?” என்று கேட்டு வைத்தான் அவன்..

“படுத்தாதீங்க பாஸ்.. ஆனந்தன் சார்தானே எஸ்டேட்டோட மேனஜர்..?”

“இப்ப வரைக்கும் அப்படித்தான் இருக்குது.. நீ புதுசா ரூல்ஸ் கொண்டு வந்து மாத்தப் போறியா..?”

“என்ன தேவைக்கு..? நீ வேலை பார்க்கத்தான் வந்திருக்கன்னு மட்டம் தட்டி மூலையில உட்கார வைப்பீங்க..”

“தெரியுதில்ல.. அதுக்கப்புறமும் எதுக்காக ஏதாச்சும் குட்டையைக் குழப்பிக்கிட்டே இருக்கே..?”

“ஒண்ணும் குழப்பலை.. என் வேலை என்ன..? என் சேர் எதுன்னு கேட்கத்தான் அவரைப் பார்க்கக்

கிளம்பினேன்..” ரவிச்சந்திரன் அவளைப் பார்த்த பார்வையில் அவளது மடமையைக் குறித்த அறிவுறுத்தல் இருந்தது..

‘எதுக்கானும் இப்படிப் பார்க்கிறது..?’ மலையாள வாடையுடன் அவள் மனது சிணுங்கியது..

“யார் நீ..?” நிதானமாக அவன் கேட்டான்..

‘டேய் படத்தோட டைட்டிலைச் சொல்றான் பாரு.. சொல்கிறதுதான் சொல்றான்.. இந்தக்காலப் பேய்படமா ‘டார்லிங், டார்லிங்..’ன்னு சொல்லாம அந்தக்கால அரதப் பழசு பேய் படத்தைச் சொல்றான்.. ஆனந்தன் சார்கிட்டப் பேசக் கிளம்பினேன்னு என்னைக் கிழவியாக்கறதிலேயே குறியாய் இருக்கான்..’ நந்தினிக்கு வேகு வேகு என இருந்தது.. தனல் பார்வை பார்த்தபடி..

“ஞான் நந்தினி..! வல்லிய சுந்தரி..!” என்று பல்லைக் கடித்தாள்..

“ஓ..!” புருவங்களைச் சுருக்கி சிரிக்கும் பார்வை பார்த்தான் அவன்..

“நந்தினின்னு மட்டும் சொல்லு.. வல்லிய சுந்தரின்னு நீயாச் சொல்லிக்காதே.. அப்படி ஒரு நினைப்பையும் மனசில

வைச்சுக்காதே..” ஒரு மார்க்கப் பார்வையாய் அவன் பார்வை மாறியது.. அவள் வல்லிய சுந்தரிதானா என்று அவன் பார்வை அளவெடுத்தது..

அவளது மேனியை மேய்ந்த மேய்ச்சல் பார்வையில் உடல் கூசத் தடுமாறிப் போனாள் நந்தினி.. சுயவாளித்தனம் என்று கோபம் கொள்ள முடியாமல் அப்பார்வை அவளைச் சதிராட

வைத்தது.. குளிர் மூட்டிக் கதகதப்புக்காக அவனிடம் ஒ ன்றி விடும் எண்ணத்தை அவளுக்குள் விதைத்தது.. பாரிதவித்தாள் நந்தினி.. பாதாதிகேசம் முதல் பார்வையிடுபவனை கடிந்து கொள்ளவும் முடியாமல் கரைந்து விடவும் முடியாமல் தவிதவித்தாள்..

“வல்லிய சுந்தரியாகணும்ங்கிற ஆசை எனக்கில்லை.. உங்க அத்தை மகளுக்கு வேண்டுமானா அந்த ஆசை இருக்கலாம்..” எதற்காக சீறுகிறாள் என்று தெரியாமல் சீறியவளை நமட்டுச் சிரிப்புடன் ஊடுறிவிப் பார்த்து வைத்தான் அவன்.. உன்னை எனக்குத் தெரியாதா என்றது அவன் பார்வை..

“எந்த ஆசை..?” அவன் கண்கள் சிரித்தன..

“அவளுக்கு இருக்கும் ஆயிரம் ஆசை.. அதைப் பற்றி எனக்கென்ன தெரியும்..?” நந்தினியின் முகம் ஜிவுஜிவுத்தது.. எந்த ஆசையென்று ஏன் அவன் கேட்கிறான்..? அவன் மீதுதான் அஜந்தா ஆசை கொண்டிருக்கிறாளே.. அந்த ஆசையை நந்தினி தன் திருவாயால் சொல்ல வேண்டுமென்ற பெரு ஆசைப்படுகிறானா என்ன..?

‘அவ அழகைப் புகழ்த்தானே வளம் மிகுந்த வயநாட்டுக்கு வந்திருக்கேன்..?’

“ஊஹூம்..?”

வெகு நேரமாக ஒளிந்திருந்த அவனது வழக்கமான புருவ உயர்த்துதல் வந்து போனது.. உதட்டைக் கடித்து கிறக்கத்தை மட்டுப் படுத்தினாள் நந்தினி..

‘இவனிடம் மயங்கி விடக் கூடாது..’

“நீ நந்தினின்னு மட்டும் சொல்லத் தெரியுதில்ல.. என்னோட பெர்சனல் செக்கரட்டரிங்கிறதையும் சேர்த்துச் சொல்லத் தெரியனுமா வேணாமா..? அதை விட்டுட்டு வல்லிய சுந்தரின்னு சொல்லிக்கிற..? வயநாட்டில வேலை பார்க்க

வந்தியா இல்லை அழகிப் போட்டியில கலந்துக்க வந்தியா..?

வல்லிய சுந்தரிங்கிறதுதான் உன் அடையாளமா..?”

இதற்கு என்ன பதிலைச் சொல்வது..? முன்னால் சென்றால் கடிப்பதும், பின்னால் சென்றால் உதைப்பதுமாக அவன் செய்த இம்சையில் நந்தினிக்கு போதும் போதுமென ஆகிவிட்டது.. இப்படியா ஒரு மனிதன் எந்தப் பக்கம் போனாலும் வழி மறிப்பான்..?

சுரிதாரின் துப்பட்டாவைத் திருகியபடி எதுவும் பேசாமல் மரம் போல அசையாமல் நின்றாள் நந்தினி..

“துப்பட்டாவை ஏன் கிழிக்கப் பார்க்கிற..?” அதட்டினான் ரவிச்சந்திரன்..

“நீங்க புதுத் துப்பட்டா வாங்கிக் கொடுக்கனும்னுதான்..” மூக்கை உறிஞ்சினாள் நந்தினி..

ரவிச்சந்திரனுக்கு அந்தப் பதில் பிடித்தமானதாக இருந்தது.. அவன் முகத்திலிருந்த எரிச்சல் மறைந்து குறுகுறுப்பு பரவியது..

“இதுதான் உன் சீட்..”

சற்றுத் தள்ளிப் போடப்பட்டிருந்த டேபிள் சேரைக் காட்டினான்..

குஷன் பதித்த சுழல் நாற்காலியும், பளபளப்பான டேபிளும் அவளைப் பார்த்துக் கண் சிமிட்டின..

“வாவ்..!” என்றாள் நந்தினி..

டேபிளில் இருந்த கம்யூட்டர் ஓயிலாக, புத்தம் புதிதாக, உறை பிரிக்கப் படாமல் இருந்தில்..

“எல்லாமே புதுசா..?” என்று குழந்தைத்தனமாக கேட்டாள்.. அவளின் குழந்தைத் தனத்தை ரசிக்கும் முறுவலுடன்.. ‘ஆம்’ என்று தலையசைத்தான் அவன்..

“எனக்கே எனக்கா..?”

“உனக்கே உனக்குத்தான்..”

“இது உங்க ஆபிஸ் ரூமாச்சே..”

“யெஸ்.. வாட் ஃபார் தட்..?”

“இல்லே.. மேனேஜர் ரூம் அந்தப் பக்கமா ஹாலில இருக்கே.. எனக்கு ஹாலில்தான் சீட் குடுப்பீங்கன்னு நினைச்சேன்..”

“நீயா எதையும் நினைத்துக்காதே..”

பூடகமாக அவன் சொன்னதைப் போல இருந்ததில் அவள் எதை நினைத்துக் கொள்ளக் கூடாது என்று அவன் எச்சரிக்கிறான் என்று குழம்பிப் போனாள் நந்தினி.. அவளுக்காக அவன் அக்கறைப் படுகிறான் என்று அவள் நினைத்துவிடக் கூடாது என்கிறானா.. இல்லை.. அவன்மீது அவளுக்கு உரிமையிருக்கிறது என்று அவள் நினைத்துவிடக் கூடாது என்கிறானா..?

‘இவன் மேல உரிமை கொண்டாடிட்டாலும்.. கழுதையில..’ நந்தினி ஓரக் கண்ணால் அவனைப் பார்த்தாள்.. அவன் உயர்ந்த ரக அரேபியக் குதிரைபோல கவர்ச்சி நிரம்பிய கம்பீர அழகனாக இருந்து தொலைத்தான்.. நந்தினிக்கு சோதனையாக இருந்தது..

‘ஈ சுந்தர புருஷன் பக்கத்தில் ஞான் எவ்விதம் ஜோலி பார்க்க முடியும்..? வேணுமெண்டால் இவனைப் பார்க்கலாம்.. அது வல்லிய ஜோலியல்லோ..’

சிந்தனை போன விதத்தில் அவளுக்கு சிரிப்பு வந்தது.. ஆளை மயக்கும் அந்த ஆள் மயக்கியின் பக்கத்தில் இருப்பதில் உள்ள பாதகங்களை அவள் மனம் பட்டியலிட்டதில்..

‘ஏநந்தினிக்குட்டி..!எந்தாஇத்தரயும்ஆலோசிக்கனது..?’ என்று மனதுக்கு குட்டு வைத்தாள்..

வல்லிய சுந்தரனின் பக்கத்திலேயே இருக்கும் வாய்ப்புக் கிடைத்தால் அதைப் பயன்படுத்தி அவனை ‘நன்றாக..’ பார்வையிடுவதை விட்டு விட்டு எதற்காக மூளையைக் கசக்கி ஆலோசிக்க வேண்டும்..? என்று அவள் மனம் ஜொள்ளியதில் அவள் குதூகலமாக கம்யூட்டரின் உறையை நீக்கி மௌஸைக் கைப்பற்றி கம்யூட்டரை உயிர்ப்பித்தாள்..

“எதையும் ஸாப்டா ஹேண்டில் பண்ணத் தெரியாதா..? முதல் நாளிலேயே கம்யூட்டரை உடைச்சுக் குப்பைக் கூடையில் போட்டிருவ போல இருக்கே..” ரவிச்சந்திரன் திருவாயைத் திறந்தான்..

கொட்டும் குளவியின் மீது கொட்டும் அருவிக்கு எப்படி ஆசை வரும்..? நந்தினிக்கு வந்து தொலைக்கிறதே..

அத்தியாயம் 82

கம்யூட்டரின் சின்னத் திரையை வெறித்துக் கொண்டிருந்தாள் நந்தினி.. அதில் தெரிந்த கணக்கு வழக்குகளைப் பற்றி ஒரு மண்ணும் புரியவில்லை.. அவள் என்ன அக்கவுண்டன்ஸியா படித்திருக்கிறாள்..? என்ஜினியரிங் படித்தவளைக் கொண்டு வந்து பெர்சனல் செக்கரட்டரி வேலை பார்க்கச் சொன்னால் அவள் என்னதான் செய்வாள்..?

"குயிலைப் பிடித்துக் கூட்டிலை வைச்சுக்

கூவச் சொல்லுகிற உலகம்

மயிலைப் பிடித்துக் காலை ஒடிச்சு

ஆடச் செல்லுகிற உலகம்..

அது எப்படி பாடுமய்யா..?

அது எப்படி ஆடுமய்யா..? ஓ.. ஓ.. ஓ..."

ரவிச்சந்திரன் இல்லையென்ற விடுதலை உணர்வுடன் வாய் விட்டுப் பாடினாள்.. வேலையை ஆரம்பித்து ஒரு வாரமாகி விட்டது.. தினமும் ரவிச்சந்திரனுடன் எஸ்டேட் வந்து திரும்புகிறாள்.. அவளுக்கு என்னதான் வேலையென்று

தலையும் புரியாமல் காலும் புரியாமல் திணறிக் கொண்டிருக்கிறாள்.. அதைப் பற்றிக் கிஞ்சித்தும் கவலைப் படாமல்..

“எனக்கு வருகிற மெயிலுக்குப் பதில் அனுப்பு.. இப்போதைக்கு அது போதும்..” என்று சொல்லியிருந்தான் ரவிச்சந்திரன்..

நந்தினிக்கு அது போதுமானதாகத்தான் இருந்தது..

எஸ்டேட்டின் வேலைகளைத் திறம்படச் செய்து மெடல் வாங்கிக் கழுத்தில் மாட்டிக் கொள்ள வேண்டுமென்ற அவா ஒன்றும் அவளுக்கு இல்லை..

‘வந்தோமே, போனோமான்னு பொழுதைக் கழிச்சுட்டுப் போகிறதை விட்டுட்டுத் தேவையில்லாததை ஏன் தலையில் ஏத்திக்கிட்டு அவஸ்தைப் படணும்..?’ என்ற எண்ணத்தில் அவள் தெளிவாக இருந்தாள்..

அவளே பெல்ட் மன்னனுக்குப் பயந்து வயநாட்டில் ஒளிந்து வாழ வந்திருக்கிறாள்.. வந்த இடத்தில் சின்சியர் சிகாமணியென்ற பட்டத்தை வாங்கி என்னத்தைக் கிழிக்கப் போகிறாள்..? எந்த நேரத்திலும் அவளைப் பெற்ற பெருந்தகைகள் மனம் மாறி.. கண்ணே நந்தினி.. கடலும்,

அலையும் போல நீயும் உன் சோம்பேறித்தனமும் இணை பிரியாமல் இருக்க எந்தத் தடையும் இல்லை.. உன்னை உன் அட்டைச் சோம்பேறித்தனத்துடன் ஏற்றுக் கொள்கிற தியாகிக்கே மணம் முடித்து வைக்கிறோம்.. பெல்ட் மன்னனுக்கு மணம் முடித்துக் கொடுக்க மாட்டோம்.. இது உறுதி.. உறுதி.. உறுதி.. என்று ஆணையிட்டு அழைத்துக் கொள்ளலாம்.. அப்போது கையை உதறிக் காலை உதறிக் கிளம்ப முடியாமல் சேரளம் எஸ்டேட்டின் பொறுப்புக்கள் அவளை தடைசெய்து விட்டால் என்ன செய்வது..? அப்படிப்பட்ட சூழலில் அவள் தனது பொறுப்புக்களை எவர் தோளில் இடம் மாற்றுவது..?

ஆதலால் பொறுப்புக்காற்று பொழுதைப் போக்குவதே சாலச் சிறந்தது என்ற சிறந்த முடிவில் இருந்தாள் நந்தினி.. ரவிச்சந்திரனும் எதையும் சொல்லவில்லை.. அதைச் செய், இதைச் செய் என்று சொல்லாமல் அவன் சொன்னதை மட்டும் செய் என்று அவன் சொன்னதில் அப்பாடி என்ற ஆசுவாசம் அவளுக்குள் உண்டாகியிருந்தது.. எங்கே தளை போகும் பொறுப்புக்களை அவள் தலையில் சுமத்தி விடுவானோ என்ற பயத்துடன் இருந்தவளுக்கு தளைகளற்ற வேலை சுகமானதாக இருந்து வைத்தது..

அப்படிச் சுகமாக நீ பொழுதைக் கழிக்க விட்டு விடுவேனா என்பதைப் போல அன்று பார்த்து எஸ்டேட்டின் வரவு செலவுக் கணக்குக்கான ஸ்டேட்மெண்டை ரெடி செய்யும்படி உத்தரவிட்டு விட்டான் ரவிச்சந்திரன்..

“தேயிலை பறிக்கிறதைப் பார்க்கப் போக வேண்டியிருக்கு..” என்று கிளம்பியவனுடன்..

“ஹை..! ஜாலி..” என்று ஓட்டிக் கொண்டுதான் கிளம்பினாள் நந்தினி..

“நீ எங்கே வர்ற..?” ரவிச்சந்திரன் தடுத்து நிறுத்தி விட்டான்..

“ஞான் நிங்க பெர்சனல் செக்கரட்டரி சாரே..”

“பர்சனல் மேனஜர்ன்ன பறஞ்ச..?”

“ஞான பறஞ்சத சாராக்கும் இல்லேன்னு ஆக்கினது..”

“ஸோ.. என்னோட பெர்சனல் செக்கரட்டரிங்கிறது ஒப்புக்கிற..?”

“அதே சாரே..”

“அதனாலதான் நானும் சொல்றேன்.. என்னோட பெர்சனல் செக்கரட்டரியா லட்சணமா, சேரளம் எஸ்டேட்டோட

இயர்லி இன்கம் ஸ்டேட்மெண்டை ரெடி பண்ணு.. ஈவினிங்குக்குள்ள ஆடிட்டருக்கு அனுப்பியாகனும்.. க்விக்..”

இரக்கமில்லாமல் வேலை கொடுத்து விட்டு அவன் ஜீப்பில் ஏறிச் சென்று விட்டான்.. நந்தினி ஏற்கனெவே பிய்ந்து தொங்கியிருந்த தலைமுடியை இன்னும் கொஞ்சம் பிய்த்துத் திரித்திரியாக்கி முட்டி மோதி அவன் சொன்ன ஸ்டேட்மெண்டை தயார் செய்திருந்தாள்.. சின்னத்திரையில் தெரிந்த ஸ்டேட்மெண்ட் என்னதான் சொல்கிறது என்று அதைத் தயாரித்த அவளுக்கே புரியவில்லை..

குண்டக்க, மண்டக்க தினுசில் அவளாக இட்டு நிரப்பியிருந்த வரவு செலவு கணக்குகள் ஒன்றுடன் ஒன்று ஒட்டாமல் அவளைப் படுத்தி வைத்தன..

‘வராத ஸ்டேட்மெண்ட வா, வான்னு கூப்பிட்டா இப்படித்தான் சோதித்து வைக்கும்..?’ நொந்து கொண்டாள் நந்தினி.. அதற்கு மேலும் செய்வதற்கு ஏதுமில்லையென்று தோன்றியதால் ஏதோ ஒரு தினுசில் அவள் டேலி பண்ணி வைத்திருந்த ஸ்டேட்மெண்டை பிரிண்ட் அவுட் எடுத்தாள்.. வெளியில் வந்த பேப்பர் அவளது கைகளில் இருந்து பறந்து பிரிந்து ஜென்னலுக்கு வெளியில் சென்று விழுந்தது..

இன்னொரு பிரிண்ட் அவுட் கொடுக்கலாம் என்று பார்த்தால் சோதனையாக பிரிண்டர் மக்கர் செய்தது.. ரவிச்சந்திரன் இருந்திருந்தால் ஜன்னல் கதவைத் திறக்க அனுமதித்திருக்க மாட்டான்.. நந்தினிதான் அவனில்லாத சுதந்திரத்தைக் கொண்டாட ஜன்னலை விரியத் திறந்து வேடிக்கை பார்த்தாள்.. அப்படியே கம்யூட்டரின் முன்னால் அமர்ந்து விட்டாள்.. இதமான வெயில் அறையில் அடர்ந்திருக்கும் குளிரை விரட்டியடிக்கும் என்ற எண்ணம் அவளுக்கு.. அதுதான் சோதித்து வைத்து விட்டது..

நந்தனி அறையை விட்டு வெளியே ஓடி ஹாலைக் கடந்து வாசலுக்கு வந்தாள்.. மேகங்களுக்கிடையே தெரிந்த மலை முகடுகள் அவளை வேடிக்கை பார்க்கத் தூண்டின.. 'ஆ' வென நின்று விடும் ஆவல்தான் அவளுக்கு.. வயநாட்டின் இயற்கையழகை ரசிக்க பொழுது கிடைத்தால் அதைத் தவற விடலாமா..? எங்கே..? அவள் வேடிக்கை பார்த்துப் பொழுதைக் கழித்து விடக் கூடாது என்று கங்கணம் கட்டிக் கொண்டவனாக ரவிச்சந்திரன் அவளுக்கு வேலை கொடுத்து விட்டுப் போயிருக்கிறானே.. திறம்பட (?) அவள் செய்து வைத்திருக்கும் வேலையை பிரிண்ட் எடுத்து அவனது

டேபிளின் மீது பரத்தி வைத்து விட்டால் அவள் நிம்மதியாக வேடிக்கை பார்க்க ஆரம்பித்து விடலாம்..

அந்தப் பகுதியில் வெளிச்சம் சூழ்ந்திருந்தது.. இதமான வெயில் உடல்மீது பட்டதில் நந்தினிக்குள் சுறுசுறுப்பு பரவியது.. சும்மாவே அவள் தூங்கி விழுவாள்.. இதில் எப்போது பார்த்தாலும் குளிருக்கு இதமாக கம்பளியைப் போர்த்திக் கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டுமென்றால் என்ன ஆவாள்..?

நந்தினி பிரிண்ட் அவுட் எடுத்த பேப்பரை மறந்து சுற்றிலும் பார்த்தாள்.. அலுவலகக் கட்டிடங்களைச் சூழ்ந்திருந்த மரங்களிலிருந்து பறவைகளின் கீச்சொலி கேட்டது.. நந்தினி வாயைக் குவித்து இரு உள்ளங்கைகளையும் விரித்து வாயருகே வைத்துக் அவைகளைப் போலவே ஒலியெழுப்பினாள்.. மரங்களின் கூடுகளில் துயில் கொண்டிருந்த பறவைகள் படபடவென சிறகுகளை அடித்துக் கொண்டு வானில் பறக்கத் தொடங்கின..

“நந்தினி மேழுக்குப் பறவைகளெண்டா இஷ்டமோ..?” அவளது காதுக்குப் பக்கத்தில் குரல் கேட்டது.. ஆண்குரல்.. அது ரவிச்சந்திரனின் குரல் இல்லை யென்பதில்..

‘எவன் இவன்..?’ என்று திரும்பினாள்..

அவளை ஆர்வத்துடன் பார்த்தபடி மோகன் நின்றிருந்தான்.. “நீதானா..?” சிநேகத்துடன் சிரித்தாள் நந்தினி..

“நந்தினி மேடத்திண்ட இத்தினி வல்லிய சிநேகிதத்தோட வேற எவராள சம்சாரிக்க இயலும்..?” வரிசைப் பற்கள் தெரிய சிரித்த அவனது சிரிபபில் சிநேகிதத்தைத் தவிர வேறு ஏதோ ஒன்றும் இருந்தது.. நந்தினிக்குத்தான் அது தெரியவில்லை.. “நல்லாத்தான் பேசற..?” என்றாள் அவள்..

“சம்சாரிக்கிறது மட்டும்தான் வளர நன்னாயிட்டோ..?” அவனது விழிகள் ரகசியம் பேசின..

‘வேற எதை நல்லாயிருக்குன்னு நான் சொல்லனும்னு நினைக்கிறான்..?’

நந்தினி அவன் கையிலிருந்த டிஃபன் கேரியரைப் பார்த்தாள்.. அதிலிருந்து வந்த சுவையை உணர்த்தும் நறுமணம் அவளது பசியைக் கிளறி விட்டது... காலையில் சாப்பிட்டது.. உச்சிப் பொழுது வரை ரவிச்சந்திரன் கொடுத்திருந்த வேலையை முடிப்பதில் கவனமாக இருந்ததில் உணவு சொரித்து பசியெடுக்க ஆரம்பித்திருந்தது.. ரவிச்சந்திரன்

வந்த பின்னால்தான் அவள் மனதிய உணவுக்கு வீடு செல்ல முடியும்.. அதுவரை அவள் பொறுக்கலாம்.. பசி பொறுக்குமா..?

“உன் கையிலிருக்கிற சாப்பாட்டையும் நல்லாயிருக்குன்னு சொல்லனும்னு ஆசைதான்.. ஆனா பாரு மோகன்.. இது உன் அப்பாவுக்கான சாப்பாடு.. நான் சாப்பிட்டுக் கருத்துச் சொன்னா நல்லாயிருக்காது.”

“நந்தினி மேடத்திற்கு இஷ்டமெண்டா ஞான் எண்ட கரத்தாலேயே சமைச்சுக் கொடுக்கும்..”

“எதுக்கு..? சாப்பிட முடியாம நான் தத்தளிக்கிறதுக்கா..? இதோ பாரு மோகன்.. நீ எதில வேணுமானாலும் விளையாடு.. சாப்பாட்டு விஷயத்தில மட்டும் விளையாடாதே.. நான் பிறந்ததில இருந்து ருசி மணமா, வகை தொகையாச் சாப்பிட்டுப் பழக்கப் பட்டவ.. நீ சமைக்கிற சாப்பாட்டை டேஸ்ட் பண்ணி ஒப்பினியன் சொல்ல நீ வேற ஆளைப் பார்த்தாகனும்.. ஆ பரிசோதனைக்கு ஞான் ரெடியில்லா.. மனசிலாயி..” மோகன் பதிலேதும் சொல்லாமல் அவளையே பார்த்தான்.. என்ன கழுதைக்கு இப்படிப் பார்த்து வைக்கிறான் என்று புருவங்களைச் சுருக்கினாள் நந்தினி.. அவன்

விழிகளில் பரவிக் கிடந்த ஆர்வம் அவளை யோசிக்க வைத்தது..

‘எதுக்குடா இப்படி நோக்கி வைக்கிறன்னு நேரடியாக் கேட்டிரலாமா..?’ கண்கள் இடுங்க அவனை சற்றுப் பார்த்தாள்..

அதில் அவன் கொண்ட புளகாங்கிதத்தில் ஒரடி பின்னால் நகர்ந்தாள்..

‘டேய்ய்ய்.. நான் உனக்கு அக்கா வயசுடா..’

“நந்தினி மேமுக்கு ஞான் சுந்தரணெண்டு தோணலியோ..” அவனது ஏக்கத்தில் அவனை ஏற இறங்கப் பார்த்த நந்தினி..

“நல்லாத்தான் இருக்க.. அதுக்கு என்ன..?” என்றாள்.

“ஞான் நன்னாயிட்டுண்டோ..?” அவன் முகம் மலர்ந்தது..

“ஆமாம்ப்பா.. ஆமாம்..”

“நந்தினி மேம் ஞான் சுந்தரன்னு பறயு..”

“நீ பறயச் சொன்னதினால பறஞ்சேன்.. அதுக்கு இப்ப என்ன..?”

“நந்தினி மேம் சுந்தரி..!”

“வளர சந்தோஷம்.. போதுமா..?”

“ஞான் சுந்தரன்..!”

அவளை விழுங்கி விடுவதைப் போல அவன் பார்த்ததில் இவனுக்கு என்ன பைத்தியமா என்று தலையிலடித்துக் கொள்ளலாம் போல அவளுக்கு எரிச்சல் வந்தது..

வயநாட்டின் குளிர் நிரம்பிய இனிய பொழுதை கலைத்துக் கொண்டிருப்பவனை எரிச்சலுடன் பார்த்தாள்.. அவனோ..

“சுந்தரி நீயும்..

சுந்தரன் ஞானும்

சேர்ந்திருந்தால் திரு ஓணம்..”

என்று பாடி வைத்தான்..

“மோகன்..”

“மேம்..”

“இந்தப் பாட்டையெல்லாம் என்னைப் பார்த்து பாடக் கூடாது..”

“எந்துக்கு மேம்..?”

“நான் உன்னை விட வயதில் மூத்தவள்..”

“எனிக்கு நந்தினி மேமை நோக்கறப்ப மலர் டீச்சரை நோக்கறதைப் போலிருக்கி..”

“எந்தா..?”

நந்தினிக்குத் தூக்கி வாரிப் போட்டது.. இவன் என்ன பிரேமம் கதையை நந்தினியிடம் காட்ட நினைக்கிறானா..? அப்படித்தான் என்பதைப் போல அவன் அவளைக் கரை காணாத காதலுடன் பார்த்தபடி..

“குளிரேகும் கனவு..

என்னில் சதிராடிய காலம்

மனதாரில் மதுமாசம்

தளிராடிய நேரம்..”

என்று விழிகள் சொறுகப் பாடிப் பயமுறுத்தினான்..

‘எண்ட குருவாயூரப்பா..! வயநாட்டு வாலிபன் பிரேமம் கொள்ள தஞ்சாவூரின் நந்தினிதான் கிடைச்சாளா..?’

பக்கத்தில் ஏதேனும் கட்டை கிடைத்தால் தூக்கி அவன் தலையில் இறக்கி விடலாம் என்று வெறியான நந்தினி கைக்கு

எது கிடைக்கும் என்று ராவினால் ரவிச்சந்திரனின் இரும்புக்கரம் கிடைத்துத் தொலைத்தது..

இறுக்கிப் பற்றிய அவள் கையை இறுக்கிப் பற்றிய ரவிச்சந்திரன்.. அவளை தன் பக்கத்தில் இழுத்துக் கொண்டான்..

'இவன் எப்ப வந்தான்..?' என்று தோன்றிய போதும் அவன் வந்து விட்டான் என்பதில் பெருத்த ஆறுதல் கொண்டாள் நந்தினி..

'இந்தப் பிரேமம் மோகன்கிட்ட இருந்து எஸ்கேப் ஆகியாச்சு..'

"இங்கே என்ன பண்ணிக்கிட்டு இருக்க மோகன்..?"

"அச்சனுக்கு ஊன் கொண்டு வந்து.. நந்தினி மேமிண்ட சம்சாரிச்சு.."

"நந்தினியிடம் சம்சாரிச்சது போதும்.. போ.."

மோகன் நகர்ந்தான்.. நந்தினியிடம்..

"நீங்க ஊன் கழிக்கல்லோ.." என்றான்..

"அதை நான் பார்த்துக்குவேன்.. நீ உன் அச்சனைப் பார்த்துக்க.." கடுமை காட்டினான் ரவிச்சந்திரன்..

மோகனின் முகம் வாடி விட்டது.. நந்தினிக்கு கஷ்டமாக இருந்தது.. நந்தகுமாரின் நினைவு வந்து விட அவளும் முகம் வாடினாள்.. அதைக் கண்டு கொண்ட ரவிச்சந்திரனின் முகம் கோபத்தில் ஜிவுஜிவுத்தது..

“உன்னை ஸ்டேட்மெண்டை ரெடி பண்ணுன்னு சொல்லிட்டுத்தானே போனேன்..? இவன்கூட உனக் கென்ன பேச்சு..? விடலைப் பையன்கிட்டக் கடலை போடறியான்னு கேட்டா கோபம் மட்டும் பொத்துக்கிட்டு வந்திருது..”

“இல்லை..” குற்றம் செய்தவளைப் போல நந்தினி தடுமாறினாள்..

“நீங்க கொடுத்த வொர்க்கை முடிச்சிட்டேன்.. பிரிண்ட் அவுட் எடுத்த பேப்பர் ஜன்னல் வழியா வெளியே விழுந்திருச்சு..”

“ஜன்னல் முடியிருந்ததே..?”

“நான்தான் திறந்து வைத்தேன்..”

“எதுக்கு..? இந்தப் பொடிப்பையன் வருகிறானான்னு பார்க்கிறதுக்குத் திறந்தியா..?”

“அபாண்டமாப் பேச வேணாம்..”

நந்தினியின் கண்களில் கண்ணீர் திரண்டு விட்டது.. அவன் பேசிய பேச்சு அவளைச் சுட்டாலும் எதிர்ப் பேச்சுப் பேச அவளிடம் திராணியில்லை.. இந்த மோகன் இப்படி பிரேமத்தைப் பொழிந்து வைப்பான் என்று அவள் நினைத்தும் பார்க்கவில்லையே.. மோகனின் பேச்சில் அவள் அதிர்ந்திருந்தாள்.. ரவிச்சந்திரன் காரணமில்லாமல் அவளை கடிந்து கொள்ளவில்லை என்பதில் அவளுக்குள் குற்ற உணர்வு வந்திருந்தது..

“ரெண்டும் கெட்டான் வயசு அவனுக்கு.. டீன் ஏஜிலிருந்து இப்பத்தான் வெளியே வந்துக்கிட்டு இருக்கான்.. புரியாத வயசு.. உன்னையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்.. அட்வைஸ் பண்ணினாக் கேட்டுக்கக் கஷ்டமாத்தான் இருக்கும்.. எட்டிக் காயா கசக்கும்.. பிராப்ளம் கிரியேட்டிவ் ஆகிருச்சுன்னா அப்போத்தான் அட்வைஸின் அருமை தெரியும்.. கேட்காமல் போயிட்டோமேன்னு கதறுவிங்க.. அதுவரைக்கும் யார் என்ன சொன்னாலும் காதுகளில் ஏறாது..”

நந்தினிக்கு மோகனுடன் அவளையும் சேர்த்து வைத்து ரவிச்சந்திரன் திட்டியதில் உடன்பாடில்லை.. இப்படி நடக்குமென்று அவள் கனவா கண்டாள்..?

அத்தியாயம் 83

ரவிச்சந்திரன் கோபத்தைக் குறைக்கும் எண்ணமில்லாமல் திட்டிக் கொண்டிருந்தான்.. நாசியை விடைத்து, நாக்கைக் கடித்து என்று நந்தினி பல்வேறு முறைகளில் தனது சங்கடத்தை வெளிப்படுத்தியும் அவனது வசவு மழை நிற்கவில்லை..

“அவன் ஒருத்தன்.. என் பேச்சு மட்டும்தான் நல்லாயிருக்கான்னு கேட்கிறான்.. அப்பவே நீ சுதாரித்திருக்க வேணாமா..? அதை விட்டுட்டு அவன் வீட்டுச் சாப்பாடு நல்லாயிருக்கும்ன்னு சொல்லத்தான் நினைக்கிறேன், பட்சே, சாப்பிட முடியலையேன்னு நாக்கைச் சப்புக் கொட்டற.. உன்னைப் போய் அவன் மலர் டீச்சர்ங்கிறான் பாரு.. கொடுமைடா குருவாயூரப்பா..” கோபச் சிரிப்புடன் தலையில் அடித்துக் கொண்டான்..

“பாஸ்..! இதிலிருந்தே என் திங்கிங் லெவலை நீங்க தெரிஞ்சுக்க வேணாமா..? படுபாவி.. பொசுக்குன்னு என்னை மலர் டீச்சர்ன்னு சொல்லிட்டானே.. நான் இன்னொஸென்ட் பாஸ்.. சாப்பாடும். சாப்பாடு சார்ந்த ஸ்நாக்ஸும்ன்னு என்

லைஃப் ஓடிக்கிட்டு இருக்கு.. பிரேமம் ஃபிலிவ் மீ..'' நந்தினி முறையிட்டாள்..

''இப்பச் சொல்லு.. அவன்கிட்ட அளவுக்கு மீறிப் பேசாதேன்னு சொன்னா நான் வக்கிர மனசுக்காகரன்னு பட்டம் கட்டுவ..''

''அச்சச்சோ..! அப்படி நான் சொன்னேனா..?''

''சொன்னால்தானா..? மனசில நினைத்துக்கலையா..?''

கோபம் மாறாமல் கடிந்து கொண்டிருந்த ரவிச்சந்திரன் அழகாக இருந்து தொலைத்தான்.. அடர்ந்த மீசையும், செக்கச் செவேலென்ற நிறமுமாக அவளைப் படுத்தி எடுத்தான்..

என்னதான் அவளுடைய மனதை புண்படுத்தும் விதமாக அவன் பேசித் தள்ளினாலும் அவனை அவளால் வெறுப்பாக நினைக்க முடியாது என்பதை எப்படி அவனிடம் சொல்வது என்று தெரியாமல் பக்கத்திலிருந்த செடியின் இலையைக் கிள்ள ஆரம்பித்தாள் நந்தினி.. அவனைப்பற்றிய அவளது நினைவுகளைப் பற்றி அறியாமல் பேசுகிறானே என்று அவள் மனம் சிணுங்கியது..

“ம்ப்ச்.. இலையைக் கிள்ளாதே..” சிறுபிள்ளையை அதட்டுவதைப் போல அதட்டினான் ரவிச்சந்திரன்..

‘பப்பா மாதிரியே ட்ரீட் பண்ணுவான்..’ நந்தினிக்கு ஆற்றாமையாக இருந்தது..

“இலையைத்தானே கிள்ளினேன்..? உங்களையா கிள்ளினேன்..?” அவனிடம் சண்டைக்குப் போனாள்..

“என்ன சொன்னே..?” அவன் சிரித்து விட்டான்..

இமைகளைச் சுருக்கி வாய் விட்டு அவன் சிரித்த விதம் அலாதி அழகாக இருந்தது.. நந்தினி அவனையே பார்த்தாள்.. பார்த்த பார்வையை அவளால் விலக்கிக் கொள்ள முடியவில்லை.. ஆறடி உயரமும் அயர வைக்கும் கம்பீரமுமாக அவள் மனதை ஈர்த்த அந்த ஆணழகனின் அண்மையில் அவளாக அவள் இல்லாததை நடுக்கத்துடன் உணர்ந்தாள்.. அவனது அண்மையில் மனம் சந்தோஷிப்பதும் அவனது விலகலில் மனம் தவிப்பதும் ஏன் என்று பல வினாக்களை மனதினில் எழுப்பிப் பார்த்தாள்.

கிடைத்த விடை அவளை மருட்டியது..

அவனையே பார்த்துக் கொண்டிருந்த அவளது பார்வையில் அவனது விழிகள் மின்னின.. அவள் பார்வையோடு பின்னிப் பிணைந்தது அவன் பார்வை.. சிரிப்பை நிறுத்தி விட்டு ஆழ்ந்த பார்வையோடு அசையாமல் நின்றான்.. அவனது விழிகளில் தீட்சண்யத்தில் நந்தினியின் கண்கள் கலங்கின..

இனம் புரியாத துயர் அவள் மனதை நிறைத்தது.. அது எதனால் என்று அவளது குழந்தைத்தனம் கொண்ட மனதிற்குப் புரியவில்லை.. பார்வையை விலக்கிக் கொண்டாள்.. அவன் மார்பில் முகம் புதைத்துக் கொள்ள வேண்டும் போல இருந்ததில் திகைத்தாள்..

அவளது மனதைப் படித்து விட்டவனைப் போ ல அவன் கை நீட்டி அவளை தலையைத் தடவிக் கொடுத்தான்.. ஆட்டுக் குட்டியைப் போல அவன் முகத்தைப் பார்த்தவளை இமைகளை மூடித் திறந்து அருகில் அழைத்தான்.. அதற்காகவே காத்திருந்தவளாய் அணை உடைத்த வெள்ளம் போல அவன் மார்பில் ஒன்றி விட்டாள் நந்தினி.. அவளைச் சுற்றி வளைத்தன அவனது கரங்கள்.. அவளது உச்சந் தலையில் முகத்தைப் பதித்தவன் சிறு முத்தமொன்றையும்

சேர்த்துப் பதித்தான்.. நந்தினியின் உடல் முழுவதும் மின்சாரம் பாய்ந்ததில் நந்தினி நடுங்கிப் போனாள்..

முதல் முத்தம்..! அவனது விரல் தொட்ட அவளது மேனியை அவனது இதழ்கள் தொட்ட அந்த வினாடி..!

நடுங்கிய நந்தனியின் முதுகில் தட்டிக் கொடுத்தான் ரவிச்சந்திரன்.. உணர்வுகளின் ஆளுகையில் அவனிடம் தன்னை இழந்து விடுவோமோ என்று நந்தினியை பயம் பீடித்துக் கொண்டது.. விலக முயன்றா ள்.. அவன் தடுக்கவில்லை.. அவளை விலக்கி நிறுத்தி இதமாக புன்னகைத்தான்.. தவறு செய்து விட்டவளைப் போல மருண்டு விழித்த நந்தனியின் கன்னத்தில் தட்டினான்..

“இனி மோகனிடம் பேசக் கூடாது.. என்ன..” சிறு குழந்தையிடம் சொல்வதைப் போலப் பரிவுடன் சொன்னான்..

“ம்ம்ம்..” கலக்கம் பரவிய முகத்துடன் முணுமுணுத்த நந்தினி..

“அளவாப் பேசறேன்..” என்றாள்..

“ம்ப்ச்..” கண்டனத் தொனியில் சூள் கொட்டிய ரவிச்சந்திரன்.. “அவன் வழியறான்னு தெரிஞ்ச பின்னாலும் அடம் பிடிக்கறியே..” என்று அதட்டினான்..

“அவன் பேச வந்தா முகத்திலடித்ததைப் போல முகத்தைத் திருப்பிக்க என்னால முடியாது..” சன்னக்குரலில் சொன்னாள் நந்தினி..

“அதுதான் ஏன்..?” ரவிச்சந்திரன் உறுமினான்..

மீண்டும் கோபம் கொண்டவனை ஏறிட்டுப் பார்க்க முடியாமல் முகம் சிவக்கத் தலை குனிந்திருந்தவளின் மௌனம் அவனது கோபத்தை அதிகரிக்கச் செய்தது..

“அவனை உன்னாலே அவாய்டு பண்ண முடியாதுங்கிறதுக்கான ஒரே அர்த்தம் என்ன தெரியுமா..? நீ மலர் டீச்சரா மாற நினைக்கிறேங்கிறதுதான்..”

அழுத்தமான அவனது குரல் அடிபட்ட பார்வையுடன் நிமிர்ந்த நந்தினி அழுது விட்டாள்..

“வேண்டாம் பாஸ்.. இப்படிப் பேசாதீங்க.. மோகனைப் பார்த்தா எனக்கு நந்தகுமாரின் ஞாபகம்தான் வருது.. அவன் மனசை ஹர்ட் பண்ண யோசனையா இருக்கு..”

தேம்பியவளை இழுத்து அணைத்துக் கொண்ட ரவிச்சந்திரன்.. அவள் தலையைக் கோதி விட்டான்.. சற்று நேரம் எதுவும் பேசாமல் மௌன அணைப்புடன் அப்படியே நின்றிருந்தான்.. வழக்கம் போல முதலில் விலகியது நந்தினிதான்.. அப்போதும் அவளது முகம் துடைத்து விட்டான்.. அவன் முகத்தில் விரவியிருந்த மென்மையில் இது உலகப் புகழ் பெற்ற ரவிச்சந்திரன்தானா என்று திகைத்துப் போனாள் நந்தினி..

“நீ அவனைத் தம்பியா நினைக்கிற.. ஓகே.. அதைப் போல அவனும் உன்னை அக்காவா நினைக்கனுமே..?”

“நிச்சயம் நினைப்பான்..”

“என்றைக்கு..?”

“இன்றைக்கு இல்லேன்னாலும் என்றைக்காவது ஒருநாள் அவன் என்னை அக்காவா நினைப்பான்..”

“சப்போஸ்.. அவன் அப்படி நினைக்கலேன்னா..?”

“ஸோ வாட்..? ஆணும், பெண்ணும் பேசிப் பழகறதுக்கு சகோதர பாசம் மட்டும்தான் காரணமா இருக்கனுமா..? நட்பு இருக்கக் கூடாதா..?”

“இருக்கலாமே..”

கைகளை விரித்துத் தோள்களைக் குலுக்கி இலகுவாகச் சிரித்தான் ரவிச்சந்திரன்.. அவ்வளவுதானா என்ற மலைப்புடன் பார்த்தவளின் தலையில் குட்டி..

“நீ கூட சில சமயத்தில சீரியஸா பேசி வைக்கிற..” என்றான்..

‘அதைக் குட்டாம சொல்லக் கூடாதா..?’ தலையைத் தடவிக் கொண்டாள் நந்தினி..

“வா.. உள்ளே போகலாம்..”

ரவிச்சந்திரன் அலுவலகக் கட்டிடத்தை நோக்கி நடந்தான்.. பின் தொடராமல் தலையைச் சொறிந்த நந்தினி ஜன்னல் பக்கமாக பார்வையால் துழாவினாள்.. உள்ளே போனதும் ரவிச்சந்திரன் கொடுத்து விட்டுப் போன வேலையைப் பற்றிக் கேட்டான்.. பிரிண்ட் அவுட் எடுத்துக் கொடுக்க பிரிண்டர் மக்கர் செய்கிறது என்றால் மறுபடியும் மலையேறி அவளை அர்ச்சிக்க ஆரம்பித்து விடுவான்..

வாங்கிய அர்ச்சனைகளே போதும் என்ற அச்சம் நந்தினிக்கு..

அடுத்தடுத்து அர்ச்சனைகளை வாங்கி அர்ச்சனைப் பூக்களாக மாற விருப்பமில்லாத காரணத்தினால் அவள் பிரிண்ட் அவுட் எடுத்துப் பறக்க விட்ட பேப்பரைத் தேட ஆரம்பித்தாள்..

‘அது.. அது.. பிரிண்ட் அவுட் எடுத்த பேப்பரை மாதிரியே இருக்கில்ல..’ கண்களைச் சுருக்கிப் பார்த்தாள்..

ஜன்னலுக்கு வெளியே இருந்த பச்சைப் பசேலென்ற புல்வெளியில் வெள்ளையாக இருந்த பேப்பர் அசைந்து படபடத்தது..

‘பறந்திருமோ..’

நந்தினியை பயம் பீடித்துக் கொண்டது.. அவள் வேகமாக நடந்தால் பேப்பருக்குத் தெரிந்து விடும் என்பதைப் போலப் பம்மிப் பம்மி நடந்தாள்.. அவள் பின் தொடர்ந்து வருகிறாள் என்ற நினைவில் பேசிக்கொண்டே படியேறிய ரவிச்சந்திரன் அவளிடமிருந்து பதில் வராததில் திரும்பிப் பார்த்து விட்டுப் புருவங்களைச் சுருக்கினான்..

‘கோழி பிடிக்கிறதைப் போல எதைப் பிடிக்கப் போகிறா..?’ ஒருவேளை கோழியைத்தான் பிடிக்கப் போகிறாளோ என்ற சந்தேகத்துடன் சப்தம் எழுப்பாமல் அவள் பக்கமாகப்

போனான்.. அவன் சப்தம் எழுப்பியிருந்தாலும் அது அவளின் காதுகளில் ஏறியிருக்காது என்பது வேறு விஷயம்.. கொக்குக்கு ஒன்றே குறி என்பதைப் போல அவள் பேப்பரே குறியாக அதைக் குறிவைத்து நகர்ந்தாள்.. பக்கத்தில் அவள் வரட்டும் என்று காத்திருந்ததைப் போலப் படபடப்புடன் இருந்த காகிதம் மிகச் சரியாக அவள் குனிந்து பேப்பரைத் தொட முயன்றபோது காற்றில் எழும்பிப் பறந்தது..

கோழி பிடிப்பதைப போல அதன் பின்னால் ஓடி.. "கேட்ச்.." என்ற கூவலுடன் எம்பித் தாவிக் கைப்பற்றியவளுக்கு மூச்சு வாங்கியது..

"ம்ஹா.. ம்ஹா.." என்ற மூச்சிரைப்புடன் வந்தவளை ஒரு மார்க்கமாகப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தான் ரவிச்சந்திரன்..

'இவன் எப்போ வந்தான்..?'

அவள் கோழி பிடித்ததை அவன் பார்த்துக் கொண்டிருந்திருக்கிறான் என்பதில் அவளுக்கு வெட்கமாகி விட்டது.. அவன் பார்வையை வைத்து விசித்திரமாகப் பார்க்கிறானா இல்லை வினோதமாகப் பார்க்கிறானா என்று அவளால் அனுமானிக்க முடியவில்லை..

‘திட்டுவானோ..?’

அர்ச்சனைப் பூக்களாகத் தயாராகி நின்றாள்.. அவன் அர்ச்சனையேதும் செய்யவில்லை.. பேசாமல் திரும்பி விட்டான்..

‘எதுவும் சொல்லாமப் போறானே..’

திட்டித்திட்டி வாய் வலித்து விட்டதால் இது தேறாத கேஸ் என்று திராட்டில் விட்டு விட்டானோ.. என்று பல விதமாக யோசித்தவள் நாக்கைத் துறுத்தி அலட்சியமாகப் போனால் போகிறது என்ற விதத்தில் தோள்களைக் குலுக்கினாள்.. அதில் அவன் தோள்களைக் குலுக்கிய போது படு ஸ்டைலாகக் குலுக்கினான் என்ற ஜொள்ளு வேறு..

மிகச் சரியாக அதே நொடியில் அவன் திரும்பிப் பார்த்து வைக்க இவள் தடுமாறிக் கீழே விழ இருந்து சமாளித்து நிலைகொண்டாள்.. கட்டாயம் இதற்குத் திட்டுவான் என் று அவள் நினைத்திருக்க அவன் அமைதியின் சிகரமாக தலையசைத்து விட்டுப் போய் விட்டான்..

‘தண்ணி தெளிச்சு விட்டுட்டான் போல..’

அவளுக்கு உற்சாகமாக இருந்தது.. பிரிண்ட் அவுட் எடுத்தப் பேப்பரையும் கைப்பற்றியாச்சு.. அவனிடம் திட்டு வாங்காமலும் தப்பித்தாயிற்று..

'நந்தினி.. எங்கேயோ போயிட்டடி..'

நெடுங்காலமாக ஆசைப்பட்ட பாராட்டை தனக்குத் தானே வழங்கி மகிழ்ந்து போனாள் நந்தினி.. வெற்றியைக் கொண்டாடும் விதமாக..

"சிட்டுக் குருவிக்கென்ன கட்டுப்பாடு..?

தென்றலே உனக்கெது சொந்தவீடு..?

உலகம் முழுதும் பறந்து பறந்து

ஊர்வலம் வந்து விளையாடு.."

என்று சத்தமாக பாடி வைத்தாள்.. அதில் மரத்திலிருந்த பறவைக் கூட்டம் சிறகடித்துப் பறந்து தங்களது ஆட்சேபத்தை வெளிப்படுத்தின.. என்னடா இது என்று ஆகி விட்டது நந்தினிக்கு..

'எனக்கெதிரா வயநாட்டுப் பறவைக் கூட்டம் கூட சதி பண்ணுது.. அஜந்தாவோட கூட்டணி போட்டிருக்கும்களோ..' பறவைகளை முறைத்தபடி உள்ளே போனவளை சுழல்

நாற்காலியில் சுழன்று ஆடியபடி எதிர் கொண்டான் ரவிச்சந்திரன்..

“வாசல் பக்கம் பாட்டுக் கச்சேரி தூள் பறந்துச்சு போல..?”

“ஹி.. ஹி.. சும்மா..”

“சும்மா பாடறதை இங்கே வந்து பாடியிருக்க வேண்டியதுதானே..? காட்டுக்குள்ளே பாடி பட்சிக் கூட்டத்தைக் தெறிச்சுப் பறக்க விடனுமா..?”

அவன் கண்களில் வழிந்த கிண்டலில் அவளுக்கு அசடு வழிந்தது..

‘அங்கே கத்தினதை இங்கே எப்படிக் கேட்டிருப்பான்..?’

ஒரு தினுசாக பார்த்தபடி அவளுடைய சேரில் உட்கார்ந்தாள்.. அவளையே அவன் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற குறுகுறுப்பில் இயல்பாக இருக்க முடியவில்லை..

“கோழி பிடிக்கிறதைப் போல எதையோ துரத்திக்கிட்டுப் போய் பிடிச்சுட்டு வந்தியே.. என்ன அது..?” என்று கேட்டான்..

“அதுவா பாஸ்..?” நந்தினி உற்சாகமானாள்..

தீர்க்கமான பார்வையுடன் இருந்தவனிடம் அவளது உற்சாகத்திற்கான எதிரொலியில்லை.. அவளுக்கு என்னவோ போல ஆகிவிட்டது..

“நீங்க கொடுத்த வொர்க்கை முடிச்சிட்டேன் பாஸ்.. அதை ஸ்டேட்மெண்டோட பிரிண்ட் அவுட்தான் இது..” பவ்யமாக அவனிடம் நீட்டினாள்..

வாங்கிப் பார்த்தவனின் முகத்தில் வந்து போன உணர்ச்சிகளில் குழம்பிப் போனாள்..

‘எவ்வளவு வன்பாடுபட்டு வொர்ககை முடிச்சிருக்கேன்..? அதை அப்ரிசியேட் பண்ணனும்னு இவனுக்குத் தோணலியா..?’

முகத்தை ஒரு குழ நீளத்திற்குத் தூக்கி வைத்துக் கொண்டவளைப் பார்த்தவன் அவள் தயாரித்து வைத்திருந்த ஸ்டேட்மெண்டைத் தூக்கிக் காண்பித்து ஒரு மார்க்கமாக அவளைப் பார்த்தபடி அவன் திருவாயைத் திறந்தான்..

“நீ அவ்வளவு கஷ்டப்பட்டு இதை கேச் பண்ணியிருக்க வேண்டியதில்லை.. இதுக்கே இது எங்கே போகப்

போகுதுன்னு தெரிஞ்சிருக்கு.. நான் தூக்கிக் கடாசறதுக்குள்ளத் தானாப் போயிடனும்னு எஸ்கேப் ஆகிப் பறந்ததைத் துரத்திப் பிடிச்சுக்கிட்டு வந்து என்னிடமும் நீட்டற பாரு.. அங்கே நிற்கிற நீ.. செம தைரியம்தான் உனக்கு..”

நந்தினிக்கு மொட்டைச் சுவரில் முட்டிக் கொள்ளலாம் போல இருந்தது..

அத்தியாயம் 84

"செந்தாழம் பூவில் வந்தாடும்

தென்றல் என்மீது மோதுதம்மா.."

ஜீப்பில் பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது.. ஆண்டாண்டு காலமாக ரவிச்சந்திரனுடன் விரோதம் கொண்டிருப்பதைப் போல அவனுக்கு புறமுதுகு காட்டி ஜன்னல் பக்கமாக திரும்பி அமர்ந்திருந்தாள் நந்தினி.. அவன்மீது கோபமாமம்.. அவளது செய்கையில் அவனுக்குச் சிரிப்பு வந்தது.. உம்மென்று வந்தவளைப் பேச்சில் இழுக்க என்ன பேசலாம் என்ற யோசனையில் அவன் ஆழ்ந்தான்.. நந்தினியோ கஷ்டப்பட்டு (?) அவள் தயாரித்திருந்த ஸ்டேட்மெண்டை அவன் கழுவிக்கழுவி ஊற்றியதை நினைத்து துக்கப்பட்டுக் கொண்டிருந்தாள்..

"இது என்ன..?"

"ஸ்டேட் மெண்ட்.."

"இது ஸ்டேட்மெண்டுன்னா ரியலான ஸ்டேட் மெண்டெல்லாம் சூசைட் பண்ணிக்கும்.."

“ஏன்.. ஏன்.. ஏன்..?”

“அடங்கறியா..? எதுக்கு இத்தனை ஏன்..? ஆடிட்டருக்கு சப்மிட் பண்ண ஸ்டேட்மெண்டை ரெடி பண்ணுன்னு சொன்னா இஷ்டத்துக்கு எதையெதையோ நம்பரைப் போட்டு கந்தலகோலம் பண்ணி வைச்சிருக்க.. தெரியலைன்னாக் கேட்டுத் தொலைக்க வேண்டியது தானே..?”

‘ஆமாண்டா.. நீ நல்லகுடி நாணயம்.. தூத்துக்குடி வெங்கலம்.. நான் சந்தேகம் கேட்டவுடனே சொல்லிக் கொடுத்துட்டுத்தான் வேற வேலையைப் பார்ப்ப.. போவியா.’

“மனசுக்குள்ள என்னத்தை நினைச்சுக்கிட்டு இருக்கே..?”

“ஒண்ணுமில்லையே.. ஒண்ணுமேயில்ல.. ஹி.. ஹி..”

“சிரிக்காதே.. அசடு வழியுது.. இதில இருந்தே நீ என்னைப்பற்றி ஏதோ உயர்வா நினைத்திருக்கேன்னு புரூவ் ஆகுது..”

“எப்போப் பார்த்தாலும் என்னைக் குறை சொல்றதே உங்களுக்குப் பிழைப்பாய் போச்சு பாஸ்.. பழி போடறதே குறிக்கோளாய் ஆகிருச்சு..”

“யாருக்கு..? எனக்கா..?”

“யெஸ் பாஸ்..”

“ஏன் சொல்ல மாட்ட..? முன்னே பின்னே தெரியாத பெண்ணுக்கு அதுவும் வீட்டை விட்டு ஓடி வந்திருக்கிற பெண்ணுக்கு.. எக்ஸாம் எழுதி பாஸா பெயிலான்னு ரிசல்ட் தெரியாத பெண்ணுக்கு துணிஞ்சு வேலை கொடுத்து வீட்டில தங்க வைச்சிருக்கேனில்ல.. நீ இதுவும் சொல்வ.. இதுக்கு மேலேயும் சொல்லுவ..”

“சும்மாச் சும்மா இதையே சொல்லிக் காட்டாதீங்க பாஸ்.. பி.டெக் படிச்சவளுக்கு அக்கவுண்ட்ஸைப் பத்தி என்ன தெரியும்..?”

“அப்புறம் எந்த தைரியத்தில வேலைக்கு வந்த..?”

“நீங்க பொன்மனச் செம்மல்ன்னு உத்ரா சர்டிஃபிகேட் கொடுத்தா.. அந்த தைரியத்திலதான் வேலைக்கு வந்தேன்.. இல்லேன்னா உங்களை நம்பி யார் வருவா..?”

“ஓஹோ.. இது வேற இருக்கா..? என்னை நம்பி நீ வர மாட்டியா..?”

இதை எதற்காக அவள் விழிகளுக்குள் உற்றுப் பார்த்தபடி ரகசியக் குரலில் சொல்லி வைக்கிறான் என்று புரியாமல் விழித்தாள் நந்தினி..

“மக்கு..” என்றான் அவன்..

இந்தப் பட்டத்தை அவளது ஸ்டேட்மெண்டிற்காகக் கொடுக்கிறான் என்பதை நம்ப அவள் தயாராக இல்லை.. அவனது ரகசியப் பார்வையையும், பேச்சையும் புரிந்து கொள்ளாமல் திருதிருப்பதினால்தான் மாட்சிமை பொருந்திய மக்கு பட்டத்தை அவளுக்குச் சூட்டுகிறான் என்று புரியாத அளவுக்கு அவள் மக்கல்ல..

நந்தினியின் மனம் படபடத்தது.. புரிபடாத அவனது பார்வையினால் கிளர்ந்தெழும் உணர்வுகளின் பேரலையில் அவள் மூழ்கினாள்.. மூச்சுத் திணறியது.. விடுபட விரும்பாத பேரலை அது..

ரவிச்சந்திரன் அவள் தயாரித்துக் கொடுத்திருந்த ஸ்டேட் மெண்டைச் சுருட்டிக் கசக்கி இன்னபிற வடிவங்களாக்கி பக்கத்திலிருந்த குப்பைக் கூடையில் போட்டான்.. நந்தினி விசனம் கொண்டாள்... சிதிலமாகியிருந்த ஸ்டேட்மெண்ட் அவனைப் பார்த்துக் கண்ணீர் விட்டபடி நீ துரத்தி வந்து

என்னைப் பிடிக்காமலிருந்திருந்தா சுதந்திர வானிலே நான் பறந்திருப்பேனே என்று நியாயம் கேட்பதைப் போல இருந்தது..

“இது அநியாயம் பாஸ்..” என்று குமுறினாள்..

“எது அநியாயம்..?”

அவன் புருவங்களை உயர்த்தினான்.. அழகாய் இருக்கிறாயடா.. பயமாய் இருக்கிறதடா என்று கூவ வேண்டும் போல இருந்ததை கடைசி நொடியில் அடக்கித் தப்பிய நந்தினி மூக்கை உறிஞ்சிய படி..

“அந்த ஸ்டேட்மெண்டை வெளியே போட்டிருக்கலாமில்ல.. எதுக்காக கசக்கிக் குப்பைக் கூடையிலே போடனும்..?” என்று பொருமினாள்..

“கேரளத்து வயநாட்டைக் குப்பையாக்கனும்ங்கிற திட்டத்தோடதான் தமிழ்நாட்டை விட்டுக் கிளம்பி வந்திருக்க போல..” அவன் அடுத்தக் குற்றப் பத்திரிக்கையை வாசித்தான்..

உன்னோடு எனக்கென்ன பேச்சு என்று முகத்தைத் திருப்பிக் கொண்ட நந்தினி அவளுடைய சீட்டில் உட்கார்ந்து

கம்யூட்டரின் சின்னத்திரையைக் கவனமாகப் பார்க்க ஆரம்பித்தாள்.. திரையில் வந்த ஸ்டேட்மெண்டின் கட்டங்களுக்குள் மிளிர்ந்த எண்களைப் பார்த்தபடி எதை எந்தக் கட்டத்தில் போட்டிருக்க வேண்டும் என்று படுதீவிரமாக ஆராய்ந்து கொண்டிருந்தாள்..

“என்ன..? பேஸ்புக்கில் இருக்கியா..?” கேலிக் குரவில் கேட்டான் ரவிச்சந்திரன்..

‘நான் வேலை பார்க்கிறேன்னு இவன் நம்பவே மாட்டானா..?’ ரோஷம் ரோஷமாக இருந்தது நந்தினிக்கு..

சுழலும் சேரை விட்டு எழுந்து வந்தவன் நந்தினிக்குப் பின்னால் நின்று குனிந்து பார்த்தான்.. அவனது வெப்பம் நிறைந்த மூச்சுக் காற்று நந்தினியின் தோளைச் சுட்டது.. அவள் தவித்துப் போனாள்..

“நீ எப்படித்தான் முட்டிக்கிட்டாலும் இந்த ஸ்டேட்மெண்ட் டேலி ஆகாது..” ஆருடம் சொன்னான்..

“ஏனாம்..?” அவள் சண்டைக்குப் போனாள்..

“ஏன்னா.. இதில இருக்கிற எந்த நம்பரும் சேரளம் எஸ்டேட்டோட வரவு செலவில வராத நம்பர்.. அத்தனையும்

பீர மேட்டில இருக்கிற ரப்பர் ஃஃபேக்டரியோட வரவு செலவுக் கணக்கில வர்ற நம்பர்.. அதைத் தூக்கி இதில போட்டக் கணக்கு எப்படி டேலியாகும்..? உன்னை நம்பி ஸ்டேட் மெண்டைக் கொடுத்தா என்பாடு திண்டாட்டம்தான்.. கிளம்பு.. கிளம்பு..”

“எங்கே..?”

“வீட்டுக்குத்தான்.. லன்ச்சுக்குப் போயிட்டு வந்து உனக்கு ஸ்டேட்மெண்டை எப்படிப் பிரிப்பேர் பண்ணனும்ங்கிறதைச் சொல்லித் தரேன்.. எனக்குப் பசிக்குது.. உனக்குப் பசிக்கலையான்னு கேட்க மாட்டேன்.. எனக்கே பசிக்கிறப்ப உனக்கு எப்பவோ பசிச்சிருக்கும்..”

அவனது கேலியில் இவளுக்கு கோபம் வந்து விட்டது.. சுதந்திர வானில் சிறகடிக்க வேண்டிய ஸ்டேட்மெண்டை அவன் குப்பைக் கூடையில் போட்டு விட்ட கோபமும் சேர்ந்து கொள்ள..

“அது என்ன ‘எனக்கே’ன்னு ராகம் பாடறிங்க..? உங்களுக்கு வயிறு இல்லையா..? பசியாவரம் வாங்கி வந்திருக்கீங்களா..?” என்று போர்முரசு கொட்டினாள்..

“கூல்..! கூல்..! சண்டை பிடிக்க எதுடா சாக்குன்னு காத்திருப்பியா..? இப்பத்தானே ஆனந்தனுக்கு வந்த டிஃபன் கேரியரை ஏக்கமா பார்த்துக் கிட்டு இருந்த..?” அவன் மடக்கினான்..

“அது.. அது.. அதுவந்து..” பதில் சொல்ல முடியாமல் திக்கித் திணறினாள் நந்தினி..

“உளறிக் கொட்டி கிளறி மூடாம எழுந்திருச்சு வா.. எனக்கே பசிக்குது..”

“திரும்பவும் எனக்கேவா..?”

“எப்பவும் எனக்கேதான்..”

ரவிச்சந்திரனின் விழிகளில் மின்னிய ரகசியம் அவன் எதையோ சொல்லி அவளைச் சீண்டப் போகிறான் என்பதை அறிவித்தது.. அவன் குனிந்து அவளது காதோரம் உதடுகள் உரச..

“ஏ குருவி..! இப்ப வா குருவி..!” என்று சிரித்தான்..

நந்தினி ஸ்தம்பித்துப் போனாள்.. எதிர்பாராமல் அவளது செவி மடல்களில் உரசிய அவனது மீசையின் ரோமங்களும்.. உதடுகளும் அவளை என்னவோ செய்தன.. நடுங்கும்

உடலும் கண்களை இறுக மூடி விட்டவளை வெகு அருகில் பார்த்தவனுக்கு குடை போல கவிந்திருந்த அவளது இமைகளின் மீது முத்தம் பதிக்க வேண்டும் போல இருந்தது.. அதை அவள் தாங்கிக் கொள்ள மாட்டாள் என்பதில் விலகி நிமிர்ந்தான்.. நந்தினி அசையாமல் உட்கார்ந்திருந்தாள்.. அவளுடைய இரு தோள்களிலும் கரம் பதித்து அவன் மறுபடியும் குனிந்ததில் உணர்வுகள் விழிந்தெழுந்தவளாக சட்டென எழுந்து விட்டாள்..

“ரிலாக்ஸ்..” அவன் இரண்டு கைகளையும் ஒன்றுமேயில்லை என்பதைப் போல விரித்துச் சிரித்தான்..

நந்தினி சிரிக்கவில்லை.. மளமளவென வாசலுக்குப் போய் ஜீப்பில் ஏறி உட்கார்ந்து விட்டாள்.. பக்கத்தில் உட்கார்ந்து ஜீப்பைக் கிளம்பிய ரவிச்சந்திரனுக்கு புறமுதுகு காட்டி ஜன்னல் பக்கமாக திரும்பிக் கொண்டாள்.. ஜீப்பில் பாடலை ஒலிக்க விட்டபடி மலைப்பாதையில் ஜீப்பைச் செழுத்திய ரவிச்சந்திரனுக்கு உற்சாகமாக இருந்தது.. மெதுவாக விசிலடித்தான்.. நந்தினி அசையவில்லை. . அவளைப் பேச்சில் இருக்க முயன்றான்..

“நந்தினி..”

“....”

“என்னாச்சு..?”

ஏதுமறியாதவன் போல அவன் கேட்டதில் அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக இருந்தது.. என்ன ஆனது என்பதை எப்படி அவள் சொல்வாள்..? வார்த்தைகளால் விவரிக்க முடியும் உணர்வுகளா அவை..?

“பேச மாட்டியா..?”

“என்னத்தைப் பேச..?”

“என்கூட பேச எதுவுமேயில்லையா..?”

“இல்லை..”

“மோகன்கூட மட்டும் மணிக்கணக்கில பேசற..?”

நந்தினி இமைமூடித் திறந்தாள்.. அவன் பக்கமாகத் திரும்பி நெருப்பாக முறைத்தாள்.. அவனுக்கு அதுதானே வேண்டும்..!

“ஹப்பா..! அனல் பறக்குது..” என்று கண் சிமிட்டினான்.. நந்தினியின் கோபம் பறந்து விட்டது.. அவனைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் போல இருந்தது..

“இப்படிக் கோவிச்சுக்கிட்டா எப்படி..? நான் பாவமில்லையா..?”

அவன் பாவம் போல முகத்தை வைத்துக் கொண்டான்.. கண்களில் கூத்தாடிய குறும்பை மறைக்காமல் மறுபடியும் கண்சிமிட்டினான்.. நந்தினி பேச்சிழந்தாள்.. இளமைப் பருவத்தில் இதுபோன்ற தாக்குதல்களை எதிர்கொள்வது மிகவும் கடினம்.. அவளது திடம் குலைந்து பலவீனமாவதைப் போல இருந்ததில் உதட்டைக் கடித்தபடி சாலையை வெறித்தாள்..

‘இவள் குழந்தை..!’ அவன் மனம் அவளைச் சீராட்டியது..

‘இவன் ஆள் மயக்கி..!’ அவள் மனம் அவன்மீது பயம் கொண்டது..

“வயநாட்டில எங்க குடும்பத்துக்கு ரப்பர் ஃபேக்டரியும் சணல் ஃபேக்டரியும் இருந்தன..”

அவளது உணர்வுகளுடன் விளையாடியது போதும் என்பதைப் போல அவன் பேச்சை மாற்றினான்.. நந்தினியும் அதைப் பற்றிக் கொண்டு அவளை அமிழ்த்திக் கொண்டிருக்கும் உணர்வுகளில் இருந்து விடுபட முற்பட்டாள்..

“இருந்தனன்னு சொன்னா.. இப்போது இல்லையா..?”

“இல்லை..”

அவனது புருவங்கள் நெரிபட்டன.. சுளித்தன.. நந்தினிக்கு அவனது நெற்றிப் பொட்டில் விரல் வைத்து புருவச் சுளிப்பை நீவிப் போக்கி விட வேண்டும் போல இருந்தது..

“ஏன்..?” ஆதுரத்துடன் கேட்டாள்..

“அது ரெண்டையும் தாத்தா அவந்திகா அத்தைக்குக் கொடுத்து விட்டார்..”

“ஓ..”

அவற்றுக்கு என்ன கதியாகியிருக்கும் என்று நந்தினிக்குப் புரிந்து விட்டது.. ரவிச்சந்திரனின் முகம் கோபச் சிகப்பைப் பூசிக் கொண்டது..

“அத்தையிடமிருந்து கை மாறின சொத்துக்களை வாங்கினவங்க என்கிட்ட விற்கத் தூது விட்டாங்க.. நான் மறுத்துட்டேன்..”

“ஏன்..? வாங்கியிருக்கலாமே.”

“ஊஹூம்.. அது கூடாது நந்தினி.. விலை கொடுத்து நான் வாங்க அது என் சொத்துன்னு அவங்க உரிமை

கொண்டாடுவாங்க.. தட் ஸேம் டைம்.. எங்களுக்குன்னு ரப்பர் ஃபேக்டரியும், சணல் ஃபேக்டரியும் இருந்தாகனும்.. ஸோ.. பீர மேட்டில அது ரெண்டையும் உருவாக்கினேன்..''

''ஆனா..'' நந்தினி தயங்கினாள்..

''என்ன..?'' அவன் அவளைப் பார்த்தான்..

''அதில்ல.. உங்க தாத்தாவோட சொத்துக்களை நீங்க வாங்கிக்கிட்டுத்தானே உங்க மாமாவோட கடனை அடைத்தீங்க..?''

''அதெல்லாம் தாத்தாவோட சொத்துக்கள் நந்தினி.. அதை வாங்காம விட்டு வைச்சா அதையும் அவந்திகா அத்தை ஸ்வாஹா பண்ணிருவாங்க.. அதனால என் பெயருக்கு மாத்திக்கிட்டேன்.. மத்தபடி அவந்திகா அத்தைக்குக் கொடுத்த பங்கை வாங்கறதைப் போல டேன்ஜரான விஷயம் எதுவுமே கிடையாது..''

அது உண்மை என்பதைக் கண் கூடாகப் பார்த்திருந்ததினால் நந்தினி பேசாமல் இருந்தாள்.. அரண்மனையை ஜீப் நெருங்கி விட்டதால்.. ரவிச்சந்திரனும் பேச்சை நிறுத்தி விட்டான்.. பொதுவாக தனிமையில் இருக்கும் போதுதான் அவளிடம் உரிமையாகப் பேசிப் பழகுவான்..

மற்றவர்கள் முன்னிலையில் சற்று ஒதுங்கித்தான் இருப்பான்.. இது நந்தினியின் மனதை உறுத்தியது.. வீணா, ரம்ய மாலினியின் முன்னால் கூட அவளிடம் உரிமையாய் பேசிப் பழகுபவன் வெளியாரின் முன்பு அவளை விட்டுக் கொடுப்பதைப் போல ஒட்டாமல் தள்ள நிற்பதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. அவன் அந்தஸ்து பேதம் பார்க்கிறான் என்று மனதுக்குள் புழுங்கினாள்..

போர்டிகோவில் அஜந்தா நின்றிருந்தாள்.. ஜீப்பில் வந்தவர்களைக் குரோதமாகப் பார்த்தாள்.. அவந்திகாவின் குடும்பத்தவரை ரவிச்சந்திரன் ஒரு பொருட்டாகவே கருத மாட்டான் என்பதில் நந்தினிக்கு நிம்மதியாக இருந்தது..

அவர்கள் முன்னால் அவன் நந்தினியை விட்டுத் தள்ளி நின்றதில்லை..

அப்போதும் அப்படித்தான்.. அஜந்தா என்ற ஒருத்தி அங்கே நிற்காததைப் போல முகத்தை வைத்துக் கொண்டு நந்தனியின் பக்கம் திரும்பி..

“இறங்கு..” என்று அதட்டினான் ரவிச்சந்திரன்..

நந்தினிக்கு அது போதாதா..? அவள்தான் அஜந்தா என்ற பெயரைக் கேட்டால் கூட அரள்வாளே.. அவளிடம் தனியாக மாட்டிக் கொள்வதை விரும்புவாளா..?

"இதோ.." என்று ஜீப்பிலிருந்து குதித்து விட்டாள்..

"மெல்ல.. உனக்கான பட்சணம் எங்கே கயும் ஓடி விடாது.. இது வயநாட்டு அரண்மனை.. எல்லோருக்கும் சாப்பாடு கிடைக்கும்.. பந்திக்கு முந்தனும்னு பறக்காதே.." இளக்காரச் சிரிப்புடன் நந்தினியை மட்டம் தட்டினாள் அஜந்தா..

"அதனால்தானே நீயும் உன் குடும்பமும் இங்கேயே ஸ்டே பண்ணியிருக்கீங்க அஜந்தா.." உடனடியாக பதில் தந்தான் ரவிச்சந்திரன்..

நன்றியுடன் பார்த்தாள் நந்தினி.. இதைத்தான்..

'உடுக்கை இழந்தவன் கை போல - ஆங்கே

இடுக்கண் களைவதாம் நட்பு..'

என்று வள்ளுவப் பெருந்தகை கூறினாரோ..

"வா.. வா.." என்றபடி ரவிச்சந்திரன் நடந்த போது அவனைத் தொடுத்துக் கொண்டுதான் ஓடினாள் நந்தினி..

“நில்..” என்று நந்தினியின் கையைப் பிடித்து நிறுத்தி விட்டாள் அஜந்தா..

‘மாட்டிக்கிட்டேனே..’ நந்தினிக்கு வியர்த்து விட்டது..

“அத்தான் கூட ஈஷிக்கிட்டு அலைகிற வேலையை விட்டுட்டு உன் ஊருக்குத் திரும்பிப் பார்க்காம ஓடிப் போயிரு..” என்ற அவளது எச்சரிக்கையில் ஏன் திரும்பிப் பார்க்காமல் ஓடிவிடச் சொல்கிறாள் என்ற கேள்வி நந்தினிக்குள் வந்தது..

திரும்பிப் பார்த்தால் ரவிச்சந்திரனிடம் மயங்கி போகாமல் நின்று விடுவாள் என்று நினைக்கிறாளோ என்ற நினைவுடன் வீட்டுக்குள் ஓடிவிட்டாள் நந்தினி..

அத்தியாயம் 85

சிறிய புதர்களின் ஊதா நிறப் பூக்களைப் பார்த்த நந்தினிக்கு 'ஒரு ஊதாப்பூ கண் சிமிட்டுகிறது..' என்ற கதையின் தலைப்புத்தான் நினைவுக்கு வந்தது.. வெண்ணிலா கதை விரும்பி.. ஊர்க் கதைகளில் காட்டும் சுவராஸ்யத்தை நாவல்களிலும் காட்டுவாள்.. தஞ்சையில் நந்தினியின் வீட்டு மாடியில் லைப்ரரியாக ஒரு அறையே உருமாறியிருக்கும்.. அந்த அறையின் மரஷெல்ஃபில் கண்ணாடிக் கதவுகளுக்கு உள்ளே வரிசை கட்டி அடுக்கப் பட்டிருக்கும் புத்தகங்களுக்கு இடையே அந்தப் புத்தகத்தைப் பார்த்திருக்கிறாள்.. படித்துமிருக்கிறாள்..

தேயிலைத் தோட்டங்களும், மிளகுக் கொடிகளுமாக அந்தச் சூழலே அதியற்புதமாக இருந்தது.. மனதை மயக்கியது.. மலை ஏற வேண்டும் என்று ரவிச்சந்திரன் சொன்ன போது மருண்ட மனது மலையேற ஆரம்பித்ததும் உற்சாகத்தில் ஊஞ்சல் கட்டி ஆட ஆரம்பித்தது..

வயநாடு வந்து ஒரு மாத காலம் ஓடிவிட்டது.. வேலை பார்க்கிறாளோ இல்லையோ.. ரவிச்சந்திரனுடன் தினமும்

சேரளம் எஸ்டேட்டிற்குச் சிரத்தையாக போய் வந்து கொண்டிருந்தாள் நந்தினி.. அஜந்தாவிடமிருந்து ஒளிந்து மறைந்து வீட்டுக்குள் பதுங்குவது எப்படி என்பதை கற்றுக் கொண்டிருந்தாள்.. கற்றுக் கொடுத்த ஆசான் ரம்ய மாலினி..

“அவ அங்கே வந்தா.. இங்கே பதுங்கிக்கங்க.. அவ போன பின்னாலே வெளியே வாங்க..”

“திடிர்ன்னு எதிரில வந்து நின்னுட்டான்னா..?”

“கூப்பிடறீங்களா அத்தைன்னு குரல் கொடுத்துக் கிட்டு ஓடி வந்துருங்க.. அவ ஃபாலோ பண்ண மாட்டா.. தப்பித் தவறி அத்தைங்கிறதுக்குப் பதிலா அத்தான்னு சொல்லித் தொலைத்தீங்கன்னா நிஜமாவே அவ உங்களைத் தொலைச்சுக் கட்டிருவா.. பி கேர் ஃபுல்.. ஹா.. ஹா..”

“அப்படியேன் சொல்லப் போறேன்..? பாஸ்ன்னு தான் சொல்லுவேன்..”

“உங்களுக்குப் பாஸ்ன்னா அவளுக்கு அத்தான் தானே..? ஹா.. ஹா..”

அந்தத் தருணத்தில் நந்தினியின் மனம் தனிமையுணர்வைக் கொண்டது... ரவிச்சந்திரன்

அஜந்தாவுக்குத்தான் அத்தான்.. நந்தினிக்கு இல்லை யென்பதில் எதற்காக அவள் மனம் துயர் கொள்ள வேண்டும் என்று திகைத்தாள்.. அஜந்தா அவனுடைய அத்தை மகள்.. நந்தினி யார்..?

'அகதி..! ஒளிந்து கொள்ள இடம் தேடி வந்தவள்..'

கண்களில் பெருகும் கண்ணீரைத் துடைத்துக் கொள்ள முடியாமல் தலையைக் குனிந்து தப்பித்தாள்.. இல்லையென்றால் ஏன் அழுகறிங்க என்ற ரம்ய மாலினியின் கேள்விக்குச் சும்மா.. என்று பொய் சொல்ல வேண்டியிருக்கும்.. வீட்டு ஞாபகம் வந்து விட்டது என்று மழுப்ப வேண்டியிருக்கும்.. ரம்ய மாலினியின் இரக்கப் பார்வைக்கு ஆளாக வேண்டியிருக்கும்.. தலையைக் கவிழ்ந்து கொண்டால் இந்தத் துன்பங்களிலிருந்து அவள் தப்பித்துக் கொள்ளலாமே...

"உங்களுக்கு ஒண்ணு தெரியுமா..?"

"என்னங்க..?"

"நீங்க மட்டும் அவளைக் கண்டா ஓடி ஒளியறீங்கன்னு இல்லை.. ஆல்ரெடி அவளோட ஃபேமிலியைத் தவிர இங்கே இருக்கிற அத்தனை பேரும் அவளைக் கண்டா ஓடி

ஒளிஞ்சுக்கிட்டுத்தான் இருக்கோம்.. இன்குளிடிங் அவர் தாத்தா, பாட்டி.. ஹா.. ஹா..”

“புரியலை..”

“தாத்தாவும் பாட்டியும் பாரம்பர்யம், பண்பாடுன்னு கட்டுக்கோப்பா இருக்கிறவங்க.. இவ பேசற பேச்சில அவங்களுக்கு சில சமயம் ஹார்ட் அட்டாக்கே வந்திரும்.. அடிச்சுத் தொலைக்கவும் முடியாது.. கண்டிச்சாலும் இவ காதில ஏறித் தொலைக்காது.. இந்தக் கொடுமைக்கு அவளை விட்டுத் தள்ளியிருக்கிறதுதான் பெட்டர்ன்னு இவ இந்தப் பக்கம் வந்தா.. அவங்க அந்தப் பக்கமா ஓடிருவாங்க.. ஹா.. ஹா..”

மனம் விட்டுச் சிரித்த ரம்ய மாலினி நந்தினியின் வருகைக்குப் பின்னால்தான் அவர்களின் வீட்டில் சிரிப்புச் சப்தம் கேட்பதாகக் கூறி நன்றி தெரிவித்தாள்.. இப்படியும் இருப்பார்களா என்றிருந்தது நந்தினிக்கு.. மேகநாதன் கண்டிப்பானவர்தான்.. ஆனால் சிரிக்கத் தெரியாதவரல்ல.. தஞ்சையில் நந்தினியின் வீட்டில் சிரிப்பும் பேச்சுமாகத்தான் இருக்கும்.. கலகலப்பான வீட்டுச் சூழலில் பிறந்து வளர்ந்திருந்த நந்தினிக்கு செல்வச் செழிப்புடன் இருந்தும் ஓர் இறுக்கத்துடனே இருந்த வயநாட்டின் அரண்மனை

ஆச்சரியத்தைத் தந்தது.. அதை ரம்ய மாலினியிடம் சொன்னபோது..

“கோடிஸ்வரங்களா இருந்தா மட்டும் போதுமா நந்தினி..?” என்று அவள் பெருமூச்சு விட்டாள்..

‘வேறு என்ன வேண்டுமாம்..?’

“நிம்மதி வேண்டும் நந்தினி.. அதை பணத்தினால் வாங்க முடியாது.. கடவுளின் சன்னிதானத்தில்தான் அது கிடைக்கும்..”

‘ஆமாம்..’ என்றது நந்தினியின் மனது..

“நெஞ்சுக்கு நிம்மதி..

ஆண்டவன் சன்னதி..”

மெல்லிய குரலில் முணுமுணுத்தாள்.. ரம்ய மாலினி தலையை அசைத்து நந்தினியின் தோளில் சாய்ந்து கொண்டாள்..

அவள் காட்டிய நட்பு அபரிதமானதாக இருந்தது.. வீணாவின் பாசமும் அப்படித்தான்.. அள்ள அள்ளக் குறையாத அட்சயபாத்திரத்தைப் போன்றது அவளது அன்பு.. எங்கே போனாலும் ரம்ய மாலினியை உடன் அழைத்துச் சென்றாள்..

அதற்கான காரணத்தைச் சொன்னபோது ரம்ய மாலினியின் முகத்தில் மிதமிஞ்சிய வெறுப்புப் படர்ந்திருந்தது..

“அவந்திகா அத்தையோட மனசில எப்படியாவது அவங்க மகனை என் தலையில் கட்டி விடனும்ங்கிற பேராசை இருக்கு நந்தினி.. அஜந்தாவும் கூட்டுச் சேர்ந்துக்கிட்டுச் சதித் திட்டம் தீட்டறாங்க.. அதனால அம்மா என்னைக் கூடவே வைத்துக்குவாங்க.. தனியா விடவே மாட்டாங்க..”

சொந்த வீட்டில்கூடச் சுதந்திரமாக உலாவ முடியவில்லையென்றால் அது என்ன வாழ்க்கை..? கொடுமை..!

நந்தினி ரம்ய மாலினியிடமும், வீணாவிடமும் ஒட்டிக் கொண்டாள்.. சந்தர்ப்பம் வாய்க்கும் பொழுதெல்லாம் வீணாவின் புடவை முந்தானையைப் பிடித்துக் கொண்டு அவள் பின்னாடியே சுற்றிக் கொண்டிருந்தாள்.. ரம்ய மாலினியிடம் ஊர்க்கதை, உலகக் கதையென்று வாய் வலிக்காமல் அதை பேசி அரட்டையடித்தாள்...

“காக்கா பிடிக்கறதிலே நீ கை தேர்ந்தவள்..”

அஜந்தா பட்டம் கொடுக்கத்தான் செய்தாள்.. அதையே ரவிச்சந்திரன் வேறு விதமாக..

“என்ன..? என் அம்மாவையும், தங்கையையும் இம்ப்ரெஸ் பண்ணிக் கைக்குள்ள வைத்திருக்க போல..” என்று வம்புக்கு இழுத்தான்..

அருள்மொழிவர்மனும், யாழினியியும் நந்தினியிடம் பிரியமாகப் பேசினாலும் அதிகமாக ஒட்டி உறவாட வில்லை.. இடைவெளி விட்டுத் தள்ளியே நின்றார்கள்.. அது ஏனென்று ஆராய நந்தினி முற்படவில்லை... பெரியவங்களிடம் ஓரிரு வார்த்தைகளுக்கு மேல் பேச அவளாலும் முடியவில்லை.. மரியாதை கொடுத்துப் பவ்யமாக பேச வேண்டும்.. அவளுக்கு அது வந்து தொலைக்காது என்பதினால் அவர்கள் கொடுத்த இடைவெளியை இவள் மனதுக்குள் வரவேற்றாள்.. அவரவர் உலகம் அவரவர்க்கு..

ரவிவர்மன் அவளுடைய தாய், தந்தையைப் போல இடைவெளி விட்டும் பழகவில்லை.. மனைவி, மகளைப் போல அபரிதமான பிரியத்தையும் காண்பிக்கவில்லை.. அவளைப் பார்க்கும் பொழுதெல்லாம் பாசமாகப் பேசுவார்.. பிரியத்துடன் நலம் விசாரிப்பார்.. நந்தினியும் அடக்க ஒடுக்கமாகப் பதில் சொல்லுவாள்.. சின்னச் சிரிப்புடன் நகர்ந்து விடுவாள்.. நந்தினி அப்பாடா என்று மூச்சு விடுவாள்..

வீட்டின் நினைவு மனதை அரித்துக் கொண்டிருந் தாலும் வயநாட்டு அரண்மனையில் விருந்தினர் போல இல்லாமல் குடும்பத்தில் ஒருத்தியாக இருக்கப் பழகி விட்டாள் நந்தினி.. திடிரென்று ஒருநாள் ரவிச்சந்திரன் மீன்முட்டி அருவியைப் பார்க்கப் போகலாமா என்று கேட்டதும்..

“ஓ..” என்று குதித்தாள்..

வீட்டில் உள்ளவர்கள் ஆழப்புலாவில் ரவிவர்மனின் உறவினர் வீட்டுத் திருமணத்திற்குச் சென்றிருந்தார்கள்.. ரவிச்சந்திரனையும் அழைத்தார்கள்.. அவன் வேலையிருக்கிறது என்று மறுத்து விட்டான்.. அத்தானைக் கவனித்துக் கொள்கிறேன் என்று அஜந்தா வீட்டிலிருக்க முயன்றாள்.. நடைபெறும் திருமணம் நெருங்கிய உறவினர் வீட்டுத் திருமணம் என்பதால் அருள்மொழி வர்மனின் குடும்பத்தில் அவந்திகாவின் குடும்பமும் அடக்கம் என்பதை சுற்றத்தார்க்கு நிரூபிக்க வேண்டிய அவசியத்தைச் சுட்டிக் காட்டி அவந்திகா மகளை இழுத்துக் கொண்டு கிளம்பி விட்டாள்..

எவரும் இல்லாத வீட்டிலிருக்க நந்தினிக்கு போரடித்தது.. தஞ்சாவூரின் நினைவு வந்தது.. அதிலிருந்து விடுபடும்

மார்க்கம் கிட்டியதில் அவள் மகிழ்ந்து போனாள்.. ஆழம்புலாவிலிருந்து குடும்பத்தினர் திரும்பி வர இரண்டு நாள்களாகி விடும்.. அதுவரை வெறிச்சென்று இருக்கும் அரண்மனையில் எப்படி இருப்பது என்ற ஆழ்ந்த கவலையிலிருந்த நந்தினிக்கு ரவிச்சந்திரனின் அழைப்பு அமிர்தமாக இனித்தது..

“மாத்து டிரஸ் எடுத்துக்க.. ரெண்டு மூணு செட்டாவது தேவைப் படும்..” என்று அவன் சொன்னபோது..

‘அருவியிலே குளிச்சா மாத்து டிரஸ் வேணுமில்ல..’ என்றுதான் அவள் நினைத்தாள்..

துணிகள், சோப்பு, சீப்பு இத்யாதி, இத்யாதி அடங்கிய பையைத் தோளில் மாட்டிக் கொண்டு உற்சாகமாக படிகளில் இறங்கியவளிடம் ஒரு அட்டைப் பெட்டியை நீட்டினான் ரவிச்சந்திரன்..

“என்ன இது..?” ஆர்வமாய் திறந்து பார்த்தவளைப் பார்த்து ஒரு ஜோடி கனத்த ஷூக்கள் சிரித்தன..

“‘ஷூ’வா..?” அவள் முகம் விளக்கெண்ணையைக் குடித்ததைப் போல ஆகிவிட்டது..

“‘ஷு’ தான்..”

அவளுடைய பையையும், அட்டைப் பெட்டியையும் ஜீப்பின் பின் சீட்டில் போட்டான் ரவிச்சந்திரன்.. ஏற்கனெவே அவனுடைய பொருள்கள் அடங்கிய இரு பைகள் அங்கு இருந்தன..

நந்தினியின் பையும், ‘ஷு’ இருந்த அட்டைப் பெட்டியும் ரவிச்சந்திரனின் பைகளுக்குள் கன கச்சிதமாகப் பொருந்திக் கொண்டன..

“இப்படித் தூக்கிப் போடனுமா..?” குறைபட்டபடி ஜீப்பில் ஏறிக் கொண்ட நந்தினிக்கு மீன்முட்டி அருவி வரை ஜீப் போகாது என்று தெரியாது..

சன்னமாக விசிலடித்தபடி ஜீப்பை ஓட்டிய ரவிச்சந்திரனும் அதைப் பற்றி அவளிடம் சொல்லவில்லை..

“இதுதான் வடுவாஞ்சல்..”

மலையடிவாரத்திலிருந்து சிறு கட்டிடத்தின் முன்னால் ஜீப்பை நிறுத்தி விட்டு இறங்கினான்.. கட்டிடத்தின் உள்ளேயிருந்து வந்த ஆள் ரவிச்சந்திரனைக் கண்டதும்

வணக்கம் சொல்லிவிட்டு ஜீப்பின் சாவியைப் பெற்றுக் கொண்டான்..

“தம்புரான் மல ஏறனுமோ..?”

“ஆமாம் கேசவா.. திரும்பிவர ரண்டு திவசமாகும்.. அது வரைக்கும் ஜீப் பத்திரம்..”

“இத்த தம்புரான் பறயாண்டாம்.. ஞான் அறிஞ்ஞும்..”

அவர்கள் பேசுவதைக் கவனித்தபடி ஜீப்பில் அசையாமல் உட்கார்ந்திருந்த நந்தினிக்கு கை கொடுத்து..

“இறங்கு..” என்றான் ரவிச்சந்திரன்..

கேசவனாகப்பட்டவன் நந்தினியைப் பார்த்த பார்வையில் அதீத மரியாதை இருந்தது.. தான் என்ன மகாராணியா என்று திகைத்துப் போனாள் நந்தினி.. நந்தினியென்ற சிறு பெண்ணை இத்தனை மரியாதையுடன் பார்க்க வேண்டிய அவசியமென்ன..?

“தம்புராட்டியோ..?”

கேசவனின் கேள்விக்கு ‘ஆமாம்..’ எனும் விதமாய் புன்னகையுடன் தலையசைத்தான் ரவிச்சந்திரன்..

‘இப்பத்தான் இவனைத் தம்புரான்னு தம்புரா வாசிக்கிறவானா ஆக்கினான்.. அது போதாதுன்னு இவன்கூட வந்த கொடுமைக்கு என்னையும் தம்புராட்டின்னு தம்புரா வாசிக்க வைக்கிறான்..’ என்று எண்ணமிட்ட நந்தினிக்கு ‘தம்புரான்’ என்ற மலையாள வார்த்தைக்கான அர்த்தம் ‘ராஜா’ என்றும், ‘தம்புராட்டி’ என்ற வார்த்தைக்கு அர்த்தம் ‘ராணி..’ என்றும் அர்த்தமாகும் என்று தெரியவே தெரியாது.. அது தெரியாமல் கண்களை மலர்த்தியபடி..

“எதுக்கு இந்த ஆளு நம்ம ரெண்டு பேரையும் தம்புரா வாசிக்கச் செல்கிறான்..?” என்று சிணுங்கினாள்..

பூடகமான ரவிச்சந்திரனின் முறுவலில் அவளது சிணுங்கல் அதிகமானது..

“ஏன் இப்படிப் பார்க்கறீங்க..?”

“ஒண்ணுமில்லை.. இறங்கு..”

“இங்கே ஏன் இறங்கனுமாம்..? மீன் முட்டி அருவிக்குப் கூப்பிட்டுக்கிட்டுப் போறேன்னு சொல்லிட்டு வடுவாஞ்சலில ஏன் இறங்கச் சொல்கிறீங்க பாஸ்.. இங்கே ஊஞ்சல் கட்டி ஆடப் போறிங்களா..?”

“ஊஞ்சல் கட்டி ஆட இன்னொரு நாள் வரலாம்.. இப்ப மீன் முட்டி அருவியைப் பார்க்கப் போகனுமா வேணாமா..?”

“அப்படிச் சொல்லித்தானே என்னைக் கடத்திக்கிட்டு வந்திருக்கீங்க பாஸ்..?”

“கடத்திக்கிட்டு வந்திருக்கேனா..? ஹா.. ஹா..”

படு கவர்ச்சியாக சிரித்த ரவிச்சந்திரன் உல்லாசமான மனநிலையில் இருக்கிறான் என்று நந்தினிக்குத் தோன்றியது.. படு உற்சாகமாக இருந்தான்.. நந்தினியைப் பார்த்த பார்வையில் ரகசியம் மிதந்தது..

‘என்னவா இருக்கும்..?’

“ரொம்பவும் யோசிக்காதே.. நீலி மலைக்குப் போகனும்னா மலையேறனும்.. அதுக்காகத்தான் உனக்குப் புது ‘ஷு’ வாங்கினேன்.. உன் செப்பலைக் கழட்டி அட்டைப் பெட்டியில போட்டுட்டு ஷுவை மாட்டிக்கிட்டு இறங்கு பார்க்கலாம்..”

“மலையேறனுமா..?”

மலைப்புடன் அண்ணாந்து மலையைப் பார்த்தவளை ஈர்த்தது, பச்சைப் பசேலென்ற செடி கொடிகளின் இடையே

பாலாறு கொட்டிக் கொண்டிருப்பதைப் போலத் தெரிந்த காட்சி.. ஒன்றல்ல.. இரண்டல்ல.. பல பாலாறுகள் ஆங்காங்கே கொட்டிக் கவிழ்ந்ததைப் போலத் தென்பட்டன..

“என்ன ‘ஆ’ன்னு வாயைப் பிளந்து பார்க்கிற..? அதைப் பக்கத்தில் போய் பார்க்கனுமா வேணாமா..?”

“பார்க்கனும்.. பார்க்கனும்..”

நந்தினி அவசரமாக செருப்புகளைக் கழட்டி ‘ஷு’ இருந்த அட்டைப் பெட்டிக்குள் கடாசிவிட்டு புது ‘ஷு’க்களை மாட்டிக் கொண்டாள்.. ரவிச்சந்திரனின் கைகளைப் பிடித்துக் கொண்டு ஜீப்பிலிருந்து குதிக்க முற்பட்டாள்.. அவனோ அவள் இடுப்பில் கை கொடுத்து.. ‘அலேக்’ காக தூக்கி அலுங்காமல் குலுங்காமல் தரையில் இறக்கி விட்டான்.. கொண்டு வந்திருந்த பைகளைத் தோளில் மாட்டிக் கொண்டவனைப் பார்த்தவளுக்குள் ஏதோ நிகழ்ந்தது.. அவளைப் பார்த்துச் சிரித்தவனின் அழகில் மயங்கிப் போனவள் தனது பையைத் தோளில் மாட்டிக் கொண்டு அவன் கைபிடித்து மலையேற ஆரம்பித்தாள்..

பசும் செடி கொடிகளிடையே சிறிய புதர்களில் ஊதா நிறப் பூக்களைப் பார்த்த நந்தினிக்கு..‘ஒரு ஊதாப்பூ கண்

சிமிட்டுகிறது..' என்ற கதையின் தலைப்புத்தான் நினைவுக்கு வந்தது..

அத்தியாயம் 86

நந்தினி மலையேறியதில்லை.. மலை மீது குடி கொண்டிருக்கும் தெய்வங்களை தரிசிக்கப் படியேறியிருக் கிறாள்.. அதற்கடுத்து செஞ்சிக் கோட்டைக்குப் படியேறியதுதான்.. இப்படியொரு மலையேற்றத்தை அவள் ஏறுவாள் என்று எவரேனும் அவளிடம் சொல்லியிருந்தால்..

“நானா..? மூச்சை தம் பிடிச்சுக்கிட்டு மலையேறுவேனா..? ஹா..” என்று அலட்சியப் படுத்தியிருப்பாள்..

ரவிச்சந்திரனின் கை பிடித்து தம் கட்டி மலையேறிய போது நானே நானா.. யாரோ தானா என்று பாடத் தோன்றியது அவளுக்கு.. இரண்டு தோள்களிலும் இரண்டு பைகளை மாட்டிக் கொண்டு கழுத்தில் செல்ஃபோன் கேமராவைத் தொங்க விட்டுக் கொண்டு மூச்சிரைக்காமல் வெகு இலகுவாக மலையேறிய ரவிச்சந்திரனைப் பொறாமையுடன் பார்த்தாள்.. அவனைப் போல அவளும் மலையேற வேண்டுமென்று கூடுமானவரை மூச்சிரைக்காமல் ஏற முயன்றாள்.. முடியவில்லை.. இதுக்கு பைகளைச் சுமப்பது

போதாதென்று அவளையும் ஒரு கையில் இழுத்துக் கொண்டு மலையேறியவனின் மீது அவளுக்குப் பொறாமை, பொறாமையாக வந்தது..

‘அட்லீஸ்ட்.. இவன் கை பிடிக்காமலாவது மலையேறிவிடனும்..’

அவன் கையை விட்டு விட்டு ஒரு எட்டுத்தான் வைத்திருப்பாள்.. கால் சறுக்கிவிட..

“ஊ..ஊ..” என்று அலறியபடி சரியப் போனாள்..

“உன்னை யாரு கையை விடச் சொன்னது..? ஜான்ஸி ராணி வேஷம் கட்டாம ஒழுங்காக் கையைப் பிடிச்சுக்கிட்டு வா..”

அவன் அதட்டியபடி அவளது கையை இறுக்கிப் பிடித்துக் கொண்டான்..

‘உன் துணையில்லாமல் உதவியில்லாமல் என்னால் மலையேற முடியும்.. கையை விடு.’

இப்படிச் சொல்லத்தான் ஆசைப்பட்டாள் நந்தினி.. நீலி மலையின் சரிவும்.. அடர்ந்த மரங்களும்.. விலங்குகளின்

புரிபடாத சப்தங்களும்.. அவளது மனோ தைரியத்தை விரட்டி விட்டு வாயை மூடச் செய்தன..

“மீன் முட்டி அருவின்னு சொன்னதும் எங்க எஸ்டேட்டில இருக்கிற குற்றால அருவி போல இருக்கும்ன்னு நம்பியில்ல வந்தேன்.. கைக்குழந்தைக்கு மிட்டாய் ஆசை காட்டி ஏமாத்திக் கூப்பிட்டுக்கிட்டு வர்றதைப் போல எனக்கு அருவி ஆசை காட்டி ஏமாத்திக் கூப்பிட்டுக்கிட்டு வந்து மலையேற வைக்கறீங்களே.. இது நியாயமா பாஸ்..?” அழாக்குறையாக நியாயம் கேட்டாள் நந்தினி..

“வேற என்ன செய்யச் சொல்ற..? நீயோ அத்தச் சோம்பேறி..! உனக்கு நோகாம இயற்கையை ரசிக்கனும்.. உடலை வருத்தி மலையேறித்தான் அருவியைப் பார்க்கனும்னா எனக்கு அருவியைப் பார்க்கவே வேணாம்ன்னு ஜகா வாங்கிடற கேஸ் நீ.. உன்னையெல்லாம் கடத்தி வந்துதான் மலையேத்தி விடனும்..” தன் பக்கத்துக்கான நியாயத்தைப் பிட்டுப் பிட்டு வைத்தான் ரவிச்சந்திரன்..

‘என்னைப் பத்தி தெள்ளத் தெளிவா புரிஞ்சு வைச்சு ஸ்கெட்ச் போட்டிருக்கான்..’

இரண்டு பக்கமும் பாறைகள் இருக்க அவற்றைப் பிடித்து மேலே ஏறியவள் முட்டியைத் தடவிக் கொண்டாள்..

“இதுக்கே இப்படின்னா மீதத் தூரத்தை எப்படிக் கடப்ப..?”

ரவிச்சந்திரன் பயமுறுத்தினான்..

“வைச்சுச் செய்யறீங்க பாஸ்..” நந்தினி அலுத்துக் கொண்டாள்..

அங்கிருந்து பார்த்த போது அருவிகள் நீர்க் கோடுகளாய்த் தெரிந்தன.. நீர் என்றால் அது வெறும் நீரல்ல.. அழகிய அடர்ந்த காடுகளைக் கிழித்துக் கொண்டு வரும் பாலருவிகள் தான் அவை..

“அழகா இருக்குல்ல..?” வலியை மறந்து குழந்தையானாள்..

“ம்ம்ம்.. அழகுதான்..” அருவியை விட்டு விட்டு அவளுடைய அழகை ரசித்தபடிச் சொன்னான் ரவிச்சந்திரன்..

“அது எல்லாமே அருவிகளா..?”

“ம்ம்ம்.. மீன்முட்டி அருவிகள் மலையிலிருந்து கீழ் நோக்கி விழுந்து.. ஆறுகளாக ஓடி வருவது மனதைக்

கொள்ளை கொள்ளும் காட்சி நந்தினி.. வயநாட்டுக்கு வருகிறவங்க உடல் சிரமத்தைப் பார்க்காம மலையேறி அதைப் பார்த்து விடுவாங்க.. நீதான் அலுத்துக்கற..”

“கால் வலிக்குதே பாஸ்..”

“வலிக்கட்டுமே.. கஷ்டப்பட்டாத்தான் சிறந்தது கிடைக்கும்..”

அவளைக் கூர்ந்து பார்த்தபடி ஆழ்ந்த குரலில் சொன்னான் அவன்.. அதில் மறைபொருள் எதுவும் இருக்கிறதோ என்று யோசித்தாள் நந்தினி.. மீன்முட்டி அருவிகளைப் பார்க்க என்று மலையேற வைத்து விட்டு அருளுரை வழங்குகிறானா இவன்..?

“வயநாட்டின் வடுவாஞ்சலில் இருந்து மூணுகிலோ மீட்டர் தொலைவில் இருக்கு இந்த நீலிமலை..”

“அடிவாரத்தில் இருக்கிற கட்டிடம் உங்களுடையதா..?”

“இல்லை..”

“உங்ககிட்ட வேலை பார்க்கிறவன் போல கும்பிடு போட்டாரே.. அவர் யார்..?”

“கேசவன் குட்டி..”

“அது என்ன.. கேரளாவில பெண்ணையும் குட்டிங்கறிங்க.. ஆணையும் குட்டிங்கறிங்க.. உங்க வீட்டில வேலை பார்க்கிறது ஓமனாக்குட்டி.. நீலிமலை அடிவாரத்தில கேசவன் குட்டி.. எந்தா குருவாயூரப்பா இது..”

“வாயடிக்கிறதுன்னா உனக்கு வலி மறந்து போயிருமே..”

ரவிச்சந்திரன் கேலி செய்ததும்தான் அவளுக்கு முட்டிவலியே ஞாபகம் வந்தது.. உடனே காலைப் பிடித்துக் கொண்டு வலி உயிர் போகிறது என்று கலாட்டா செய்தாள்.. வாயடிக்கும் போது வலி தெரியவில்லையா என்று அவன் கலாய்த்தான்.. சிரமப் பரிகாரம் செய்தே தீருவேன் என்று அவள் பாறைமீது உட்கார்ந்து கொண்டு வந்த வழியைத் திரும்பிப் பார்த்தாள்.. வடுவாஞ்சல் புள்ளியாகத் தெரிந்ததில்..

“இவ்வளவு தூரம் மலையேறிட்டேனா..?” என்று அதிசயப்பட்டுப் போனாள்..

“நீ ஏறினயா..? நான் ஏற்றி விட்டேன்னு சொல்லு..” அவன் அவள் தலையில் கொட்டு வைத்தான்..

“வலிக்குது பாஸ்..” தலையைத் தடவியபடி அவள் சிணுங்கினாள்..

“வேக் அப்.. இன்னும் கொஞ்ச தூரம்தான்.. நீலிமலை வியு பாயிண்டிற்குப் போயி விடலாம்..” அவன் கை நீட்டினான்..

“அங்கே எதுக்குப் போகனும்..? நாம மீன்முட்டி அருவிக்கில்ல போகனும்..?” நந்தினி சந்தேகம் கேட்டாள்..

“நீலிமலை வியு பாயிண்டில இருந்து அருவிகளைப் பார்த்தா மெய் சிலிர்த்துப் போகும்..” ரவிச்சந்திரன் விவரித்தான்..

“ரியலி..?” நந்தினி விழி விரிய எழுந்து கொண்டாள்.. ரவிச்சந்திரனின் கையைப் பிடித்து மலையேறுவது பழகி விட்டது.. இப்போது நந்தினிக்குக் கால் வலிக்கவில்லை.. தேயிலைத் தோட்டங்களையும் மிளகுக் கொடிகளையும் ரசித்தவருக்கு இயற்கைக் காட்சிகளைப் பார்க்கப் பார்க்கத் தெவிட்டவேயில்லை..

நீலிமலை வியு பாயிண்டிற்கு செல்லும் வழியெல்லாம் காஃபித் தோட்டங்களும்.. இஞ்சி, பாக்கு மரங்களும் இருந்தன.. அவற்றைப் புதிதாகப் பார்த்த நந்தினி ஆர்வத்துடன் அவற்றின் இலைகளைப் பறித்துக் கசக்கி முகர்ந்தாள்.. அவளது குதூகலம் நிரம்பிய செயல்பாடுகளை ரவிச்சந்திரன்

ரசித்துக் கொண்டிருந்தான்.. சிறிய புதர்களில் ஊதா வண்ணப் பூக்கள்.. நந்தினிக்குப் புத்தம் புதுக் காலை என்று பாட வேண்டும் போல இருந்து.. பாடினாள்.. அவளது பாட்டு நீலி மலைக் காட்டில் எதிரொலித்ததில் கைகளை விரித்தபடி சுழன்று ஆடினாள்.. ரவிச்சந்திரன் தாங்கிப் பிடித்துக் கொண்டு..

“விழுந்து வைக்கப் போகிற.. கண்ட்ரோல் யுவர் செல்ப்..” என்று எச்சரித்தான்..

நந்தினியின் பாட்டுச் சப்தத்தில் நீலிமலைக் காட்டுக்குள் இருந்த சூரிய பறவைகள் கீச்சிட்டன.. அந்தப் பறவைகள் நீலி மலைக் காட்டின் மற்றுமொரு அடையாளம் என்று சொன்னான் ரவிச்சந்திரன்.. அண்ணாந்து பறவைகளைப் பார்த்தாள் நந்தினி.. அவளுக்கு அனைத்தும் புதிதாக தோன்றின.. சூரிய பறவைகள் புதர்களின் உள்ளும் புறமும் பறந்து சென்றன.. போகப் போக மலையேற்றப் பாதை குறுகிக் கொண்டே வந்தது.. மேலே ஏறி, கீழே இறங்கியென்று மேடும், பள்ளமுமாக மலைப்பகுதியை குறுகிய மலைப் பாதையின் வழியாக கடந்து சென்றார்கள்..

நந்தினிக்கு அது வித்தியாசமான அனுபவமாக இருந்தது.. யாருமற்றத் தனிமையில்.. அடர்ந்த மலைப் பகுதியில்.. அடர்நத் மரங்கள் கொண்ட கானகத்தில்.. ரவிச்சந்திரனுடன் நடப்பது இனிமை நிரம்பிய பொழுதாக இருந்தது..

‘அக்கம் பக்கம் யாருமில்லா..

பூலோகம் வேண்டும்..’

அவள் மனதில் ஓடிய பாடல் வரிகளில் இதோ அந்தப் பூலோகம் என்று அவளுக்குக் கூவ வேண்டும் போல இருந்தது.. உயரமான காட்டுப் புற்கள் இருபுறமும் அடர்ந்திருக்க அதன் நடுவே சென்ற போது ரவிச்சந்திரன் அவளது தோளைச் சுற்றிக் கை போட்டு இறுக்கி அணைத்து அழைத்துச் சென்றான்.. பாதுகாப்புக்காகவே அவன் அணைத்துக் கொண்டாலும் அந்த நிமிடங்களில் அவள் அவளாக இல்லை.. வானத்தில் மிதந்தாள்.. மேகங்களுக்கிடையே சிறகின்றிப் பறந்தாள்..

அங்கிருந்து பார்த்தபோது மேற்குத் தொடர்ச்சி மலையின் மடிப்புக்கள் தெரிந்தன.. நந்தினிக்கு அவற்றைச் சுட்டிக் காட்டினான் ரவிச்சந்திரன்.. அவன் மார்பில் சாய்ந்து நின்று அவற்றை விழிகள் விரிய வேடிக்கை பார்த்தாள் நந்தினி..

வலப்புறத்தில் குட்டைப்புல் வகைகளைக் கொண்ட மலைச்சரிவுகள்.. அவற்றைக் கண்டதும்..

“நீலிமலை வியு பாயிண்டுக்கு வந்தாச்சு..” என்று அறிவித்தான் ரவிச்சந்திரன்..

“ம்ஹா..”

மூச்சுவிட்டுத் தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்ட நந்தினிக்கு ஓய்வு வேண்டியிருந்தது.. புல்வெளியில் சரிந்தாள்.. குளுமையான காற்று அவளது உடலை வருடிக் கொடுத்ததில் கண்மூடி அதன் வருடலை ரசித்தாள்.. உடலில் துளிர்த்திருந்த வியர்வைத் துளிகளைக் காற்று உலர வைத்தது.. அவளருகே கால் நீட்டி உட்கார்ந்த ரவிச்சந்திரனின் பக்கமாக ஒருக்களித்துத் திரும்பிப் படுத்தாள்..

“இதுக்கே டயர்டாகிட்டயே.. சோம்பேறி..” சிரித்தான் அவன்.. முதலாளித்துவத் தோரணையிலிருந்து முற்றிலுமாக வேறுபட்டு சிரித்த முகத்துடன் இருந்தவனின் கவர்ச்சிகரமான அழகைப் பருகு பருகு என்று பார்த்து வைத்தாள் நந்தினி.. அவனது கண்களில் மின்னல் வந்ததில் பயந்து போனவளாக பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.. அவளது பயம் கண்டு அவனது விழிகளில் சிரிப்பு வந்தது.. வியர்வை உலர்ந்து

குளிர்ச்சி உடலில் பரவியதில் நந்தினி எழுந்து உட்கார்ந்து முழங்கால்களைக் கட்டிக் கொண்டாள்.. அவளது கண்களுக்கு முன்னே அரிய வண்ணங்களில், பலவிதமான வடிவங்களில் பாறைகள் தெரிந்தன.. வழுக்கும் பாறைகள் அவை என்று ரவிச்சந்திரன் சொன்னான்.. "வழுக்குமா..?" நந்தினிக்குப் பயமாக இருந்தது..

"வழுக்கினா என்ன..? தாங்கிப் பிடிக்கத்தான் நானிருக்கேனே.." ரவிச்சந்திரனின் விழிகளில் தாங்கிப் பிடிக்கும் ஆசை தெரிந்தது..

'ஆசையைப் பாரு..' நந்தினி உதட்டைச் சுழித்து அழகு காட்டினாள்..

பயமற்ற இளங்கன்றாக அவள் இருந்ததில் ரவிச்சந்திரனின் ஆசை அதிகரித்தது.. அங்கே அருமையான பனி மூட்டம் தவழ்ந்து கொண்டிருந்தது.. மூடு பணிக்குப் பின்னால் மேகம் ஒளிந்து விளையாடியது.. பள்ளத்தாக்கில் பாறைகள் உருளும் ஒலியைக் கேட்ட நந்தினி பயந்து போனாள்..

"அது என்ன சத்தம்..?" மிரண்டு விழித்தபடி அவள் கேட்ட விதம் அலாதியான அழகுடன் இருந்தது..

“பள்ளத்தாக்கில் பாறைகள் உருளுது..” அவளது மிரட்சியை ரசித்தபடி சொன்னான் ரவிச்சந்திரன்..

“பாறைகள் உருளுதா..?”

நந்தினி பயத்துடன் ரவிச்சந்திரனின் அருகாமைக்கு நகர்ந்து அவன் கையைப் பற்றிக் கொண்டாள்.. ரவிச்சந்திரனின் பார்வை மாறியது.. தாகத்துடன் பார்த்தவனின் பார்வை வேறுபாட்டைக் கவனிக்காமல் நந்தினி பாறை எங்கே உருள்கிறது என்று எட்டிப் பார்த்தாள்..

“இதுக்கெல்லாம் பயப்பட்டா இயற்கையை எப்படி ரசிப்ப..?”

ரவிச்சந்திரன் சமாதானப் படுத்தினான்..

மீன்முட்டி அருவிகளைப் பார்க்க இன்னும் சற்றுத் தூரம் செல்ல வேண்டும் என்பதால் அவர்கள் எழுந்தார்கள்.. வழியில் வழுக்குப் பாறைகள் இருக்கும் என்று எச்சரித்தான் ரவிச்சந்திரன்..

“வகுக்குப் பாறையில் காலை ஊன்றி வைத்து ஜாக்கிரதையாக நடக்கனும்.. என்ன..”

“ம்ம்ம்..”

“நான் முன்னால் நடக்கிறேன்.. என் கையை இறுக்கிப் பிடிச்சுக்கிட்டு ஃபாலோ பண்ணு.. என்ன..?”

“ம்ம்ம்..” என்று தலையசைத்தாலும்..

‘அதுதானே கொடுமை..’ என்றிருந்தது நந்தினிக்கு.. செக்கச் செவேல் என்ற நிறத்துடன் இருப்பவனின் ரோமம் படர்ந்த கைகளைச் சும்மா பார்த்தாலே அவளுக்குள் ஒரு விதமான கிளர்ச்சி ஏற்பட்டுத் தொலைக்கும்.. இதில் ஒட்டிக் கொண்டும்.. சில சமயங்களில் அவனைக் கட்டிக் கொண்டும் நடப்பது அவளுக்கு சோதனை மேல் சோதனையாக இருந்து சோதித்து வைத்தது..

வழுக்கும் பாறைகளில் கவனமாக கால் வைத்து முன்னே நடந்தவன் அவளுக்காக கை நீட்டிய போது..

“நீங்க பேலன்ஸ் தப்பிட்டீங்கன்னா..?” என்று கவலைப் பட்டாள் நந்தினி..

அவனுக்கான அவளது கவலை அவனுக்குப் பிடித்தமானதாக இருந்தது..

“டோன்ட் வொர்ரி.. நான் இந்த வயநாட்டில் பிறந்து வளர்ந்தவன்.. கேரளத்து மண்ணின் மைந்தன்..

எனக்கெல்லாம் பேலன்ஸ் தப்பாது..” என்று அவளைத் தைரியப் படுத்தினான்..

அவனது ரோமம் படர்ந்த கையைப் பிடித்த நந்தினி க்குள் எதுவோ நிகழ்ந்தது.. சமாளித்துக் கொண்டு வழுக்கும் பாறைகளில் கால் வைத்து அவன் கையை கெட்டியாகப் பிடித்தபடி சர்வ ஜாக்கிரதையாக நடந்தாள்.. மேற்கு நோக்கிச் சென்ற பாதை பாறைகளின் மத்தியில் கொண்டு வந்து நிறுத்தியது.. ஒருபக்கம் பாறைகள் உருளும் ஒலி.. இன்னொரு பக்கம் பாறைகளின் மத்தியில் நிற்கும் உற்சாகம் என்று நந்தினியின் மனதில் மகிழ்ச்சி கரை புரண்டோடியது.. கூடுதலாக ரவிச்சந்திரனின் அருகாமை வேறு அவளுடைய ஆனந்தத்தைப் பற்றிச் சொல்லவா வேண்டும்..?

அவளே ஒரு அருவி..! அந்த அருவி மீன்முட்டி அருவிகளைப் பார்க்க வந்திருக்கிறது என்று நினைத்துக் கொண்ட ரவிச்சந்திரனின் மனதில்..

‘ஒரு அருவியே அருவியைப் பார்க்க வந்திருக்கிறதே..!’ என்ற கவிதை எழுந்தது..

“கவனமா கால் வைத்து கீழ்நோக்கி இறங்கி கூர்மையா இருக்கிற பாறை மத்திக்கு நகரனும்..”

“டைரக்ஷனெல்லாம் நல்லாத்தான் இருக்கு பாஸ்... இப்படியே நகர்ந்துக்கிட்டே இருந்தா மீன்முட்டி அருவிகளை எப்பத்தான் பார்க்கிறது..?”

ரவிச்சந்திரன் பதில் சொல்லாமல் அவளைத் தன்னுடன் இழுத்து அணைத்துப் பிடித்தபடி கீழ் நோக்கி இறங்கி கூர்மையான முனையுடன் இருந்த பாறையின் மையப் பகுதிக்கு நகர்ந்தான்..

அங்கிருந்து பார்த்த நந்தினி எதிரில் தெரியும் காட்சி களைப் பார்த்ததும் பிரமிப்பில் ஆழ்ந்து அப்படியே சிலையாக சமைந்து போனாள்..

அத்தியாயம் 87

டைட்டானிக் படத்தில் கப்பலின் மேல் தளத்தில் நீண்டிருக்கும் விளம்பில் கதாநாயகன் கதாநாயகியை முன்னிருத்தி அவளது தோள்களைப் பற்றி பின்னே நிற்பதைப் போல ரவிச்சந்திரன் அவன் மார்போடு நந்தினியை சாய்த்து நிறுத்தி.. அவளது உச்சந் தலையில் முகவாயைப் பதித்து.. அவள் தோள்களைப் பற்றியபடி முன்னால் தெரிந்த காட்சியைச் சுட்டிக் காட்டினான்..

நந்தினியால் அவளது கண்களை நம்பவே முடியவில்லை..

'நானா இந்த அழகிய இடத்தில் நிற்கிறேன்..?' என்று மெய் சிலிர்த்துப் போனாள்..

சுற்றிலும் பசுமை நிரம்பிய காடுகளுக்கு நடுவே.. கீழ் நோக்கி ஓடிவரும் பால் போன்ற அருவியைக் காணக் காணத் தெவிட்டவே இல்லை அவளுக்கு.. இன்னும், இன்னும் என்று ஆவலாகப் பார்த்தாள்.. பார்த்துக் கொண்டிருக்கும் போதே பனி மூட்டம் கவிந்தது... விலகும் வரை காத்திருக்க வேண்டும் என்று அமைதிப் படுத்தினான் ரவிச்சந்திரன்..

ரம்யமான குளிர் நிரம்பிய சில்லென்ற சீதோஷ்ணம்.. காதில் காதல்மொழி பேசுவதைப் போல செவி மடலைத் தழுவிச் செல்லும் பணிக்காற்று.. கண்ணுக்கெட்டிய தூரம் வரை அருவிகள்.. மலைகளின் முகடுகள் தோறும் முத்தமிட்டபடி காதல் செய்யும் மேகக் கூட்டங்கள்.. மலை முகடுகளை உரசிப் பார்க்க வரும் பனிப்புகை.. அவ்வபோது பொழியும் சாரல்.. பாலாறு போலப் பொங்கி வழியும் மீன் முட்டி அருவிகள்.. அதை வெறும் அருவி நீர் என்று சொல்லி விட முடியவில்லை.. நுரை பொங்கும் பாலாறுகள்தான் அவை..

பச்சை வண்ணக் கம்பளமாய் அடர்ந்திருந்த காடுகளை வெள்ளி வாளைக் கொண்டு கிழித்து வெளியேறிக் கொட்டும் பாலருவிகள்தான் மீன்முட்டி அருவிகள்.. மலையுச்சியிலிருந்து தலை கீழாகப் பாய்வதைப் போலக் கீழ்நோக்கி விழுந்து பின்னர் அவை பாலருவிகளாக ஓடிவரும் காட்சி நந்தினியின் மனதை கொள்ளை கொண்டது..

அவ்விடத்தை விட்டு அகல மனமில்லாமல் அப்படியே உட்கார்ந்து விட்டாள் நந்தினி.. பக்கத்தில் நெருக்கமாக உட்கார்ந்த ரவிச்சந்திரனின் தோள்மீது இயல்பாக தலை சாய்த்துக் கொண்டாள்.. ரவிச்சந்திரனின் கரம் அவளுடை ய தோளைச் சுற்றி வளைத்துக் கொண்டது.. வெகு நேரம்

அசையாமல் உட்கார்ந்திருந்த நந்தினியின் தோள் தட்டிப் போகவேண்டும் என்பதை உணர்த்தினான் ரவிச்சந்திரன்..

கிளம்ப மனமில்லாமல் கிளம்பிய நந்தினி.. "தேங்க்ஸ்.." என்றாள்..

கோழிக் கோடிலும் மனம் நெகிழ.. குரல் தழைய இதையேதான் சொன்னாள் என்ற நினைவில் மெல்லச் சிரித்த ரவிச்சந்திரன்.. "எனக்குத் தேங்க்ஸ் சொல்கிற அளவுக்குப் பெரிய மனுஷியாகிட்டியா..?" என்று அவளது கன்னம் தட்டினான்.. புகை போல கவிந்த பனிமூட்டத்தில் காலடித்தடம் கூடத் தெரியவில்லை.. அணிந்திருந்த ஸ்வெட்டர், போர்த்தியிருந்த சால்வையென்ற அனைத்து குளிர் காக்கும் காரணிகளையும் மீறி குளிர் நந்தினியின் உடலை ஊசி முனைகளைத் துளைத்தது.. வழி தெரியாததினால் ரவிச்சந்திரன் அவளைத் தன்னோடு இறுக்கி அணைத்து அழைத்துச் செ ன்று கொண்டிருந்ததால் அவனது உடலின் வெப்பம் அவள் உடலுக்கு இடம் மாறி குளிருக்கான கதகதப்பைக் கொடுத்துக் கொண்டிருந்தது..

வழுக்குப் பாறைமீது கவனமாக கால் ஊன்றி நடக்க வேண்டும் என்று ரவிச்சந்திரன் திரும்பத் திரும்ப சொன்னபோது..

“நான் என்ன பப்பாவா..? இந்த வழியா வந்தவளுக்கு அதே போலத் திரும்பத் தெரியாதா..?” என்று நொடித்தாள் நந்தினி..

“ஓ..” என்றதைத் தவிர வேறு ஏதும் சொல்லாமல் ரவிச்சந்திரன் முன்னே நடந்தான்..

நந்தினி என்னவோ கவனமாக கால்களை ஊன்றி ரவிச்சந்திரனின் கையைப் பிடித்தபடிதான் வழுக்குப் பாறைகளைக் கடந்தாள்.. கடைசிப் பாறையில் அவள் கால் பதித்தபோது வழுக்குப் பாறை சதி செய்து அவளை வழுக்கி விழ வைத்து விட்டது.. சரிந்து ரவிச்சந்திரனின் மீது சாய்ந்து விழுந்தவளை அவன் தாங்கிப் பிடித்து இழுத்துக் கொள்ள, இருவரும் புல்தரையின் மீது ஒருவர் மீது ஒருவராக விழுந்து வைத்தார்கள்.. ரவிச்சந்திரனின் உடல்மீது பரவிப் படர்ந்து விழுந்திருந்த நந்தினியை ரவிச்சந்திரனின் கரங்கள் இறுக்கி வளைத்திருந்தன..

விழுந்த வேகத்தின் அதிர்ச்சியில் என்ன நிகழ்ந்தது என்று தெரியாமலே பயத்தில் கண்களை இறுக்கமாக மூடி அவனைக் கட்டியணைத்து அவன் முகத்தோடு முகம் பதிய விழுந்திருந்தாள் நந்தினி.. மெத்தையில் படுத்திருப்பதைப் போல அவன்மீது படுத்திருந்தவளுக்குள் ஏதோ ஒன்று நிகழ கண் விழித்துப் பார்த்தாள்.. அவனது உதட்டோடு உதடு ஒட்ட முகத்தைப் பதித்திருந்தவள் அவனது ஆழமான முத்தத்தை உணர்ந்தாள்.. விடுபடத்தான் நினைத்தாள்.. விலகத்தான் யத்தனித்தாள்.. முடியவில்லை..

அவனுடைய உடலோடு நந்தினியின் உடல் ஒட்டி உராய்ந்ததில் தீப்பிடித்ததைப் போல ரவிச்சந்திரனின் உணர்வுகள் கிளர்ந்தெழுந்தன.. அவளை இறுக்கமாகக் கவ்வி விட்டான்.. விலக யத்தனித்தவளை விலக விடாமல் முரட்டுத்தனமாக இறுக்கிக் கொண்டான்.. போராட வேண்டும்.. விடுபடவேண்டும் என்று நந்தினியின் மனம் கூவியது.. ஆனால், அவளுடைய உடல் இளகி அவனுடன் ஒன்றிக் கொண்டது.. நந்தினி அதிர்ச்சி அடைந்தாள்.. அவன் மீதான அவளது மயக்கத்தை அவள் நன்கு அறிவாள்... இருந்தபோதும் அந்த மயக்கத்தை உடைத்தெரியும் சுய கட்டுப்பாடு தன்னிடம் இருக்கிறது என்று நம்பியிருந்தாள்..

மயக்கம் உடைபடாமல் நம்பிக்கை உடைபட்டதில் அவளுக்குள் பயம் உண்டானது.. ரவிச்சந்திரனை எதிர்க்க முடியாமல் அவனிடம் தன்னை இழந்து விடுவோமோ என்ற அச்சம் அவளுள் கவிந்தது..

ரவிச்சந்திரனின் அணைப்பு மேலும் இறுகியது.. முரட்டுத்தனமாக அவளது உதடுகளைக் கவ்வியிருந்த நிலையில் அவளது முகத்தோடு முகத்தை தப் பதித்துப் புரட்டினான்.. நந்தினி மேலும் பலவீனமடைந்தாள்.. ஆளற்ற தனிமை.. உடலைத் துளைக்கும் குளிர்காற்று.. சுற்றிலும் கவிந்திருக்கும் பனி மூட்டம்.. பனித்துளிகளின் ஈரத்துடன் கூடிய புல்வெளி.. வெப்பம் நிரம்பிய ரவிச்சந்திரனின் உடல் அளித்த கதகதப்பு என்று அனைத்துக் காரணிகளும் அவளுக்கு எதிராக சதி செய்ததில் அவனை வலுவாக எதிர்க்க முடியாமல் தவித்தாள்..

‘தன்னை இழந்து

மண்ணில் விழுந்த

இளமை மலரின் மீது..

கண்ணை மூடிய வண்டு..

தேக சுகத்தில் கவனம்..

காட்டு வெளியில் பயணம்..'

எங்கோ, எவரோ பாடுவதைப் போல இருந்தது.. ரவிச்சந்திரனின் தேக வெப்பத்தில் நந்தினியின் தேகம் குளிர் காய்ந்து சுகம் காண ஆரம்பித்ததில் அவள் அரண்டு போனாள்.. இளமையென்னும் போர்க் களத்தில் ஆயுதங்களற்ற நிராயுதபாணியாய் ரவிச்சந்திரனை எதிர்கொள்ள முடியாமல் துவண்டாள்.. அவனோ முத்தம், தொடுகை, அணைப்பு என்று அனைத்து ஆயுதங்களையும் கொண்டவனாய் அவளைச் சூறையாட ஆரம்பித்தான்.. நந்தினி தொய்ந்து கொண்டிருந்தாள்..

'இளமையென்னும் பூங்காற்று..

பாடியது ஓர் பாட்டு..

ஒரு பொழுது ஓர் மயக்கம்..

சுகம், சுகம், ஒரே சுகம்..

ஒரே வீணை.. ஒரே ராகம்..'

பாடல் தொடர்ந்தது.. ரவிச்சந்திரனின் தாகம் நிரம்பிய தழுவல்களும் தொடர்ந்தன.. அவளது தேகத்தில் பரவிய

அவனது கரங்கள் ஆக்டோபஸைப் போல அவளை அணைத்து ஆக்ரமித்ததில் அவள் மூச்சுத் திணறி உணர்வின் பேரலைகளில் மூழ்க ஆரம்பித்தாள்.. அவனது மூச்சுக் காற்றின் வெப்பம் அவள் மேனியில் படிந்து உணர்ச்சிகளைத் தூண்டி விட்டன.. ரவிச்சந்திரனின் வெப்ப மூச்சுக் காற்றில் குளிர் காய்ந்தாள் நந்தினி.. சூடான அவனது உடல் அ வள்மீது அழுந்தியதில் கதகதப்பான ஓர் வெதுவெதுப்பை உணர்ந்தாள்.. அவன் மீதிருந்து விலக யத்தனித்துப் பெரும் போராட்டத்துக்குப் பின் விலகிச் சரிந்தவளின் மீது அவன் புரண்டு கவிந்து அவள்மீது படர்ந்து கம்பளியாய் அவளைப் போர்த்திச் சரிந்தான்.. அவள்மீது கவிந்தவனை அப்புறப் படுத்தும் திராணியின்றி நந்தினி அசைந்து விலக முயன்றாள்..

பூங்கொடியின் மீது தேக்குமரம் கவிழ்ந்திருந்ததால் விலக முடியுமா..?

நந்தினியின் மனதில் துயர் வந்தது... அவன் வேண்டும் என்று அவளது உடலும் மனமும் ஒருசேரக் கூவியதில் சோர்ந்து போனாள்.. அவள்மீது கவிந்திருந்தவனின் கையணைப்புக்குள் சுருண்டு ஒன்றிக் கொண்டாள்.. அவனது இதழ்களில் திருப்திப் புன்னகை வந்தது.. ஆசையுடன் அவள் கன்னத்தில் முத்தமிட்டான். நந்தினியின் இமைகள் மூடிக்

கொண்டன.. மூடிய இமைகளின் மீது அவனது முத்தம் பதிந்தது.. அவளது உடல் முழுவதும் பரவிய அவனது கரங்களின் வெப்பம் அவளது உடலுக்கு இடம் பெயர்ந்து நடுங்கிக் கொண்டிருந்தவளின் குளிரை விரட்டியடித்து அவளை ஸ்வாஹா செய்ய முயன்றது..

நந்தினி சலனம் கொண்டாள்.. வேட்கை நிரம்பிய அவனது தழுவல்களும், தொடுகைகளும் அவளுக்குப் புதிதானதாக இருந்தன.. எங்கோ அழைத்துச் சென்றன.. அவன் விரல் பட்ட இடமெல்லாம் தீயாக தகித்தது.. வெப்பமானாள்.. அவனது அணைப்பினில் அடங்கி குளிர் காய்ந்து கொண்டிருக்கும் அந்த நிலை நீடிக்க வேண்டுமென்று மனதார விரும்பினாள்.. அவன் பெண்களிடம் பழகியவன்.. தனது தவறை அவளிடம் ஒப்புக் கொண்டிருப்பவன் என்ற விவரங்களெல்லாம் மறந்து விட்டன.. அவளது நினைவினில் நின்றதெல்லாம் ரவிச்சந்திரனின் கவர்ச்சி நிரம்பிய முகம் மட்டும்தான்..

நந்தினியின் மயக்கத்தைத் தனக்குச் சாதகமாக ரவிச்சந்திரன் பயன்படுத்திக் கொண்டிருக்கிறான் என்று அவளது மனதின் ஓர் மூலையில் துடிப்பு எழுந்தது.. அவன் மீதான ஈர்ப்பில் அலை பாய்ந்த அவள் மனது அந்தத் துடிப்பை

அலட்சியம் செய்து ரவிச்சந்திரனுடன் ஒன்றிவிட வேகம் காட்டியது..

இமைகளைத் திறந்து அவனைப் பார்த்த பார்வையில் தேடல் இருந்தது.. அது கோடிஸ்வர ராஜ பாரம்பர்யம் கொண்ட இளம் தொழிலதிபனைத் தேடும் தேடலாக இல்லை.. அவளது இளம் மனதை வசியம் செய்து மயக்கத்தில் ஆழ்த்தியிருக்கும் ரவிச்சந்திரன் என்ற வசியக்காரனைத் தேடும் தேடலாக அவளின் தேடல் இருந்தது.. அந்தத் தேடுதலை இனம் கண்டு கொண்ட ரவிச்சந்தினின் கண்கள் மின்னின..

அவர்களது பார்வைகள் பின்னிப் பிணைந்தன.. அவர்களும் பின்னிப் பிணைந்துதான் இருந்தார்கள்.. நொடிக்கு நொடி ரவிச்சந்திரன் நெருக்கத்தை அதிகரித்துக் கொண்டே இருந்தான்.. எங்கோ ஓர்பறவை கூவியது.. நந்தினியின் பெண்மை விழித்துக் கொண்டது.. தன்னுணர்விற்கு வந்தவளாக தன் சக்தியையெல்லாம் ஒன்று திரட்டி அவன் மார்பில் கை வைத்துத் தள்ளினாள்.. அவனை அசைக்கக் கூட முடியவில்லை.. அவன் பலமாகச் சிரித்து விட்டு அவளது நெற்றியில் முத்தமிட்டான்..

நந்தினிக்கு அழ வேண்டும் போல இருந்தது.. அவளது முதுகில் அழுத்தம் கொடுத்து அவனது கைகளா ல் விலக முடியாமல் அவன் மார்பில் புதையுண்டு போனாள்.. அவனது கூடான உதடுகள் அவளது கழுத்தில் முத்தமிட்டன.. முடிவேயில்லாத அந்த சுகத்தில் தன்னை மறந்தாள்.. அவளது மெல்லிய ஆட்சேபக் குரல் தேய்ந்து மறைய ஆரம்பித்தது.. நந்தினியின் எதிர்ப்புக் குரல் தேய்ந்து மறைந்து தொலைந்து கொண்டிருந்தபோது கடைசி முயற்சியாக அவள் அதைச் சொன்னாள்..

“என்னையும் உங்ககூடப் பழகின பெண்களைப் போல மாற்றப் பார்க்கறீங்கள்ல..”

ரவிச்சந்திரனின் உடல் விறைப்பதை நந்தினியால் உணர முடிந்தது.. அவளது முகமெங்கும் முத்தங்களைப் பதித்துக் கொண்டிருந்தவன் விலகி அவள் முகத்தைக் கோபத்துடன் பார்த்துச் சீறினான்..

“என்ன உளருகிற..?”

“உளறல் இல்லை.. இதுதான் உண்மை.. கடைசியில் என்னையும் உங்ககூடப் பழகின பொண்ணுகளைப் போல நினைத்துட்டீங்க..”

“உன் தலை..”

அவன் ஆத்திரத்துடன் அவளைத் தள்ளி விட்டு எழுந்து நின்றான்.. அவன் தள்ளிய வேகத்தில் புரண்டு உருண்ட நந்தினி விசும்பியபடி எழுந்து உட்கார்ந்து முழங்கால்களைக் கட்டி அதில் முகம் புதைத்து விம்மினாள்.. அவளைக் கோபத்துடன் பார்த்த ரவிச்சந்திரனின் பார்வையை அவள் எதிர்கொள்ளவில்லை..

“உன் விருப்பமில்லாம உன்னைத் தொடலை நந்தினி..”

“அதை.. அதை.. அதைத்தான் சொல்கிறேன் .. உங்களை எனக்குப் பிடிக்கும் பாஸ்.. அது உங்களுக்கு நல்லாவே தெரியும்.. என்னோட அந்த வீக்னெஸ்ஸை நீங்க யூஸ் பண்ணிக்கப் பார்க்கறீங்க..”

அவனை அவளுக்குப் பிடிக்கும் என்பதை அவள் ஒப்புக் கொண்டதில் அவன் முகம் மென்மையானது.. பொய் சொல்லியறியாத குழந்தைத்தனம் கொண்ட பெண்ணின் மனதில் அவன் மீதான உண்மையான பிரியம் இருக்கிறது என்பதில் அவன் மனம் உவகை கொண்டது. . அவள் சொல்லிய வார்த்தைகள் எத்துனை மதிப்பு வாய்ந்தவை

என்பதை அவள் அறிவாளா என்று தன் மனதுக்குள் கேட்டுக் கொண்டான் ரவிச்சந்திரன்..

“இது அநியாயம்ன்னு உனக்கே தோணலையா நந்தினி..? உன்னோட தனிமையை நான் யூஸ் பண்ணிக்கனும்னு நினைத்திருந்தா எப்பவோ யூஸ் பண்ணியிருப்பேன்.. இந்த நீலிமலைக்கு வந்துதான் யூஸ் பண்ணிக்கனும்னு இல்லை.. என்னைப் பற்றின உன் உயர்ந்த அபிப்ராயத்துக்கு தேங்க்ஸ்..” கடுமையாகச் சொன்னான்..

அவனது கடுமையைத் தாங்க மாட்டாமல் முகம் நிமிர்த்தி அவனைப் பார்த்த நந்தினியின் கண்களில் இருந்த தாரை தாரையாக கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது..

“ம்ப்ச்..” என்றான் அவன் அலுப்புடன்..

அதை வெறுப்பாக நினைத்துக் கொண்டவளின் தேம்பல் அதிகமானது..

“எதுக்காக இப்ப அழுது ஆகாத்தியம் பண்ற..? உன்னை நான் தொட்டது தப்புத்தான்.. ஓகே.. மன்னிப்புக் கேட்டுக்கறேன்.. ஐ ஆம் ஸாரி.. போதுமா..? வா.. போகலாம்..”

“நான் என்னவோ குற்றம் செய்துட்டதைப் போல ஹார்ஷாப் பேசறீங்க பாஸ்..”

“நீ குற்றம் செய்யலைம்மா.. செய்யவே இல்லை.. நான்தான் குற்றவாளி.. உன்னை மயக்கப் பார்த்தேன்.. உன்னோட தனிமையை யூஸ் பண்ணிக்கப் பார்த்தேன்.. உன்மேல என்ன குற்றம் சொல்ல முடியும்..?”

“இப்பவும் அதே டோனில்தான் பேசறிங்க..”

“என் குரலே இப்படித்தான்..”

“நான் உங்க எதிரியில்லை பாஸ்..”

“இதைக் கேட்டு நான் சந்தோஷப் பட்டுக்கனுமா..? ப்ளீஸ்.. ஸ்டாப் திஸ் நான்ஸென்ஸ்..”

நந்தினி சிரமத்துடன் எழுந்து நிற்க முயன்றாள்.. புல்வெளியில் கையை ஊன்றியவளால் உடனடியாக எழுந்து கொள்ள முடியவில்லை.. ரவிச்சந்திரனின் விழிகள் இடுங்கின.. கோபப் பார்வையுடன் வந்து அவளது கைகளைப் பிடித்துத் தூக்கி நிறுத்தி விட்டான்..

“பாஸ்..”

கண்கள் கலங்க அவன் மீதான மனத்தாங்கலுக்கு ஆறுதல் தேடி அவன் மார்பிலேயே சாய்ந்து அழுதாள் நந்தினி..

“ஏண்டி படுத்தற..?” ஆற்றாமையுடன் அவளை அரவணைத்துக் கொண்டான் ரவிச்சந்திரன்..

“ஏண்டின்னா சொன்னீங்க..?” அதிர்ச்சியுடன் கேட்ட நந்தினியை இமைக்காமல் பார்த்து வைத்தான்..

‘ஏன் இப்படிப் பார்க்கிறான்..?’ நந்தினிக்கு விளங்கவில்லை.. குற்றவாளி அவனா.. இல்லை.. அவளா..?

அத்தியாயம் 88

தீட்சண்யம் மிகுந்த கண்களுடன் தீர்க்கமான பார்வை பார்த்தவனின் பார்வையை எதிர் கொள்ள முடியாமல் தடுமாறினாள் நந்தினி..

“கமான் நந்தினி.. ஒளிந்து மறைந்து விளையாடற இந்த கண்ணாமூச்சி விளையாட்டை இனியும் என்னால கண்டினியூ பண்ண முடியாது.. ஏண்டின்னு தான் சொன்னேன்.. அதுக்கு என்ன இப்ப..?”

“ஹலோ பாஸ்.. எப்படி என்னை நீங்க மரியாதையில்லாம பேசலாம்..?”

“அப்படித்தான் பேசுவேண்டி.. உன்னால என்ன செய்ய முடியுமோ.. அதை செய்துக்க.. பேசறாளாம் பேச்சு.. ஏய்ய்.. நான் வேற மாதிரியான பெண்களோடு தப்பாப் பழகியவன்தான்.. இல்லேன்னு மறைக்கலை.. அதை நியாயப் படுத்தவுமில்லை.. என்னைப் பத்தின விவரத்தை நான்தானே உன்னிடம் சொன்னேன்..?”

“அதனால மட்டும் உங்களோட அந்தப் பழக்கம் சரின்னு ஆகிடுமா பாஸ்..?”

“சரியாகாதுதான்.. பட்ஷே.. அவங்க அதுக்காகத்தான் என்னுடன் பழகினாங்க நந்தினி.. அவங்களுக்கான தேவை பணம்..”

“உங்களோட தேவையென்ன பாஸ்..? அவங்களோட மனமா..?”

அவன் மார்பிலிருந்து விலகி நின்ற நந்தினி நிதானமாகக் கேட்டாள்.. ரவிச்சந்திரனால் பதில் சொல்ல முடியவில்லை.. திகைத்துப் போனான்..

“அவங்க தப்பானவங்களாவே இருக்கட்டும்.. நீங்க சரியானவரா இருந்திருந்தா அவங்களிடமிருந்து தள்ளி நின்றிருக்கலாமே பாஸ்.. உங்களை யார் தடுத்திருக்க முடியும்..?”

“நந்தினி..”

“உங்களுக்கும் அவங்க தேவைப்பட்டிருக்காங்க பாஸ்.. இதுதான் உண்மை.. அதே தேவைக்காகத்தானே என்னையும் நீங்க தொட்டிங்க..?”

“ஏய்ய்...”

ரவிச்சந்திரன் 'பளார்..' என நந்தினியின் கன்னத்தில் ஓங்கி ஓர் அப்பு அப்பினான்.. தடுமாறிய நந்தினி புல்வெளியில் விழுந்தாள்.. கன்னத்தைப் பிடித்தபடி புல்வெளியில் சரிந்திருந்தவளின் முன்னால் ஒரு காலை மடக்கி உட்கார்ந்த ரவிச்சந்திரன் கோபத்துடன் ஒற்றை விரலை உயர்த்தி எச்சரித்தான்..

"வாய் இருக்கிறது என்கிறதுக்காக எதை வேண்டுமானாலும் பேசி விடக் கூடாது.. அறிவு கெட்டவளே..! அவங்களும் நீயும் ஒன்றா..? என்னை ஹர்ட் பண்ணனும்ங்கிறதுக்காக இப்படிப் பேசுவியா..? இடியட்.. ஐ லவ் யு, யு, யு, யு..! ஐ லவ் ஒன்லி யு.. மனசுக்குப் பிடிச்சவளைப் பக்கத்தில் வைச்சுக்கிட்டுக் கையைக் கட்டிக்கிட்டு இருக்க முடியலை.. தொட்டேன்.. அதை உடம்பு தேவைக்காகத் தொட்டேன்னு கொச்சைப் படுத்தாதே.. டாமிட்.."

'என்னது..???!!!...'

நந்தினியால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை.. ரவிச்சந்திரன் சொல்வது உண்மைதானா என்று புரியாமல் மலங்க மலங்க விழித்தாள்.. ரவிச்சந்திரன் அவளைக்

காதலிக்கிறானா..? அஜந்தா போன்ற பேரழகியைத் துச்சமாக உதறியவன் பங்கரையைப் போலிருக்கும் நந்தினியிடம் மயங்குகிறானா..?

“ஐ கான்ட் பிலிவ் திஸ்..” தலையை ஆட்டி மறுத்தாள் நந்தினி..

“வொய்..?” ரவிச்சந்திரனின் பார்வை அவளைத் துளைத்தது.. “கதைவிட வேணாம் பாஸ்.. நீங்களோ படா கோடிஸ்வரர்.. ராஜ பாரம்பர்யம்.. உங்களுக்கு ஈக்குவலான ஸ்டேட்டஸில இருக்கிற ராஜ குடும்பத்துப் பெண்ணைத்தான் கல்யாணம் பண்ணிக்குவீங்க..

இது கூடத் தெரியாத முட்டாள்ன்னு என்னை நினைச்சீங்களா..?”

“நீ முட்டாள்தாண்டி..”

ஊடுறுவும் பார்வையுடன் சொன்னான் ரவிச்சந்திரன்.. மறுபடியும் அவன் உரிமை கொண்டாடி ‘டீ’ போட்டதில் நந்தினி வெகுண்டாள்.. அவன் என்ன அவளுடைய உணர்வுகளுடன் விளையாட நினைக்கிறானா..?

“‘டீ’ன்னு சொல்ல வேணாம் பாஸ்..”

“அப்படித்தான் சொல்வேன்னு சொல்லிட்டேன்.. நான் யாரைக் கல்யாணம் பண்ணிக்கனும்னு நான்தான் தீர்மானிக்கனும்.. நீயில்லை.. ஐ லவ் யு.. தட்ஸ் ஆல்..”

“எவ்வளவு ஈஸியா தட்ஸ் ஆல்ன்னு சொல்லறீங்க.. இதைப் போல எத்தனை பேரிடம் சொல்லியிருப்பீங்க..?”

“உன்னைத் தவிர வேறு ஒருத்தியிடம் இதுவரைக்கும் நான் ‘ஐ லவ் யு’ சொன்னதில்லை.. முதலும் முடிவுமா நான் ‘ஐ லவ் யு’ சொன்ன பெண் நீ மட்டும் தான்..”

“அப்ப மற்றப் பெண்களிடம் பழகியது..?”

“அவங்களில யாரையும் நான் காதலித்ததில்லை.. தட் ஸேம் டைம் அவங்களும் என்னைக் காதலித்ததில்லை..”

நந்தினியை ஊன்றிப் பார்த்தபடி சொன்னான் ரவிச்சந்திரனும்.. அவனது பார்வை நீ என்னைக் காதலித்தாய், காதலிக்கிறாய் என்று உணர்த்தியதில் நந்தினி குழம்பித் தவித்தாள்..

அவள் ரவிச்சந்திரனிடம் மயங்குகிறாள்தான்.. ஆனால் காதலிக்கிறாளா..? விடை தேட அவளுக்குப் பயமாக இருந்தது..

“அதெல்லாம் காதலில்லையா..?” அவள் விடாமல் வாதாடினாள்..

“இல்லை.. அதெல்லாம் காதலே இல்லை..” அவன் உறுதியுடன் மறுத்தான்..

“அதெல்லாம் காதலில்லைன்னு சொல்கிற நீங்க இதை மட்டும் எப்படிக் காதல்ன்னு சொல்கிறீங்க..”

நந்தினி அழுத்தமாகக் கேட்டாள்.. குழந்தைத் தனமான இயல்புடையவளிடம் வெளிப்பட்ட தீவிரத்தில் அவன் விழிகளில் ஆச்சரியம் வந்தது.. அவளையே பார்த்தபடி..

“காதலிக்கிறவனுக்குத் தெரியாதா.. எது காதல்ன்னு..?” என்று நிதானமாகக் கேட்டான்..

கலங்கிச் சிவந்திருந்த முகமும் தீர்க்கமான பார்வையுமாக இருந்த நந்தினி மறுப்பாக தலையை அசைத்தாள்..

“இல்லை.. இது காதலாக இருக்க முடியாது..”

அவன் மனதில் காதலே வராது என்பதைப் போன்ற அவளின் உறுதியான வார்த்தைகளில் சினம் கொண்ட ரவிச்சந்திரன் அவளை உறுத்துப் பார்த்தான்.. சோர்ந்திருந்தாலும் அவனுடைய பார்வையை தைரியமாக

அவள் எதிர்நோக்கியதில் அவனுடைய புருவங்கள் முடிச்சிட்டன..

“இத காதலில்லைன்னா வேறு என்னவா இருக்கும்ன்னு நீ நினைக்கிற..?”

இப்போதும் நிதானமாகத்தான் அவன் கேட்டான்.. இமைக்காமல் அவனைத் துளைப்பதைப் போல பார்த்தபடி தான் கேட்டான்.. நந்தினிதான் பதில் சொல்ல முடியாமல் தடுமாறினாள்.. அவனுடைய பார்வையின் குற்றச்சாட்டில் துடிதுடித்தாள்.. துளைக்கும் அவனது பார்வையில் மனம் நைந்தாள்..

“பதில் சொல்லு.. இது காதலில்லையா..? ம்ம்ம்..?”

நந்தினியிடம் பதிலில்லை.. இது காதலில்லை யென்று உறுதியாகச் சொன்னபின்னால் அதை மறுபடியும் வலியுறுத்த மனமின்றி தவியாய் தவித்தாள்.. அவனுடைய காதல் கிடைத்தும் அதை ஏற்க முடியாமல் தத்தளித்தாள்.. பயந்தாள்..

“இது காதலில்லைன்னா காமமாத்தான் இருக்க முடியும்.. அதைத்தானே நீயும் சொல்ற..”

பட்டவர்த்தனமான அவனது பேச்சில் பதறிப்போன நந்தினி.. "சீச்சீ.." என்று சொல்லி விட்டாள்..

சற்று முன் நிகழ்ந்தவைகளை 'காமம்' என்ற பெயரிட்டு அழைக்க அவளுடைய மனம் துணியவில்லை.. அவளுள் எழுந்து உணர்ச்சிப் பேரலைகளை அவமதிக்க அவளால் முடியவில்லை.. என்ன மாதிரியான உணர்வுகள் அவை.. ரவிச்சந்திரனைத் தவிர வேறு ஒருவன் அவளுடைய நகம் தொட்டிருந்தாலும் விருப்பமில்லாத அருவெறுப்போடு விலகித் தள்ளிச் சென்றிருப்பாளே.. ஏன் ரவிச்சந்திரன் தொட்டபோது மறுக்காமல் உடன் பட்டாள்..?

"இப்படியெல்லாம் பேசாதீங்க.. ப்ளீஸ்.." அவள் அழுக ஆரம்பித்து விட்டாள்..

ரவிச்சந்திரனின் கோபம் வடிந்து விட்டது.. நந்தினியின் மன உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்கும் வகையில்..

"லீவ் இட்.." என்றான்..

'அப்பாடி..' நந்தினிக்கு நிம்மதியாக இருந்தது..

அவனுக்கும் அவளுக்கும் இடையே நிகழ்ந்த தழுவல்களைப் பற்றியும் முத்தங்களைப் பற்றியும் அவன் பேச

மாட்டான் என்பதில் அவளுக்குள் ஓர் ஆறுதல் உண்டானது.. விடுதலையுணர்வு ஏற்பட்டது.. அப்போது தான் அவர்களைச் சுற்றிக் கவிந்திருந்த இருளைக் கவனித்தாள்..

"அச்சச்சோ.. இருட்டிருச்சே.." கைகளை உதறினாள்.. பகலிலேயே பசுமாடு தெரியாது.. இரவினில் எப்படி எருமை மாட்டைக் கவனிக்க முடியுமாம்.. வெளிச்சத்தில் மலையேறவே தலையால் தண்ணீர் குடித்தவள் இருட்டுக்குள் எப்படிக் காலடித் தடம் பார்த்து மலைச் சரிவில் இறங்குவாள்..? பகல் பொழுதில் சூழ்ந்திருந்த பனி மூட்டத்தில் பக்கத்தில் வந்த ரவிச்சந்திரன் கூடக்

கோட்டோவியமாகத்தான் தெரிந்தான்.. இப்போதோ கைகளால் துழாவ வேண்டும் போல இருந்ததில் பயந்து போன நந்தினி..

"ம்மா.. ஆ.. ஆ.. நந்து.. ப்பா.. ஆ.. ஆ.." என்று பச்சைக் குழந்தையைப் போல அழ ஆரம்பித்து விட்டாள்..

"ஏய்ய்.. உஸ்ஸ்.. வாயை மூடு.. அழுதால் மட்டும் உன் அம்மா, அப்பா, நந்து எல்லோரும் இந்த நீலி மலைக்கு வந்து நின்று விடுவாங்களா..?" ரவிச்சந்திரன் அதட்டினான்..

பாறைகள் உருளும் ஒலி கேட்டதில் நந்தினியின் கொஞ்ச நஞ்ச தைரியமும் ஓடோடிவிட அவள் சற்றுமுன் நடத்திய.. 'காதலா..? காமமா..?' பட்டி மன்றத்தை மறந்து விட்டு ரவிச்சந்திரனிடம் ஓர் இறுக்கம் வந்தது.. அவனைக் கட்டிக் கொண்டிருந்தவளைத் தொட்டும் பார்க்காமல் படு கறாராக..

"லிசன் நந்தினி.. இப்ப என்னைக் கட்டிக்கிட்டிருக்கிறது நீதான்.. நான் உன்னைத் தொடக்கூட இல்லை.." என்று அறிவுறுத்தினான்..

"பழிவாங்க நல்ல டயம் பார்த்தீங்க பாஸ்.."

"பழிவாங்கலைம்மா.. நடப்பபைச் சொன்னேன்.. நீ என்னைக் கட்டிக்குவ.. நானும் உன்னைக் கட்டிக்குவேன்.. உடனே நீ.. உன்னோட தனிமையை நான் யூஸ் பண்ணிக்க நினைக்கிறதாப் பழிபோடுவ.. தேவைதானா..? ஸோ..?"

"ஸோ..?"

"தள்ளியே நில்லு.."

"தள்ளி நிற்கிறதா..?"

நந்தினி அரண்டு போனாள்.. மையிருட்டும், பனிக்காற்றும், மரங்கள் அடர்ந்த கானகமும், உச்சி

மலையும், பாறைகள் உருளும் ஒலியும், இனம் புரியாத சப்தங்களும், உடலைத் துளைத்து விறைக்க வைக்கும் குளிரும் என அக்கூழலே அச்சம் நிரம்பியதாக இருந்தது.. இதில் தள்ளி நின்றால் அவள் என்ன ஆவாள்..?

“நல்ல கதையாய் இருக்கே.. பேசாம வீட்டுக்குள்ளே போர்த்திக்கிட்டு உட்கார்ந்திருந்தவளை மீன்முட்டி அருவியைப் பார்க்கலாம்ன்னு ஆசை காட்டிக் கூப்பிட்டுக்கிட்டு வந்து மலையேற வைத்து இருட்டுகிற வரைக்கும் உட்கார வைத்துட்டு இப்பத் தள்ளி நில்லுங்கறிங்களா..? அதெல்லாம் முடியாது..”

அவளது அடத்தில் அவன் முகத்தில் சிரிப்புப் படர்ந்ததை மையிருட்டில் அவளால் கண்டு கொள்ள முடியவில்லை.. சிரிப்பைக் குரலில் காட்டாமல் கறார் குரலில்..

“சொன்னாக் கேட்கனும் நந்தினி.. நீ ஒட்டிக்கிட்டு நின்னா நானும் கட்டிக்கிட்டுத்தான் கூப்பிட்டுக்கிட்டுப் போகனும்..” என்று மறுபடியும் அறிவுறுத்தினான்..

“படுத்தாதீங்க பாஸ்.. கட்டிக்கிட்டுக் கூப்பிட்டுக்கிட்டுப் போகாம தள்ளி நிறுத்தியா கூப்பிட்டுக்கிட்டுப் போக முடியும்..? இதுவே நீலிமலை.. மேடும் பள்ளமுமா இருக்கு.. பேசாம

உங்க முதுகில தொத்திக்கறேன்.. என்னை 'உப்பூ மூட்டை' சுமந்து மலையிறக்கி விட்டிருங்களேன்..'' நந்தினி சிணுங்கினாள்..

''உப்பு மூட்டையா..?'' ரவிச்சந்திரனுக்கு புரியவில்லை..

''உப்பு மூட்டைன்னா என்னன்னு தெரியாதா..? இது கூடத் தெரியாம எம்.பி.ஏ படிச்சிருக்கீங்க..'' நந்தினி வாரினாள்..

''எம்.பி.ஏ படிப்பிலே உப்பு மூட்டையைப் பத்திச் சொல்லித் தரலைம்மா..'' என்றான் ரவிச்சந்திரன்..

''சும்மா அம்மா அம்மான்னு கூப்பிடாதீங்க பாஸ்.. அலர்ஜியா இருக்கு..'' நந்தினி ஆட்சேபித்தாள்..

'இப்ப இதுதான் ரொம்ம்ம்..ப முக்கியம்..' ரவிச்சந்திரனுக்கு தலையில் அடித்துக் கொள்ளலாம் போல இருந்தது..

'இவ பழக்கம் என்னையும் தொத்திக்கப் பார்க்குதே..' தலையில் அடித்துக் கொள்ளும் எண்ணத்தைக் கை கழுவினான்..

''உங்களையென்ன அப்பான்னா கூப்பிடறேன்..?''

நந்தினி எழுப்பிய கேள்வியில் அவளது கன்னத்தை இறுக்கிப் பிடித்துக் கிள்ள வேண்டும் போல தோன்றி வைத்ததில்..

“இப்ப நீதான் படுத்தி எடுக்கிற.. முதலில் உப்பு மூட்டை கதைக்கு வந்து தொலை.. அப்படின்னா என்ன..?” என்று அதட்டினான் ரவிச்சந்திரன்..

“இதுதான் உப்பு மூட்டை..”

நந்தினி சட்டென அவனை விட்டு விலகி முதுகுப் புறமாக வந்து அவனது தோள்களில் படர்ந்து கழுத்தைக் கைகளால் வளைத்துப் பிடித்து ஓர் எம்பு எம்பி கால்களை மடக்கி அவனது முதுகில் சுமையாய் படர்ந்து பரவித் தொங்கியபடி..

“இதுதான் உப்பு மூட்டை...! எப்படி..?” என்றாள்..

எப்படியென்று அவன் எப்படிச் சொல்வான்..? சொல்ல வொண்ணாக் கிறக்கத்தில் ஆழ்ந்தவனால் சில நொடிகளுக்கு எதுவும் பேச முடியவில்லை.. சற்றுப் பொறுத்து அவளது முதுகை வளைத்துக் கொண்டிருந்தவளின் கை தடவி..

“இறங்கு நந்தினி..” என்று கரகரத்த குரலில் கூறினான்..

“ஏனாம்..? சாருக்கு சுமக்க முடியலையா..?” கிண்டல் செய்த வண்ணம் இறங்கி வந்து அவன் மார்பில் முகம் புதைத்துக் கட்டிக் கொண்டாள் நந்தினி..

இப்போது ரவிச்சந்திரன் அவளைத் தள்ளி நிறுத்தவில்லை.. அவனுக்குள் இறுக்கிக் கட்டிப் பிடித்து அவள் கூந்தலில் முத்தம் பதித்தான்.. அதை உணர்ந்தும் உணராதவளைப் போல விலகாமல் அவள் நின்றாள்..

‘இவளை என்னன்ன நினைக்கிறது..? குழந்தையாய் இவளை நினைக்க முடியாம நான் படுகிற பாட்டை இவள் அறிவாளா..?’

நந்தினியின் கூந்தல் காட்டில் முகம் புதைத்து நின்ற ரவிச்சந்திரனுக்கு ஆயாசமாக இருந்தது.. கட்டிக் கொள்ளவும் முடியாமல், வெட்டிக் கொள்ளவும் முடியாமல் முள்ளின் மேல் நிற்பதைப் போல உணர்ந்தான்..

‘புரிஞ்சுக்கடி நந்தினி..’

அவனது மனதின் குரலைக் கேட்டு விட்டவளைப் போல இன்னும் அதிகமாக அவனுக்குள் புதைந்தாள் அவள்..

அவளுக்கு குளிர்வதைப் புரிந்து கொண்டு தனது சால்வைக்குள் அவளை இழுத்து இறுக்கிக் கொண்டு மெதுவாக நடக்க ஆரம்பித்தான் ரவிச்சந்திரன்..

அவனது உடல் சூட்டின் கதகதப்பில் குளிர் குறைந்தவளாக நந்தினி அவனுடன் இனைந்து நடக்க ஆரம்பித்தாள்.. எங்கே போகிறோம் என்று தெரியாமல் அவன் இழுத்த இழுப்பிற்கு திரும்பி நகர்ந்தாள்.. மலையிறங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் நினைத்தாள்.. அதற்கு வெகு தொலைவு உள்ளதே என்று அவளுக்குக் கவலையாக இருந்தது.. இருட்டில் மலையிறங்குவது சாத்தியமில்லையே..

சில நிமிடங்கள்தான் நடந்திருப்பார்கள்.. அடையாறு ஆலமரம் போல அகன்ற மரத்தின் அடியே நின்ற ரவிச்சந்திரன் அவனுடைய கையிலிருந்த பென்சில் டார்ச்சின் ஒளியில் வயர்களால் பிணைக்கப்பட்ட ஏணி ஒன்று தெரிந்தது.. மரத்தின் கிளையிலிருந்து அது தொங்கிக் கொண்டிருந்தது.. டார்ச்சை உயர்த்தினான்.. ஒளி உயர்ந்து கிளைகளுக்கு இடையிலிருந்த மர வீட்டில் படிந்தது..

அத்தியாயம் 89

‘ஆ’வென வாய் பிளந்து நின்று விட்டாள் நந்தினி.. ரவிச்சந்திரனைச் சந்தித்த பின்னால் அடிக்கடி இப்படி வாய் பிளக்கிறாள்.. கற்பனை செய்து பார்த்திராத அதிசயங்களை கண் முன்னால் கண்டு பிரமிக்கும் சந்தர்ப்பங்கள் அவளுக்கு வாய்த்துக் கொண்டே இருக்கின்றன..

வயநாடு என்ற வள நாட்டில், நீலிமலையில், மீன்முட்டி அருவிகளைக் கண்டு அவள் பிரமித்த பிரமிப்பு இன்னும் அகன்ற பாடாக இல்லை.. இதோ அடுத்த பிரமிப்பு..

அகன்று சென்ற மரத்தின் கிளைகள் ‘எ’ வடிவத்தில் இரண்டாகப் பிரிந்திருந்தன.. பரந்து விரிந்து அகன்றிருந்த அந்தக் கிளைப் பகுதி சடுகுடு விளையாடும் மைதானம் போல சமவெளியாக இருந்து வைத்ததையே நந்தினியால் நம்ப முடியவில்லை.. அந்தச் சமவெளியில் அதியற்புதமான மரவீடு ஆரோகணித்திருந்தை துளிக்கூட நம்ப முடியவில்லை..

“நிஜமாவே அது வீடுதானா..?”

தன் கையைக் கிள்ளுவதாக நினைத்துக் கொண்டு ரவிச்சந்திரனின் கையில் கிள்ளி விட்டுப் பிடறியில் அடி வாங்கினாள்..

“மனசில இருக்கிற கோபத்தைக் கிள்ளிப் பழி தீர்த்துக்கிறயா..?” செமத்தியாக ஒன்று கொடுத்தான் ரவிச்சந்திரன்..

“வலிக்குது பாஸ்..”

“அப்ப கையை வைத்துக்கிட்டுச் சும்மா இருக்கனும்..”

“நீலிமலை உச்சியில, இருட்டில, இப்படியொரு மரத்துக்கு அடியில நிற்க வைச்சு மர உச்சியிலே குட்டிப் பங்களாவைக் காண்பிச்சா கனவா, நனவாங்கிற சந்தேகம் வராதா..?”

“வரும், வரும்.. உனக்கு எது வேண்டுமானாலும் வரும்..”

“எது வருதோ வரலையோ.. பசி வந்திருச்சு பாஸ்..”

“அதானே பார்த்தேன்.. என்னடா இவ்வளவு நேரமாகியும் இந்த வார்த்தை வரலையேன்னு நினைச்சேன்.. வந்திருச்சு.. எப்படி இவ்வளவு நேரம் தாக்குப் பிடிச்ச..?”

“நாக்குத் தள்ள மலையேறினதில பசிகூட மறந்து போயிருச்சு பாஸ்.. அது மட்டுமில்ல..”

“இன்னும் இருக்கா..?”

“யெஸ் பாஸ்.. உங்க பையில துணிகளைத் தவிர மருந்துக்குக்கூட ஒரு பிஸ்கட் பாக்கெட் இல்லையே.. தண்ணியையும் வர்ற வழியில ஓடி வந்த ஆத்துத் தண்ணிய அள்ளிக் குடிச்சுக்கிட்டில்ல வந்தோம்..?”

“அருவிக் காட்டுக்குள்ள வர்றப்ப எந்த முட்டாளாவது தண்ணி பாட்டிலைச் சுமந்துக்கிட்டு வருவானா..?”

“இந்த முட்டாள் சுமக்கலைன்னு சொல்லுங்க.. மத்த முட்டாளுகளைப் பத்தி நமக்கென்ன கவலை..?”

“இப்பச் சொன்னியே.. இது சரியான கால்குலேஷன்.. நான் முட்டாளா இருக்கப் போய்த்தான் உனக்கெல்லாம் வேலை கொடுத்து என் வீட்டில தங்க வைச்சு ராஜ உபசாரம் பண்ணிக்கிட்டு இருக்கேன்..”

“உபசாரம்ன்னு சொல்லுங்க.. ராஜ உபசாரம்ன்னு சொல்லாதீங்க.. சான்ஸ் கிடைச்சா போதும்.. என்னை வறுத்து

எடுத்து பொரிச்சுத் தாளிக்கறீங்க.. இதுக்கு பேரு உபச்சாரமே இல்லை.. இதில ராஜ உபசாரமாம்.. ஹ..”

“கொஞ்சம் அடங்கறியா... இல்லை.. உன்னை அம்போன்னு விட்டுட்டு நான் மட்டும் ஏணியிலே ஏறிக்கவா..?”

“ஹை.. அஸ்க்கு, புஸ்க்கு, ஆசை, தோசை, அப்பள வடை..”

பழிப்புக் காட்டக் கூட அவள் தோசை, அப்பள வடை வகையறாக்களைச் சொல்லியதில் அவனுக்கு சிரிப்பு வந்தது. . ‘இவள் பேசற பேச்சுக்கு சிரிப்பு வராமல் இருந்தாத்தான் ஆச்சரியம்..’ என்று நினைத்தபடி..

“ஆசைக்கு வேணும்ன்னா இங்கே வழியிருக்கு.. தோசை, அப்பள வடையெல்லாம்.. கிடைக்காதும்மா..” என்றான்..

“அம்மாவா..? ஐய்யே..!” நந்தினியின் முகம் அஷ்ட கோணலானது..

“அப்ப ‘அடியே’ன்னு கூப்பிட்டுக்கவா..?”

“அம்மா..! அடியேய்..! இது ரெண்டில ஒண்ணைத்தான் பிடித்துக்கிட்டுத் தொங்கனுமா பாஸ்..? கூப்பிடறதுக்கு வேற வார்த்தைகளே இல்லையா..?”

“ஏன் இல்லாம..? தங்கைங்கிற வார்த்தை இருக்கே.. அதைச் சொல்லிக் கூப்பிடவா..?”

நிதானமாகத்தான் அவன் கேட்டான்.. அவள் முகம் தான் விளக்கெண்ணையைக் குடித்ததைப் போல ஆகி விட்டது..

“தங்கையா..?” அவள் கேட்டது அவளுடைய காதுகளுக்கே கேட்கவில்லை.. கிணற்றுக்குள் இருந்து பேசுவதைப் போல பலவீனமாக கேட்டு வைத்தாள்..

“என்ன.. தங்கையான்னு ராகம் பாடற..? காதல் பண்ணிட்டு அது நிறைவேறாமப் போனா என்னை உங்க தங்கையா நினைத்துக்கங்கன்னு கல்யாணதப்ப இன்விடேஷனை நீட்டற எத்தனை கதைகளை கேள்விப் பட்டிருப்பேன்..? இங்கே காதலும் இல்லைன்னு ஆகிருச்சு.. அப்புறம் தங்கை உறவுமுறை கொண்டாடறதுக்கு என்ன..?”

“வேணாம் பாஸ்.. கேட்கவே சிக்கலை..”

நந்தினி காதுகளைப் பொத்திக் கொண்டாள்.. இருளில் அவன் பார்த்த இமைக்காத பார்வையைப் பற்றி அவளுக்குத் தெரியாமலே போனது..

பக்கத்தில் 'உர்'ரென்ற சத்தம் கேட்டதில் பாய்ந்து அவனைக் கட்டிக் கொண்டாள்.. எசகு பிசகாக அவனது தோள் பட்டையில் அவளது வாய் பட்டதில் பல் பதிந்து விட்டது..

"சரியாப் போச்சு போ.. பசியிலே என்னை ஸ்வாஹா பண்ணைக் கிளம்பிட்டியா..? என் பேக்கை சர்ச் பண்ணின ஆளுல்ல நீ.. அதில எதுவுமில்லைன்னு இப்படிக்கா ரூட் போடறியா..?"

ரவிச்சந்திரன் அவளது பின்னந்தலையில் உள்ளங்கைகளைப் பிடித்து உலுக்கி அவளது நெற்றியில் முட்டினான்.. அவனுடைய விளையாட்டுப் பேச்சில் நந்தினியின் பயம் குறைந்தது.. அவனுடைய நோக்கமும் அதுதானே..

"போங்க பாஸ்.." என்றவளிடம்..

"நிஜமாகவே போகச் சொல்றியா..?" என்று கேட்டு..

"அய்யய்யோ.." என்று அலற வைத்தான்..

பேச்சு பேச்சாக இருக்க அவளைத் தனது கை வளைவுக்குள் இழுத்து பத்திரப்படுத்தியபடி இரும்புக் கம்பிகளால் விணைக்கப்பட்ட ஏணியை நெருங்கினான்.. நந்தினியை முன்னால் நகர்த்தி.. டார்ச்சின் ஒளியில் வழியைக் காட்டி.. "ஏறு.." என்றான்..

"நீங்க..?" அவள் தயங்கினாள்..

"நீ மேலே ஏறியதும் நானும் ஏறி வருவேன்.. பயப்படாம போ.."

அவன் தைரியம் கொடுத்ததில் தயக்கத்துடன் ஏணியில் கால் பதித்து ஏறினாள் நந்தினி.. அவள் உச்சிப் பகுதியை அடைந்ததும் திரும்பிப் பார்த்தாள்..

"வந்துக்கிட்டே இருக்கேன்.. நீ அப்படியே கிளை மேலே ஏறி நில்லு.." குரல் கொடுத்தான் ரவிச்சந்திரன்..

தத்தித் தாவி கிளைமீது கால் பதித்து சாய்ந்து நின்றாள் நந்தினி.. டார்ச்சின் ஒளி வட்டதில் தெரிந்த மரவீட்டின் கதவு அழகானதாக இருந்தது.. அதன் வடிவமைப்பு அவளைக் கவர்ந்தது.. ஏணியைப் பற்றி ஏறி வந்த ரவிச்சந்திரன் கிளையில் கால் பரப்பி ஏறக்குறைய அவள் மீது முழுவதுமாக சரிந்து நின்றான்.. அவள் மீது படர்ந்திருந்தவனை அப்புறப்

படுத்தும் வகை தெரியாமல் பல்லைக் கடித்தபடி அமைதி காத்தாள் நந்தினி.. வேண்டுமென்றே அவன் அவள்மீது சாயவில்லை என்று தெரிந்திருந்தும் ஆட்சேபிப்பது அநாகரிகம் என்பது ஒருபுறமிருக்க.. அவன் தள்ளி நின்றாலும் அவன்மீது பாய்ந்து, சாய்ந்து, ஒன்றி அடைக்கலமாகிக் கொண்டிருப்பது நந்தினிதான் என்ற உண்மை மறுபுறம் அவளை ஊமையாக்கியது..

கால்களை அகற்றி பேலன்ஸ் பண்ணி அவள் மீது சாய்ந்து நின்றிருந்த ரவிச்சந்திரன் இரும்புக் கம்பிகளால் பிணைக்கப் பட்டிருந்த ஏணியைச் சுருட்டி மேலே இழுத்து கிளைகளில் செருகி வைத்தான்..

“ஏன்..?” புரியாமல் வினவினாள் நந்தினி..

“ஒரு பாதுகாப்புக்காகத்தான்.. இந்த மரம் வழுவழுப்பானது.. நாம இருக்கிற கிளை ரொம்ப உயரத்தில இருக்கு.. ஏணியில்லாம யாராலேயும் ஏற முடியாது.. மத்தவங்க ஏற முடியாம ஏணியைச் சுருட்டி வைக்கிறதுதான் நமக்கு ஸேஃப்..”

“நாம பார்க்கிறப்ப ஏணி தொங்கிக்கிட்டு இருந்ததே..”

“கேசவன் குட்டி காலையிலேயே வந்து கெஸ்ட் ஹவுஸை சுத்தம் பண்ணி ஏணியைத் தொங்க விட்டு ரெடி பண்ணிட்டுத்தான் நமக்காக நீலி மலையடிவாரத்தில காத்திருந்தான்..”

“இது.. உங்க கெஸ்ட் ஹவுஸா..?”

“யெஸ்..”

ரவிச்சந்திரனின் டார்ச் பாய்ச்சிய ஒளி வெள்ளத்தில் அந்த மரவீடு கொடிவீடு போல மலர்கொடியால் சூழப்பட்டு இயற்கையழகின் நேர்த்தியுடன் வெகு அழகாக இருந்தது..

‘இது இவனுடைய கெஸ்ட் ஹவுஸா..?’

இதைப்போன்ற கொடி வீடு போன்ற மரவீட்டை மரத்தின் கிளைகளுக்கு இடையே அமைத்து அவன் கெஸ்ட் ஹவுஸாக வைத்திருப்பான் என்று நந்தினி கற்பனை செய்து கூடப் பார்க்கவில்லையே..

‘ம்ஹூம்.. இவனை எப்போ மங்களூர் டிரெயினில மீட் பண்ணினேனோ.. அப்ப இருந்து கற்பனை செய்து பார்க்காத எல்லாத்தையும் கண்கூடாப் பார்த்துக்கிட்டு இருக்கேன்..’ வயநாட்டுக்கு வரும் போதே உன்னை கெஸ்ட் ஹவுஸிக்கா

கூப்பிட்டேன் என்று ரவிச்சந்திரன் சொன்னது நந்தினியின் ஞாபகத்துக்கு வந்தது.. முன்கூட்டியே திட்டம் போட்டிருப்பானோ என்று தோன்றியதை..

‘சேச்சே.. அப்படியெல்லாம் இருக்காது..’ என்று தலையை ஆட்டிக் கொண்டாள்..

“மனசுக்குள்ள என்னைத் தப்புத்தப்பா நினைக்கிறதைப் போல இருக்கு..”

அவள் தலையை ஆட்டியதை சந்தேகமாக பார்த்தபடி கேட்டான் ரவிச்சந்திரன்..

“இல்லையே..” நந்தினி மறுத்த விதமே எங்கப்பா மர ஷெல்ஃபில் இல்லை என்று சொன்னது..

“உன் புத்தி உன்னை விட்டு எங்கே போகும்..?”

ஜீன்ஸ் பாக்கெட்டில் இருந்த சாவியை எடுத்துக் கதவைத் திறந்து உள்ளே போன ரவிச்சந்திரன் நந்தினியைப் பார்த்து..

“உள்ளே வா..” என்றான்..

டார்ச் விளக்கின் ஒளி வெள்ளத்தில் கவனமாகத்தான் அவள் நகர்ந்தாள்.. இருந்த போதிலும் கரடு முரடான

மரக்கிளை அவளுடைய காலை பதம் பார்த்ததில் கால் தடுமாறி தலை குப்புற விழப் போனாள்..

“நினைத்தேன்..”

சட்டென அவளது இடுப்பை வளைத்து இழுத்து உள்ளே இழுத்துக் கொண்ட ரவிச்சந்திரன் அவளுடைய தலையில் குட்டினான்..

“ஒழுங்கா ஒரு அடிகூட எடுத்து வைக்கத் தெரியலை.. வாய் மட்டும் கிழியுது..”

நந்தினி திகிலில் இருந்தாள்.. மரத்திலிருந்து தலை குப்புற விழ இருந்த பீதியிலிருந்து அவள் முற்றிலுமாக விடுபடவில்லை.. படபடவென அடித்த இதயத் துடிப்புடன் நெஞ்சில் கை வைத்து நின்று விட்டாள்..

“இதை செஞ்சிக் கோட்டைன்னு நினைத்தியா..?” ரவிச்சந்திரன் சொல்லிக் காட்டியதில் ரோஷம் பொத்துக் கொண்டு வர அவள் பீதியிலிருந்து விடுபட்டு அவனுடன் சண்டையிடக் கிளம்பி விட்டாள்..

“சும்மா.. சும்மா அதையே சொல்லாதீங்க பாஸ்..”

“சும்மா, சும்மா நீ எதையாவது செய்து வைத்து அதையே சொல்ல வைக்காதே.. அண்டர்ஸ்டாண்ட்..”

“இதையொன்னைச் சொல்லிருவீங்க..”

நந்தினி வாய்க்குள் முணுமுணுத்தபடி வீட்டை நோட்டம் விட்டாள்... ரவிச்சந்திரன் கிளையில் செருகியிருந்த ஏணியை மடக்கி இழுத்து வீட்டுக்குள் போடும் முயற்சியில் ஈடுபட்டிருந்ததினால் டார்ச்சின் ஒளி கிளையின் மீது பாய்ந்திருந்தது.. இருள் பரவியிருந்த வீடு எப்படியிருக்கிறது என்று தெரியவில்லை..

‘மரத்தரையும் ஓலைப்பாயுமா இருக்கும்.. மர உச்சியில இருக்கிற கொடி வீட்டில வேற என்ன இருக்கும்.. எப்படியோ.. காட்டுக்குள்ள முடங்கியிருக்க பாதுகாப்பான இடம் ஒண்ணு கிடைச்சிருக்குன்னு திருப்திபட்டுக்க வேண்டியதுதான்.. மர வீடுங்கிறதினால குளிர் அண்டாது.. கணப்பைத்தான் எரிய வைக்க முடியாது... வீடு பத்திக்கும்ல்ல..’

தனது அரிய கண்டுபிடிப்பில் மகிழ்ந்து போன நந்தினி.. ‘எங்கேயோ போயிட்டடி நீ..’ என்று தன்னைத் தானே பாராட்டிக் கொண்டாள்..

ஏணியை வீட்டுக்குள் வைத்து கதவை இறுக மூடித் தாழிட்ட ரவிச்சந்திரன் டார்ச்சை அணைத்தான்.. மர வீட்டுக்குள் இருள் சூழ்ந்தது..

“ஏன் டார்ச்சை அணைச்சீங்க.. பயமாய் இருக்கு..” நடுங்கினாள்..

“பயப்படாதே.. விளக்கைப் போடறேன்..” என்றான் ரவிச்சந்திரன்..

“விளக்கா..? இந்த மர வீட்டிலா..?”

அதிசயத்துடன் நந்தினி கேட்டுக் கொண்டிருந்த போதே விளக்கு எரிந்தது.. குடிலில் பரவிய வெளிச்சத்தில் கண்கள் கூச கண்ணைக் கசக்கிப் பார்த்த நந்தினி பிரமித்துப் போனாள்..

மீன் முட்டி அருவிகளைக் கண்டபோது உண்டான பிரமிப்பு போல இந்த பிரமிப்பு இருந்தது.. அது எப்படி சாத்தியமானது என்றே அவளுக்குப் புரியவில்லை.. நீலிமலையில் அடர்ந்த கானகத்தின் ஊடே அகன்றதொரு மரம்.. அதன் உச்சி மரக்கிளைகளுக்கு இடையே கொடி வீடு போல மலர்க்கொடிகளால் சூழப்பட்ட அழகான மரவீடு.. அந்த மரவீட்டை அடைய இரும்புக் கம்பிகளைக் கொண்டு

உருவாக்கப்பட்ட ஏணி.. ஏணியில் ஏறி மர வீட்டுக்குள் நுழைந்தாள் ஒளிர்விடும் விளக்கு..

விளக்கின் ஒளி வெள்ளத்தில் அவள் கண்ட காட்சி அற்புதமானதாக இருந்தது..

மரத்தின் உச்சியில் கொடி வீடு போல இருந்த அந்த மரவீட்டின் உட்புறம் நகரத்தில் இருக்கும் நவீனமான அபார்ட்மெண்டைப் போல அனைத்து வசதிகளுடனும் இருந்தது..

சின்ன வரவேற்பறை.. அதன் சுவரிலும் தரையிலும் ஒட்டப் பட்டிருந்த டைல்ஸ்.. இரட்டை சோஃபாக்கள்.. பொிதான டிவி.. வரவேற்பறையை ஒட்டியிருந்த படுக்கையறையின் சுவர்களும் தரையும் டைல்ஸில் மிளிர உள்ளே அகலமான கட்டில் நுரை மெத்தை, தலையணைகளுடன் வரவேற்றது.. அறையிலுள்ளே இருந்த அட்டாச்சுடு பாத்ரூம்தான் நந்தினிக்கு மயக்கத்தை வரவைத்தது.. குழாயைத் திறந்தால் கொட்டும் தண்ணீர்.. ஷவர்.. வெஸ்டெர்ன் டைப் டாய்லெட் என்று ஒரு குறையுமில்லாமல் மரத்தின் உச்சியில் மரக்குடிலில் அந்த

பாத்ரூம் அமைக்கப் பட்டிருப்பது எப்படி என்று தலைமுடியைப் பிய்த்துக் கொண்டாள் நந்தினி..

சிறிய டைனிங் டேபிளொன்று இரண்டு நாற்காலிகளுடன் சமையலறையின் ஓரமாக வீற்றிருந்தது.. மர ஷெல்ஃபுகளுடன் இருந்த சமையலறையின் சின்க்கில் இருந்த குழாயிலும் தண்ணீர் கொட்டியது.. ஷெல்ஃபில் பாத்திரங்கள்.. சமையலறையின் மேடையில் நீண்ட டைல்ஸ் பதிக்கப் பட்டிருந்தது.. அதன் மேலே சிறிய கேஸ் ஸ்டவ்..

“ஹௌ இஸ் திஸ்..?” என்றான் ரவிச்சந்திரன்..

“ஹௌ இஸ் திஸ் பாஸிபிள்..?” விழிவிரித்தாள் நந்தினி.. அவளது விழிகளில் மிதந்த ஆச்சரியத்தையும், பிரமிப்பையும் ரசித்தான் ரவிச்சந்திரன்..

அத்தியாயம் 90

ரவிச்சந்திரன் உலகம் முழுவதும் பறந்து பறந்து தொழில் செய்யும் பிரபலமான இளந் தொழிலதிபன்.. வெளிநாட்டில் படித்தவன்.. அவனுக்கு வெளிநாட்டு நண்பர்கள் அதிகம்.. அவனைக் காண வருகிறவர்களுக்கு அவன் கேரளாவைச் சுற்றிக் காண்பிப்பது வழக்கம்.. அப்படி மீன்முட்டி அருவிகளைப் பார்க்க வரும் நண்பர்களுக்காக மலையுச்சியில் காட்டுக்குள்ளே இயற்கையழகுடன் கூடிய நவீனமான மரக்குடிலை நிர்மாணிக்க அவன் விரும்பினான்.. வெளியிலிருந்து பார்த்தால் அது கொடி வீட்டைப் போன்ற மரவீடாக தோற்றமளிக்க வேண்டும்.. உள்ளே வந்து பார்த்தால் ஒற்றைப் படுக்கையறையைக் கொண்ட நவீன வசதிகளையுடைய அபார்ட்மெண்ட் போல இருக்க வேண்டும்..

பணமிருந்தால் அனைத்தும் சாத்தியம் என்பதற்கு நீலி மலையின் உச்சியில் காட்டுக்குள்ளே அகன்ற பெரிய மரக்கிளைகளுக்கு நடுவே அவன் கட்டியிருக்கும் கொடிவீடு போன்ற மரவீடே மிகச்சிறந்த உதாரணமாகும்..

காஷ்மீரத்து படகு வீடுகளை நிர்மாணிக்கும் என்ஜினியரை வரவழைத்து அவனுக்கு வேண்டியதை விவரித்தான்.. அவன் சொன்னவற்றை கிரகித்துக் கொண்ட என்ஜினியர் அவனுடைய எதிர்பார்ப்பிற்கு ஏற்ப அந்த மரக்குடிலை வடிவமைத்துக் கட்டிக் கொடுத்தார்..

மரக் குடிலுக்கான தண்ணீர் நீலிமலையின் மீன்முட்டி அருவிகளில் இருந்து குழாய் பதித்து மரக் குடிலுக்குள் கொண்டு வரப்பட்டிருந்தது.. கழிவு நீர் குழாய்கள் மரத்தோடு ஒட்டி இறங்கி சற்றுத் தள்ளியிருந்த பள்ளத்தாக்கில் இறக்கப்

பட்டிருந்தது.. புதர் மண்டிய பள்ளத்தாக்கு சிமிண்ட் கற்களைக் கொண்டு மூடப் பட்டிருக்க.. பள்ளத்தாக்கின் உள்ளே இறங்கும் கழிவு நீரை மணல் பாங்கான பள்ளத்தாக்கு உறிஞ்சி விடும் என்பதை உணர்ந்துதான் அம்முறை தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தது..

டிவிக்காக பொருத்தப்பட்டிருந்த டிஷ் ஆண்டெனாவை மரத்தின் கிளைகளும் இலைகளும் முற்றிலுமாக மறைத்திருந்தன.. மரக்குடிலை கொடி மலர்கள் சுற்றி வளைத்திருந்ததில் குடிலும் மறைந்திருந்தது.. உற்றுப் பார்த்தாலொலிய அங்கே கொடி வீடு இருப்பது எவருக்கும்

தெரியாது.. கேரளத்தின் செடி கொடிகள் இயற்கையிலேயே வளைவாகப் படர்ந்து கொடி வீடுகளை உருவாக்கி வைத்திருப்பதால் அந்த கொடி வீட்டையும் அது போன்ற ஒரு கொடி வீடு என்று நினைத்து எவரும் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து நின்று கவனித்த தில்லை.. பேட்டரியின் உதவியுடன் விளக்குகளை எரிய வைத்தார்கள்..

சமையல் உபகரணங்களும் அப்படியே.. இப்படி தண்ணீர், டிவி, படுக்கை வசதியுடன் சமைத்துச் சாப்பிட நவீன மரக் குடில் இருந்ததில் ரவிச்சந்திரனின் வெளிநாட்டு நண்பர்கள் மகிழ்ந்து போனார்கள்.. அவர்கள் அனைவரும் ரவிச்சந்திரனைப் போன்ற பணவசதி கொண்ட கோடிஸ்வரர்கள் தான்.. இருப்பினும் கேரளாவுக்கு வந்தால் ரவிச்சந்திரனின் 'யாழ்' ஹோட்டலில் தங்குவதை விட நீலிமலை மரக்குடிலில் தூங்குவதைத்தான் அவர்கள் விரும்புவார்கள்..

நந்தினியிடம் அவற்றையெல்லாம் விவரித்த போது அவள் தன் வழக்கப்படி 'ஆ'வென வாய் பிளந்து கதை கேட்டு விட்டு..

"நீங்க சூப்பர் மேன் பாஸ்.." என்றாள்..

“ஈஸிட்..?” வசீகரமாக புருவங்களை உயர்த்தி அ வளைக்

கலங்கடித்த ரவிச்சந்திரன்..

“இந்த அளவுக்கு அப்ரிஷியேட் பண்றவ ஏன் என்னைக் காதலிக்கக் கூடாது..?” என்று கேட்டு அவள் வாயை மூடி வைத்தான்..

நந்தினியின் முகம் சுணங்கி விட்டது.. பேசாமல் சோஃபாவில் முடங்கியவள் சால்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டாள்.. ஜன்னல்கள் இல்லாத மரவீடு குளிரிலிருந்து அவளை காபந்து பண்ணியிருந்ததில் அவள் ஹாயாக சால்வையின் துணையுடன் முடங்க முடிந்தது..

அவளின் முக வாட்டத்தையே பார்த்துக் கொண்டிருந்த ரவிச்சந்திரனின் புருவங்கள் சுளித்தன.. ஓர் பெருமூச்சடன் அவன் சமையறைக்குப் போய் விட்டான்.. சற்று நேரத்தில் காற்றில் மிதந்து வந்த வாசனை நந்தினியின் நாசியை நெருடியதில்..

“ஐ.. பிரியாணி வாசம் கமகமன்னு வருதே.. எப்படி பாஸ்..?” என்றபடி சமையலறைக்கு ஓடினாள்..

குக்கரைத் திறந்து தட்டுகளில் பரிமாறிக் கொண்டிருந்த ரவிச்சந்திரன் அவளை ஓர் பார்வை பார்த்தான்..

“என்ன பாஸ்..?” அவள் குழம்பினாள்..

“பாஸ், பாஸ்ன்னு சொல்லிக்கிட்டே என்னை உனக்கு சமைத்துப் போட வைச்சுட்டே..” கடினமாக குரலில் சொன்னான் அவன்..

“எனக்கென்ன அப்படியொரு வேண்டுதலா இருக்கு பாஸ்.. இப்பக் கூட நீங்க சமைக்கப் போறீங்கன்னு எனக்குத் தெரியாது..”

“தெரிஞ்சிருந்தா என்ன செய்திருப்ப. .?”

“நான் சமைத்து உங்களுக்கு சர்வ் பண்ணியிருப்பேன்..”

“என்னைப் பழி தீர்க்க செமத்தியான பிளான் ஒண்ணைக் கையில வைச்சிருக்க.. அப்படியெல்லாம் உன்னிடம் மாட்டி விட மாட்டேன்.. நான் படு ஜாக்கிரதையான ஆளு.. இந்தா.. தட்டைப் பிடி.. கொட்டிக்க.. போன ஜென்மத்தில உன்கிட்ட கடன் பட்டிருப்பேனோ என்னவோ..

இந்த ஜென்மத்தில தி கிரேட் ரவிச்சந்திரன் நந்தினிக்குச் சமைத்துப் போடனும்னு விதிச்சிருக்கு..”

அவன் கோபத்துடன் சொன்னானா இல்லை கோபம் போல நடித்தபடிச் சொன்னானா என்று எதைப்பற்றியும் கவலை கொள்ளாமல் அவள் கையில் திணிக்கப்பட்டத் தட்டை மட்டும் உற்றுப் பார்த்தாள் நந்தினி.. அவள் விழிகள் விரிந்தன..

மீன்முட்டி அருவிகளைப் பார்த்தபோதும், கொடி வீடு போன்ற அந்த மரக்குடிலைப் பார்த்த போதும் எப்படியொரு பிரமிப்பு கலந்த பரவசத்தை அடைந்தாளோ அதே பரவசத்தை தட்டிலிருந்த உணவு வகைகளைக் கண்ட போதும் அவள் அடைந்தாள்..

“சிக்கன் பிரியாணி.. சில்லி சிக்கன்.. ஆனியன் தயிர் பச்சடி.. நேந்திரம் சிப்ஸ்.. கோழிக்கோடன் அல்வா.. வாவ்.. எப்படி பாஸ்..?”

“ஆனாலும் நந்தினி.. உன்னைப் போல சாப்பாட்டை ஆராதிக்கிற பெண்ணை நான் பார்த்ததே இல்லை.. திங்கிற அயிட்டம் கிடைச்சுட்டா என்னமா சந்தோஷப் பட்டுப் போற..?”

“கண்ணு வைக்காதீங்க பாஸ்..”

“அதையேன்ம்மா நான் செய்யப் போறேன்..? உன்னைப் பார்த்து ஆச்சரியப்பட்டா நான் ஒரு வழியாகிருவேன்..”

“பட் பாஸ்.. இந்தக் காட்டுக்குள்ள.. மரத்தின் உச்சியிலே இருக்கிற மரக்குடிலில அரிசி, பருப்பு, எண்ணையிருக்கலாம்.. சிக்கன் எப்படி வந்தது..?”

“தானா வரலைம்மா.. கேசவன் குட்டி காலையிலேயே வாங்கிக் கொண்டு வந்து வைச்சுட்டுப் போயிட்டான்..”

“வாழ்க கேசவன் குட்டி..”

“வயித்துக்குத் திங்கத் தந்தா வாழ்த்திருவியே..”

டிவியை உயிர்ப்பித்து விட்டு டைனிங் டேபிளின் முன்னால் இருந்த சேரில் உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்தான் ரவிச்சந்திரன்.. நின்று கொண்டே தட்டில் இருப்பதைக் காலி செய்து கொண்டிருந்த நந்தினியிடம் எதிரேயிருந்த சேரைச் சுட்டிக் காட்டி..

“உட்கார்ந்து கொட்டிக்க.. உன் கையில் இருக்கிற தட்டில இருக்கிற அத்தனையும் உனக்கே உனக்குத்தான்.. நான்

பிடுங்கிச் சாப்பிட்டிற மாட்டேங்கிறதுக்கு கேரண்டி கொடுக்கிறேன்..” என்றான்..

என்னடா.. இவன் நம்மைக் கிண்டல் செய்கிறானே என்று இல்லாமல்..

“இவ்வளவுதானா.. இன்னும் இல்லையா..?” என்று குக்கரை எட்டிப் பார்த்தாள் நந்தினி..

“நீ இருக்கியே..” தலையில் அடித்துக் கொண்ட ரவிச்சந்திரன்..

“உன் புத்தியைத் தொரிஞ்சு இன்னும் கொஞ்சம் மீதம் வைத்திருக்கேன்.. தட்டில இடம் பத்தாது.. இருக்கிறதைக் காலி பண்ணிட்டு மிச்சத்தைக் கொட்டிக்க..” என்றான்..

“அப்பச் சரி..”

திருப்தியாக தலையை ஆட்டிய நந்தினி அவனுக்கு எதிரே கால்களை சுவாதீனமாக நீட்டியபடி உட்கார்ந்து கொண்டாள்.. நீண்ட அவளுடைய கால்கள் ரவிச்சந்திரனின் கால்களுடன் உராய்ந்தன.. அதை உணராமல் டிவியில் ஆழ்ந்தவள்..

“நீலிமலை உச்சிக் காட்டில மரத்தோட உச்சாணிக் கிளையிலே கொடிவீடு.. அதுக்குள்ளே டிவி.. சோஃபா.. பெட்..

அட்டாச்சுடு பாத்ரூம்.. சிக்கன் பிரியாணி.. எக்ஸைட்ரா, எக்ஸைட்ரா.. நம்பவே முடியலைல்ல பாஸ்..” என்று விழி விரித்தாள்..

“உனக்கு நம்ப முடியலைன்னு சொல்லு.. என்னையும் அதில கூட்டுச் சேர்த்துக்காதே.. இந்த வீட்டை உருவாக்கியவனே நான்தான்..” அமர்த்தலாகச் சொன்ன ரவிச்சந்திரனின் கவனமெல்லாம் அவனுடைய கால்களின் மீது உராய்ந்து கொண்டிருக்கும் அவளது கால்களின் வழவழப்பிலேயே இருந்தது..

“யு ஆர் ஸோ கிரேட் பாஸ்..”

தலையைச் சரித்துப் பாராட்டினாள் நந்தினி.. நீலிமலையின் உச்சியில் அடர்ந்த கானகத்துக்குள்ளே இருக்கும் பயம் அகன்று பாதுகாப்பான சூழலில் இருக்கும் நிம்மதி அவளை ஆட்கொண்டிருந்தது.. ஒண்டிக் கொள்ள ஒரு மலைக்குகை கிடைத்தாலே போதும் என்று இருந்தவளுக்கு நவீன வசதிகளுடன் கூடிய மரக்குடிலே கிடைத்து விட்டிருந்ததில் ரவிச்சந்திரனின் மீது பலத்த நன்றியுணர்வும் ஆதர்சமும் ஏற்பட்டிருந்தன.. இதில் கூடுதலாக பசி போக்கும்

பிரியாணி வேறு கிட்டியிருந்ததில் அவளது நன்றியுணர்வுக்கு அளவே இல்லாமல் போய்விட்டது..

அவளை ஆசையுடன் அவன் பார்த்துக் கொண்டிருக்க அவள் அவனை நன்றியுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.. ரவிச்சந்திரனுக்கு வெறுத்து விட்டது.. அவளுடைய நன்றி யாருக்கு வேண்டும்..? அவளுடைய காதலல்லவா அவனுக்கு வேண்டும்..?

"ஏன் இந்த வீட்டிலே ஜன்னல்களே இல்லை.." திடீரென சந்தேகம் கேட்டாள் நந்தினி..

"ஏன்னா.. வெளிச்சம் வெளியே தெரியக் கூடாது.. அதோடு குளிருக்கு ஜன்னல் இல்லாம இருக்கிறதுதான் பெட்டர்.." அவளையே ஆழ்ந்து பார்த்தபடி விளக்கம் சொன்னான் ரவிச்சந்திரன்..

ஊடுறுவும் அவனது பார்வையில் இருந்த தாபத்தையும் வேட்கையையும் அவள் கவனிக்கவில்லை.. அவன் கூறிய விளக்கத்தை தலைசாய்த்து வெகு சிரத்தையாக கேட்டவள்..

"அப்படியா..?" என்று வியந்தாள்..

ரவிச்சந்திரன் பதில் பேசவில்லை.. அவள் வேண்டும் என்று அவனுடைய நாடி நரம்பெங்கும் வியாபித்த தாபத்தைத் தாள மாட்டாதவனாக எழுந்து படுக்கையறைக்குள் சென்றான்..

"ஹாவ்.." கொட்டாவி விட்ட நந்தினியின் கண்களில் தூக்கம் வழிந்து கொண்டிருந்தது..

"ஓகே பாஸ்.. தூக்கம் கண்ணைச் சுழட்டுது.. மலையேறின டயர்டில உடம்பெல்லாம் வலிக்குது.. தேங்க் யு.. ரெஸ்ட் எடுக்க பாறைதான் கிடைக்கப் போகுதுன்னு நினைச்சுக்கிட்டு இருந்தேன்.. கம்ஃபர்ட்டபிளா மெத்தை தலையணையோட கட்டிலே கிடைச்சிருச்சு.." என்றபடி கட்டிலில் விழுந்து கம்பளியைப் போர்த்திக் கொண்டவள்..

"நீங்களும் படுங்க பாஸ்.. என்னைப் போல உங்களுக்கும் உடம்பு வலிக்கும்தானே..? டயர்டா இருக்கும்தானே..?" என்று புரண்டு படுத்து கட்டிலில் அவனுக்கு இடம் கொடுத்தபடி தூங்கிப் போனாள்..

ரவிச்சந்திரன் அசைவற்று நின்று விட்டான்.. அவன் மீது எள்ளளவும் சந்தேகம் கொள்ளாமல் நம்பிக்கையுடன் அவனுக்குக் கட்டிலில் இடம் கொடுத்து அவள் தூக்கி விட்டதில்

அவனுள் வியாபித்திருந்த வேட்கை இருக்கும் இடம் தெரியாமல் ஓடி விட்டது... விகல்பமில்லாத மனமும்.. கள்ளமில்லாத முகமுமாக அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தவளின் நெற்றியில் பட்டும் படாமல் சிறு முத்தம் கொடுத்தான் ரவிச்சந்திரன்.. தூக்கத்தில் சிணுங்கியபடி அவள் புரண்டு படுத்தாள்.. கலைந்திருந்த குழல் காற்றையை ஒதுக்கி விட்டு அவள் முகம் பார்த்தான்..

"நிலவு முகம்.." அவன் வாய் முணுமுணுத்தது..

அவள் மீதான பிரியம் அவனுக்குள் அதிகரித்தது.. விளக்குகளை அணைத்து விட்டு.. படுக்கையறையின் கதவை மூடித் தாழிட்டு விட்டு கட்டிலில் படுத்தான்.. நந்தினியின் கை அவன்மீது விழுந்து கழுத்தைக் கட்டிக் கொண்டது.. மென்மையான அவளது கையை வருடிக் கொடுத்தபடி அவள் பக்கமாக திரும்பிப் படுத்தான் ரவிச்சந்திரன்.. ஆழ்ந்த தூக்கத்திலிருந்த நந்தினியின் மெல்லிய மூச்சுக்காற்று அவனது முகத்தில் பட்டது..

மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸில் பிரயாணித்த போது அவள் விடிய விடியத் தூங்காமல் பயணித்ததை நினைத்துப் பார்த்தான்.. இப்போது எந்த விதமான பயமுமின்றி

நிம்மதியாக உறங்குகிறாள் என்று நினைத்துக் கொண்டவனின் மனம் நெகிழ்ந்தது..

அவளது தூக்கம் கலையாமல் முடிகோதி தட்டிக் கொடுத்தபடி அவனும் உறங்கி விட்டான்.. கனவுகளற்ற ஆழ்ந்த உறக்கம்.. அவனருகில் அவளும், அவளருகில் அவனும் இருக்கிறார்கள் என்ற நிம்மதியுடன் கூடிய உறக்கம்..

காலையில் கண் விழித்த போது அவன்மீது கையையும் காலையும் போட்டு இறுக்கிப் பிணைத்தபடி உறங்கிக் கொண்டிருந்தாள் நந்தினி..

‘இவள் இருக்கிறாளே..’

ரவிச்சந்திரன் ஆசையுடன் அவள் முகம் பார்த்தான்.. பிள்ளை முகம்.. அவளுடைய கன்னத்தைத் தட்டினான்..

“டோன்ட் டிஸ்டர்ப் உத்ரா..” நந்தினி சிணுங்கினாள்..

‘இவ ஹாஸ்டல் ரூமில உத்ராவைக் கட்டிப் பிடிச்சுக்கிட்டுத் தூங்கறதா நினைச்சுக்கிட்டு இருக்கா போல..’ அவனுக்குச் சிரிப்பு வந்தது.. அவளது நெற்றியில் முட்டி..

“ஏய்ய்.. சோம்பேறி.. கண்ணை முழிச்சுப் பாரு.. நீ கை, காலைப் போட்டு அமுக்கிக்கிட்டு இருக்கிறது

உத்ராவையில்லை.. உன்னோட பாஸை..” என்று அவள் காதோரமாக முணுமுணுத்தான்..

புருவங்களைச் சுளித்தபடி விழித்துப் பார்த்தவள் தடாபுடாவென்று புரண்டு படுத்தாள்.. ரவிச்சந்திரன் உரத்துச் சிரித்ததில் கன்னத்தில் போட்டுக் கொண்டு கைகளை தலைக்குமேல் உயர்த்திக் கும்பிட்டாள்..

அத்தியாயம் 91

“**தூ**க்கத்தில கவனிக்கலை பாஸ்..”

அவன் தவறாக நினைத்துவிடக்கூடாது என்ற பயம் அவளது விழிகளில் தெரிந்தது.. அவன் செல்லமாக அவள் கன்னத்தில் தட்டி விட்டு..

“ஒருவழியாய் ரிலிஸ் பண்ணிட்ட.. ஆளைப் பார்த்தா பூவைப் போல மெலிசா இருக்க.. அமுக்கினா.. அப்பப்பா.. என்ன கனம் கனக்கிற..? இந்தப்பக்கம், அந்தப்பக்கம் புரள முடியலை போ.. கரெக்டா ஸ்கெட்ச் போட்டு மடக்கிப் பிடிச்சு வைச்சிருந்த..” என்று கண்சிமிட்டினான்..

நந்தினிக்கு அனைத்தும் மறந்து ‘ஜிவ்’ வென்ற உணர்வு தலைக்கு ஏறியது.. இமைக்க மறந்து அவனையே பார்த்தாள்..

“என்ன..?” அவன் புருவங்களை உயர்த்தி இறக்கி அடுத்த அஸ்திரத்தை எய்து அவளைக் கிறங்கடித்தான்..

அவனை அள்ளி விழுங்குவதைப் போலப் பார்த்தவளின் முன்னால் குனிந்து விரல் சொடுக்கி..

“சொக்கிப் போய் பார்க்கிறதைப் போலவே சீன் போடறியே.. என்ன..? காதல் வந்துருச்சா..?” என்று கேட்டான்.. அவ்வளவுதான்.. நந்தினி மயக்கத்தை மறந்து தலையணையில் முகம் புதைத்து படுக்கையில் வீழ்ந்தாள்..

“மெல்ல.. கட்டிலில் இருந்து உருண்டு கீழே விழுந்துரப் போற..” கரிசனம் போல அவன் கேலி செய்தான்.. தலையணையில் முகம் புதைத்திருந்தவள் விழிகளை மட்டும் உயர்த்தி அவனைப் பார்த்தபோது.. கவிதை யொன்று அவனைப் பார்ப்பதைப் போல உணர்வுக் குவியலில் சிக்கினான் ரவிச்சந்திரன்..

‘இவள் கவிதைதானே..’ அவனது மனம் மயங்கியது..

“என்னைக் காதலிக்கனும்னு நினைக்கிறதுக்குக் கூட நடுங்கி வைக்கிற.. ஏன் நந்தினி..?” ரவிச்சந்திரனின் மனத்தாங்கலில் நந்தினி மலங்க மலங்க விழித்தாள்..

‘ஏன்..?’

அவளுக்கே விடை தெரியவில்லையே.. ரவிச்சந்திரனுடன் அவளுக்கிருக்கும் பிணைப்புக்கு எந்தவொரு பெயரையும் சூட்ட அவளால் முடியவில்லையே.. அவன் செல்லும் இடத்துக்கெல்லாம் அவனைப்பின் தொடர்ந்து ஓட்டி உரசிக்

கொண்டு அவன் வளர்க்கும் செல்லப் பிராணி போலச் செல்ல அவளுக்குப் பிடித்திருந்தது.. அனைத்து பயங்களுக் கும் காப்பாளானாக அவன் மார்பில் ஒன்றி பதுங்கிக் கொள்ளப் பிடித்திருந்தது.. காதல் என்ற ஒன்றை மட்டும் பிடிக்கவில்லையே.. அது ஏன்..?

அவன்மீது அவள் மனதில் காதல் இருக்கிறதா இல்லையா என்றுகூட அவளுக்குத் தெரியவில்லை.. ரவிச்சந்திரனின் கவர்ச்சி நிரம்பிய கம்பீர வடிவழகில் அவள் மயங்கினாள் என்பது உண்மையிலும் உண்மை.. ஆண்களிலும் அழகன்கள் இருப்பார்கள் என்பதை அவனைக் கண்ட பின்னால்தான் அவள் அறிந்தாள்.. சுண்டி விட்டால் ரத்தம் வரும் நிறம் பற்றிப் பாட்டிகள் உதாரணத்துக்கு சொல்வதை அவனிடம்தான் அவள் கண்டாள்.. அப்படியொரு நிறத்தில் இருந்தான் ரவிச்சந்திரன்.. கவர்ச்சி நிரம்பிய முக வசீகரம் வேறு..

அவனைப் போன்ற பேரழகனின் பக்கத்தில் எந்தவொரு உணர்வுகளுக்கும் ஆட்படாமல்.. கன்னி மனம் சலனம் கொள்ளாமல்.. நிச்சிந்தையாக வேலை செய்ய வேண்டும் என்பது கொடுமையிலும் கொடுமை.. பெண் மனதிற்கு ஆசாபாசங்கள் இருக்கக் கூடாதா..?

நந்தினி ரவிச்சந்திரனிடம் மயங்கினாள்.. மயங்குகிறாள்.. இனியும் மயங்குவாள் என்பது அக்மார்க் உண்மை.. அவனை அவள் 'சைட்' எனப்படும் பார்வையிடலை அடிக்கத்தான் செய்தாள்.. அவன் தொட்டால் கிளர்ந்தாள்.. அவனது புருவம் உயர்த்தும் மேனரிசத்தில் தன்னைத் தொலைத்தாள்.. அவனுடைய ஓர் கள்ளச்சிரிப்பில் தொலைந்து காணாமல் போனாள்..

இது அத்தனையும் அவனது கவர்ச்சி நிரம்பிய அழகினால் மட்டும் உண்டாகவில்லை என்பதை அவள் அறிந்திருந்தாள்.. செஞ்சிக் கோட்டையில் அறிமுகமான டூப்ளிகேட் ரவிச்சந்திரன் கூட அழகானவன்தான்.. நந்தினியும் 'சைட்' அடித்தாள்தான்.. அதற்கு மேல் அவனிடம் அதீதமான ஈர்ப்பொன்றும் ஏற்பட்டு விடவில்லையே.. அவனிடம் பழகிய சிலமணி நேரங்களிலேயே அவன் ஒரு 'ஜொள் மன்னன்' என்பதை நந்தினி கணக்கிட்டு விட்டாளே..

ரவிச்சந்திரன் ஜொள் மன்னனில்லை.. கடினமான கற்பாறை முகமும், கண்டிப்பைக் கக்கும் கண்களும், நிமிர்ந்த நடையுமாக தோரணையுடன் இருப்பவன்.. அவனது அதீத அழகில் பெண்கள்தான் மயங்கித் தடுமாறினார்கள்.. அதைத் துல்லியமாக உணர்ந்தும் அவன் பெண்களிடம்

தடுமாறவில்லை.. வழிசலாய் வழிந்து அதில் க ப்பல் விட்ட ரோஸியிடம் கண்டிப்பும் கறாருமாகப் பேசி அவளைத் தள்ளி நிறுத்தினான்.. கேரளத்தின் பேரழகியான அஜந்தா அவனைப் போலவே ராஜ பாரம்பர்யத்தில் பிறந்து 'அத்தைமகள்' என்ற உறவு முறையுடன் அவன் கண்ணெதிரே வளைய வந்த போதும் அலட்சியப் பார்வையுடன் ஒதுங்குகிறான்..

'என்னிடம் மட்டும் என்னத்தைக் கண்டான்..?'

கட்டிலில் குப்புறப்படுத்துத் தலையனையில் இரு கைகளையும் ஊன்றி உள்ளங்கைகளில் முகத்தைப் பதித்து கால்களை ஆட்டியபடி ஆழ்ந்த சிந்தனையிலிருந்த நந்தினி அறைக்குள் வந்த ரவிச்சந்திரனின் பார்வையைக் கண்டதும் காலாட்டுவதை நிறுத்தி விட்டு புரண்டு படுத்து உருண்டு கட்டிலின் கால்களைத் தொங்க விட்டு எழுந்து உட்கார்ந்தாள்..

மெத்தையை அவள் படுத்திய பாட்டில் அவன் தலையில் அடித்துக் கொண்டான்.. நகத்தைக் கடித்தபடி அரைப் பார்வையாய் அவள் பார்த்த பார்வையில் அவனது கண்கள் மின்னின.. இப்போதெல்லாம் அவளைக் கண்டவுடன் அவனது கண்கள் மின்ன ஆரம்பித்து விடுகின்றன என்பதை அவள் கண்டு கொண்டிருந்தாள்..

‘என்ன கழுதைக்கு இப்படிப் பிய்த்துத் தின்னுவதைப் போலப் பார்த்து வைக்கிறான்..? நானென்ன இவனைச் சுண்டியிழுக்கற பேரழகியாவா இருக்கேன்..?’

நந்தினி அங்கிருந்த ஆளுயுயற கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டாள்.. தூங்கி எழுந்த முகமும் கசங்கிய உடையுமாக இருந்தவளிடம் என்ன அழகைக் கண்டிருப்பான் என்று தனக்குள் கேட்டுக் கொண்டாள்..

‘இவனுக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது..? அஜந்தா மாதிரியான பேரழகிக்கு மாமன் மகனாப் பிறந்தவன் உலக அழகியையே ஏறெடுத்தும் பார்க்க மாட்டான்.. இவன் என்னடான்னா என்னிடம் ‘ஐ லவ் யு’ன்னு சொல்றான்.. ஜோக்கடிக்கிறானா..?’

நந்தினியால் ரவிச்சந்திரன் காதல் சொன்னதை நம்பவே முடியவில்லை.. அவன் அவளிடம் விளையாடு கிறான் என்றே அவள் நினைத்தாள்.. அவளுடைய உணர்வுகளுடன் விளையாடுகிறான்.. நம்ப முடியாத ஒன்றை நம்ப வைக்க முனைகிறான்.. மற்றவர்களின் முன்னால் ஒரு முதலாளியாக கண்டிப்பும் கறாருமாக நடந்து கொள்பவன் தனிமையில் மட்டும் அவளிடம் உருகி வழிவதை அவளால் ஏற்றுக் கொள்ள

முடியவில்லை.. கனிவான பேச்சுக்கும் பார்வைக்குமே கணக்குப் பார்ப்பவன் ஊரறிய அவளை மணம் செய்து கொள்வானா என்ன..? உலகம் முழுவதும் பிரபலமான ராஜ பாரம்பர்ய கோடிஸ்வர இளந்தொழிலதிப அழகன் நந்தினி போன்ற மிகச் சாதாரணத் தோற்றம் கொண்ட பெண்ணைக் காதலித்து மணம் செய்து கொள்வானா என்ன..?

நந்தினி முட்டாள்தான்.. ரவிச்சந்திரனே சொல்வதைப்போல 'மக்கு'தான்.. 'தத்தி'தான்.. அதற்காக ரவிச்சந்திரனின் 'ஐ லவ் யு' ஏமாற்று வித்தையை நம்பி ஏமாற அவள் தயாராக இல்லை..

அப்போது அவனை ஏமாற்றுக்காரன் என்று அவளால் நினைக்க முடியவில்லை.. ஏமாற்றுக்காரன்தானே ஏமாற்றுவான் என்ற கேள்விக்கு அவளிடம் பதிலில்லை.. மிட்டாயைக் காட்டிக் குழந்தையை ஏமாற்றுவதைப் போல 'ஐ லவ் யு' சொல்லி அவளை அவன் ஏமாற்ற நினைக்கிறான் என்று மட்டும் உறுதியாக நினைத்தாள்..

அவனது காதலையே சந்தேகக் கேஸில் வைத்திருப்பவளால் அவன் மீது அவளுக்கிருப்பது என்ன வகையான உணர்வு என்று தீர்மானமாக அறுதியிட்டுக் கூற

முடியவில்லை.. அவனை அவளுக்குப் பிடிக்கும்.. மிக, மிக, மிக, அதிகமாக பிடிக்கும்.. அவனைப் போன்ற கவர்ச்சியும், கம்பீரமும் ஒன்று சேர இணைந்த ஆண்மகனை அவள் சந்தித்ததில்லை.. அவனைச் சந்தித்தபோது இப்படியாகப் பட்ட அழகு கொண்ட ஆண்மகன்கள் கூட இவ்வுலகில் இருக்கிறார்களா என்று மலைத்தாள்.. டூப்ளிகேட் ரவிச்சந்திரனும் அழகன்தான் என்றாலும் அவன் ஜொள் மன்னன்.. ஒரிஜினல் ரவிச்சந்திரன் அப்படியில்லையே.. இவன்தான் பெண்களை ஜொள் விட வைத்தான்..

ரவிச்சந்திரனின் அருகாமையை நந்தினி வெகுவாக விரும்பினாள் என்பதுதான் உண்மை.. உண்மையைத் தவிர வேறில்லை.. ஆனாலும் என்ன செய்ய..? அந்த விருப்பம் காதலினால் உண்டாவதா என்று அவளுக்குச் சொல்லத் தெரியவில்லையே.. அவன் காதல் சொல்வதையும் அவள் மனம் நம்ப மறுக்கிறதே..

“என்னையே பார்த்துக்கிட்டு இருக்கியே.. என்ன..? என்னிடம் மயங்கிட்டியா..?”

ரவிச்சந்திரனின் பார்வை அவனிடம் அவள் மயங்கியிருப்பதை அறிந்து வைத்திருப்பதை அறிவித்தது..

‘அதைத் தெரிஞ்சு வைத்திருக்கிறதினாலேதானேடா ‘ஐ லவ் யு’ சொல்லி அலைக்கழிக்கிற..?’ அவள் உதட்டைச் சுழித்தாள்..

“மெல்ல.. லிப்ஸ் கோணிக்கப் போகுது..” அவளது உதட்டுத் திருப்பலை அவன் கேலி செய்தான்..

“கோணினா கோணிக்கட்டும்.. என்னோட லிப்ஸ் தானே..?” நந்தினி இதற்கும் உதட்டைக் கோணினாள்..

“என்றைக்குத்தான் சொன்னதைக் கேட்டிருக்க.. சரி.. சரி.. வா..” என்றான் அவன்..

“எங்கே..?”

சந்தேகமாக அவள் கேட்ட தினுசில் முறைத்துப் பார்த்தான்.. “உன்னுடன் ஜல்ஸாப் பண்றதா இருந்தா இந்த பெட்ரூமிலதான் பண்ணனும்.. அதுக்கு உன்னை வெளியே கூப்பிடத் தேவையில்ல.. நைட் முழுக்க ஒரே பெட்டிலதான படுத்திருந்தோம்..? என் விரல் நகமாவது உன் மேல பட்டுச்சா.. நீதான் என்மேல கையைக் காலைத் தூக்கிப் போட்டு எழுந்திரிக்க விடாம அமுக்கியிருந்த..”

அவன் பேசிய பேச்சில் அவள் முகத்தில் குங்குமத்தை அள்ளித் தெளித்ததைப் போல வெட்கப் பூச்சு வந்து விட்டது..

“ச்சும்மா சொல்லிக் காட்ட வேணாம் பாஸ்.. வேணும்ன்னே யாராச்சும் கையைக் காலைப் போடுவாங்களா..?” என்று சிணுங்கினாள்..

“நான் யாரையாச்சும் சொல்லலை.. நந்தினிங்கிற குட்டிப் பிசாசைத்தான் சொன்னேன்..” கண்களில் சிரிப்புடன் சொன்னான் ரவிச்சந்திரன்..

“நான் குட்டிப்பிசாசா..?” இடுப்பில் கைவைத்து நியாயம் கேட்ட நந்தினியின் தோளைத் தொட்டுத் திருப்பிக் கண்ணாடியில் தெரிந்த அவளுடைய உருவத்தைக் காண்பித்தான்..

“பார்.. முழுக்க முழுக்க சந்திரமுகியாக மாறியிருக்கும் உன் உருவத்தைப் பார்..” அவனால் சிரிப்பை அடக்க முடியவில்லை..

“ஹா.. ஹா..” என்று சிரித்து விட்டான்..

தலைமுடி பிய்ந்து தொங்க தலைவிரி கோலமாக நின்ற நந்தினி அழுகையும், ஆத்திரமுமாக அவனை முறைத்துப் பார்த்து..

“வெவ்வெவ்வே..” என்று அழகு காட்டினாள்..

“சும்மாவே உன்னைப் பார்த்தாக் கோணங்கித்தனமா இருந்து வைக்கும்.. இதில அப்பப்பா அழகு காட்டறேன் பேர்வழின்னு அஷ்டகோணலாய் முகத்தை மாத்தி பயமுறுத்தற.. சந்திரமுகின்னு சொன்னா மட்டும் கோபம் வந்துருது..”

“வேணாம் பாஸ்.. நிக் நேம் வைக்காதீங்க..”

“அப்படித்தான் வைப்பேன்.. நீ மட்டும் எனக்கு நேரத்திற்கொரு நிக்நேம் வைக்கிற..? இப்ப என்ன பேரை வைச்சிருக்க..?”

‘ஆள் மயக்கி..!’ சொல்ல வந்ததைச் சொல்ல முடியாமல்.. “கம்மாண்டர்..” என்றாள்..

“அது அப்போ.. நான் கேட்கிறது இப்போ..”

“அப்பவும் இப்பவும் எப்பவும் நான் ஒரே மாதிரிதான் இருப்பேன்.. நேரத்திற்கு ஏத்த மாதரி மாற மாட்டேன்..”

“அடேங்கப்பா..! அப்படியா..?”

“அப்படித்தான்..”

“நம்பிட்டேன்..”

“நீங்க நம்பினாலும் நம்பலைன்னாலும் ஐ டோன்ட் கேர்..”

“நீ எதைத்தான் கேர் பண்ணியிருக்கிற.. வந்து தொலை..”

‘எங்கே கூப்பிடறான்..?’

சந்தேகத்தை சர்வ ஜாக்கிரதையாக மனதில் போட்டு பூட்டிக் கொண்டு விழிகளிலோ முகத்திலோ அதை வெளிப்படுத்தி விடாமலிருக்க பகீரத பிரயத்தனங்களை மேற்கொண்டபடி அவன் பின்னால் போனாள்.. அவனோ அவளது திருதிருத்த விழிகளை பார்வையிட்டபடி..

“உன் முழியே சரியில்லையே.. மனசுக்குள்ளே எதையோ நினைக்கிற வெளியில அதை மறைக்கிற..” என்று வெகு இலகுவான கண்டு பிடித்து விட்டான்..

‘இவன்தான் மனசையே லேசர் பார்வையாலே சல்லடை போட்டு சலிக்கிற ஆளாச்சே..’ நந்தினி உர்ரென்று முறைத்தாள்..

“என்ன நினைத்த..? சொல்லிரு..” மிரட்டினான் ரவிச்சந்திரன்..

“உங்களைத்தான் நினைச்சுக்கிட்டு இருந்தேன்.. போதுமா..?” நந்தினி வெடுவெடுத்ததில் நிமிர்ந்து ஓர் பார்வை பார்த்தான்.. நந்தினியின் உடலில் மின்சாரம் இறங்கியதைப் போல இருந்தது.. அவன் பார்த்த பார்வைக்குத்தான் எவ்வளவு சக்தி..! நந்தினியால் அவன் பார்வையை எதிர்கொள் ள முடியவில்லை.. துளைக்கும் பார்வையில் தெரிந்த குற்றச்சாட்டிற்குப் பதில் சொல்ல முடியாமல் தலையைக் கவிழ்ந்தாள்..

“என்னைத்தான் நினைச்சுக்கிட்டு இருக்கேன்னு எனக்குத் தெரியும்.. எப்படி நினைச்சுக்கிட்டு இருக்க..? அதுதான் தெரிய மாட்டேங்குது.. உனக்கு நான் யார் நந்தினி..?”

ஊடுறுவும் பார்வையும் நிதானமாக அவன் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் நந்தினி திணறிப் போனாள்..

அவளுக்கு அவன் யார்..? தோழனா..? பாதுகாவலனா..? முதலாளியா..? இல்லை.. அவன் எதிர்பார்க்கும் வார்த்தையான காதலனா..?

காதலன் என்ற வார்த்தையைத் தவிர்த்து மற்ற அனைத்துமாக அவன் இருப்பதை மனமார உணர்ந்தாள் நந்தினி.. காதலன் என்ற உறவை மட்டும் அவள் மனம் ஏற்றுக் கொள்ள மறுத்தது.. தான் ஏமாற்றப்பட்டு விடுவோமோ என்று அஞ்சி நடுங்கியது..

"டீ சாப்பிடறியா..?"

கேஸ் ஸ்டவ்வில் கூடாகிக் கொண்டிருந்த கெட்டிலை எடுத்தான்.. மறுக்காமல் தலையாட்டியவளின் உச்சந்தையில் உள்ளங்கையைக் கவிழ்த்துப் பரப்பி விளையாட்டாய் ஓர் ஆட்டு ஆட்டினான்..

"அதானே.. நீயாவது.. வேண்டாம்ன்னு சொல்கிறதாவது.." என்று சிரித்தான்..

நந்தினி அவனையே பார்த்தாள்.. அவனுக்கு அனைத்தும் இலகுவாக இருந்ததில் உள்ளம் நெகிழ்ந்தாள்.. அவன் மட்டும் அவளிடம் காதலைப் பற்றி மட்டும் பேசிக் கொண்டிருந்திருந்தால் அவளுக்கு சங்கடமாக இருந்திருக்கும்..

அவன் அதைச் செய்யவில்லை என்பதில் அவள் மனம் ஆறுதல் கொண்டது..

அத்தியாயம் 92

ரவிச்சந்திரன் இரண்டு கப்புகளில் டீ ஆவி பறக்கும் பாலில்லாத 'டீ'யை ஊற்றினான்..

"வர 'டீ'யா..?" என்றாள் நந்தினி..

"வரட்டியா..?" என்றான் ரவிச்சந்திரன்..

கிண்டல் செய்கிறானா என்று உற்றுப் பார்த்தாள்.. அவன் முகம் சாதாரணமாக இருந்ததில் உண்மையில் அவனுக்கு 'வரட்டி' என்றால் என்னவென்று தெரிய வில்லை என்று தெள்ளத் தெளிவாக புரிந்தது..

'அதுசரி.. ஹைடெக் கோடிஸ்வரனுக்கு மாட்டுச் சாணத்தில் செய்யப் படும் வரட்டியைப் பற்றி என்ன தெரியும்..?' தனக்குத் தானே குட்டு வைத்துக் கொண்டவள்..

"வரட்டி இல்லே சாரே.. வர 'டீ'" என்றாள்..

"அப்படின்னா..?"

"பால் கலக்காத காஃபியை 'வரக் காஃபி'ன்னு சொல்லுவோம்.. பால் கலக்காத 'டீ' 'வர டீ'.. தட்ஸ் ஆல்.."

“நாங்க அதை ‘பிளாக் காஃபி அண்ட் பிளாக் டீ’ன்னு சொல்லுவோம்..”

“நீங்கள்ளாம் இண்டர்நேஷனல் மில்லினியர் பாஸ்.. நான் அப்படியா..? பணக்காரின்னாலும் பட்டிக்கட்டுப் பணக்காரி.. இந்த ஹைடெக் வெர்ட்ஸெல்லாம் சுட்டுப் போட்டாலும் வராது..”

உள்ளது உள்ளபடி சொல்லிக் கொண்டிருந்தவளின் காதைப் பிடித்துத் திருகிய ரவிச்சந்திரன்..

“இதை ஒரு பெருமைன்னு சொல்லிக்கிட்டு இருக்க பாரு.. அங்கே நிற்கிற நீ..” என்றான்.. அவள் சிரித்தாள்..

ஒப்பனையற்ற அவளது பேச்சும், சிரிப்பும் எப்போதும் போல அப்போதும் அவனை வசீகரித்தது.. அவளிடம் ‘டீ’ கப்பை நீட்டியவன்..

“வாசலுக்குப் போய் ‘டீ’ சாப்பிடலாமா..?” என்று கேட்டான்.. நந்தினிக்கும் ஆசையாகத்தான் இருந்தது.. ஜன்னல்கள் இல்லாத மரவீடு அழகாக இருந்தாலும் இறுக்கமான ஓர் உணர்வைத் தந்து கொண்டே இருப்பதைப் போல உணர்ந்தாள்..

“போகலாம்தான்.. பட்.. இங்கே வாசல்ன்னு ஒண்ணு இருக்கா..? இதுவே மர உச்சி.. அங்கே எங்கே உட்கார்ந்து டீ சாப்பிடறதாம்..? படியா இருக்கு..?” என்று நாடியில் ஒற்றை விரலால் தட்டியபடி கேள்வி கேட்டாள். .

“படியில்லைதான்.. மரக்கிளை இருக்கே...” ரவிச்சந்திரன் வழி சொன்னான்..

“பட் பாஸ்.. மரக்கிளையில் குரங்குதான் உட்காரும்..” என்றாள் நந்தினி..

“அதனால்தான் உன்னை அங்கே கூப்பிட்டேன்..” சிரிக்காமல் பதில் சொன்னான் ரவிச்சந்திரன்..

‘என்னை குரங்குங்கிறான்..’

நந்தினிக்கு கோபம் கோபமாக வந்தது.. ரவிச்சந்திரன் கதவைத் திறந்ததும் அவளது கோபம் பறந்து விட்டது. . உச்சி மரத்திலிருந்து தெரிந்த நீலிமலைக் காட்டின் அழகு அவளைக் கவர்ந்து இழுத்தது.. ரவிச்சந்திரனை முந்திக் கொண்டு வெளியில் தாவி, அங்கிருந்த மரக் கிளையில் வாகாக சாய்ந்து உட்கார்ந்து கொண்டாள்..

“குரங்குன்னு சொன்னா மட்டும் கோபம் வருது..” சிரித்துக் கொண்டே வெளியில் வந்து அவள் அமர்ந்திருந்த மரக்கிளைக்கு எதிர்கிளையில் உட்கார்ந்து கொண்ட ரவிச்சந்திரன் அவளை உற்றுப் பார்த்து வைத்தான்..

‘இவன் வேற.. சான்ஸ் கிடைச்சாப் போதும்.. உத்து உத்துப் பார்த்து வைப்பான்..’ நந்தினியின் முகம் வெட்கத்தில் சிவந்தது..

“அச்சு அசல் குரங்கேதான்..” ரவிச்சந்திரன் சான்றிதல் வழங்கியதில்..

‘என்னைக் குரங்குன்னு நினைச்சுப் பார்த்திருக்கான்..’ என்று நந்தினியின் முகம் கோபத்தில் சிவந்தது..

உதட்டைப் பிதுக்கி உன் பேச்சு காய் என்பதைப் போல சேஷ்டை காட்டி விட்டுச் சுற்றுப்புற அழகில் அமிழ்ந்தாள்..

மர உச்சியிலிருந்து பார்த்தபோது மீன்முட்டி அருவிகள் வெள்ளிப்பட்டைகள் போல வெகு அழகாகத் தெரிந்தன.. சிலுசிலு வென வீசிய பனிக்காற்றும் இலைகளை ஊடுறுவி உடலில் படிந்த இதமான வெயிலுமாக அந்த தட்பவெப்பம் அருமையானதாக இருந்தது.. இரவில் அச்சுறுத்திய நீலிமலையும், காடும் பகலில் அற்புதமான இயற்கையழகோடு

இருந்ததில் நந்தினி தன்னை மறந்தவளாய் மலையின் அழகை ரசித்துக் கொண்டிருந்தாள்..

இயற்கையை விடச் சிறந்த அழகு வேறேதுமில்லை என்று அவள் மனம் நிறைந்தது.. வீட்டிற்குத் திரும்பாமல் அங்கேயே இருந்துவிட வேண்டும் என்று அவள் மனம் ஆசை கொண்டது..

'அதெப்படி முடியும்.. இப்பக் கிளம்பியாகனுமே..' என்ற நினைவுடன்..

"வடுவாஞ்சலுக்குப் போக எவ்வளவு நேரமாகும்.." என்று கேட்டாள்..

"நீ நடக்கிற வேகத்தைப் பொறுத்து இருக்கு அது.." டீயை உறிஞ்சியபடி சொன்னான் ரவிச்சந்திரன்...

"உடனே கிளம்பனுமா.. இல்லை நேரமாகுமா..?"

"எங்கே..?"

"வடுவாஞ்சலுக்குத்தான்.."

"இப்பக் கிளம்ப முடியாது.."

ரவிச்சந்திரன் சுவாதீனமாக சாய்ந்து கால்களை நீட்டியபடிச் சொன்னான்.. ஏற்கனெவே எதிரும் புதிருமாக

அமர்ந்திருந்தவர்களின் முட்டிகள் உரசிக் கொண்டிருந்தன.. இதில் அவன் காலை வேறு நீட்டியதில் உணர்வுகளில் தீப்பற்றிக் கொண்டது.. சுகமானதொரு அவஸ்தையில் அவர் சிக்கினாள்.. சொல்லவும் முடியாத மெல்லவும் முடியாத புதியதொர் அவஸ்தை..!

'நகர்ந்துதான் உட்காரேண்டா.. விட்டா என் மடியிலே உட்கார்ந்திருவ போலயிருக்கே..'

லேசாக அசைந்தாலும் அவன் கால்களுக்குள் அவளது கால்கள் சிக்கி விடும் நிலைமை.. நந்தினி அசைவின்றி அமர்ந்திருந்தாள்..

'இதில இப்பக் கிளம்ப முடியாதுன்னு வேற குண்டைத்தூக்கிப் போடறானே.. ஏனாம்..?' அவன் முகத்தைப் பார்த்தாள்..

"இப்பத்தான் கேசவன் ஃபோன் பண்ணினான்.. நீலிமலைக் காட்டுக்குள்ளே யானைக் கூட்டம் கிளம்பியிருக்காம்.." அவன் ஏதோ கதை சொல்ல ஆரம்பித்தான்..

அதைக் கதையென்னும் தள்ள முடியாமல் உண்மையென்றும் நம்ப முடியாமல் திருதிருத்தாள் நந்தினி..

“இப்படி முழிக்காதேன்னு சொல்லியிருக்கேன்..”

“பாஸ்.. காடுன்னு இருந்தா யானைகள் இருக்கத்தான் செய்யும்..”

“யானை மட்டுமில்லைம்மா.. சிங்கம், புலி, கரடின்னு எல்லா அனிமல்ஸும் இருக்கு..”

‘இப்படி பயமுறுத்தறானே..’

நந்தினி கலவரத்துடன் பாதுகாப்பாக கிளையில் ஒன்றிக் கொண்டாள்.. இப்போது கால்கள் உராய அவன் அமர்ந்திருந்தது அவளுக்கு இம்சையை உண்டு பண்ணவில்லை.. மாறாக பெருத்த ஆறுதலாக இருந்தது.. நீட்டிய அவன் கால்களை இறுகப் பற்றிக் கொண்டு என்னை விட்டு நகர்ந்து விடாதே என்று கூவ வேண்டும் போல தோன்றியதை மறைத்துக் கொண்டு சிரிக்க முயன்றாள்..

“அப்படியே இஞ்சி தின்ற குரங்கைப் போலவே இருக்கு..” என்று அவளது சிரிப்பை அவன் வர்ணனை செய்து வைத்தான்..

“இப்பேற்பட்ட காட்டைத் தள்ளியிருந்து ரசிக்கனும் பாஸ்.. அங்கேயே மரத்து மேலே வீடு கட்டி உட்கார்ந்து ரசிக்கக் கூடாது..”

“நீதான் இப்படிச் சொல்ற.. இங்கே வந்து தங்கியிருந்த ஃபாரினர்ஸெல்லாம் ‘ஸோ ஸ்வீட்..’டுன்னு சொல்லிக்கிட்டு மாதக்கணக்கில நகர மாட்டாங்க..”

“அவங்களைக் கூப்பிடுங்களேன்..”

“எதுக்கு..? யானைக் கூட்டததை விரட்டவா..?”

“யானைக் கூட்டத்தைச் சொல்லியே என்னை மிரட்டாதீங்க பாஸ்.. ஃபாரினர்ஸுக்குத்தான் அட்வென்சர்ன்னு ரொம்பப் பிடிக்கும்..”

“எனக்கும் பிடிக்கும்..”

“எனக்குப் பிடிக்காதே.. அட்வென்சர்க்கும் எனக்கும் ரொம்பத் தூரம் பாஸ்..”

“வீட்டை விட்டு ஓடி வந்திருக்க.. இது அட்வென்ச்சர் இல்லையா..?”

“இல்லை பாஸ்..”

“அட்வென்ச்சர் பிடிக்காதவ யானைக் கூட்டத்தை எப்படி சமாளிப்ப..?”

“நான் ஏன் சமாளிக்கனும்..?”

“உன் கூட வர்ற நான்தான் சமாளிக்கனும்ங்கறியா..? கெட்டிக்காரிதான்.. உனக்கு வேலை போட்டுக் கொடுத்த கொடுமைக்கு யானைக் கூட்டத்தோட மல்லுக்கு நிற்கனும்ங்கிற..?”

“பாஸ்.. நான் அப்படியா சொன்னேன்..?”

“நீ எப்படியோ சொல்லிக்க.. யானைக் கூட்டம் ஒண்ணு சேர்ந்தா நாம சட்னிதான்.. ஸோ..”

“ஸோ..?”

“இன்னைக்கும், நாளைக்கும் இங்கேதான் இருந்தாகனும்.. நாளை மறுநாள்தான் கிளம்ப முடியும்..”

“அப்ப மட்டும் யானைக் கூட்ட ம் வராதா..?”

“வராதுன்னு நம்புவோம்.. நம்பிக்கைத்தானே வாழ்க்கை..?”

‘ஆக.. இப்போதைக்கு இவன் இந்த இடத்தை விட்டு நகர மாட்டான்..’

நந்தினிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.. பேசாமல் மரத்தின் உச்சியிலிருந்து குதித்து ஓடி விடலாமா என்று எட்டிப் பார்த்தாள்..

“எழும்பு சுக்கு நூறா நொறுங்கிரும்..” கால்களை ஆட்டியபடி சொன்னான் ரவிச்சந்திரன்..

‘அம்மாடி..’ நந்தினியை திகில் பிடித்துக் கொண்டது..

“ஏன், ஏன், ஏன் அப்படிச் சொன்னீங்க..?” நடுக்கத்தை மறைக்க வலது கையை குவித்து உயர்த்தி சண்டைக்குக் கிளம்பினாள்..

“மரத்தில இருந்து குதிக்கலாமான்னுதானே பிளான் பண்ணின..?” இடுங்கிய பார்வையுடன் கேட்டான் அவன்..

“இல்லையே.. இல்லவே இல்லை..”

அதே எங்க டாடி ஷெல்ஃபில் இல்லை என்ற ரீதியில் மறுத்தாள் நந்தினி.. அவளது தலையைப் பிடித்து ஆட்டிய ரவிச்சந்திரன்..

“பொய் சொல்றதுக்கெல்லாம் ஒரு மூஞ்சி வேணும்.. உன்கிட்டதான் அது இல்லையே.. வீணா ஏன் டிராமா போடற..?” என்று புருவங்களை உயர்த்தினான்..

அதில் மயங்கிப் போனவளுக்கு மரத்தை விட்டுக் குதிக்கும் எண்ணமே மறந்து போய் விட்டது..

அங்கிருந்து தப்ப முடியாது என்று ஆன பின்பு எதற்காக மூக்கை உறிஞ்சிக் கொண்டு சோகம் காக்க வேண்டும் என்று கன்னத்தைக் கைகளால் தாங்கியபடி பனி மூட்டத்தின் இடையே தெரியும் மரங்களையும் செடி கொடிகளையும் வேடிக்கை பார்க்க ஆரம்பித்து விட்டாள்.. அதில் ரவிச்சந்திரனின் முகத்தில் மென்மை படர்ந்தது..

'மரத்தை விட்டுக் குதிச்சாப் போதுமா..? காட்டுக்குள்ளே தனியா எப்படி ஓடறது..? இவன் கூட வந்தப்பவே தடுக்கித் தடுக்கி விழுந்தேன்.. வழி வேற தெரியாது.. இவனே யானைக் கூட்டத்தை நினைச்சுப் பயப்படறப்ப நான் எம்மாத்திரம்..?' பலத்த சிந்தனையிலிருந்தவளை ரவிச்சந்திரன் தட்டியெழுப்பினான்..

"யோசிக்கிறதைப் போலப் பாவ்லா பண்ணி வேலையிலிருந்து எஸ்கேப் ஆகிரலாம்ன்னு பார்க்கிறயா..?"

"வேலையா..?"

"வேலைதான்.. நைட்டில நான் சமைச்சது ஐயோ பாவம் பார்த்து.. புதுசா வந்திருக்கிற.. இடம் பழக்கப் படலை.. பசியில

டயர்டா இருக்கன்னு பிரியாணி, சிக்கன்னு சமைச்சுக் கொட்டினேன்.. இப்ப அது முடியாது..”

“ஹைய்யோ பாஸ்.. இப்படிச் சொன்னா எப்படி..? இன்னைக்கும் நாளைக்கும் பட்டினி போட்டிருவீங்களா..?” நந்தினியின் விழிகளில் வழிந்த வீதியில் தலையில் அடித்துக் கொண்டான் ரவிச்சந்திரன்..

“நீ இருக்கியே..”

“இப்ப இருக்கேன் பாஸ்.. இன்றைக்கும் நாளைக்கும் பசியைத் தாங்கி இருப்பேனா..?”

“நான் ராஜபரம்பரையில பிறந்தவன்.. என்னை நம்பியிருக்கிறவங்கள பட்டினிப் போட்டுப் பழக்க மில்லை..”

“அம்மாடி.. பிழைச்சேன்.. எங்கே காட்டில இருக்கிற மரத்தில காய், கனிய தேட வைச்சிருவீங்களோன்னு பயந்துட்டேன்..”

“ஏன் பயப்பட மாட்ட..? சாப்பிட மட்டும் தெரியுது.. உடம்பை வளைச்சு ஒருவேலை செய்யறதில்லை.. லிஸன்..”

“என்ன பாஸ் பாடம் நடத்த ஆரம்பிச்சுட்டிங்கள..?”

“பாடம்தான்.. சமையல் பாடம்.. கிச்சனுக்கு வா..”

“எதுக்கு..?”

“நிச்சயமா கொட்டிக்கிறதுக்காக இல்லை..”

“அதிலதான் தெளிவா இருக்கீங்களே..”

“சமைக்கிறதுக்கு ஹெல்ப் பண்ணு.. அப்பத்தான் உன்னால கொட்டிக்க முடியும்..”

ரவிச்சந்திரன் சொடக்குப் போட்டு அழைத்து விட்டு மரக்குடிலுக்குள் நுழைந்தான்.. பின் தொடராவிட்டால் அவன் சாப்பாட்டில் கை வைத்து விடுவானே என்ற பயத்துடன் ‘கப்சிப்’ எனக் கையைக் கட்டிக் கொண்டு நந்தினியும் பின் தொடர்ந்தாள்.. இதை நறுக்கு.. அதைத் தோல உரித்துத் தா.. இதை எடு.. அதைக் கொடு என்று ரவிச்சந்திரன் அவளை ஓய்ந்து ஒரு இடத்தில் உட்கார விடாமல் வேலையேவிக் கொண்டிருந்தான்..

“எங்கம்மாகூட இப்படி டிரில் வாங்கினதில்லை பாஸ்..”

மூக்கால் அழுது கொண்டே அவன் சொன்ன வேலைகளை செய்து முடித்து விட்டு நந்தினி கேட்டாளே ஒரு கேள்வி..

“என்ன சமைச்சிருக்கோம் பாஸ்..?”

ரவிச்சந்திரன் இமைக்காமல் ஓர் பார்வை பார்த்து விட்டு.. "ம்ஹூம்.." என்றபடி முகத்தை ஒரு தினுசில் வைத்துக் கொண்டான்.. 'தேறாத கேஸ்ன்னு முடிவு கட்டிட்டானோ..'

"இவ்வளவு நேரமும் பக்கத்தில்தான நின்ன..? என்ன சமைக்கிறோம்ன்னு தெரியாதா..?"

"எங்கே பாஸ்..? நீங்கதான் ஒரு செகண்ட் கூட நான் ரெஸ்ட் எடுத்துரக் கூடாதுன்னு பிளான் பண்ணி வேலை வாங்கினீங்களே.. நீங்க கேட்டதைச் செஞ்சு கொடுக்கத்தான் முடிஞ்சது.. என்னத்தைச் சமையலாகுதுன்னு நான் என்னத்தைப் பார்த்தேன்.."

"உன்னை வைத்துக்கிட்டு நான் என்னத்தை வேலை வாங்கி.. என்னத்தைக் குப்பை கொட்டி.. ம்ஹூம்.."

'அடிக்கடி 'ம்ஹூம்..'ங்கிறான்.. விரக்தியாகிட்டானோ.. அடியேய் நந்தினி.. உனக்கு வேலை கொடுத்த பாவத்திற்கு ஒரு துடிப்பான மனுஷனை வாழ்க்கையையே வெறுக்க வைச்சிட்டயேடி..'

"இங்கேயென்ன பார்வை.. போய் குளிச்சு, டிரஸ் வாஷ் பண்ணி ஈரத் துணியை மரக்கிளையிலே காயப் போட்டுட்டு சாப்பிட வந்து சேரு.."

“குளிக்கிறது ஓகே.. அதென்ன டிரஸ்ஸை வாஷ் பண்றது..?”

“கொண்டு வந்திருக்கிறது ஒரு மாற்று டிரஸ்.. நாளைக்கு மாத்திக்கத் டிரஸ் வேண்டாமா..? உன் டிரஸ்ஸை வாஷ் பண்ண ஓமனாக் குட்டியையா வரச் சொல்ல முடியும்..?”

“அது முடியாதுதான்..”

நந்தினி வாய்க்குள் மொண மொண என்று ரவிச்சந்திரனைத் திட்டியபடி குளியலறைக்குள் புகுந்தாள்..

“என்ன முணுமுணுக்கிற..? என்னைத் தாளிக்கிறயா..?” என்ற ரவிச்சந்திரனின் அதட்டலுக்கு..

“நோ பாஸ்..” என்று சத்தம் போட்டாள்..

குளித்து உடைமாற்றி துவைத்த ஈரத்துணிகளுடன் குளியலறையிலிருந்து வெளிவந்த போது அன்றுதான் பூத்த புது மலரைப் போல இருந்தாள்..

அத்தியாயம் 93

அவளை விழுங்கி விடுவதைப் போல பார்த்தபடி குளிக்கப் போனான் ரவிச்சந்திரன்..

‘அட..’ அவன் பார்வையை மனதுக்குள் விமரிசித்தபடி கீழே விழுந்து விடாமலிருக்க ஜாக்கிரதையாய் காலை ஊன்றி நின்றபடி கிளைகளில் ஈரத்துணிகளை உலர்த்தினாள் நந்தினி..

அவள் உலர்த்தி முடித்து திரும்புவதற்கும் ரவிச்சந்திரன் ஈரத் துணிகளோடு அங்கு வருவதற்கும் சரியாக இருந்ததில் அவன்மீது மோதி தடுமாறி விழப் போனாள்.. சட்டென ரவிச்சந்திரன் கை நீட்டி அவளை அணைத்துத் தன் மீது சாய்த்துக் கொண்டான்.. பதட்டத்தில் அவனை இறுகப் பற்றி சாய்ந்து நின்ற நந்தினி ஈரத்தை உணர்ந்தாள்..

‘சில்லுன்னு இருக்கே..’ அவனை அப்போதுதான் பார்த்து வைத்தவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது..

குளித்து விட்டு ஈரத்தலையில் நீர் சொட்ட... உடல் முழுதும் நீர்த்திவலைகள் படிந்திருக்க ஜட்டியும் பனியனுமாக கவர்ச்சி மிகுந்த கட்டழகோடு நின்று அவளை சோதித்து வைத்தான் ரவிச்சந்திரன்..

‘அம்மாடி.. இப்படி வந்து நிற்கிறானே..’

அவனுடைய கழுத்தை வளைத்துத் தோளில் சாய்ந்து நின்றவளின் மீது.. அவன் தோளில் கிடந்த ஈரத் துணிகளின் ஈரமும்.. அவன் தலைமுடியிலிருந்து சொட்டிக் கொண்டிருந்த ஈரமும் சேர்ந்து படிந்து சில்லென்ற உணர் வை உண்டாக்கியிருக்கிறது.. போதாக்குறைக்கு அவனது ஈர உடலின் நீர்த்திவலைகள் அவளது உடலில் படிந்து சில்லிப்பை அதிகப் படுத்திக் கொண்டிருந்தது..

நந்தினி தடுமாறினாள்.. அவனது கவர்ச்சி நிரம்பிய உடலழகு அவளைக் காந்தமெனக் கவர்ந்து இழுத்து என்னவோ செய்தது.. அவன் முகம் பார்க்க முடியாமல் விலகி வேகமாய் குடிலுக்குள் ஓடி விட்டாள்..

“ஏய்ய்.. பார்த்து ஓடு.. கால் தடுக்கி விழுந்து வைச்சிராதே..”

எச்சரித்து விட்டுக் கையிலிருந்த ஈரத்துணிகளை கிளைகளில் உலர்த்த ஆரம்பித்தான் ரவிச்சந்திரன்.. இலைகளுக்கூடே வெளியே தெரியாத வண்ணம் துணிகளை உலர்த்தி விட்டு குடிலுக்குள் போனான்.. சோஃபாவில்

சரிந்திருந்த நந்தினியின் முகம் சிவந்திருந்தது.. அவனைப் பார்க்காமல் டிவியைப் பார்த்துக் கொண்டிருந்தான்..

“என்ன இங்கே உட்கார்ந்துட்ட.. சாப்பிட வரலை..” ரவிச்சந்திரனின் அழைப்பிற்கு அவளிடம் அசைவில்லை.. அவன் ஆச்சரியப்பட்டான்..

“பசி, பசின்னு அலறுவ.. இப்ப என்னடான்னா பசியை மறந்துட்டு டிவியை வாட்ச் பண்ணிக்கிட்டு இருக்க.. உனக்குப் பிடித்த புரோக்ராமா..?”

டிவியைப் பார்த்தவன் திகைத்தான்.. ரிமோட் கண்ட்ரோலின் பட்டனை நந்தினி அழுத்திக் கொண்டேயிருக்க திரையில் சேனல்கள் நிலைத்து நிற்காமல் மாறிக் கொண்டேயிருந்தன..

“வாட் இஸ் திஸ் நந்தினி..? வாட் ஹேப்பன்..?”

ரவிச்சந்திரன் அவள் பக்கத்தில் உட்கார்ந்தான்.. நந்தினி அவன் முகத்தைப் பார்ப்பதைத் தவிர்த்ததில் அவனது புருவங்கள் முடிச்சிட்டன..

“ஏய்ய்..” கடுமையுடன் அழைத்தான்..

“போங்க பாஸ்.. போய் டிரஸ் பண்ணிட்டு வாங்க..” அவன் முகம் பார்க்காமல் சொன்னாள் நந்தினி..

“டிரஸ் பண்ணியிருக்கேனே.. எனக்கு இது போதும்..”

‘இவன் ஒருத்தன்.. என் நிலைமை புரியாம இம்சை பண்ணிக்கிட்டு..’ நந்தினிக்கு சோதனையாக இருந்தது..

“பட்.. எனக்கு இது போதாது பாஸ்..”

“வாட்..?”

ரவிச்சந்திரனின் ஆச்சரியம் அதிகரித்தது.. அவளது பிடிவாதத்திற்கு என்ன காரணம் என்று புரியாமல் குழம்பினான்.. அவளிடமே அதைக் கேட்டு விடலாமென்ற எண்ணத்துடன்..

“உனக்கு என்னதாண்டி பிராப்ளம்..?” என்று ஆயாசப்பட்டான்..

“வாடி, போடின்னு சொல்லாதீங்க பாஸ்..”

“ஓகே.. சொல்லலை.. வாய் தவறி வந்திருச்சு.. உனக்கு என்னதான் பிராப்ளம்..? அதைச் சொல்லு..”

“உங்க அரைகுறை டிரஸ்தான் பிராப்ளம்..”

நந்தினி சொல்லி விட்டாள்.. ரவிச்சந்திரனுக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை.. புரிந்தவுடன் அவனது கண்கள் மின்னின.. அவனது கவர்ச்சிகரமான தோற்றத்தில் தடுமாறும் அவளது தடுமாற்றத்தை விரும்பி ரசித்தான்.. அவனைப் பார்க்க அவளது விழிகள் ஆவல் காட்டுவதையும், அதைக் கட்டுப்படுத்த அவள் பாடாய் படுவதையும் உணர்ந்து கொண்டவனுக்குள் ரகசியப் புன்முறுவல் வந்தது.. அதை மறைத்துக் கொண்டு ஏதுமறியாதவனைப் போல..

“வொய், வொய், வொய்..? இந்த டிரஸ்ஸுக்கு என்ன குறைச்சல்..” என்று போலியாக படபடத்தான்..

“டிரஸ்ஸே குறைச்சல்.. போதுமா..?” நந்தினி வெடித்தாள் .

“நான் குறைச்சலா டிரஸ் போட்டிருந்தா உனக்கென்ன..?”

ரவிச்சந்திரன் சீண்டினான்..

“ப்ளீஸ் பாஸ்..” நந்தினியின் கண்களில் கண்ணீர் அரும்பி விட்டது..

"இப்படிக் கவர்ச்சியா போஸ் கொடுக்காதீங்க.. எனக்கு என்னவோ போல இருக்கு.."

அவளது விழிகளில் தெரிந்த கலவரத்தில் அவளை கட்டியனைத்து முத்தமிட வேண்டும் போல இருந்தது ரவிச்சந்திரனுக்கு.. மனதின் உணர்வுகளை மறைக்காமல் அவனிடம் ஒப்புக் கொள்ளும் அவளது பேதமையில் மனம் கரைந்து போனான் ரவிச்சந்திரன்.. அவள் மீதான காதல் அவனுக்குள் அதிகரித்தது.. அவளையே தீர்க்கமாகப் பார்த்தபடி..

"என்னவோன்னா..?" என்று ஏதுமறியாதவன் போல விளக்கம் கேட்டான்..

"அந்த 'என்னவோ' என்ன..? என் மீதான் காதலா..?"

நந்தினி பதில் சொல்ல முடியாமல் திணறினாள்.. அவளது திணறலையே பார்த்துக் கொண்டிருந்தவன் எழுந்து படுக்கையறைக்குள் போனான்.. சில நிமிடங்களில் வெளிப்பட்டவன் ஜீன்ஸ், டிசர்ட்டில் இருக்க, நந்தினி நிம்மதியாக மூச்சு விட்டாள்..

"இப்ப மட்டும் என்னிடம் மயங்க மாட்டியா..?"

அழுத்தம் திருத்தமான அவனது கேள்வியில் வாயடைத்துப் போனாள் நந்தினி.. அவன் அட்டகாசமாக இருந்து தொலைத்தான்.. லைட் புளூ கலரில் ஜீன்ஸும், ஊதா வண்ண முழுக்கை சட்டையுமாக அவளை மயக்கினான்.. அவளது கன்னி மனதை சலனப் படுத்தும் அவனது பேரழகில் அவள் மருண்டாள்.. வேகத்துடன் எழுந்து அவனைக் கட்டியணைத்து முகமெங்கும் முத்தங்களைப் பதிக்க வேண்டும் போன்ற ஆவேசத்துடன் அவளுக்குள் உணர்வுகள் கிளர்ந்து எழுந்ததில் அவனது முகம் பார்க்காமல் கடினமான முகத்துடன் கடந்து படுக்கையறைக்குள் போக முயன்றாள்.. அவளது கை பிடித்து..

“நில்..” என்று தடுத்து நிறுத்தினான ரவிச்சந்திரன்..

இரும்புப் பிடியாய் இறுகியிருந்த அவனது கைபிடிக்குள் அடங்கியிருந்த அவளது கை நடுங்கியது.. ரவிச்சந்திரனின் கூர்மையான பார்வை அவளைத் துளைத்தது.. அதை எதிர் கொள்ள முடியாமல் மனம் படபடக்க தலை குனிந்தாள்.. முரட்டுத்தனமாக அவள் முகத்தை நிமிர்த்தி விழிகளுக்குள் உற்றுப் பார்த்தவன்..

"ஏண்டி என்னைக் காதலிக்க மறுக்கிற..? என்னைப் பிடிக்கலையா..?" என்று ஆற்றாமையுடன் கேட்டான்.. அவனைப் பிடிக்கவில்லையென்று எப்படி அவள் சொல்லுவாள்..? அவனைப் பிடித்திருக்கிறதே.. அவன் காதல் சொன்னதை ஏற்றுக் கொள்ள முடியாமல்தானே தவியாய் தவிக்கிறாள்..

துளைக்கும் அவன் பார்வையை நேருக்கு நேராக சந்திக்க முடியாமல் பார்வையைத் தாழ்த்தினாள்.. தீர்க்கமாக அவளையே பார்த்துக் கொண்டிருந்த ரவிச்சந்திரனின் பார்வையில் தெரிந்த குற்றச்சாட்டில் அவளது மனம் பதறியது.. அந்த நிலையை நீடிக்க விட்டால் அவனிடம் அவள் சரணடைந்து விடுவாள் என்று தோன்றியதில் கீழுதட்டை மடித்துக் கடித்தபடி அவன் மார்பில் கை வைத்து அவனைத் தள்ளி விட்டாள்.. நூறு பேர் வந்தாலும் எதிர்த்து நிற்கக் கூடிய அந்த புஜபல பராக்கிரமசாலி அவளது மென்கரத்தின் உந்துதலில் சோஃபாவில் விழுந்தான்.. விழுந்தவன் அவள் கரம் பற்றியபடி விழுந்து வைத்ததில் நந்தினி அவன் மடிமீது விழுந்தாள்.. நடந்ததை உணர்ந்து அவள் விலகி எழுவதற்குள் அவள் முகம் பற்றிய ரவிச்சந்திரன் குனிந்து அவளது இதழோடு இதழ் பொருத்தி விட்டான்..

நீலி மலையின் உச்சியிலிருந்து ஓங்கியடித்து வீழும் மீன்முட்டி அருவியில் மூழ்கிக் கொண்டிருப்பதைப் போல உணர்ந்தாள் நந்தினி.. ஆழிப் பேரலை அவளை அமிழ்த்தியது.. ஆழத்தில் வெகு ஆழத்தில் அமிழ்ந்தவள் மூச்சுத் திணறினாள்.. அவளால் விடுபட முடியாத நீண்ட நெடும் முத்தத்திற்குப் பின்னர் அவளை விடுவித்தான் ரவிச்சந்திரன்.. துள்ளிப் பின் வாங்கியவள் அவன் முகம் பார்க்க முடியாமல் பின்வாங்கி படுக்கையறையிலிருந்த கட்டிலில் வீழ்ந்தாள்.. புரண்டு படுத்து நெருப்புக் கோழி மணலில் முகம் பதித்து தப்பித்து விட்டதாய் பேர் பண்ணிக் கொள்வதைப் போலத் தலையணையில் முகம் புதைத்துக் கண்களை இறுக்கமாக மூடி அவளை ஆட்டுவிக்கும் உணர்வுகளின் ஆக்டோபஸ் வலை வீச்சுக்கு ஆட்பட்டு விடாமல் தப்பிக்க முனைந்தாள்.. அவளது தலையில் ரவிச்சந்திரனின் கரம் படிந்தது.. கண்களை இன்னமும் இறுக்கமாக மூடிக் கொண்டாள்.. திரும்பிப் படுத்து அவன் முகம் பார்க்க அவளுக்குப் பயமாக இருந்தது.. தோற்று விடுவாளோ என்று அஞ்சி நடுங்கினாள்.. அவன் தொட்டால் அவளால் எதிர்க்க முடியாது.. உணர்வுகள் கிளர அவன்

கையிலிருந்து விடுபட முடியாமல் அவன் அணைப்பில் குளிர் காய்ந்து ஒன்ற ஆரம்பித்து விடுகிறாள்..

'கடவுளே..! காப்பாற்று..' நந்தினியின் மனம் பதறியது..

"டோன்ட் பி அஃப்ரைடு.." அவளது கூந்தலை வருடினான் ரவிச்சந்திரன்..

நந்தினி திரும்பவில்லை.. விழி மூடி தலையணையில் முகம் புதைத்திருந்தாள்.. கண்களில் வழிந்த கண்ணீர் தலையணையை நனைத்தது..

"ஐ ஆம் ஸாரி.." என்றான் ரவிச்சந்திரன்..

அவளிடம் அசைவில்லை.. அவனுக்கு வருத்தமாக இருந்தது.. சின்னப்பெண்ணிடம் வரம்பு மீறி நடந்து கொண்டானோ என்ற குற்ற உணர்வுடன்..

"ப்ளீஸ்.." என்றான்..

அவனது வருத்தத்தைக் குரலில் உணர்ந்தாளோ என்னவோ நந்தினி புரண்டு படுத்தாள்... அவளது முகம் கண்ணீரில் நனைந்திருந்ததில் ரவிச்சந்திரன் துணுக்குற்றான்..

அவள் இந்த அளவுக்குப் பாதிக்கப் பட்டிருக்கிறாளா..?

"அழுகக் கூடாது நந்தினி.. என் மனம் தாங்காது.."

அவள் பக்கத்தில் உட்கார்ந்து கண்ணீரை துடைத்து விட்டான்.. நந்தினி விசும்பினாள்.. அவள் தலையைத் தூக்கித் தன் மடியில் வைத்துக் கொண்டான்.. நந்தினி ஆட்சேபிக்கவில்லை.. விலகவுமில்லை..

அவனது அணைப்பை அவள் தடுத்ததில்லை.. பாதுகாப்பாய் தோள் சாய்ந்திருக்கிறாள் என்ற நினைவில் அவனுக்கு அவன் மீதே கோபம் வந்தது..

"என்னைக் கண்ட்ரோல் பண்ண டிரை பண்றேன்.. இப்ப நடந்ததை மறந்திரு.. சாப்பிடப் போகலாம் வா.."

மறுக்காமல் எழுந்து அவனுடன் சாப்பிடப் போனாள் நந்தினி.. சப்பாத்தி, குருமா, நேந்திரம்பழம் என்று இனிமையான காலை டிஃபன்..

"நிறையக் காய் வெட்டித் தந்தேனே.. அதெல்லாம் என்ன ஆச்சு..?"

சற்று முன் நடந்த முத்தக் களேபரத்தை மறந்து சாப்பாடே கவனமானாள் நந்தினி.. அதில் ரவிச்சந்திரனின் முகம் விகசித்தது..

“இந்தக் காட்டுக்குள்ளே குருவிகளுக்கும் மைனாக்களுக்குமா பஞ்சம்..? அதெல்லாம் ஓட்டு மொத்தமா வந்து தூக்கிட்டுப் போயிருச்சு..” என்றான்..

“போகும்.. போகும்..”

அவனுக்கு அழகு காட்டியபடி கிச்சன் மேடையில் மூடிவைக்கப் பட்டிருந்த ஹாட் பாக்ஸை திறந்து பார்த்தாள்.. ஆவி பறக்கும் ஃபிரைட் ரைஸ் இருந்ததில் அவள் முகம் மலர்ந்தது..

“ஹை.. ஃபிரைட் ரைஸ்..” என்று குதூகலித்தாள்..

“பார்த்துட்டியா..? அதை விட்டு வைச்சிரு தாயே.. லன்சுக்கு வேணும்.. பசி அடங்கலைன்னா நேந்திரம் பழத்தை மொக்கு..”

ரவிச்சந்திரன் வலுக்கட்டாயமாக அவளை ஃபிரைட் ரைஸிடமிருந்து பிய்த்து இழுத்து வந்தான்.. சோஃபாவில் உட்கார்ந்தவள் விரல்களை கோர்த்துப் பிரித்தும் விளையாடிக் கொண்டிருந்தாள்.. டிவியைப் போட்டு அணைத்தாள்.. வெளியே சென்று மரக்கிளையில் உட்கார்ந்து கால்களை ஆட்டியபடி பாட்டுப் பாடி பறவைகளை விரட்டி விட்டாள்.. ஒரு

இடத்தில் அடங்கி உட்காரமால் குட்டி போட்ட பூனை போல குடிலுக்கும் மரத்துக்குமாக அவள் அலைந்த அசைச்சலில்..

“உன் காலில் என்ன சக்கரம் கட்டி விட்டிருக்கா..” என்று ஒரு குட்டு வைத்து அவள் தோள்களைப் பிடித்து மரக்கிளையில் உட்கார வைத்தான் ரவிச்சந்திரன்..

“போரடிக்குது பாஸ்..” நந்தினி சிணுங்கினாள்..

“ஏணியை இறக்கி விடவா..?”

“எதுக்கு..?”

“கீழே இறங்கி மீன்முட்டி அருவிகளைப் பார்த்துட்டு வரலாம்..”

“ஏனாம்..? குளிக்கிறேன் பேர்வழின்னு அரையும் குறையுமா டிரஸ்ஸை மாட்டிக்கிட்டு என்னை பயமுறுத்துறதுக்கா..? ஒண்ணும் வேண்டாம்..”

“அருவியில குளிச்சா அரையும் குறையுமாத்தான் குளிப்பாங்க.. நீயும் அதே போல குளிக்க வேண்டியது தானே.. நான் வேண்டாம்ன்னு சொல்லலையே...”

“ஹைய்யோ.. எங்கே சுத்தினாலும் இந்தப் பேச்சிலதான் வந்து நிற்பீங்களா..? ஐ டோன்ட் லைக் திஸ் டாபிக் பாஸ்..”

“ஓகே லீவ் இட்..”

தோள்களைக் குலுக்கிய ரவிச்சந்திரன் அவன் உட்கார்ந்திருந்த மரக்கிளையில் வாகாக சாய்ந்து கொண்டு நந்தினியையே பார்த்தான்.. மனம் படபடக்க அவள் பனி மூட்டத்தைப் பார்த்தாள்.. ரவிச்சந்திரனின் பார்வையிலிருந்த காதல் உண்மையா பொய்யா என்று தெரியாமல் அவள் மனம் குழம்பித் தவித்தது..

அத்தியாயம் 94

“ஒரு பொய்யாவது சொல் கண்ணே..

உன் காதல் நான்தானென்று..

அந்தச் சொல்லில் உயிர் வாழ்வேன்..”

பிசிறு தட்டாத குரலில் ஸ்வரம் பிசகாமல் வந்த பாடலில் உடல் தூக்கிப் போட உறைந்து போனாள் நந்தினி.. கரகரத்த குரலில் உணர்வுகளை வெளிப்படுத்திய ரவிச்சந்திரனின் பார்வை அவள் மீதே நிலைத்திருந்ததில் அவள் மனதில் வசனம் பொங்கியது..

ராஜாதி ராஜன் அவளிடம் காதல் வரத்தை யாசிப்பதா..? பேச்சின்றி தவித்தவள் மௌனத்தில் ஆழ்ந்தாள்..

“பூக்களில் உன்னால் சத்தம் - அடி

மௌனத்தில் உன்னால் யுத்தம்..

இதைத் தாங்குமா என் நெஞ்சம்..?”

நந்தினியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. அவனது ஆத்மார்த்தமான கேள்வி அவளைக் குற்றவாளியாக்கி சுட்டு விரலை நீட்டியது.. அவனது பாதுகாவலில் அவளுக்கு

நம்பிக்கை இருந்தது.. ஆனால் அவனது காதலில் அவளுக்கு நம்பிக்கையில்லையே.. போதையூட்டும் அவனது காதலைக் 'கள்' என்று நினைத்துப் பயம் கொள்கிறாளே.. 'பால்' என்று நினைக்க முடியவில்லையே..

"பெண்மையும் மென்மையும்

பக்கம் பக்கம்தான்..

பார்த்தால் ரெண்டும் வேறுதான்..

பாலுக்கும் கள்ளுக்கும்

வண்ணம் ஒன்றுதான்..

பார்க்கும் கண்கள் ஒன்றுதான்..

உண்டால் ரெண்டும் வேறுதான்.."

அவளது மனதிலிருந்த பரிதவிப்பிற்குத் தன் பாடலில் பதில் தந்தவனை மிரட்சியுடன் பார்த்தாள் நந்தினி.. இது, இது, இது ஒன்றுதான் அவள்து மனதை அச்சப்படுத்திக் கொண்டிருந்தது.. அவள் மனதில் நினைப்பதை வாய் விட்டுச் சொல்லாமலே அவன் அறிந்து பதில் தருவது எப்படி..? மருண்டு விழித்த அவளது விழிகளைப் பார்த்தவனுக்குள் மையல் வந்தது.. கரிய கூந்தலைப் பின்னலிடாமல் விரித்து விட்டிருந்தாள்.. அது

சரிந்து தொங்கிக் கொண்டிருந்தது.. அவன் பார்வையில் ஒளிர்ந்த கண்களை இமைகள் மூடிப் பாதுகாவல் செய்து அவனை முத்தமிட அழைத்தன..

அவளைக் கட்டித்து தின்னும் அவனது பார்வையில் சலனம் கொண்டவளாக நகத்தைக் கடித்துத் துப்பிக் கொண்டிருந்தாள்.. அவன் பார்வையால் அதட்டியதும் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டாள்.. ரவிச்சந்தி ரன் குனிந்து அவளது மூக்கைப் பிடித்துத் திருகியதில் முகத்தைச் சுளித்தாள்..

"இரவினைத் திரட்டி.. ஓ..

கண்மணியின் குழல் செய்தானே..

நிலவின் ஒளியெடுத்து

கண்கள் செய்தாரோ..

விண்மீன் விண்மீன் கொண்டு

விரலின் நகம் செய்து

மின்னலின் கீற்றுக்கள் கொண்டு

கைரேகை செய்தானோ..

வாடைக் காற்று பட்டு

வயதுக்கு வந்த பூக்கள் கொண்டு

தங்கம் தங்கம் பூசி

தோல் செய்தானோ..”

ரவிச்சந்திரனின் விழிகளில் வழிந்த மயக்கத்துடன் வந்த பாடலில் ‘என்னடா இது..’ என்று திருதிருத்தாள் நந்தினி.. அவள் அழகியென்பதிலேயே அவளுக்கு ஆயிரத் தொட்டு சந்தேகங்கள் இருந்தன.. இதில் இத்தனை வர்ணனைகளை பாடி வைக்கிறானே.. இவனுக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது..?

அவள் அவனை ஆராய்ச்சியாக உற்று நோக்க.. அவனோ வேறு விதமான ஆராய்ச்சிப் பார்வையோடு உற்று நோக்கி விட்டு..

“ஆனால் பெண்ணே...

உள்ளம் கல்லில் செய்து வைத்தானோ..

காதல் கண்ணே..

உள்ளம் கல்லில் செய்து வைத்தானோ..?”

என்று பாடலில் கேட்டு வைத்தான்..

‘நான் கல்நெஞ்சக்காரியா..?’

நந்தினிக்கு ஹார்ட் அட்டாக் வந்து விடும் போல இருந்தது.. யாராவது கண்ணீர் வழிய தங்களது தேவைகளைச் சொல்லி விட்டால் கழுத்தில், கைகளில் போட்டிருக்கும் நகைகளைக் கழட்டிக் கொடுத்து விட்டு வந்து வீட்டில் வாங்குப் பெறும் இயல்புடையவள் அவள்.. உதவி பெற்றவர்கள் அவளுக்கு இளகிய மனம் என்பார்கள்.. வெண்ணிலாவும், நந்தகுமாரும் ஏமாளி என்று பட்டம் கட்டுவார்கள்.. அவளைப் பார்த்து ரவிச்சந்திரன் கல் நெஞ்சக்காரி என்கிறான்..

‘இவன் காதல் சொன்னதும் ஆஹான்னு காலில் விழலைன்னா கல்நெஞ்சக்காரின்னு பட்டம் கட்டுவானா..? எங்க காலேஜில வந்து கேட்டுப் பார்த்தாத் தெரியும்.. நான் எப்படிப்பட்ட ‘இ’னா, ‘வா’னான்னு..’

மனதுக்குள் குமுறினாள் நந்தினி.. அது தெரியாமல் அவள் என்னவோ மனதுக்குள் அவனுக்கு மலர்மாலை தொடுத்துக் கொண்டிருப்பதைப் போன்ற மந்தஹாசப்

புன்னகையுடன் அவளையே காதலுடன் பார்த்த வண்ணம் அவன் பாடிக் கொண்டிருந்தான்..

"நிலவினை எனக்கு..

அருகில் காட்டியது நீதானே..

மலரின் முகவரிகள்

சொன்னதும் நீதானே..

காற்று, பூமி, வானம்

காதல் பேசும் மேகம்

அறிமுகம் செய்தவள்..

யார், யார் என் அன்பே நீதானே..

கங்கை, கங்கை ஆற்றைக்

கவிதைகள் கொண்டு தரும்

காவிரி ஊற்றைக் கண்ணில்

கையில் தந்தவள் நீதானே.."

நந்தினி அயர்ந்து போனாள்... இதுபோன்ற அறிமுகங்களை செய்து வைப்பவளா அவள்..? ஓர்முறை

பௌர்ணமி நிலவைப் பார்த்தபோது வட்ட வடிவமான மெத்து மெத்தென இருக்கும் ஆப்பம் நினைவுக்கு வருகிறது என்று சொல்லி விட்டு வெண்ணிலாவிடம் மொத்து வாங்கியவள் அவள்.. அவளைப் போய் இந்த அளவுக்கு உச்சத்தில் நிறுத்துகிறானே.. இவனுக்கே இது ஓவர் என்று தோன்றவில்லையா..? மானசீகமாக தலையில் அடித்துக் கொண்ட நந்தினிக்குத் தெரியாது.. அதுபோன்ற உணர்வுகளை அவன் மனதில் விதைத்தவள் அவள்தான் என்பது.. ஒப்பனையில்லாத அவளது பேச்சு ரவிச்சந்திரனுக்கு புதியதொர் உலகத்தை அடையாளம் காட்டியது.. மனம் விட்டு வெள்ளைச் சிரிப்புச் சிரித்த அவளது கள்ளம் கபடம் இல்லாத மலர் முகம் நிலவினைக் காட்டியது.. அன்னியன் என்ற பயமில்லாமல் குழந்தை போல அவனிடம் ஒட்டிக் கொண்ட அவளது குணாதியம் மலரின் முகவரியைக் காட்டியது.. காற்று, பூமி, வானம், மேகம் என்று அனைத்தையும் கை கொட்டி குதூகலத்துடன் ரசித்த அவளின் ரசிப்பு அவற்றின் பரிணாமங்களைக் காட்டியது.. சுழித்தோடும் ஆறைப் போல ஒரு இடத்தில் நில்லாமல் மான்குட்டியைப் போலத் தாவியோடிய அவளின் ஓட்டம் கங்கையையும், காவிரியையும் இனம் காட்டியது..

இதையெல்லாம் நந்தினி எப்படி அறிவாள்..? என்ன காரணத்தினால் அவளிடம் அவன் காதல் சொன்னான் என்று குழம்பிப் போய்த் தலைமுடியைப் பிய்த்துக் கொண்டிருப்பவளை உட்கார வைத்து எடுத்துச் சொன்னாலும் ஒப்புக் கொள்வாளா..?

அவளிடமிருப்பவை கொண்டாடப்பட வேண்டிய இயல்புகள் என்று அவளுக்கே தெயாதே..

‘இந்தக் காட்டுக்குள்ளே மேக் அப்புக்கு என்ன வேலைன்னு பவுடர் கூடப் பூசாம ஸ்டிக்கர் பொட்டை மட்டும் ஒட்டிக்கிட்டு.. பின்னால் பின்ன சோம்பேறித் தனப்பட்டு முடியை விரித்துப் போட்டுக் கிட்டு உட்கார்ந்திருக்கிறவகிட்ட காதல் ரசம் பிழியறான்.. இதில இருந்தே இவன் காதல்ன்னு பொய் சொல்லி என்னைக் கலாய்க்கப் பார்க்கிறான்னு தெரியுதே.. என்னத்தைச் சொல்ல..?’

குறுகுறுவென அவனையே பார்த்த நந்தினிக்குத் தெரியுமா..? அவனை ஈர்க்க நினைக்காமல் எனக்கென்ன என்ற விட்டேற்றியான இயல்போடு அவள் தள்ளி நிற்பதுதான் அவனை ஈர்த்து வைக்கிறது என்பது..?

“ஆனால் பெண்ணே..”

ரவிச்சந்திரன் ராகம் இழுத்தான்..

‘பெண்ணே, பெண்ணேன்னு அர்ச்சனை செய்யறான்.. எனக்குத்தான் நம்பற மாதிரியில்லை..’

“ஆனால் பெண்ணே..

நெஞ்சை மட்டும் மூடி வைத்தாயோ..

காதல் கண்ணே..

நெஞ்சை மட்டும் மூடி வைத்தாயோ..”

நந்தினிக்குள் கிறக்கம் வந்தது.. உலகப் பேரழகன் அவளிடம் காதல் சொல்வதைப் போல நடிப்பதில் அவள் கிளர்ச்சியடைந்தாள்.. நடிப்பு என்றுதான் அவள் நினைத்தாள்.. ரவிச்சந்திரனைப் போன்ற ஹீரோ நடிப்பானா என்ற முரண்பாடும் அவள் நெஞ்சில் இடித்தது.. ரவிச்சந்திரனிடம் நிச்சயமாக நடிப்பிருக்காது என்பதை திடமாக அவள் நம்பினாள்.. ஆனால் ஏனோ, அவனது காதலை மட்டும் அவளால் நம்ப முடியவில்லை..

ரவிச்சந்திரன் பாட்டை நிறுத்தி விட்டான்.. பேச்சுக்கள் விடை பெற்ற மௌனம் அவர்களின் மீது கவிந்தது.. நந்தினி மரக்கிளைகளில் அமர்ந்திருந்த பறவைகளை எண்ண

ஆரம்பித்தாள்.. அவள் முகத்தில் வந்து போகும் உணர்வலைகளை அவன் ரசிக்க ஆரம்பித்தான்.. இருபது குருவி, முப்பது மைனா, நாற்பது பெயர் தெரியாத பறவைகள் என்று கணக்கிட்டு ஓய்ந்து போன நந்தினி..

"பசிக்குது பாஸ்.." என்று மௌனத்தைக் கலைத்தாள்..

"என்னிடம் இதைத் தவிர வேறு வார்த்தைகளைப் பேசனும்னு உனக்குத் தோணவே தோணாதா நந்தினி..?" ஆழ்ந்த குரலில் கேட்டான் ரவிச்சந்திரன்..

அவன் பாடல் அவள் மனதை அசைக்கவில்லையா..? அவனது காதலை உணர்த்தவில்லையா..?

நந்தினி உதட்டைக் கடித்துக் கொண்டு பேசாமல் இருந்ததில் சினம் கொண்டவன்..

"சரி.. சரி.. வந்து தொலை.." என்றான்..

அவன் பின்னால் போனவள் அவனது முதுகுப் பக்கமாக நாக்கைத் துருத்தி அழகு காட்டினாள்.. அந்த நேரம் பார்த்தா அவன் திரும்பித் தொலைக்க வேண்டும்..? அவன் பார்க்க மாட்டான் என்ற தைரியத்தில் அழகு காட்டியவள், அவன் பார்த்து விட்டதில் பேஸ்தடித்து நின்று..

“ஹி.. ஹி.. சும்மா..” என்று அசடு வழிந்தாள்..

“சகிக்கலை..” இறுக்கமான முகத்துடன் அவன் தட்டுக்களை வைத்துப் பரிமாற ஆரம்பித்தான்..

நந்தினிக்கு கண்ணாடி பார்க்க வேண்டும் என்ற கவலை வந்து விட்டது.. தலைவிரி கோலமாக பவுடர் கூடப் பூசாமல் இருப்பதினால் அவளைப் பார்க்க சகிக்க வில்லையோ..

‘இப்பத்தானே என்னைப் பேரழகி ரேன்ஜுக்குப் பில்ட் - அப் கொடுத்துப் பாட்டெல்லாம் பாடினான்.. ஒன் அவரில டபால்ன்னு கீழே இழுத்துப் போட்டுட்டானே..’

“பரிமாறத்தான் உடம்பு வளையாது.. பரிமாறிக் கொடுத்தாத் தட்டை வாங்கனும்ங்கிற பொறுப்புக் கூடக் கிடையாதா..?”

“சும்மா சும்மா திட்டாதீங்க பாஸ்.. பரிமாறுன்னு சொன்னா நான் செய்ய மாட்டேனா..?”

“நீதானே..? செய்வ.. செய்வ.. பரிமாறுகிறேன்னு ஹாட்பாக்ஸில இருக்கிறதைக் கொட்டிக் கவிழ்த்துட்டு அச்சச்சோன்னு கண்ணைக் கசக்குவ.. காடும்மா.. பசிக்குச்

சாப்பாடு கிடைக்கிறதே குதிரைக் கொம்பு.. உன்னை வைத்துக்கிட்டு ரிஸ்க் எடுக்க முடியாது..”

எப்படி அவளைச் சரியாக கணித்து வைத்திருக்கிறான் என்ற வியப்பு ஏற்பட்டது நந்தினிக்கு.. வெண்ணிலாவும் இப்படித்தான் திட்டித் தீர்ப்பாள்.. உதவி செய்ய வருகிறேன் என்று இருப்பதையும் உடைத்துக் கொட்டிக் கவிழ்த்து விட்டுப் பேந்தப்பேந்த விழிக்கும் நந்தனியின் முதுகில் நாலு போடு போட்டாலும் அவளுடைய ஆத்திரம் தீராது..

‘நல்லவேளை.. இவன் அடிக்க கை வைக்கலை..’

ஃபிரைட் ரைஸும், காலி பிளவர் வறுவலுமாக மதிய உணவு களை கட்டியது.. அவள் நொட்டை விட்டுக் கொண்டு சாப்பிடுகிறாள் என்று ரவிச்சந்திரன் சொல்ல, அவளும்தானே வேலை பார்த்தாள் என்று நந்தினி சண்டைக்கு வந்தாள்.. மதிய உணவு உண்ட களைப்பில் டிவி பார்த்தபடி சோஃபாவில் தூங்கி விட்டவளின் முடி கோதி கம்பளியால் போர்த்தி விட்டான் ரவிச்சந்திரன்.. பிற்பகலில் கண்விழித்து எழுந்தவள் ரவிச்சந்திரன் மரக்குடிலில் இல்லையென்று குய்யோ முறையோ என அழ ஆரம்பிக்க குளியலறையிலிருந்து வெளியே வந்த ரவிச்சந்திரன்

விசித்திரமாக அவனைப் பார்த்து விட்டு என்ன ஆனது என்று விசாரித்தான்.. உன்னைக் காணவில்லையென்று கத்தினேன் என்று சொல்லி வட்டு தலையில் குட்டு வாங்கினாள் நந்தினி..

“வாய்தான் கிழியுது.. எதுக்கெடுத்தாலும் பயம்.. உனக்குத்தான் தூக்கம் வருமா..? எனக்கு வர ாதா..?”

“மதியத் தூக்கம் தூங்கினா ஒளிஞ்சுக்கிட்டு கண்ணாமூச்சி காட்டனும்னு சட்டம் எதுவும் இருக்கா பாஸ்..?”

“தூங்கி எழுந்தா முகம் கழுவி ஃபிரஷ்ஷாகிக் கனும்ங்கிற பழக்கம் இருக்கு.. அதுதான் உனக்குக் கிடையவே கிடையாதே..”

‘நோஸ்கட் வாங்கியாச்சா..?’

உடைபட்ட மூக்கை நந்தினி தடவிக் கொண்டிருக்க அவன் டீ கெட்டிலை ஸ்டவ் மீது வைத்தான்..

“நான் டீ போடவா பாஸ்..” அவனுடன் கிளை கொண்டாட விழைந்தாள் நந்தினி..

“வேண்டாம்.. போய் முகத்தைக் கழுவிக்கிட்டு வா.. போதும்..” முகம் திருப்பாமல் அவன் அதட்டினான்..

‘அவ்வளவு மட்டக் கேவலமாவா என் முகம் இருக்கு..?’

நந்தனி கண்ணாடி முன்னால் நின்று பலவித கோணங்களில் முகத்தைத் திருப்பி ஆராய்ந்தாள்.. சொல்லிக் கொள்ளும்படி அவளது முக அழகு இல்லை என்ற மாபெரும் கண்டு பிடிப்பில் சோகத்தில் ஆழ்ந்தாள்.. அஜந்தாவின் பேரழகு முகம் நினைவுக்கு வந்தது..

‘ஆ வல்லிய சுந்தரியிண்ட அம்மாவன் மோனல்லவோ இவன்..! ஆ சுந்தரியக் கண்ட கண்ணால ஈ நந்தினிய நோக்க முடியுமோ..?’

தாழ்வு மனப்பான்மையுடன் என்ன செய்தால் அவள் முகத்தை சகிக்கிறது என்று ரவிச்சந்திரன் சொல்வான் என்ற ஆராய்ச்சியில் அவள் ஈடுபட்டிருக்க கண்ணாடியில் ரவிச்சந்திரனின் உருவம் தெரிந்தது..

அத்தியாயம் 95

கண்களை அகல் விழித்து.. வாயைப் பலவித கோணங்களில் சுழித்து அழகு பார்த்துக் கொண்டிருந்த நந்தினி அவளுக்குப் பின்னால் தெரிந்த ரவிச்சந்திரனின் உருவத்தைக் கண்ணாடி பிரதிபலித்ததும் அரண்டு திரும்பினாள்..

"என்ன்ன்ன்...ன...?" வசீகரமாக அவன் புருவங்களை உயர்த்தியதும் அரண்டு போனவள்..

"ஒன்ன்ன்ன்..னுமேயில்லை.." என்று குரல் கொடுத்தபடி குளியலறைக்குள் ஓடி விட்டாள்..

ரவிச்சந்திரனுக்குச் சிரிப்பு வந்தது.. மூடப் பட்டிருந்த குளியலறையின் கதவைப் பிரியத்துடன் பார்த்து விட்டு வெளியேறி டிவியை போட்டு விட்டு சோஃபாவில் கால் நீட்டி சரிந்தான்.. அதுபோல வேலைகளற்று ஓய்வெடுத்து வெகு நாள்களாகி விட்டன என்று நினைத்துக் கொண்டான்.. ஒரு வினாடியையும் வீணடிக்காமல் ஓடிக் கொண்டிருந்தவன் அவன்.. இன்று ஒரு சின்னஞ்சிறு பெண்ணிற்காக நீலிமலைக்

காட்டின் மர உச்சி மரக்குடிலில் எதுவும் செய்யாமல் பொழுதைப் போக்கிக் கொண்டிருக்கிறான்..

“ஞான் வந்துட்டேன்..”

உற்சாகக் குரலுடன் வந்து நின்ற நந்தினி விழிகளுக்கு மை தீட்டி லேசான ஒப்பனையுடன் தலை முடியை வாரிப் பின்னலிட்டிருந்தாள்.. அவளைப் போதையுடன் அவன் பார்த்ததில்..

‘ஓகே, ஓகே.. இப்ப என் முகம் சகிக்கிறதைப் போல ஆகிருச்சு போல..’ என்று திருப்தி கொண்டாள்..

கெட்டிலில் இருந்த ‘டீ’யை கப்புகளில் ஊற்றப் போனாள்.. அவன் தடுத்து கப்புக்களைப் பிடுங்கிக் கொண்டதில் அவள் மீது அவன் நம்பிக்கை கொள்வதே இல்லையென்று சண்டையிட்டாள்.. அவளை ஆழ்ந்து பார்த்த ரவிச்சந்திரன்..

“நீ மட்டும் என்னை நம்பறியா..?” என்று கேட்டு திணறடித்தான்..

மாலை மயங்க ஆரம்பித்திருந்ததில் குளிர் அதிகரித்தது.. ரவிச்சந்திரன் கதவை மூடித் தாழிட்டான்.. டீ கப்புகளுடன் சோஃபாவில் உட்கார்ந்து டிவி பார்க்க ஆரம்பித்தார்கள்..

நந்தினி தமிழ் சேனல்களைப் பார்க்க விரும்பினாள்.. முடியாது என்று மறுத்து விட்டு ரவிச்சந்திரன் மலையாளச் சேனல்களுக்குத் தாவினான்.. ஒரு சேனலில் 'செம்மீன்..' திரைப்படம் ஓடிக் கொண்டிருந்தது.. கடற்கரையின் பிண்ணனியில் ஷீலா ஓடி வர நந்தினி படத்தின் கதையைப் பற்றிக் கேட்டாள்.. பொறுமையாக கதை சொன்னான் ரவிச்சந்திரன்... கன்னத்தில் கை வைத்து விழிகளை உருட்டி சுவராஸ்யமாக.. 'ஊம்' கொட்டி அவள் கதை கேட்ட விதம் அலாதியானதாக இருந்தது.. உயிரோட்டம் கொண்ட 'செம்மீன்' கதையில் உருகிப் போனாள் நந்தினி.. முழங்கால்களைக் கட்டி அதில் முகத்தைப் பதித்துப் பேச்சு மூச்சில்லாமல் சினிமாவைப் பார்க்க ஆரம்பித்து விட்டாள்..

'இவள் மென்மையானவள்..'

ரவிச்சந்திரனின் பார்வை அவளை வருடியது.. ஷீலாவும் காதல் கொண்ட காட்சிகளில் அவள் விழிகள் மின்னின.. ஷீலாவின் தாயார் மகளைக் கண்டிக்கும் காட்சிகளில் அவளது புருவங்கள் சுருங்கின.. ஷீலாவுக்காக இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த வியாபாரியான மீன்பிடி படகு வாங்க ஷீலாவின் தகப்பனாரிடம் பணம் கொடுத்து அவர் பிடிக்கும் மீன்களைத் தன்னிடம் விற்க வேண்டும் என்று ஒப்பந்தம் போட்ட போது

அவள் முகம் யோசனையானது.. ஷீலாவின் தாயார் மகளிடம் எச்சரித்ததைப் போல ஷீலாவின் தகப்பன் வாக்கு மீறும் போது நந்தினி கோபம் கொண்டாள்.. ஷீலாவுக்குத் திருமணம் முடித்து அனுப்பும் போது இவள் விசும்ப ஆரம்பித்து விட்டாள்.. ஷீலாவின் தாய்க்காக..

ஷீலாவைத் தேடி வரும்போது நந்தினி கண்களைக் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.. ஷீலாவின் தாயார் இறந்து போனபோது இவள் அழ ஆரம்பிக்க ரவிச்சந்திரன் டிவியை நிறுத்தி விடுவேன் என்று பயமுறுத்தி அவளது அழுகையை நிறுத்தினான்.. இறுதியில் ஷீலாவும் மதுவும் கட்டித் தழுவிக் கடலில் மூழ்கும் போது..

“போதும் பாஸ்..” என்று குரலில் கமறினாள்..

ரவிச்சந்திரன் டிவியை அணைத்து விட்டான்.. மனதின் பாசம் தாங்காமல் நகர்ந்து அவன் தோளில் சாய்ந்து ஒன்றிக் கொண்டவளின் கன்னம் தட்டி மடியில் சாய்த்துக் கொண்டான்..

காதல் சொன்ன நினைவின்றி அவனும், அவளும் புதிரான ஓர் உணர்வில் பிணைக்கப் பட்டவர்களாக விழி மூடிக் கொண்டார்கள்.. எந்தவிதச் சலனமுமின்றி குனிந்து

அவளது இமைகளின் மீது முத்தம் பதித்தான் ரவிச்சந்திரன்.. எந்தவிதமான சந்தேகமுமின்றி அவன் பதித்த முத்தத்தை இமை திறவாமல் ஏற்றுக் கொண்டாள் நந்தினி.. அவளது கூந்தலை அவன் நீவி விட்டது பாரம் கொண்ட மனதிற்கு இதமாக இருந்தது..

‘கடலின் அக்கர போனாரே..

காணாப் பொண்ணினு போனாரே..

போய் வரும் போழ்

என்ன கொண்டு வரும்..?’

நந்தினி செவிகளில் ‘செம்மீன்’ திரைப்படத்தின் காலத்தால் அழியாத கானம் ஒலித்துக் கொண்டேயிருந்தது.

“பாவமில்ல பாஸ்..?” கண் கலங்க கேட்டாள்..

“நான் கூட பாவம்தான் நந்தினி..” ரவிச்சந்திரனின் குரல் கரகரத்தது..

‘இவன் பாவமா..? ஏனாம்..?’ நந்தினியின் மனம் சிணுங்கியது.. இரவில் அவன் உப்புமாவைக் கிளர்வதற்கான வெங்காயங்களை அரிந்து கொடுத்தாள் நந்தினி.. தொட்டுக்

கொள்ள பாட்டிலில் அடைக்கப் பட்டிருந்த தக்காளிச் சட்னி.. வழக்கம் போல நேந்திரம் பழம்..

“இதுவும் நல்லாத்தான் இருக்கு பாஸ்..” விரலைச் சுவைத்தபடி தட்டில் பரிமாறப்பட்டதை நொடியில் காலி செய்தாள் நந்தினி.. இரவு உணவுக்குப் பின்னர் வெயிலில் உலர்த்தப்பட்டு மதியத்தில் வீட்டுக்குள் வீசப்பட்டிருந்த துணிகளை சேகரித்து மடித்து வைத்தாள் நந்தினி.. ரவிச்சந்திரனின் உடைகளையும் நேர்த்தியுடன் அவள் மடித்து வைத்திருந்ததில்..

“பரவாயில்லையே.. உருப்படியாய் ஒரு வேலையைச் செய்யத் தெரியுதே..” என்று மெச்சிப் போனான் ரவிச்சந்திரன்..

“உருப்படியாய் ஒரு வேலையில்ல பாஸ்.. நிறைய வேலைகளைச் செய்யத் தெரியும்..” ரோஷப் பட்டாள் நந்தினி..

“ஃபார் எக்ஸாம்பிளா இதைத் தவிர வேற ஒண்ணைச் சொல்லு பார்ப்போம்..” ரவிச்சந்திரன் சவால் விட்டான்..

“அது.. அது.. அது..”

கீறல் விழுந்த ரிகார்டைப் போல முணுமுணுத்தபடி நெற்றிப் பொட்டில் ஒற்றை விரலால் தட்டி யோசித்தும் ஒரு வேலையும் நினைவுக்கு வந்து தொலைக்கவில்லை.. வாய்க்கு வந்த வேலையைச் சொல்லி வைக்கலாம்தான்.. உடனே அதை புரூவ் பண்ணிக் காட்டு என்று கிளம்பி விடுவான்.. நிரூபிக்க முடியாவிட்டால் அது இன்னமும் மோசமாக ஆகி விடும்.. தேவையா என்று துணிகளை மர அலமாரியில் வைப்பதைப் போலப் புறமுதுகு காட்டித் தப்பித்தாள்..

இரவில் அவன் சோஃபாவில் படுத்துக் கொள்ளப் போக..

“நோ பிராப்ளம் பாஸ்.. இங்கேயே படுக்கலாம்..” என்று பெரிய மனதுடன் அனுமதி தந்தாள் நந்தினி..

“உனக்குப் பிராப்ளமில்ல... எனக்குத்தான் பிராப்ளம்..” ஊன்றிப் பார்த்த அவன் பார்வையில் அவளுக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது..? என்ன சொல்கிறான்..? அவளால் அவனுக்கு என்ன பிராப்ளம்..?

“நீ கையைக் காலைத் தூக்கிப் போட்டு அரெஸ்ட் பண்ணி வைப்ப.. எனக்குத் தாங்காதும்மா.. கொஞ்சமாவா கனம் கனக்கிற..? பார்க்கத்தான் பூ..மாதிரி இருக்கிற.. பாறை போலயில்ல கனக்கிற..”

நந்தினிக்கு வெட்கமாகி விட்டது.. அவனது நெடிய உயரம் சோஃபாவுக்குள் அடங்கவில்லை.. கால்களை சோஃபாவின் கைபிடியில் தூக்கிப் போட்டுப் படுத்துத் தூங்க முயன்றவனைப் பார்த்தால் பாவமாக இருந்தது..

"நமக்கு ஊடே தலையணைகளை அடுக்கி விடுவோம் பாஸ்.." நந்தினி ஐடியாச் சொன்னாள்..

"அப்படிங்கிற..?" ரவிச்சந்திரன் யோசித்து விட்டு ஒப்புதலாக தலையை அசைத்தான்..

அவனுக்கு கையைக் காலைப் பரப்பி வசதியுடன் தூங்கியாக வேண்டும்.. கொஞ்சம் வசதி குறைந்தாலும் தூக்கம் வந்து தொலைக்காது..

மெத்தையின் ஊடே தலையனைகள் அணி வகுத்தன.. இந்தப் பக்கம் நந்தினி, அந்தப் பக்கம் ரவிச்சந்திரன் என்று முடிவானது... கண் விழித்துப் பார்க்கும் போது குறுக்கே மறித்திருந்த தலையணைகள் படுக்கையறையின் மூலைகளில் தஞ்சம் புகுந்திருந்தன.. ரவிச்சந்திரனின் கழுத்தை இறுக்கி மூச்சுத் திணற வைத்தபடி தூங்கிக் கொண்டிருந்தாள் நந்தினி..

'நல்லவேளை.. கழுத்தை மட்டும்தான் இறுக்கியிருக்கா..' அவளது கையை மெதுவாக விலக்கி விட்டான் ரவிச்சந்திரன்..

அவன் முகத்தோடு முகம் புதைய உறங்கிக் கொண்டிருந்தவளின் அழகிய முகம் அவனை ஈர்த்தது.. தூக்கத்திலும் உதட்டைச் சுழித்திருந்தவளின் இதழ்களை விரல் நுனியால் ஸ்பரிசித்தான்.. தூக்கம் மாறாமல் அவள் சிணுங்கினாள்.. ரவிச்சந்திரனுக்குள் காதல் பெருகியது..

‘உன்னோடு வாழாத..

வாழ்வென்ன வாழ்வு-என்

உள்நெஞ்சம் கேட்கின்றது..’

பெருமூச்சு விட்டான்.. மெதுவாக புரண்டு எழுந்து மூலைக்கொன்றாகக் கிடந்த தலையணைகளைத் திரட்டி மெத்தைக்கு குறுக்கே வரிசைப் படுத்தினான்.. கலைந்திருந்த கம்பளியைச் சரிப்படுத்தி அவளது கழுத்துவரை இழுத்துப் போர்த்தி விட்டான்.. குளிர் விலகியதில் அவள் முகத்தில் தெரிந்த திருப்தியைப் பார்த்தபடி குடிலின் கதவைத் திறந்தான்.. வெளியில் கவிந்திருந்த பனி மூட்டம் உள்ளே வந்ததில் கதவை இறுக்கி மூடிவிட்டு கெட்டிலை எடுத்து தண்ணீரை ஊற்றி டீத்தூளைப் போட்டுக் கொதிக்க வைக்க ஆரம்பித்தான்.. டீ தயாரானதும் படுக்கையறைக்குள் எட்டிப் பார்த்து..

“ஏய்ய்.. சோம்பேறி..!” என்று குரல் கொடுத்தான்..

காதுக்குள் சைரன் ஒலித்ததைப் போன்ற அவனது பெருங்குரலில் திடுக்கிட்டுக் கண் விழித்த நந்தினி வாரிச் சுருட்டிப் பதறி எழுந்தாள்.. அவன்தான் குரல் கொடுத்திருக்கிறான் என்பதை உணர்ந்தும் முகச் சிணுக்கத்தோடு அழகாக சோம்பல் முறித்து சிறு கொட்டாவி விட்டபடி...

“குட்.. ஹாவ்.. மார்னிங்.. ஹாவ்.. பாஸ்.. ஹாவ்..” என்றாள்..

‘என்ன லட்சணத்தில குட்மார்னிங் சொல்கிறா பார்..’

ரவிச்சந்திரனுக்குச் சிரிப்பு வந்தது..

“தூங்கு மூஞ்சி..! ஒண்ணு கொட்டாவி விட்டுட்டு குட்மார்னிங் சொல்லு.. இல்லேன்னா குட்மார்னிங் சொல்லிட்டு கொட்டாவி விடு.. இப்படியா ரெண்டையும் மிக்ஸ் பண்ணிக் கலந்தடிப்ப..?” என்றான்..

“ஆரம்பிச்சுட்டிங்களா.. உங்களுக்கு எதையாச்சும் குறை கண்டுபிடிச்சுக் சொல்லிக்கிட்டே இருக்கனும் பாஸ்.. வரவர அந்த பெல்ட் மன்னனே பெட்டர்ங்கிறதைப் போல அரட்டறிங்க..” குறைபட்டபடி அவன் முகத்தைப் பார்த்த நந்தினி திகைத்தாள்..

அவன் முகம் கடுகடுவென்று கனலாய் மாறியிருந்தது..

‘இப்ப நான் என்ன சொல்லிட்டேன்னு இந்த முறை முறைக்கிறான்..’

என்ன தவறு செய்தேன் அதுதான் எனக்கும் தெரியவில்லை என்று கையைப் பிசைந்தாள் நந்தினி.. எதற்கெடுத்தாலும் இந்தப் பாட்டைச் சொல்லிப் புலம்ப வைத்து விட்டானே..

“என்னைவிட அந்த பெல்ட் மன்னன் பெட்டர்ன்னு தோணிச்சுன்னா அவன்கிட்டே போக வேண்டியதுதானே..? வினித்துக்கு ஒரு ஃபோனைப் போட்டுட்டு மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸில டிக்கட் புக் பண்ணி டிரெயின் ஏத்தி விடறேன்.. ஓடிடு..” எரிந்து விழுந்தான் ரவிச்சந்திரன்..

‘இதுதான் ரீசனா..? இவன்தானே அவனை ஆஹா, ஓஹோன்னு புகழ்ந்தான்..? இப்ப என்மேல பழியைப் போடறான்..’

ஒன்றைக் கவனித்தாள் நந்தினி.. பெல்ட் மன்னனை அவர், இவர் என்று மரியாதையுடன் விளித்து வந்த ரவிச்சந்திரன் மரியாதையைக் காற்றில் பறக்க விட்டு விட்டு அவன், இவன் என்று சொல்ல ஆரம்பித்திருந்தான்..

‘நேற்று இல்லாத மாற்றம் என்னது..?’ மனதிற்குள் ஒலித்ததை வாய்விட்டுக் சொன்னால் அவன் கொன்று விடுவான் என்பதால்..

“தப்பிச்சு வர்றப்பத்தான் ஓடி வரனும் பாஸ்.. சரண்டர் ஆகனும்னா நடந்தே போகலாம்.. அதுதான் சரியா இருக்கும்..” என்று அவன் ‘ஓடிடு’ என்று கத்தியதைச் சுட்டிக் காட்டிப் பதில் சொன்னாள்..

“அப்ப.. நீ சரண்டராகத் தயாராத்தான் இருக்க..?” நெற்றிக் கண்ணைத் திறந்தான் ரவிச்சந்திரன்..

நீலிமலைக் காட்டின் உச்சியிலும் அனல் பறக்கக் கூடும் என்பதை வியர்த்த உடல் நிலையிலிருந்து உணர்ந்து கொண்டாள் நந்தினி..

‘இவனுக்கு சின்னக் கோபம் வந்தாலே பூமி தாங்காது.. இதில செமத்தியாக் கோபப் பட்டா பூமி தாங்குமா..?’

பூமி தாங்குமோ இல்லையோ.. தான் தாங்க மாட்டோம் என்ற முடிவுக்கு வந்த நந்தினி கையெடுத்துக் கும்பிட்டு அவனை மலையிறங்கும்படி வேண்டிக் கேட்டுக் கொண்டாள்..

“ஞான் அப்பாவி பாஸ்.. தமிழ்நாட்டில இருந்து பெல்ட் மன்னனிடமிருந்து தப்பி நிங்கள் நிழலில் ஒளிந்து வாழ ஓடி வந்து.. ஈ அபலையை நீங்கதான் ரட்சிக்கனும்.. ஞான் அறிஞ்சும் அறியாமலும் பறஞ்சத பாஸ் ஷமிக்கனும்.. நிங்க கோபம் கொண்டா ஈ தமிழ்நாட்டுப் பெண் குட்டிக்கு போக இடம் இல்லா.. அதுக்கோசரம் பாஸிண்ட கோபம் குறயனும்.. கேட்டோ..”

அவளின் சேட்டையில் அவனுக்கு சிரிப்பு வந்து தொலைத்தது.. கோபம் குறையாமலே சிரித்தவனின் முன்னால் வந்து நின்றவள் காதுகளைக் கைகளால் பிடித்துத் தோப்புக்கரணம் போட்டு அவனது மிச்சம் மீதிக் கோபத்தையும் வேப்பிலை அடித்து ஓட்டி விட்டாள்..

“நீ இருக்கியே..” அவளது காதைப் பிடித்துத் திருகினான் ரவிச்சந்திரன்..

அத்தியாயம் 96

“உஸ்ஸு.. உஸ்ஸு...”

கிளையில் சாய்ந்து உட்கார்ந்து கால்களைத் தொங்க விட்டு ஆட்டியபடி ஆவி பறக்கும் ‘பிளாக் டீ’யை ஊதிக் கொண்டிருந்தாள் நந்தினி.. டீ சூடாக இருக்கிறதாம்.. அதனால் அதை ஊதி, ஊதி குளிர்விக்கிறாளாம்..

அவளின் அட்டூழியத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ரவிச்சந்திரன்..

“அறிவுக் களஞ்சியம்தான்.. போ..” என்றான்..

“ஏனாம்..?” ஆட்சேபக் குரல் எழுப்பினாள் நந்தினி..

“இப்ப எதுக்காக உஸ்ஸு, உஸ்ஸுங்கிற..?”

“டீ சூடா இருக்கு பாஸ்..”

“மக்கு.. மக்கு.. இந்தப் பனி மூட்டத்தில கொதிச்சுக்கிட்டு இருக்கிற டீ கூட ஒரே செகண்டில ஜில்லுன்னு ஆகிரும்.. சூடு ஆறுகிறதுக்குள்ள சீக்கிரமாக் குடிப்பாளா.. உஸ்ஸு, புஸ்ஸுன்னு ஊதிக்கிட்டு இருக்கிறா..”

“அவ, இவன்னு சொல்ல வேணாம் பாஸ்..”

“நீ வேணும்னா என்னை அவன், இவன்னு சொல்லிக்க.. ஐ ஹேவ் நோ அப்ஜெக்ஷன்..”

“என்ன அலவலுக்கு..?”

நந்தினி டீயைக் குடித்தாள்.. சூடு குறைந்திருந்ததில் ரசித்துக் குடிக்க ஆரம்பித்தாள்.. பனி படர்ந்த காட்டுக்குள் தொண்டையில் இறங்கிய சூடான டீ கதகதப்பாக இருந்தது.. ஒரு மிடறை விழுங்குவதும் கண்களை மூடி அந்த கதகதப்பை அனுபவித்து..

“ம்ஹா..” என்பதுமாக அவள் டீ குடித்த ரகளையில் தலையில் அடித்துக் கொண்டான் ரவிச்சந்திரன்..

“திங்கிறதையும், குடிக்கிறதையும் உன்னைப் போல ரசிக்க யாராலேயும் முடியாது.”

“குடிக்கிறதுன்னு பொத்தாம் பொதுவாச் சொல்லக் கூடாது பாஸ்.. என்னைப் பத்தித் தெரியாதவங்க காதில விழுந்தா என்னைப்பத்தி என்னன்னு நினைப்பாங்க..?”

“நீ சிறந்த குடிமகள்ன்ன நினைப்பாங்க.. இங்கே உன்னையும் என்னையும் தவிர யாரிருக்கா..? இந்த மரங்களிலே இருக்கிற பெர்ட்ஸ் கேட்டாத்தான் உண்டு..”

“இங்கே பேசுகிற வாய் வேற எங்கேயும் பேசாதுன்னு என்ன நிச்சயமாம்..?”

“வாயைப் பத்தி நீ பேசற பார்.. அதுதான் நேரம்ங்கிறது..” ரவிச்சந்திரன் குடிலுக்குள் போனான்.. அவன் பின்னாலேயே வால் பிடித்துக் கொண்டு போன நந்தினி நொட்டை விட்டபடி..

“பிரேக்ஃபாஸ்ட்டுக்கு என்ன செய்யப் போகிறீங்க பாஸ்..” என்று கேட்டுவிட்டு அவன் முறைத்த முறைப்பில் என்ன தவறு செய்தாள் என்று யோசித்துக் கண்டறிந்து நாக்கைக் கடித்து விட்டு..

“பிரேக்ஃபாஸ்ட்டுக்கு என்ன சமைக்கப் போகிறோம்ம்ம்ம்.. பாஸ்..” என்று கவனமாக ‘ம்’ மில் அழுத்தம் கொடுத்தாள்.. “அஃது.. அப்படியே மெயின்டெயின் பண்ணு.. உனக்கு நான் சமைத்துப் போடனுமா..?” என்று கண்களை உருட்டி விழித்துப் பயமுறுத்தினான் ரவிச்சந்திரன்..

‘அப்படியே பூச்சாண்டிதான்..’ அழகு காட்டிய நந்தினி அவன் பார்ப்பதை உணர்ந்ததும்..

“ஹி.. ஹி..” என்று சமாளிக்க முயன்றாள்..

“இப்ப என்ன என்னன்னு நினைத்த..?”

‘கண்டு பிடிச்சுட்டானே..’

“சொல்லு..”

“அது.. அது.. நீங்க மன்மதன்னு நினைத்தேன் பாஸ்..”

“ஒரு பொய்யாவது சொல் கண்ணேன்னு பாட்டுப் பாடினேன்ங்கிறதுக்காக பொய் சொல்லி சமாளிக்கிறயா..?”

‘இதையும் கண்டு பிடிச்சுட்டானா..? ஆனாலும் இது பொய்யில்லையே.. இவன் மன்மதன்தானே..’

அவளையே பார்த்துக் கொண்டிருந்தவனின் தீட்சண்யம் மிகுந்த தீர்க்கமான பார்வையில் அவள் பலவீனமானாள்..

‘என்ன’ எனும் விதமாய் உயர்ந்து இறங்கிய புருவங்களின் வசீகரத்தில் நிலை குலைந்தாள்.. பார்வையை விலக்காமல் அவன் நெருங்க குடிலின் மரச்சுவரில் சாய்ந்து நின்றவள் முகத்தைக் கைகளால் மூடிக் கொண்டு விரல்களின் இடைவெளியில் அவனைப் பார்த்து..

“நீங்க செம ஹேண்ட்சம்தானே பாஸ்.. இதில் பொய் சொல்ல என்ன இருக்காம்..?” என்றாள்..

அவன் முகத்தில் மென்மை படர்ந்தது.. விழிகளில் மின்னலுடன் அவளது விரல்களை விலக்கி நெற்றியில் செல்லமாக முட்டிவிட்டு..

“ஹேண்ட்சம்மாத்தானே இருக்கேன்..? அப்புறமும் ஏண்டி என் காதலை ஏத்துக்க மாட்டேங்கிற..?” என்று ரகசியத் தொனியில் ஏக்கப் பட்டான்..

“பாஸ்..” நந்தினி திணறினாள்..

வெகு அண்மையில் தெரிந்த அவனது ஆண்மை ததும்பும் வசீகர முகம் அவளைப் பேச்சிழக்கச் செய்தது.. அடர்ந்த மீசை, தீர்க்கமான நாசி, துளைக்கும் பார்வையென்று அவள் மனதை கொய்தான்.. அதிகரித்த நெருக்கத்திலிருந்து தப்ப முடியாமல் தவித்தாள் நந்தினி.. அவளை மயக்கும் பேரழகனைத் தவிர்க்கும் வழி தெரியாமல் தடுமாறினாள்.. குளிர் நிரம்பிய மரக்குடிலில் அவனது வெப்ப மூச்சுக்காற்று கணப்பைப் போல கதகதப்பாய் அவளது கன்னம் சுட்டது.. தப்பிக்கும் ஒரே மார்க்கமாக கண்களை இறுக்கி மூடினாள்.. அவளது இமைகளில் பதிந்த முத்தத்தில் அவளது உடல் சிலிர்த்தது.. நொடிப் பொழுதில் அவன் விலகிப் போய் விட கண் திறக்க முடியாமல் கட்டிலுக்குத் தாவிக் குப்புற

வீழ்ந்தாள்.. மனதின் படபடப்பும் உடலின் நடுக்கமும் அடங்க வெகு நேரமானது..

“இதுதான் சாக்குன்னு வேலையிலிருந்து எஸ்கேப் ஆகிரலாம்ன்னு பார்க்கறியா..?” அறை வாசலில் அவன் குரல் கேட்டது..

தலையைத் தூக்கிப் பார்த்தாள்.. அறை வாசலை அடைத்துக் கொண்டு ஆறடியையும் தாண்டிய உயரத்தில் விட்டத்தைத் தொடுபவனைப் போல அவன் நின்று கொண்டிருந்தான்..

“என்ன வேலை..?”

அவனை நிமிர்ந்து பார்க்க முடியாத சங்கடத்துடன் முணுமுணுத்தாள்..

“வேலைக்கா பஞ்சம்..? பெட்டைத் தட்டிக் கொட்டி விரிப்பை உதறி நீட்டா விரித்து விடனும்.. கம்பளிகளை மடித்து வைக்கனும்.. காட்டேஜைப் பெருக்கிச் சுத்தம் பண்ணனும்.. பாத்திரங்களைக் கழுவி அடுக்கனும்.. இன்னும்..” அவன் அடுக்கிக் கொண்டே போக..

“பஸ்.. பஸ்..” என்று அலறினாள் நந்தினி..

“போதும்ன்னு நீ சொல்லிட்டா வேலை குறைஞ்சிருமா..? கமான்.. க்விக்.. க்விக்..” எதுவுமே நடக்காததைப் போல அவளை விரல் சொடுக்கி முடுக்கினான் ரவிச்சந்திரன்..

ஆழிப் பேரலையாய் அமுக்கிய உணர்வலைகளிலிருந்து மீண்டு வெளியில் வந்தாள் நந்தினி.. அவனது இயல்பான அதட்டலில் அவளது இயல்பு திரும்பி விட்டது..

“ரொம்பத்தான் விரட்ட வேணாம் பாஸ்.. ஞான் வந்து..” நந்தினி மூக்கை உறிஞ்சினாள்..

“எந்து..?” விளையாட்டாய் அவள் காதைப் பிடித்துத் திருகினான் ரவிச்சந்திரன்..

“வேணும்ன்னா காதைக் கழட்டி உங்க கையில தந்திடறேன் பாஸ்.. செகண்டுக்கொருதரம் திருகறேன்ங்கிற சாக்கில நீங்க காதைக் கழட்ட டிரை பண்ண வேணாம்..”

வலித்த காதைத் தடவியபடி மூக்கைச் சுருக்கிய நந்தினி மெத்தையின் நடுவில் பாகம் பிரித்துக் கொண்டிருந்த தலையணைகளைக் கண்டதும் முகம் மலர..

“பாஸ்..” என்றாள்..

“என்ன..?” அவன் புருவங்களை உயர்த்தினான்..

“நான் சொல்லலை..?” அவள் உற்சாகமானாள்..

“நீ எதைத்தான் சொல்லலை..? வாயைத் திறந்தா குளோஸ் பண்ணனும்ங்கிற நினைப்பே இல்லாம பேசித் தள்ளற.. ஊம் கொட்ட முடியலை.. உனக்கு வாய் வலிக்காதா..?” அவன் சந்தேகம் கேட்டான்..

“அடேங்கப்பா.. நீங்க மௌன குருதான்..”

“உனக்கு வேலை கொடுத்தாச் சாமியாராக்குவியா..?”

“கிண்டல் பண்ணாம நான் சொல்ல வந்ததைக் கேளுங்க..”

“கேட்டுத் தொலைக்கிறேன்.. வேற வழி..? இங்கே பேச்சுத் துணைக்கு ‘உனக்கு நான், எனக்கு நீ..’ன்னு இருக்கோம்.. ஒருத்தர் பேசறதை ஒருத்தர் கேட்டுத்தானே ஆகனும்..?”

“தலையணைகளை ஊடே வைத்தா அதைத் தாண்டி நான் புரள மாட்டேன்னு சொன்னேனா இல்லையா..?”

“சொன்ன.. அதுக்கு இப்ப என்ன..?”

“ஸீ திஸ் பாஸ்.. தலையணைகள் நகரவே இல்லை..”

“உனக்கு மண்டையிலே மசாலாவேயில்லைன்னு நான் கெஸ் பண்ணினது சரியாப் போச்சு.. தலையணை எப்படி நகரும்..? நாமதான் நகர்த்தனும்..”

“அதைத்தான் நானும் சொன்னேன் பாஸ்..”

“என்னன்னு..?”

“தலையணைகளை நான் நகர்த்தவே ‘இல்லை’ பார்த்தீங்களா..? யாரு நானு..?”

குதூகலித்தவளை நமட்டுச் சிரிப்புடன் பார்த்தான் ரவிச்சந்திரன்.. அவள் தலையணைகளை வெறுமனே நகர்த்தவில்லை.. தூக்கத்தில் தூக்கி வீசி மூலைக் கொன்றாய் கடாசிவிட்டு ரவிச்சந்திரனின் கழுத்தை இறுக்கி வளைத்துக் கட்டிக் கொண்டு தூங்கினாள் என்பதைச் சொல்லத்தான் நினைத்தான்.. அவனை வளைத்த பூங்கரத்தின் ஸ்பரிசத்தை அன்றிரவும் உணர ஆசைப்பட்டுச் சொல்லாமல் விட்டு விட்டான்..

அவனது மர்மச் சிரிப்பில் குழம்பி நோக்கியவளின் தலையில் குட்டு வைத்து..

“பெருமைப் பட்டுக்கிட்டது போதும்.. வா.. வா..” என்றான்..

“விட மாட்டிங்களே..” அலுத்துக் கொண்டபடி கட்டிலில் இருந்து குதித்து தாம், தூமென மரக்குடில் அதிர நடந்து சென்றாள் நந்தினி..

நான்ஸ்டிக் தோசைக் கல்லில் நெய் விட்டு பிரட்டை வறுத்து எடுத்துத் தட்டுக்களில் பரத்தினான் ரவிச்சந்திரன்.. தொட்டுக் கொள்ள பாட்டிலில் இருந்த தக்காளித் தொக்கு..

“இது அநியாயம் பாஸ்.. வாய்க்கு ருசியா சாப்பாடு போட்டுப் பழக்கிட்டு இப்படி காய்ஞ்ச ரொட்டியையும் தக்காளித் தொக்கையும் உள்ளே தள்ளுடின்னு சொன்னா நான் என்ன பண்ணுவேன்..?”

நந்தினி புலம்ப ரவிச்சந்திரனின் கண்களில் மின்னல் வந்தது..

‘இப்ப எதுக்காக கண்ணிலே பல்பை எரிய விடறான்..?’

“ஆக உன்னை வாடி போடின்னு நான் கூப்பிட்டுக்கலாம்.. அதிலே உனக்கு எந்த அப்ஜெக்ஷனும் இல்லை..” என்றான் அவன்..

“நான் எப்ப அப்படிச் சொன்னேன்..?” அலறினாள் நந்தினி..

“இப்பச் சொன்னியே..”

“என்னத்தைச் சொன்னேன்..?”

“உள்ளே தள்ளுடின்னு நான் சொன்னதாச் சொல்லலை..?”

“அப்படியா சொன்னேன்..?”

திருதிருத்து மனதுக்குள் தான் பேசியதை ரீப்ளே செய்து பார்த்த நந்தனி நாக்கைக் கடித்துக் கொண்டு..

“அது பேச்சு வாக்கிலே வந்தது பாஸ்..” என்று அழ மாட்டாத குறையாக கெஞ்சினாள்..

“பேச்சு வாக்கிலே வந்தாலும் உன் நாக்கிலேதானே வந்தது..? ஸோ.. நீ எனக்கு பெர்மிஷன் கொடுத்துட்ட..”

“செல்லாது பாஸ் செல்லாது..”

“எல்லாம் செல்லும்.. நீ முதல்ல பிரேக்ஃபாஸ்ட்டை வெட்டு..”

“இதை வெட்டிட்டாலும் கழுதையில..”

நந்தினி முணுமுணுத்துக் கொண்டே குளிக்கக் கிளம்பினாள்..

“அப்புறமா குளித்துக்கலாம்.. பிரட்டை சாப்பிடு..” ரவிச்சந்திரன் அவனுடைய தட்டை எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தான்..

“குளிக்கலைன்னா டிஃபன் கிடையாதுன்னு திட்டுவீங்க.. இப்ப என்னடான்னா பிளேட்டையே மாத்தறிங்க..” நந்தினி பிரட்டைக் காலி பண்ண ஆரம்பித்தாள்..

சடுதியில் காலியான அவளது தட்டைப் பார்த்த ரவிச்சந்திரன்.. “ம்ஹூம்..” என்று தலையில் கை வைத்தான்..

“என்னவாம்..?” நந்தினி விசாரித்தாள்..

“வகை தொகையாய் இருந்தால்தான் வெட்டுவன்னு இல்லே.. காய்ஞ்சு போன பிரட்டை ரோஸ்ட் பண்ணிக் கொடுத்தாலும் அந்த வெட்டுத்தான் வெட்டற.. ஃபுட்டைப் பொறுத்தவரை நீ உலக மகா ரசிகை நந்தினி..”

“போதும்.. காய்ஞ்சு போன ரொட்டியைத் தின்ன வைச்சுட்டுக் கதையா பேசறிங்க..?”

நந்தினி மரக்கிளையைத் தேடிப் போனாள்.. அதில் காலாட்டி உட்காரப் போனவளை..

“குடிலை யார் கிளீன் பண்றது..?” என்ற ரவிச்சந்திரனின் அதட்டல் தடுத்து இழுத்தது..

‘விட மாட்டானே..’

வாய்க்குள் மொண மொண என வசவு வார்த்தைகளை மென்றபடி குடிலைத் துப்புறவு செய்யப் போனாள்.. மெத்தை விரிப்பை உதறி விரித்துக் கம்பளிகளை மடித்து அடுக்குவதற்குள் அவளுக்குப் போதும் போதுமென்றாகி விட்டது.. தலையணைகளை அடுக்கி விட்டு..

“காட்டேஜைக் கட்டாயமா சுத்தம் செய்யத்தான் வேணுமா பாஸ்..?” என்று கெஞ்சினாள்..

“ஷ்யூர்.. ஷ்யூர்..”

அவளிடம் பிளாஸ்டிக் பெருக்குமாறை நீட்டினான் ரவிச்சந்திரன்.. அதன் முனையில் இருந்த மரவேலைப் பாட்டில் உதட்டைச் சுழித்தவள்..

“விளக்குமாத்துக்கு பட்டுக் குஞ்சலம்..” என்று அழகு காட்டினாள்..

“வாட்..?” ரவிச்சந்திரன் புரியாத பார்வை பார்த்தான்..

“நாம என்ன இங்கே தனிக் குடித்தனமா பண்ணப் போறோம்..? நாளைக்கே பையைக் கட்டிக்கிட்டு மலையிறங்கப் போறோம்.. ஒருநாள் கூத்துக்கு எதுக்கு பாஸ் இத்தனை பாடு..?” நந்தினி நீளமாக வியாக்கினம் பேசினாள்.. அவனோ அவளை ஒரு மார்க்கமாகப் பார்த்து வைத்தான்..

‘இது எதுக்கு..?’ அவள் அரண்டு போனாள்..

அவன் சும்மா பார்த்து வைத்தாலே வில்லங்கமாய் பின் விளைவுகள் வந்து சேரும்.. ஒரு தினுசாய் பார்த்து வைத்தால் என்ன செய்யக் காத்திருக்கிறானோ..

“குட் ஐடியா..” அவன் மெச்சிப் போனதில்..

‘எதைச் சொல்கிறான்..?’ என்று அவள் குழம்பிப் போனாள்..

“நாம ஏன் இங்கே தனிக்குடித்தனம் பண்ணக் கூடாது..?” அவனது விழிகள் மின்னியதில்..

‘ஆத்தாடி.. நானே கொள்ளிக் கட்டையை எடுத்துத் தலையைச் சீவி விடுன்னு குடுத்திட்டேனே..’ என்று நெஞ்சில் கை வைத்து உட்கார்ந்து விட்டாள் நந்தினி..

அப்படியெல்லாமில்லை.. மறுநாள் கட்டாயமாக மலையிறங்கி விடலாம் என்று ரவிச்சந்திரன் பிளாக் டீ போட்டுக் கொடுத்து அவளை சரி பண்ண எழுப்பி விட்டான்..

அத்தியாயம் 97

“சொ”ய்ங்..”

கையில் பிடித்திருந்த தூண்டிலை அலேக்காக தூக்கி வீசினாள் நந்தனி.. அது விழுந்த வேகத்தில் ஏரியிலிருந்த மீன்கள் விலகி ஓடிவிட்டன.. தலையில் அடித்துக் கொண்டான் ரவிச்சந்திரன்..

“இதுதான் தூண்டிலை வீசற லட்சணமா..?”

“சும்மாயிருங்க பாஸ்..” மூக்கை விடைத்தாள் நந்தினி..

“முன்னேப் பின்னே தூண்டில் போட்டிருந்தாத் தெரியும்.. புதுசாப் புதுசா தூண்டில் போடறவளுக்கு எப்படி வீசறதுன்னு எப்படித் தெரியும்..? எனக்குத் தூண்டில் போட்டெல்லாம் பழக்கமில்லை..”

நந்தினி என்னவோ மீன் பிடிக்கும் தூண்டிலைப் பற்றித்தான் யதார்த்தமாக பேசி வைத்தாள்... ரவிச்சந்திரனுக்குத்தான் அதில் புதுப்புது அர்த்தங்கள் தெரிந்தன..

தூண்டில் போடும் பார்வைகளை அவன் அறிவான்.. அஜந்தாவிடம் அது உண்டு.. அவளைக் கண்டாலே தூண்டில் பார்வையை வீசி மயக்க முயல்வாள்.. ரவிச்சந்திரன் சிக்க மாட்டான்.. அஜந்தாவைத் தவிர்த்து வேறு பல பெண்களும் அவன் மீது தூண்டில் பார்வைகளை வீசியிருக்கிறார்கள்.. வெளிநாட்டு அழகிகளும் அதில் அடக்கம்..

நந்தினியிடம் அந்தப் பார்வையை அவன் கண்டதில்லை.. மருட்சிப் பார்வை.. துடுக்குப் பார்வை.. ரசிப்புப் பார்வை.. ஏன், அவனிடம் மயங்கும் பார்வையென்று அவள் பார்த்ததே இல்லை..

அவனுடைய கடைக்கண் பார்வைக்காக உலகப் பேரழகிகள் காத்துக் கிடக்க அவனோ நந்தினியிடம் காதல் சொன்னான்.. அவன் யார், அவனது உயரம் எத்தகையது என்று அவளுக்கு நன்றாகவே தெரியும்.. இருந்தும் பயந்து அவன் காதலை மறுக்கிறாள்.. இவள் போல யாரிருப்பார்..?

“என்ன்ன்.. ன..?”

அவனது பார்வையைக் கண்டவளின் புருவங்கள் அவனைப் போலவே உயர்ந்து இறங்கியதில்.. “அட..” என்று சிரித்தான் அவன்..

அவன் பக்கத்திலிருந்த பிளாஸ்டிக் வலைப் பையில் மீன்கள் நிரம்பியிருந்தன.. அவளுடைய வலைப் பையில் ஒன்றுகூட இல்லை.. நைஸாக அவன் பையிலிருந்த மீனைக் கைப்பற்ற முயன்றவளின் கையில் அடித்தவன்..

“ஓய்..” என்று அதட்டினான்..

“ஹி.. ஹி.. எத்தனை மீன் பிடித்திருக்கீங்கன்னு எண்ணிப் பார்த்தேன் பாஸ்..” நந்தினி சிரித்து மழுப்பினாள்..

“எனக்கு எண்ணத் தெரியாது பாரு..”

ரவிச்சந்திரன் கறாராக அவனது வலைப்பையை இழுத்து அவன் பக்கமாக வைத்துக் கொண்டான்.. வாய்க்குள் முணுமுணு என அவனைத் திட்டித் தீர்த்தபடி தூண்டிலை ஆட்டினாள்.. மீன்தான் அகப்பட மாட்டே னென்று சண்டித்தனம் செய்து விலகி ஓடி ரவிச்சந்திரனின் தூண்டிலில் வகையாக மாட்டி அவனது வலைப் பையில் விழுந்தது.. நந்தினியின் தூண்டிலை மீன்கள் அடையாளம் கண்டு வைத்திருக்கின்றனவோ என்ற சந்தேகத்துடன்..

“என் தூண்டில் சரியில்லை.. வேணும்ன்னே ரிப்பேரான தூண்டிலை என் தலையில் கட்டியிருக்கீங்க..” என்று சண்டை போட்டு ரவிச்சந்திரனின் தூண்டிலைப் பிடுங்கிக் கொண்டாள்..

என்ன ஒரு அதிசயம்..! இவள் கையில் இருந்தவரை ஒரு மீனையும் கவ்வாமல் சைவத் தூண்டிலாக இருந்த அந்தத் தூண்டில் ரவிச்சந்திரனின் கைக்குப் போனதும் அசைவத் தூண்டிலாக மாறி மீன்களைக் கவ்விக்கவ்வி அவனுடைய வலைப் பையை நிரப்பியது..

'சதிகார தூண்டில்..' நந்தினி வெறுத்துப் போய் விட்டாள்.. அது என்ன மாயமோ, மந்திரமோ தெரியவில்லை.. ரவிச்சந்திரனின் தூண்டிலைத் தேடி ஓடி வந்து மீன்கள் மாட்டிக் கொண்டன..

'அத்தனையும் பொம்பளை மீன்களா இருக்குமோ.. இவன் அழகில் மயங்கித் தூண்டிலில் மாட்டியிருக்குமோ..'

தூண்டில் போட்டுக் கொண்டிருந்தவனை ஓரக் கண்ணால் ஆராய்ந்தாள்.. அவன் அதை கண்டு கொண்டு தூண்டில் போடும் பார்வையைப் பார்த்து வைத்ததில் அரண்டு போய் ஏரித் தண்ணீரில் தலை குப்புற விழப் போனாள்.. ரவிச்சந்திரன்தான் அவளுடைய தோளைப் பிடித்து இழுத்து நகர்த்தி உட்கார வைத்தான்..

"ஆட்டம் போடாம மீன் பிடிக்கத் தெரியாதா..?"

‘ஆட்டம் போடறேனா.. சான்ஸ் கிடைச்சா எப்படியெல்லாம் திட்டறான் பாரு..’

நந்தினிக்கு கோபம் கோபமாக வந்தது.. அவளும் தான் என்னென்னவோ கோணங்களில் தூண்டில் போட்டுப் பார்த்து விட்டாள்.. ஒரு மீன்கூடச் சிக்க மாட்டேனென்று ‘பெப்பே’ காட்டி விட்டது.. குடிலில் இருந்து மீன் பிடிக்கக் கிளம்பும் போதே ரவிச்சந்திரன் சொல்லி விட்டான்..

“நீ பிடிக்கிற மீன் உனக்கு.. நான் பிடிக்கிற மீன் எனக்கு..”

இது என்ன கணக்கு என்று கேட்காமல் ஒப்புக் கொண்ட தன் மடமையை நொந்து கொண்டாள் நந்தினி..

மதிய உணவுக்கு என்ன சமைப்பது என்று அவள்தான் கேட்டு வைத்தாள்.. இரண்டு தக்காளி, சிறிது வெங்காயம்தான் இருக்கிறது என்று ரவிச்சந்திரன் சொ ன்னதும்.. ‘குய்யோ, முறையோ’ என்று அவள்தான் பிலாக்கனம் வைத்தாள்..

“என்ன பாஸ் இது.. காலையிலயும் வெறும் ரொட்டி.. மதியத்தில கஞ்சிதானா..?”

“வேற என்ன செய்யலாமங்கிற..?”

“வயநாட்டு அரண்மனையிலே அடங்கி இருந்திருந்தா வகை தொகையா சாப்பாடு கிட்டியிருக்கும்.. அதை விட்டுட்டு மீன்முட்டி அருவிகளைப் பார்க்கவான்னு நீங்க கூப்பிட்டதும் நம்பி உங்க பின்னாலே வந்தே தன் பாருங்க.. அதுதான் என் வயிற்றைக் காயப் போடறிங்க..”

“வேற என்னதான் செய்யச் சொல்ற..? வேணும்ன்னா மீன் பிடிச்சுட்டு வந்து சமைத்துச் சாப்பிடலாமா..?”

“அப்படிங்கறிங்க..?”

அவள் கண்களில் ஒளிர்ந்த ஒளிர்வில் அவன் தலையில் அடித்துக் கொண்டான்..

“சும்மா சும்மா தலையில அடித்துக்காதீங்க பாஸ்.. தலை வலிக்கும்..” கரிசனப் பட்டாள் நந்தினி..

“உன் தலையா..?”

“ஊஹூஹூம்.. உங்க தலை..”

“என் தலைதானே வலிக்கும்..? அதைப்பற்றி நீயொன்னும் கவலைப் பட வேணாம்.. வா, வா..”

“எங்கே பாஸ்..?”

“ம்ம்ம்..? மீன் முட்டி அருவியிலே டூயட் பாட..”

‘நிஜமாத்தான் சொல்றானா..?’

அவன் முகத்தை உற்று நோக்கினாள்.. அவன் பதிலுக்குப் பார்த்து விட்டு..

“இப்படிப் பார்க்காதே.. அப்புறம் நிஜமாவே என்னுடன் டூயட் பாட வேண்டியிருக்கும்..” என்று எச்சரித்தான்..

‘சும்மாக்காச்சும் சொல்லியிருக்கான்..’ நந்தினி டூயட்டை மறந்து நிம்மதியானாள்..

“மீன் பிடிக்க வா..”

“நானா..?”

“பின்னே நானா..? நினைப்புத்தான் உனக்கு..”

“எனக்கு மீன் பிடிக்கத் தெரியாது பாஸ்..”

“ஸோ வாட்..? உனக்காக நான் மீன் பிடித்துட்டு வந்து சமைத்துப் போடனும்னு கனவு காணறியா..?”

“நான் சமைக்கிறேன் பாஸ்..”

“யார் வாயில் வைக்கிறது..? ஆளில்லாத காட்டுக்குள்ளே பிடிச்சுட்டு வர்ற மீனையும் பாழடிக்கனும்னு பிளான் பண்றியா..?”

‘அது சரி.. மரக்குடிலின் சுவரில் முட்டிக் கொள்ள வேண்டும் போல இருந்தது நந்தினிக்கு.. அவள் முட்டும் வேகத்தில் சுவர் பெயர்ந்து விட்டால் அவனிடம் பாட்டு வாங்க வேண்டியிருக்குமே என்று பேசாமல் இருந்து விட்டாள்..’

‘சும்மா இருந்தாலும் சோம்பேறிங்கிறான்.. சமைத்துத் தரட்டுமான்னாலும் யார் வாயில் வைப்பதுங்கிறான்.. அடடா.. வேண்டாத மருமகள் கை பட்டாலும் குற்றம், கால் பட்டாலும் குற்றம்ன்னு மாமியார்கள்தான் சொல்லுவாங்களாம்.. இவன் என்ன எனக்கு மாமியாரா..?’ “இப்ப என்ன நிக் நேமை வைத்த..?”

அவளை அரைப் பார்வையில் கண்காணித்துக் கொண்டிருந்த ரவிச்சந்திரன் கேட்டதும் அவள் திருதிருத்து மாட்டிக் கொண்டாள்..

“ஸோ.. நி நிக் நேம் வைத்திருக்க..”

‘உடான்ஸுக்குக் கேட்டவன்கிட்ட உரலுக்குள்ள தலையைக் கொடுத்தைப் போல மாட்டிக்கிட்டயேடி நந்தினி..’

“சொல்லு..”

“மாமியார்..”

“வாட்..? மாமியார்ன்னா எனக்கு நிக் நேம் வைச்ச..?” இமைக்காமல் அவளையே குறுகுறுவென அவன் பார்த்த பார்வையில் நிற்க முடியாமல் நெளிந்தாள் நந்தினி.. அழுத்தமான அடியெடுத்து வைத்து அவளருகில் வந்தவன் குனிந்து..

“ஹஸ்பெண்ட்டுன்னு பேர் வைக்கக் கூடாதா நந்தினி..?” என்று கிசுகிசுப்பான குரலில் கேட்டான்..

நந்தினியின் முகத்தில் ரத்தம் பாய்ந்ததைப் போலச் சிவப்பானது.. அவளது வெட்கத்தினை ரசித்தவன் அவளது கன்னம் தட்டி..

“நான் உனக்கு மாமியாரா..? கம்மாண்டர் என்ன ஆனான்..?” என்று சிரித்தான்..

“ஒண்ணும் ஆகலை.. என் முன்னால் நின்று வில்லன் சிரிப்ப சிரிச்சுக்கிட்டு இருக்கார்..” என்றாள் அவள். .

“வில்லன் சிரிப்பா..? ஹா.. ஹா..”

மரக்குடிலில் அவன் சிரித்த சப்தம் நீலிமலைக் காட்டுக்குள் எதிரொலித்துப் பட்ஷிக் கூட்டங்கள் சிறகடித்துப் பறக்க ஆரம்பித்தன..

“போகிற போக்கைப் பார்த்தா இன்னைக்குள்ள நீலிமலைக் காட்டுக்குள்ள ஒரு பறவை கூட தங்காம கூட்டைக் காலி பண்ணிரும்ன்னு நினைக்கிறேன்..” தீவிரமான முகபாவனையுடன் சொன்னாள் நந்தினி..

“ஊஹூம்..?”

அவன் புருவங்களை உயர்த்தி இறக்கி அவள் வாயை மூடச் செய்தான்.. வசீகரித்துச் சோதிக்கும் அந்த வசீகரனின் வசீகரத்தில் மனம் மயங்கித் தடுமாறினாள் நந்தினி..

“இங்கே மீன்முட்டி அருவிகள் ஆறாக ஓடறப்ப தேங்கி நிற்கிற ஏரித் தண்ணீர் இருக்கு..”

“இருக்கட்டும் பாஸ்.. ஐ ஹேவ் நோ அப்ஜெக்ஷன்..”

“உன் அப்ஜெக்ஷனை தமிழ்நாட்டுக்குள்ள வைத்துக்க.. கேரளத்தில அது எடுபடாது..”

“வயநாட்டிலே சுத்தமா எடுபடாது..”

“தெரிந்துக்கிட்டாச் சரி..”

“தெரியும் பாஸ்.. திகட்டத் திகட்டத் தெரியும்.. ஏரித் தண்ணீர் என்ன ஆச்சு..?”

“அது அங்கேயேதான் இருக்கு.. நாமதான் அங்கே போகனும்..”

“போயி..?”

“மீன் பிடிக்கனும்.. நீ பிடிக்கிற மீன் உனக்கு.. நான் பிடிக்கிற மீன் எனக்கு.. இதுதான் அக்ரிமெண்ட்..”

‘என்னடா இது.. இந்த நந்தினிக்கு வந்த சோதனை..’ அவளுக்கு அழுகை அழுகையாய் வந்தது.. வேறு வழியின்றி அவனுடன் மீன் பிடிக்கக் கிளம்பினாள்.. மீன் பிடிக்கும் போது யானைக் கூட்டம் வந்து விட்டால் என்ன செய்வது என்று பயந்து நடுங்கியவளிடம் ஓடிவந்து விடலாம் என்று கூறி தேற்றினான் ரவிச்சந்திரன்..

“அந்த ஓட்டத்தை வடுவாஞ்சலை நோக்கி ஓடக் கூடாதா பாஸ்..?”

“வடுவாஞ்சல் மலையடிவாரத்தில இருக்கு.. வுட் காட்டேஜ் நாலே எட்டில் இருக்கு.. ரெண்டில எது பெட்டர் சாய்ஸ்..? வடுவாஞ்சலுக்கு ஓடினா மாட்டிக்குவோம்.. வுட் காட்டேஜுக்கு வந்தா தப்பிச்சுக்குவோம்.. எந்தப் பக்கம் ஓடலாம்..?”

வடுவாஞ்சலுக்கு ஓடலாம் என்று சொல்ல நந்தினிக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது..?

‘ஈ வல்லிய சுந்தரன் சம்சாரிக்கிறதிலயும் ஓர் அர்த்தமுண்டல்லோ..’ அவளது மனம் சிலாகித்தது..

சுருட்டி வைத்திருந்த இரும்புக்கம்பி ஏணியை மரத்தில் பினைத்து தொங்க விட்டான் ரவிச்சந்திரன்.. குடிலை பூட்டிச் சாவியை ஜீன்ஸ் பாக்கெட்டில் போட்டுக் கொண்டு வலைப்பைகளும், தூண்டில்களுமாக ஏணியில் இறங்கினான்.. தொடர்ந்து இறங்கிய நந்தினிக்கு கை கொடுத்து தரையில் இறுக்கி விட்டான்..

குடிலை விட்டு வெளியில் வந்ததில் நந்தினிக்கு உற்சாகமாக இருந்தது.. யானைக் கூட்டத்தை மறந்து மரங்களையும் செடி கொடிகளையும் ரசித்தபடி சிறுபிள்ளை போல துள்ளி ஓடினாள்.. செடிகளில் இருந்த வண்ணத்துப் பூச்சியைப் பிடிப்பதைப் போல பாவனை செய்து விரட்டி விளையாடினாள்.. ஏரிகரையை அடைந்ததும் இருகைகளையும் கன்னத்தில் வைத்து..

“வாவ்..” என்று அதிசயித்தாள்..

நீ முந்தி, நான் முந்தி என்று ரவிச்சந்திரனுடன் போட்டி போட்டுக் கொண்டு ஏரிக்கரையின் பக்கத்தில் இடம் பிடிக்க போட்டி போட்டாள்.. மீன் பிடிக்கவென்று ஏரிக்கரையோரமாக

பலகை பதிக்கப் பட்டிருந்தது.. அதில் உட்கார்ந்து கால்களைத் தொங்க விட்டு மீன் பிடிக்க தூண்டிலை வீசினாள்.. வீசினாள்.. வீசினாள்.. வீசிக் கொண்டே இருந்தாள்.. ஒரு மீன் கூட அவளுடைய தூண்டிலில் மாட்டவில்லை. . அவளுக்கும் சேர்த்து மீன் பிடித்து அவளுடைய வலைப் பையையும் நிரம்பிய ரவிச்சந்திரன் போகலாமா என்று கேட்டவுடன் வெறுப்புடன் தூண்டிலைத் தூக்கித் தூரப் போட்டு நடந்தவளுக்கு ஒரு கேள்விதான் மனதில் சுழன்றது.. ரவிச்சந்திரன் பிடித்திருக்கும் மீனில் ஒரு துண்டாவது அவளுக்கு கொடுப்பானா..?

அத்தியாயம் 98

கூழாங்கற்கள் நிரம்பிய மலைப் படுமைகயில் சளசளத்து ஓடிக் கொண்டிருந்த ஆற்று நீரில் மீன்களைத் தேய்த்துக் கழுவக் கற்றுக் கொடுத்தான் ரவிச்சந்திரன்.. சிரத்தையாக அவன் சொன்னதைச் செய்து கொடுத்தாள் நந்தினி.. கதை பேசியபடி அவர்கள் குடிலுக்குத் திரும்பிய போது பேச்சுச் சப்தம் கேட்டது..

“ஆளுக போல இருக்கே..” என்றாள் நந்தினி..

“பேர்டுஸும், அனிமல்ஸும் பேசாது நந்தினி..” ரவிச்சந்திரன் நோஸ்கட் கொடுத்தான்..

‘எப்பப் பார்த்தாலும் என் மூக்கை உடைக்கிற தையே குறிக்கோளாய் வைச்சிருக்கான்..’ மூக்கை உறிஞ்சிய நந்தினி..

“அவங்கள்ளாம் யானைக் கூட்டத்தைப் பார்த்துப் பயப்பட மாட்டாங்களா பாஸ்..?” என்று கேட்டாள்..

அவளது கேள்வியை அவன் விரும்பவில்லை என்பதைப் போல ரவிச்சந்திரன் முகம் சுளித்தான்..

“பயந்தா என்ன செய்யலாம்ன்னு நினைக்கிற..? நம்ம காட்டேஜுக்குக் கூப்பிட்டுக்கிட்டுப் போகலாமா..?” என்று எரிந்து விழுந்தான்..

“அதெப்படி பாஸ்.. அங்கே ரெண்டு பேர் இருக்கிறதே பெரும் பாடா இருக்கு.. சிங்கிள் பெட்ரூம்.. நல்ல வேளையாய் நான் தலையனைகளை ஊடே வைக்கிற ஐடியாவைக் கண்டு பிடிச்சதினால நாம பெட்டை ஷேர் பண்ணிக்க முடிஞ்சது.. இல்லேன்னா கஷ்டம்தான்..”

அவள் விவரித்ததில் ரவிச்சந்திரனின் எரிச்சல் குறைந்து விட்டது..

“ஆமாமாம்.. உன் ஐடியா சூப்பர் ஐடியாதான்..” என்று சிரிப்பை அடக்கிக் கொண்டு சொன்னான்..

அவளது ஐடியாவை அவன் பாராட்டியதில் மகிழ்ந்து போனவள் யானைக் கூட்டத்தையும் சுற்றுலாவாசிகளையும் சுத்தமாக மறந்து போனாள்.. ரவிச்சந்திரனின் முகத்தில் பெண்மை படர்ந்தது.. அவளை பிரியத்துடன் பார்த்துக் கொண்டான்..

எளிதில் வசப்படுத்தி விடக் கூடிய குண இயல்பைக் கொண்டவள் அவளது காதலுக்கு வசப்பட மறுக்கிறாளே.. அது ஏன்..? அவன் மீது பயமா..?

கொடி வீடு போன்ற மரக்குடில் இருந்த மரத்தை அடைந்து விட்டார்கள்.. நந்தினியை முதலில் ஏறச் சொன்னான் ரவிச்சந்திரன்.. இப்போதுதான் அவள் கிளையில் உட்காரப் பழகியிருந்தாளே.. வாகாக ஒரு கிளையில் சாய்ந்து உட்கார்ந்து கை நீட்டி அவனிடமிருந்த மீன் பைகளை வாங்கிக் கொண்டாள்..

“உனக்கு எது தேவையோ.. அதை மட்டும் கைப்பத்திக்கிற..?” ஏணியில் ஏறிவந்த ரவிச்சந்திரன் கேலி செய்து விட்டு மரக் குடிலை திறந்து விட்டான்.. நந்தினி சமையலறைக்குள் போய்விட இவன் ஏணியை இழுத்து மடக்கிச் சுருட்டி முதல் நாள் பத்திரப் படுத்தியதைப் போல பத்திரப் படுத்தி விட்டு நந்தினி என்ன செய்து கொண்டிருக்கிறாள் என்று கவனிக்கச் சென்றான்.. துப்பட்டாவை தாவணி போல போட்டு இடுப்பைச் சுற்றிக் கட்டிக் கொண்டு அவள் சுறுசுறுப்பாக சமையல் வேலையில் ஆழ்ந்திருந்தாள்..

“அட.. இது நீதானா..?” ஆச்சரியப் பட்டுப் போனான் ரவிச்சந்திரன்..

“யெஸ் பாஸ்..” தலை நிமிராமல் பதிலளித்தாள் நந்தினி..

“உனக்கு சமைக்கக் கூடத் தெரியுமா..?”

“சுடு தண்ணி போடக் கூடத் தெரியாது..”

“அப்புறம் எந்த தைரியத்தில சமைக்கக் கிளம்பிட்ட..?”

“இல்லேன்னா நீங்க ஒற்றை மீன் பீஸைக் கூடக் கண்ணில காட்ட மாட்டிங்களே பாஸ்..”

“அதானே பார்த்தேன்.. அதுக்காக மொத்த மீன் பீஸையும் ஒன்றுமில்லாமப் பண்ணிக் கிளம்பிட்டியா.. நகரு.. நகரு.. நான் சொல்கிறதை மட்டும் செய்து கொடு..”

நந்தினியின் இடுப்பைப் பிடித்து அலேக்காகத் தூக்கி தள்ளி இறக்கி விட்டான் ரவிச்சந்திரன்.. கண்ணிமைக்கும் நேரத்தில் ‘அலேக்’ ஆகி விட்டவள் அலறக்கூடத் திராணியின்றி கண்களை உருட்டி மருட்டி விழித்தபடி தரையுறங்கி சுவரில் சாய்ந்து நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்..

“இந்த வெங்காயம், தக்காளி, பச்சை மிளகாயை கட் பண்ணு..” ரவிச்சந்திரன் சொல்லச் சொல்ல மின்னல்

வேகத்தில் அதைச் செய்து கொடுத்தாள் நந்தினி.. சாதம், குழம்பு, மீன்வறுவல் என்று சமைத்து முடித்தவைகளை ஹாட் பாக்ஸில் போட்டு வைத்து விட்டு சமைத்து முடித்த பாத்திரங்களைக் கழுவச் சொன்னான்.. நந்தினி பாத்திரங்களைக் கழுவி அடுக்கி வைத்து விட்டு அப்பாடா என்ற அலுப்புடன் குளிக்கச் சென்றாள்..

'ஒரு பிடி மீன் சாதத்திற்கு இத்தனை பாடா..?'

குளித்து முடித்து துவைத்த ஈரத்துணிகளை மரக் கிளைகளின் மறைவில் உலர்த்தி விட்டுச் சாப்பிட வந்தவளுக்குத் தட்டு நிறைய மீன்வறுவலும் மீன்குழம்பு சாதமும் காத்துக் கொண்டிருந்தன..

"எனக்கே.. எனக்கா..?" மகிழ்ந்து போனாள் நந்தினி.. சுவையான மீன் குழம்பும் வறுவலும் கிடைத்ததில் அவளது அலுப்பு பறந்து போனது.. சப்புக் கொட்டிக் கொண்டு சாப்பிட்டாள்.. ரவிச்சந்திரன் ஆதுவரத்துடன் அவளைப் பார்ப்பதை அவள் கவனிக்கவே இல்லை..

வேலை செய்த களைப்பும், உண்ட மயக்கமுமாக அவள் உறங்கி விட ரவிச்சந்திரன் சோஃபாவில் சரிந்து

கண்ணையர்ந்தான்.. முதல்நாள் போல அவன் பிளாக் டீயுடன் நந்தினியை எழுப்பிய போது கண்விழித்த நந்தினி..

“இன்னும் கொஞ்ச நேரம் தூங்கினாத்தான் என்ன பாஸ்..? நீங்களும் தூங்க மாட்டேங்கறிங்க.. என்னையும் தூங்க விட மாட்டேங்கறிங்க..?” என்று சண்டைக்கு வந்தாள்..

“உன்னைத் தூங்க விடாம நான் என்ன பண்ணினேன்..?”

அவன் கண்சிமிட்டியதில் அவளுடைய தூக்கம் பறந்து போய்விட அலறியடித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள்..

“கண்ணடிக்காதீங்க பாஸ்..”

அவள் வேண்டிக் கேட்டுக் கொண்டதில் போனால் போகிறது என்று அவன் விட்டு விட்டான்.. மரக்கிளையில் உட்கார்ந்து கதை பேசியபடி அவர்கள் டீயைக் குடித்து முடித்தார்கள்.. உலர்ந்திருந்த துணிகளைச் சேகரித்து மடித்து வைத்தாள் நந்தினி.. மறுநாள் அங்கிருந்து கிளம்பி விடலாம் என்று தோன்றியதில் நெஞ்சினில் நிம்மதி வருவதற்குப் பதில் ஏக்கம் வந்தது..

‘முட்டாளா நான்..?’ இந்த நீலிமலைக் காட்டுக்குள்ளே மர உச்சியிலே இருக்கிற மரக்குடிலிலேயே காலம் பூராவும் இருந்து விட முடியுமா..?’

வெளியில் இருள் பரவ ஆரம்பித்தது.. ரவிச்சந்திரன் முன்தினம் போல மரக்குடிலை இறுக மூடித் தாழிட்டு விட்டு டிவியின் முன்னால் உட்கார்ந்தான்.. இரண்டு நாள்களாக அவனது தொழில்கள் சம்பந்தமான எந்த வேலைகளையும் கவனிக்காமல் எப்படி அவனால் இருக்க முடிகின்றது என்று ஆச்சரியம் கொண்டாள் நந்தினி..

“காதலியைக் கட்டியணைப்பதைப் போல லேப் டாப்பைக் கட்டியணைத்துக்கிட்டு இருப்பீங்களே பாஸ்.. எப்படி அதை விட்டுப் பிரிஞ்சு இருக்கீங்க..?” கிண்டலாக கேட்டு விட்டாள்..

அவன் அவளை ஆழ்ந்து பார்த்தான்.. நந்தினி அவனுடைய பார்வையின் வேகம் தாளாமல் தலை கவிழ்ந்தாள்.. அவளுக்குள் படபடப்பு வந்தது..

‘வாயை வைத்துக்கிட்டு சும்மா இருந்திருக்கலாம்..’

காலம் கடந்து ஞானம் வந்து என்ன பயன்..? கூர்மையான பார்வையுடன் ரவிச்சந்திரன் வாய் திறந்து விட்டான்..

“அதுக்குப் பதிலாத்தான் உன்னை கட்டியணைச்சுக்கிட்டு இருக்கேனே..”

அதற்கு மேலும் வாய் வளர்த்தால் ஆபத்து என்று டிவியைப் பார்ப்பதைப் போல உட்கார்ந்து விட்டாள் நந்தினி.. ரிமோட்டை இஷ்டத்துக்கு அழுத்தி அவள் சேனல்களை மாற்றிக் கொண்டிருந்ததில்..

“ஒரு சேனலை உருப்படியாப் பார்க்க மாட்டியா..?” என்று அவள் தலையைப் பிடித்து ஒரு ஆட்டு ஆட்டினான் அவன்.. இருவருக்கும் பொதுவாக ஒரு தமிழ் சினிமாவை பார்ப்பது என்று முடிவானது.. மாறியோடிய சேனல்களில் ஒன்றில் ஒளவை சண்முகி ஓடியது..

“இதைப் பார்க்கலாம்.. இதைப் பார்க்கலாம்..” நந்தினி குதித்தான்..

“நீ கமல் ரசிகையா..?” அவன் முறைத்தான்..

‘பொறாமை பிடிச்சவன்..’ அவள் இல்லையெனும் விதமாக தலையை அசைத்து மறுத்தாள்..

“அப்பச் சரி..”

அவன் சேனலை மாற்றாமல் படத்தை பார்க்க விட்டான்.. நந்தினி சிரித்துச் சிரித்து அவன் தோளில் தலை சாய்ந்தாள்.. அதிகச் சிரிப்பு வரும் நேரங்களில் அவன் கையில் அடித்தாள்..

“நிஜமாவே ரசிக்கிறயா..? இல்லை.. அதைச் சாக்கு வைச்சு பழிதீர்த்துக்கறியா..?” ரவிச்சந்திரன் விசாரித்தான்..

“அச்சச்சோ.. இல்லவே இல்லை பாஸ்..” நந்தினி அலறினாள்..

படம் முடிந்ததும்.. இரவு உணவை முடித்தார்கள்.. முந்தைய இரவைப் போல நந்தினி தலையணைகளை வரிசை கட்டி விட்டு அந்தப் பக்கம் நீ, இந்தப் பக்கம் நான் என்று படுத்து உறங்கினாள்.. முந்தைய தினம் போலவே தூக்கத்தில் தலையணைகளைத் தூக்கிக் கடாசிவிட்டு.. ரவிச்சந்திரனின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.. அதற்காகவே காத்திருந்த ரவிச்சந்திரன் அவன் கழுத்தில் விழுந்த அவளது கைக்கு முத்தம் கொடுத்து இறுக்கிக் கொண்டான்.. இதுபோன்ற ஒரு இரவு இனி எப்போது வரும் என்ற ஏக்கப் பெருமூச்சுடன் அவளது தூக்கத்தைக் கலைக்காமல் நெற்றியில் முத்தமிட்டான்..

அவர்கள் வயநாட்டிற்குக் கிளம்புவதற்கான பொழுது விடிந்தது.. நந்தினியின் உறக்கம் கலையாமல் அவளது கையை நகர்த்திவிட்ட ரவிச்சந்திரன் மெதுவாய்.. மிக மெதுவாய்.. அவளது முடி கோதி தூங்கும் அவளது முக அழகை ரசித்து விட்டு விலகி எழுந்தான். .

தானாகவே கண் விழித்த நந்தினி மெத்தையில் அணி வகுத்திருந்த தலையணைகளைத் திருப்தியுடன் பார்த்து விட்டு..

“சொன்னேன்ல்ல..” என்று தலையாட்டினாள்..

“நீ சொன்னாச் சரியாத்தான் இருக்கும்..” என்றபடி பிளாக் டீயுடன் வந்தான் ரவிச்சந்திரன்..

“தேங்க் யு பாஸ்..”

டீயை வாங்கிக் கொண்ட நந்தினி நான் உனக்குச் சேவகனா என்பதைப் போல அவன் எதையாவது கேட்டு வைப்பான் என்றுதான் நினைத்தாள்.. அவன் எதையும் கேட்கவில்லை.. மாறாக..

“சீக்கிரமாக் குளிச்சுட்டுக் கிளம்பு.. டிரஸ்ஸை வாஷ் பண்ண வேணாம்.. வயநாட்டில ஓமனாக்குட்டி பொறுப்பில

விட்டிரலாம்.. திங்ஸையெல்லாம் பையில் திணிச்சுட்டு ரெடியாகிரு.. சீக்கிரமா மலையிறங்கினாத்தான் மதியத்துக்குள்ள நாம வடுவாஞ்சல் போக முடியும்..” என்று அதட்டினான்..

“ஓ.. இன்னைக்கு நாம கிளம்பனுமில்ல.. மறந்தே போச்சு பாஸ்.. இங்கேயே இருக்கப் போகிறோம்ங்கிற நினைப்பிலேயே உட்கார்ந்திருக்கேன் பாஸ்..” நந்தினி கைகளை உதறினாள்.. ரவிச்சந்திரன் அவளைப் பார்த்த பார்வையை அவளால் காலம் முழுவதும் மறக்க முடியாது என்று தோன்றியது.. அப்படியொரு ஆழ்ந்த துளைக்கும் பார்வையைத் தீர்க்கமாக பார்த்து வைத்தான்..

‘இப்படிப் பார்க்காதே..’

மருகலுடன் குளியலறைக்குள் புகுந்து கதவை அடைத்துக் கொண்டாள்.. எதற்கு என்று தெரியாமல் அவள் கண்களில் நீர் வழிந்தது..

குளித்து உடைமாற்றியவளுக்குச் சோர்வாக இருந்தது.. பதுமை போல துணிகளையும் பொருள்களையும் சேகரித்து அவளது பையில் தினித்தாள்.. அவன் குளித்து முடித்து வருவதற்குள் அவனுடைய துணிகளையும் பைகளில் அடுக்கி

விட்டாள்.. ஈரத் தலையுடன் வந்தவன் பைகளைப் பார்த்துவிட்டு..

“கிளம்பனும்னு சொன்னவுடனே ஸ்பீடா வேலை பார்க்கிறயே..” என்று பாராட்டுவதைப் போல கண்டனம் தெரிவித்தான்.

பதில் சொல்லாமல் எழுந்து போக முயன்றவளின் கை பிடித்துத் தடுத்து நிறுத்தி அவளுடைய விழிகளுக்குள் உற்று நோக்கி..

“இந்த நீலிமலைக் காட்டுக்குள்ளே ஸ்பெண்ட் பண்ணின இந்த ரெண்டு நாள்களையும் என்னால் மறக்க முடியாது..” என்று சொன்னான்..

“எனக்கும்தான்..” அவன் மார்பில் சாய்ந்து கொள்ளத் துடித்த மனதைக் கட்டுப் படுத்திக் கொண்டு அவள் சொன்னாள்.. “ஏன்..?” அவன் பார்வையில் தீவிரம் வந்தது..

“தெரியலை..” அவள் கண் கலங்கினாள்..

பாறைகள் உருளும் ஒலிகளுடன் வழுக்குப் பாறைகளில் கவனமாக கால் பதித்து நடந்து.. கூரிய பாறை முனைகளின் இடையே போன ஒற்றையடிப் பாதையைக் கடந்து அவர்கள்

மலையிறங்கினார்கள்.. வடிவாஞ்சலில் இருந்த ஜீப்பில் ஏறிக் கொண்ட நந்தனி நீலிமலையைத் திரும்பிப் பார்த்தாள்.. அடர்ந்த மரங்களின் ஊடே அவளது நினைவுகள் அடர்ந்திருக்கும் மரக்குடில் எந்த மரத்தில் ஆரோகனித்திருக்கிறது என்று தெரியவில்லை..

மலைப்பாதையில் கிளம்பிய ஜீப் வயநாட்டை நோக்கிப் பறந்தது..

- நான்காம் பாகத்தில் தொடரும்...